தாயகம்

தாகம் தீர்க்கும் பொன் சௌரி ராச

தாயகம்

டாக்டர் பொன். சௌரிராசன்

தமிழ் இணைப் பேராசிரியர்

திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை-600108

முதற் பதிப்பு 1979
இரண்டாம் பதிப்பு : 1983
மூன்றாம் பதிப்பு 1987

தேனக வெளியீடு

விலை : ரூ. 17-00

ஆசிரியரின் பிற நூல்கள் :

1. கட்டுரை மணிகள்
2. கள்ளி மலர்
3. கதை மலர்கள்
4. Critical Study of Saint Tayumanavar
5. பண்டித பரமேசுவர சாஸ்திரி உயில்

அச்சிட்டோர்: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-600 086 [85]

காணிக்கை

என் அன்னைக்கும்,
சிறந்த கலைஞர்களையும்
அறிஞர்களையும் உருவாக்க
என் அன்னை போல்
தம்மை நாள்தோறும் உருக்கிக்கொள்ளும்
உலகத்து அன்னையர் அனைவர்க்கும்
'உலகக் குழந்தைகள் ஆண்டில்'
இந்தத் 'தாயகத்தை'க்
காணிக்கையாக்குகிறேன்.

அணிந்துரை

ஆழ்ந்த, தெளிந்த சிந்தனை, சமூகத்தைக் கூர்ந்து நோக்கும் விழிகள், பலவகை உணர்வுகளையும் தாங்கி நிற்கும் நெஞ்சம், எளிய இனிய செந்தமிழ்ச் சொற்களால் இவை அனைத்தையும் ஒருங்கே ஒழுங்கோடு உணர்த்தும் ஆற்றல்—இவை ஒரு சிறந்த நாவலாசிரியரின் பண்புகள். பேராசிரியர் டாக்டர் பொன். சௌரிராசன் அவர்களுக்கு இவை அனைத்தும் செறிவாக அமைந்துள்ளன என்பதை அவர் நூல்களைப் படிப்போர் ஒப்புக்கொள்வர். சிறு வயதில் காந்தி ஆசிரமத்தில் கற்கும் வாய்ப்பும், தமிழ்ச் சான்றோர் டாக்டர் மு. வ. வின் வீட்டில் பிள்ளைக்குப் பிள்ளையாய் வளரும் பெரும்பேறும் இவருக்கு வாய்த்தது. அதோடு கலைஞர் ஒருவருக்கு வேண்டிய அடிப்படை உணர்வாகிய ஒத்துணர்வும் ஒட்டுணர்வும் இவரிடத்தில் இயல்பாகவே அமைந்துவிட்டன. தாயுமான அடிகளின் பாடல்களை இவர் நெஞ்சுருக, கண்ணில் நீர்மல்கப் பாடுவதை நான் பல நாட்கள் கண்டிருக்கிறேன் சிறந்த கலைஞராகிய டாக்டர் மு. வ. வின் உதவியினால் இந்நல் லுணர்வுகள் இவர்க்கு, ஓர் கலை அமைப்பைப் பெற்றுத் தந்தது என்றால் மிகையாகாது.

10-10-74 அன்று அமரர் மு, வ.வின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் ''இனி இவருக்கு அடுத்து இதே பாணியில் ஒரு தமிழ்க் கலைஞர் தோன்றப் போகிறாரா'' என்று எண்ணிக் கலங்கியதை நான் கண்டேன். கலைப் போதையில் மூழ்கிடாத திட்ப மும், சமூகப் பைங்கூழோடு விளைந்துள்ள களைகளைக் களைந்தெறியும் நெஞ்சுரமும் படித்தவரும் பாமரரும் படித்துப் போற்றும் வகையில் அமைந்த எளிய, சிறிய

சொற்றொடர்கள் அமைந்த நடையும் மு. வ. விற்கு அடுத்துச் சௌரிராசனார் எழுத்துக்களில் கண்டு என்னைப் போல் எத்தனையோ தமிழ் இளைஞர்களின் நெஞ்சங்கள் பூரிக்கும். மு. வ. வின் தமிழ் நடைக்கும் இவரது தமிழ் நடைக்கும் பெரிய வேறு பாட்டைக் காட்ட முடியாது. அறிஞர் மு. வ. வைப்போலவே இவரும் மொழித் தூய்மையில் பற்றுக் கொண்டவர். ஆனால், நாவல் எழுதும் போது அந்த நடையிலே சில மாற்றங்களைப் புகுத்தாமல் இருக்க முடியவில்லை. ''Dialect and bad grammar as usages are to be avoided whenever possible. Dialect is wearying to read; if the writer feels that it is necessary to Characterization, it should be pegged on a few typical expressions or pronunciations...என்ற திறனாய்வாளர்களின் கருத்து, ஆசிரியரின் நடையை நோக்கும்போது நினைவுக்கு வருகிறது. தஞ்சை மாவட்டச் சொற்கள் அங்கங்கே கதைமாந்தர் தன்மைக்கு ஏற்பக் கையாளப் பட்டிருந்தாலும், நடை தங்கு தடையின்றிச் செல்லும் ஆற்றொழுக்கான நடை. இனி நாவல் உலகத்திற்குப் போவோம்.

நாவலைத் திறந்தவுடன் நம்மை ஆசிரியர் செங்கண்ணன்தான் வரவேற்கின்றார். அறியாமையில் அமிழ்ந்து புழுக்கள் போல் நெளியும் ஏழை எளியவர்க்கு 'அ, ஆ' சொல்லித் தருவதோடு 'தம் வேலை முடிந்து விட்டது' என்று எண்ணும் ஆசிரியர்களில் ஒருவர் அல்ல நம் கதைத் தலைவர் செங்கண்ணன். ஒவ்வொரு குழந்தையோடும் தொடர்பு கொண்டு அவர்களின் இதயக்கமலத்தில் என்றும் நீக்கமற நிறைந்திருக்கும் 'அண்ணா' வாகவே விளங்குகின்றார். கிராமம் கிராமமாக, சேரி சேரியாக, வீடு விடாகச் சென்று தம்மிடம் படிக்கும் குழந்தையின் ஊர்ச்சூழல், வீட்டுச் சூழல், மனநிலை இவற்றைப் புரிந்து கொண்டு பணியாற்றும் ஒரு சிறந்த பள்ளியாசிரியர். இச்செங்கண்ணன் வாசகர்க்கு ஒருபுதிய அல்லது புதுமையான மனிதராகத் தோன்றலாம். சிலர் உண்மை வாழ்வில்

காண்பதற்கரிய மனிதர் என்றுகூடச் கூறலாம். ஆனால் இச்செங்கண்ணன்போன்ற ஆசிரியர் இன்று இல்லாமல் இல்லை. ஏழை பணக்காரர், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பேதம் எதுவுமின்றி மாணவர்களிடம் பழகும் ஆசிரியர் ஒரு சிலர் பண்பைச் செங்கண்ணனிடத்தில் காணுகின்றேன்.

"நீங்களோ கருத்து உழவர். நீங்களே பயிரிட்டு வளர்த்த பயிர்களின் பயனை வாரி இறைக்கிறீர்கள்; அதன் முன் நாங்கள் திக்கு முக்காடித் திணறிப் போய்விடு கிறோம்" என்று செல்வி செங்கண்ணனைப் பாராட்டிக் கூறும் அத்தனையும் கொண்ட ஆசிரியர் ஒருவரை யான் அறிவேன்.

உண்மையில் வாழ்வில் உள்ள மனிதரின் அத்தனைப் பண்புகளையும் அப்படியே சித்திரித்துக் கதை மாந்தரைப் படைத்தால் அது நாவலாகாது. திறனாய்வாளர் E. M. Forster சொல்லுவதைப் போல "If a character in a novel is exactly like Queen Victoria,—not rather like but exactly like-then it actually is Queen Victoria, and the novel, or all of it that the character touches, becomes a memoir. A Memoir is a history, it is based on evidence. A novel is based on evidence Plus or minus X. The unknown quantity being the temperament of the novelist and the known quantity always modifies the effect of the evidence and sometimes transform it entirely.

செங்கண்ணன் என்ற பாத்திரமும் இதற்கு விதிவிலக் கல்ல. செங்கண்ணனின் பல பண்புகள் கதாசிரியரின் அனு பவத்தில் பிறந்தவை. இவனது வாழ்க்கையை இரண்டு பிரிவாகப் பிரித்துக் காணலாம். ஒன்று, அமைதியான ஆற்று நீர் போல் நடந்து செல்லும் கிராம வாழ்க்கை. தனக்கும் தன்னைச் சார்ந்தவர்க்கும் துணையாக, துன்ப மிலா எளிய வாழ்க்கை: மனத்தால் மனிதனாய் வாழும் வாழ்க்கை. அடுத்து, ஓடும் உலகத்தின் வேகத்தோடு போட்டியிட்டுக் கொண்டு ஓடும் அலைச்சல் மிகுந்த நகர வாழ்க்கை. மனம் அன்பு வாழ்க்கைக்கு ஏங்கினாலும்

அறிவின் ஆற்றல் இயக்க மின் இயந்திரமாக இயங்கும் வாழ்க்கை. என்ன வாழ்க்கையோ! அனாதைப் பிள்ளை களுக்குத் ''தாயகம்'' அமைப்பது அவனது குறிக்கோள். அந்தக் குறிக்கோளை அடையப் பணமும் பதவியும் இல்லாமையால் பட்டத்தைப் பெற வேண்டி அன்பு மனைவியையும் அன்னையையும் பிரிந்து செல்லுகின்றான். ''தாயகம்'' அமைக்கப் போய்த் தாயினும் அன்புடைய தாரத்தை இழக்கின்றான். இது தான் செங்கண்ணனின் வாழ்க்கைச் சுருக்கம். பாலாறு போல் பரந்த அன்புடை பள்ளியாசிரியர் செங்கண்ணன் நம்மை ஈர்த்துப் பிடிப்பது போல் கல்லூரி மாணவன் செங்கண்ணன் நம்மை அவ்வளவாகக் கவரவில்லை.

அடுத்து, நம் நினைவில் நீங்காது நிற்கும் பாத்திரம் பூங்கோதை. செங்கண்ணன், கதாசிரியன் அனுபவத்தில் முளைத்த பாத்திரமென்றால் பூங்கோதை அவரது உணர்வில் தோன்றிய ஓவியம் எனலாம். ஆம். பூங்கோதை யிடம் ஆசிரியர் காணும் ஒவ்வொரு பண்பும் சங்கச் சான்றோர் படைத்துக் காட்டியிருக்கும் உயிரோவியப் பண்புகளே. அச்சான்றோர் பாடல்களில் நாம் காணுகின்ற காதற் பாவைகளில் ஒருத்தியே அவள்; எலும்பும் தசையும் குருதியும் கொண்ட அணங்குதான். ஆய்மயில்தான். கதையைப் படிக்கும் போது பூங்கோதை போல் ஒரு கோதை நமக்கும் கிடைப்பாளா என்று இளைஞர் உள்ளம் நிச்சயம் ஏங்கும். அவளைப் போல் ஒருத்தி கிடைத்திருந் தால்... என்று மணமான சிலர் வெறுவாயைச் சப்புக் கொட்டுவர்; பொதுவாகப் பூங்கோதை போன்ற பெண் பெற்றார், கண் பெற்றாரே. இப்படிப்பட்ட பெண்ணின் முடிவு கதையைப் படிக்கும் நம் எல்லாருக்கும் துன்பத்தைத் தருகின்றது. ''தாயகம்'' பிறக்கத் தன் உணர்வுகளை யெல்லாம் தியாகம் செய்கின்றாள் பூங்கோதை. அன்பென்னும் ஆற்றுப்பெருக்குக்கு அணை போட்டுக் காத்திருக்கிறாள் அப்பெண்மணி. ஆனால் தாய் போன்ற அவள் மறைகின்றாள்; ''தாயகம்'' பிறக்கிறது.

கதையில் வருகின்ற செல்வி ஒரு புதுமைப்பெண். பழமையும் புதுமையும் பகுத்துணர்ந்து பேசும் அவள் பேச்சும், நவயுகத்தைக் குறித்த அவளது விளக்கமும் அவளது ஆளுமையை உயர்த்திவிடுகின்றன.

அறிவுக்கு விருந்தாகக் கதையில் எத்தனையோ இடங்களைக் காட்டலாம்.

''யுகங்கள் மாறுகின்றன. நம் கண்முன்னேயே வெகு வேகமாக மாறி வருகின்றன. அப்போதெல்லாம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகே வெவ்வேறு யுகம் வரும். அதற்கு ஏற்றாற்போல் மெல்ல மெல்லச் சமுதாயம் தன்னைச் சரி செய்து கொள்ளும். ஆனால், விரைந்து மாறும் இந்தக் கால யுக வேறுபாடுகளைச் சீரணித்துக் கொள்வது கஷ்டந்தான். ஆனால், வேறு வழியில்லை. சீரணித்துக்கொள்ளத்தான் வேண்டும். 'அன்பு, அடக்கம்' என்பது அந்தக் காலக் கருத்துக்கள்; நடைமுறைகள்; இந்த யுகம் கவர்ச்சி யுகம், வெறும் காம யுகம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்; தெரிந்து கொள்ள வேண்டும். இயலாவிட்டால் பேசாமல் நாம் இன்னொரு நாட்டில் வாழ்வதாகக் கருதிக் கொண்டு மனங்கலங்காமல் வேடிக்கை பார்க்க வேண்டும். அப்போதுதான் இந்த யுகத்தைச் சமாளிக்க முடியும்.'' யுகப் புரட்சியை மிகத் தெளிவாக இன்றை மனிதனுக்குக் காட்டும் வரிகள் இவை. இது போன்ற கருத்துக்களைப் புரிந்து செயல்பட்டால் 'இரத்த அழுத்தம்' (Blood Pressure) பல பேருக்கு வராது.

''குடும்பப் பெண்ணின் அழகு அன்றாடம் அம்மா கையில் உண்ணும் சோறு போன்றது... உடல் கவர்ச்சியால் கணவனுக்குப் போதை யூட்டித் தன்வயப்படுத்துவது பாலுக்குப் பதில் வீட்டில் கள் குடிப்பது போன்றது. அவளே தன் கவர்ச்சியால் பிறரையும் கவர முயல்வது, அனைவரும் தன் அங்க அழகைப் பார்த்துச் சுவைக்க வேண்டும் என்று நினைப்பது வீட்டிலேயே கள்ளுக்கடை வைத்துவிடுவது போன்றதாகும்'' என்ற பகுதிகள், பெண்,

காவியமாக இருக்க வேண்டும், கள்ளாக இருக்கக் கூடாது என்று இன்றைய தமிழகத்திற்கு ஆசிரியர் தம் கருத்தைச் செங்கண்ணன் வாயிலாக வழங்குகின்றார்.

கலையின் கடமைகள் இரண்டு. ஒன்று, இன்புறுத்துவது (Entertainment). இன்னொன்று, நீதியைச் சொல்வது (Ethical). நாவலில் கருத்துக்கள் நீரில் கரைந்த உப்பு போல், இலைமறை காய்போல் இருத்தல் ஓர் அரிய சிறப்பு. அச்சிறப்பினைப் பெற்று இந்நாவல் விளங்குகிறது. கலை நுட்பமும், கருத்து வளமும் கொடியும் கொம்புமாகப் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. சதையும் எலும்புமாக ஒட்டி இருக்கின்றன. இக்கால இளைஞர்களுக்கு இப்படிப் பட்ட கருத்து விளக்க நாவல்கள் வேண்டும்! வேண்டும்!! ஆசிரியர் செளரி ராசனார் தமிழ் நாட்டு இளைஞர்களை, ஏன் இந்திய நாட்டு இளைஞர்களை மனதில் வைத்து இன்னும் பல நாவல்களை எழுத இயேசு எம்பெருமான் அருள் புரிவாராக.

திருவேங்கடவன்
பல்கலைக் கழகம்
திருப்பதி
24-8-79

தானியேல் தேவசங்கீதம்
தமிழ் இணைப்பேராசிரியர்

1

செங்கண்ணன்

கொடுங் கோடை நீங்கியது. மெல்லக் குளிர் காற்று வீசத் தொடங்கியது. ஆனால், என் வாழ்வில் இளவேனில் மறைந்து அப்போதுதான் கோடைக் காலம் தொடங்கி இருந்தது.

ஆடிக்காற்றில் சருகுகளெல்லாம் 'ஙொய்' என்று சுழன்று எழுந்து பறந்து எங்கோ ஓடி மறைந்து கொண் டிருந்தன. என் பழைய நினைவுகளோ காலத்தையும் இடத்தையும் கடந்து என்னையே சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சூலை 15. பச்சையப்பன் தன் இரு கைகளையும் விரித்துப் புதிய மாணவச் செல்வங்களையும், பழைய மாணவ அறிஞர்களையும் வரவேற்றுக் கொண்டிருந்தான். கூடுகளை நோக்கித் திரண்ட தூக்கணங்குருவிகள் போலப் பழைய மாணவர்கள் இரண்டு மாதங்களுக்குப் பிறகு தங்கள் தங்கள் விடுதி அறைகள் கலகலவென்று இன்பம் தாண்டவமாடப் பேசிமகிழ்ந்தனர். கேட்பாரற்ற கடைசி விருந்தாளி போல நானும் எனக்கு ஒதுக்கியிருந்த 121-ஆம் அறையை அடைந்தேன்.

அறை வெறிச்சென்றிருந்தது. உலகமே இருண்டு கிடப்பது போல் தோன்றியது. இனிய நினைவுகளால் வாழ்வு நிறைந்த காலம்வரை தனிமை இனிமை தந்தது. இப்போதோ தனிமை என்னைக் கொன்றுவிடும் போல்

தோன்றியது. அறையைச் சாத்திவிட்டுத்திறந்த மேல்தளம் நோக்கிப் புறப்பட்டேன்.

வழியில் மாணவர்கள் கூட்டங்கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந்தனர். கடந்த தேர்தலைப்பற்றிக் காரசாரமாக ஒரு கூட்டம் விவாதித்துக் கொண்டிருந்தது. 'உலக மாணவர் இயக்கம்' குறித்து, நிகழ்த்த வேண்டிய கடற்கரைக் கூட்டம் பற்றிச் சென்ற ஆண்டு மாணவர் தலைவன் தியாகராசன் விவரித்துக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஒரு குழு அமைதியாகக் கேட்டுக் கொண் டிருந்தது. புதிய ஆட்சியின் கொடுமையைக் காட்டிப் புறப்பட வேண்டிய மாணவர் மௌன ஊர்வலத்திற்குப் பட்டுக்கோட்டை முத்துசாமி ஏற்பாடு செய்து கொண் டிருந்தார்.

அந்தக் கூட்டங்களின் கண்ணில் படாமல் ஒதுங்கி மெல்ல மேல்தளத்திற்குச் செல்லும் படிக்கட்டருகே வந்தேன். அருகிலிருந்த அறிஞர் சோக்ரதர் அறையி லிருந்து தமிழ் முழக்கம் வந்து கொண்டிருந்தது. அது கூத்தரசன் குரல். சென்ற ஆண்டில் என்னோடு கல்லூரிப் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளத் தேர்ந்தெடுக்கப் பட்ட இருவருள் அவனும் ஒருவன். எந்தக் கூட்டத்தில் எவ்வளவு கூக்குரல் எழுந்தாலும் கூத்தரசன் குரல் கணீரென்று ஒலித்துத் தன் தனித்தன்மையைக் காட்டி விடும். கால்கள் அங்குச் சற்று நின்றன. நுழையலாமா என்று தயங்கினேன். பின் மனத்தை மாற்றிக் கொண்டு இரண்டாவது தளத்தை நோக்கி ஏறினேன்.

'வணக்கம் செங்கண்ணா. என்ன இப்படி இளைத்துப் போயிட்டியே' என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தேன்.

மேல் படியில் மாஸ்கோ நின்று கொண்டிருந்தான். பொங்கி வரும் துன்ப உணர்வை அடக்கிக் கொண்டு 'ஒன்றுமில்லை. உடல் நலமில்லை' என்று சுருக்கமாகக் கூறி மேலே நடந்தேன். அவனுடைய அறை 'லெனின் கிராட்' கண்ணில் பட்டது.

அடுத்து நண்பர் அறிவொளியின் அறை 'வெள்ளை மாளிகை' தோன்றியது. படியேறி மேல் நிலா முற்றத்தை அடைய விரும்பிய நான் மூன்றாம் தளத்தில் சென்ற ஆண்டு தங்கியிருந்த குழந்தையாவைக் காணலாம் என்று சென்றேன். அவன் அறை பூட்டியிருந்தது. குழந்தையா மிகமிக அமைதியானவன்; வாழ்க்கையில் துன்பங்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சந்தித்தவன்; என்னைப் போல் தந்தையற்றுத் தாயின் ஆதரவில் வாழ்ந்து வருபவன்; ஒவ்வொன்றையும் திட்டமிட்டு வாழ்பவன்; ஒவ்வொரு நாளில் ஒவ்வொரு நிமிடம் குறித்தும் அவன் நாள் அட்டவணை வைத்திருப்பான். இப்போது அவன் தன் இலங்கை நண்பர்களைக் காணக் கிறித்துவக் கல்லூரிக்குப் போயிருப்பான். அப்படியே மூன்றாம் தளத்தைச் சுற்றிக் கொண்டு படியேறித் திறந்த மேல்தளத்தை அடைந்தேன். கீழே விளையாட்டுத் திடலிலிருந்து வெற்றி முழக்கம் கேட்டது. கீழ்நோக்கிப் பார்த்தேன். கால் பந்தாட்டம் முடிந்து மாணவர்கள் விளையாட்டுத் திடலை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக மேய்ந்து கொண்டிருந்த எருமைகளில் இரண்டு அசோக மர நிழலில் படுத்து அசை போட்டுக் கொண்டிருந்தன. இரயில் கேட்டிலிருந்து 'டாண் டாண்' என்று மணியோசை கேட்டுக் கொண்டிருந்தது. நாலா புறமும் கண்களைச் சுற்றிப்பார்த்தேன். மெல்லத் தலை யைத்தூக்கி வானத்தைப் பார்த்தேன். என்னென்னவோ கற்பனைகளை இந்நாள் வரை எனக்கு அளித்து வந்த' அந்த வானம் இன்று ஏனோ இருண்டு கொண்டிருந்தது. மறைந்து கொண்டிருந்த கதிரவனின் செங்கதிர் வீச்சுகள் கீழ்த்திசையில் பரவித் தழுவிக் கொண்டிருந்தன. பறவை கள் பல கூட்டங்கூட்டமாகச் சென்று மறைந்தன.. இறுதியில் ஒரே ஒரு காகம் தனியாகப் பறந்து வந்து. கொண்டிருந்தது. ஓ! அதுவும் தன் துணையை இழந்து விட்டதோ! அப்படியே கட்டைச் சுவரில் குப்புறச்சாய்ந்து

விம்மி விம்மி அழுதேன். அந்த இருள் சூழ்ந்த மாலையில் சென்ற கால நினைவுகள் அலை அலையாக எழுந்தன.

'பூங்கோதை!' எவ்வளவு அழகான பெயர். எத்துணை மென்மையான உள்ளம். எவ்வளவு இனிய தன்னலமற்ற புன்னகை. அவளை நான் முதன்முதல் சந்தித்த அந்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கம் போல் அன்று மாலையும் சேரிச் சிறுவர்களைப் பார்க்கப் புறப்பட்டேன். உழவர்கள் ஆங்காங்கே அமைதியாக வயல்களை உழுது கொண்டிருந்தனர் இடையிடையே எங்கோ இருந்து,

தன்னா தன்னா தன்னன்ன
தன்னன்ன தன்ன தன்னனன்ன
ஏடி அத்தெ செங்கமலம்
எத்தென நாளா காத்திருக்கேன்—அடி
போடி அத்தெ செங்கமலம்
பொண்ணத்தாங் குடுடி கட்டிக்குறேன்
தன்னா தன்ன தன்னனன்ன
தன்னன்ன தன்ன தன்னனன்ன

காதலில் தோய்ந்து பாடும் இளம் உழவன் பாட்டு ஒன்று விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆ! இந்த உழவரின் வாழ்வு எவ்வளவு தூய்மையானது: நேர்மையானது. ஆனால் இன்னும் இவர்கள் முன்னேற இயலவில்லையே. மரம் செடி கொடிகளைப் போல மழையில் குளிர்ந்து வெயிலில் வாடி வருந்துகின்றனரே.

வணிகர்களால் ஊரை ஏய்க்க முடியும்; கட்சித் தலைவர்களால் நாட்டை ஏய்க்க இயலும். அரசியல்வாதிகளால் உலகை ஏய்க்க இயலும். ஆனால் இந்த உழவர்களால் யாரையும் ஏய்க்க இயலாதே!

சரியாகப் பாடஞ் சொல்லித்தராவிட்டாலும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் குறையாமல் வந்துவிடுகிறது. அரை குறையாக வேலை செய்து விட்டு முகத்துக்கு எதிர் நின்று

அலுவலகத் தலைமை எழுத்தரைப் புகழும் எழுத்தருக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது. இப்படி உழவனால் ஏய்த்து வாழ முடியாதே!

அவன் ஒருநாள் சரியாகத் தண்ணீர் பாய்த்து வைக்கா விட்டால், குறித்த நேரத்தில் பூச்சி மருந்து தெளிக்கா விட்டால், உரிய காலத்தில் எரு இடாவிட்டால், களை எடுப்பதில் சோம்பல் காட்டினால் உடனுக்குடனே அவன் தண்டனை அனுபவிக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடி வேறு அலுவலர்களுக்கு இல்லையே.

இப்படி என்னென்னவோ எண்ணிக் கொண்டு சென்ற என் நினைவை எங்கோ பாம்பின் வாயில் அகப்பட்டுக் கத்தும் தவளை ஒன்றின் அவலக்குரல் தடுத்து நிறுத்தியது. சற்று நின்றேன். அப்போது கோரைக் குத்தில் தாவிக் கொண்டிருந்த பச்சைப்புழு ஒன்றை 'டக்கென'த் தன் நீண்ட நாக்கை நீட்டிப் பிடித்து, நாவை மடக்கி உள்ளி ழுத்து விழுங்கிக் கொண்டிருக்கும் தவளை ஒன்று கண்ணில் பட்டது. அதன் தொண்டைக்குழி மேலும் இன்னொரு புழுவை உள்ளிறக்க ஆயத்தமாக மேலெழுந்து எழுந்து அடங்கிக் கொண்டிருந்தது. இதுதான் இயற்கையின் நியதியா? ஒன்றை ஒன்று கொன்று தின்பது தான் இயற்கை காட்டும் வழியா என்று வருந்திக் கொண்டே தொடர்ந்து நடக்கலானேன். வழியில் பாம்புப் பிடாரன் ஒருவன் மகுடியோடு என்னைத் தாண்டிப் போய்க் கொண் டிருந்தது என் கேள்விக்கு விடை தருவது போல இருந்தது. உலகச் சமநிலைக்கு இறைவன் இப்படித் திருவிளையாடல் செய்கிறானோ!

அவனைக் கடந்து கொஞ்ச தூரந்தான் சென்றி ருப்பேன்.

'எல்லோரும் வாழுவோம் வாரீர் — எங்கும்'
என்றும் துயரில்லை அன்பினில் சேரீர் (எ)

என்ற பாட்டொலி கேட்டு நின்றேன். அருகிலிருந்த

தென்னந்தோப்பு நடுவிலிருந்த ஒரு குடிசை முன்னே குழந்தைகள் பலர் கூடிப் பாடிக் கொண்டிருந்தனர்.

அது நான் எழுதிய பாட்டு. பள்ளியில் நான் சொல்லித் தந்த இந்தப் பாட்டை இங்கு எப்படி எல்லாக் குழந்தை களும் பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று வியந்த படியே சிறிது நின்றேன்.

கல்விப் பயன்இது அன்றோ-அன்பு
கண்டிடும் மானிடம் தோன்றுவ தென்றோ? (எல்)

அடுத்த அடியை எடுத்துப் பாடும் பெண்குரல் ஒன்று இனிமையாகக் காற்றில் மிதந்து வந்தது. என் உள்ளத்து உணர்ச்சி அதில் அப்படியே இருந்தது. அதனைப் பின் பற்றிச் சுற்றியிருந்த குழந்தைகள் எல்லாம் தொடர்ந்து பாடினார்கள். நான் பாடும் அதே உணர்வில் அதே உருக்கத்தில் பாடுகின்ற அந்தப் பெண்ணைப் பார்க்கும் ஆர்வத்தில் அந்தக் குடிசையைநோக்கி நடந் தேன். என்னைப் பார்த்து இயல்பான பாடல் பயிற்சி நின்று விடாமல் தென்னை மரங்களுக்கு இடையே மறைந்து மறைந்து சென்று ஒரு பக்கம் நின்றேன்.

இப்போது எல்லாக் குழந்தைகளும் தெளிவாகத். தெரிந்தனர். பாட்டுச் சொல்லிக் கொண்டிருந்த பெண்ணின் அருகில் இருந்த பொன்னம்மா என் மாணவி தான். ஆனால் இனிமையாகப் பாடிய அந்தப் பெண் யார் எனத் தெரியவில்லை. இப்படி நான் எண்ணிக் கொண்டி ருந்த போது ஏனோ திரும்பிய பொன்னம்மா என்னைப் பார்த்து விட்டு, ‘ வணக்கம் அண்ணா!’ என்றபடி ‘அடி பூங்கோதை! இவர் தான் எங்கள் ஆசிரிய அண்ணா! உனக்கு அப்பப்ப சொல்வேனே—இவர் தான் அவர்’ என்று கட கட என்று ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

பூங்கோதை என்ற சொல்லையும் அந்தச் சொல்லின் பொருளாக என் கண்முன் தலை கவிழ்ந்தபடி நின்ற பெண்ணையும் இதோ இன்றுகூட என் செவியும் கண்ணும் கண்டு வருந்துகின்றன.

''பூங்கோதை, வணக்கம் சொல்லு' என்ற பொன்னம்மாவின் குரல் கேட்டு மெல்லத் தலை நிமிர்ந்து பார்த்தாள். மென்று விழுங்கியபடியே கைகளைக் கூப்பி 'வணக்கம்' செய்தாள். நான் பதிலுக்கு 'வணக்கம்' என்று சொல்வதற்குள் அதைக் காண, கேட்க விரும்பாதவள் போல் குடிசையுள் சென்று மறைந்து விட்டாள்.

'எங்கே அண்ணா! மாணவர்களைப் பார்க்கப் புறப்பட்டிட்டீங்களா!' என்று பேசிக்கொண்டிருந்தாள் பொன்னம்மா. வளைந்தும் நெளிந்தும் உயர்ந்தும் கதிரவன் ஒளியைப் பெறப் போராடி முன்னேறிய அந்தத் தென்னை மரங்கள் நிகழ்த்திய அமைதியான போராட்ட வாழ்வைப் பார்த்துச் சிந்தித்துக் கொண்டிருந்தேன் நான்.

'வாங்கய்யா வாங்க!' என்று வாய்நிறைய அழைத்த அந்த அம்மாவைப் பார்த்து 'வணக்கம்' செய்தேன். அந்த அம்மாவுக்குப்பின் தலைகவிழ்ந்தபடி பூங்கோதை நின்றிருந்தாள். அவள் கையில் தேங்காய்த் திருகல் இருந்தது.

பொன்னம்மா அருகில் சாத்திவைக்கப்பட்டிருந்த தாழம் பாயை விரித்து அமரச் சொன்னாள். பூங்கோதை தேங்காய்த் திருகலில் சிறிது சீனி தூவி என் முன்னே வைத்தாள். அந்த அம்மா சுடச்சுடப் பால் கொண்டு வந்து ஒரு குவளையில் வைத்தார்கள்.

மெல்ல அந்தப் பூவைச் சுவைத்துக்கொண்டே என்ன பேசுவது என்று தெரியாமல் அங்கும் இங்கும் பார்ப்பது போல் பூங்கோதையை நோக்கிக் கொண்டே சுற்றியிருந்த குழந்தைகளுக்குக் கொஞ்சம் அந்த இனிப்பை வழங்கினேன்.

''நீங்க சாப்பிடுங்க! அவுங்க எல்லாம் அடிக்கடி தின்னிருக்காங்க' என்று நானே உண்ண வேண்டும் என்ற ஆர்வதோடு என்னை நோக்கிக் கூறினாள் பூங்கோதை. மெல்ல ஒருவாறு பாலையும் குடித்துவிட்டுப் புறப்பட்டேன். சிறிது தூரம் சென்ற நான் என்னவோ மீண்டும் திரும்பினேன்.

நான் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த அனைவரும் எதையேனும் நான் அங்கு வைத்து மறந்து விட்டேனோ என்ற எண்ணத்தில் என்னை வியப்போடு பார்த்தனர். பூங்கோதை அருகில் ஓடிவந்து ''எதையாவது வச்சிட்டிங்களா?'' என்று கேட்டாள். 'ஆம், என் மனத்தை இங்கு வைத்து விட்டேன்' என்று அவள் கண் களை நோக்கிச் சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ஆனால் ஏனோ அவ்வளவு துணிவு அப்போது வரவில்லை. 'உம்...இந்தப் பாட்டு உனக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டேன். அதற்குள் அங்கு வந்து எங்களோடு சுலந்து கொண்ட பொன்னம்மா, 'நான்தான் அண்ணா பூங்கோதைக்குச் சொன்னேன். நீங்க சொல்லிக் கொடுத்த பாரதியார் பாட்டுக்கள் எல்லாம் என்னென்ன நடத்து றீங்களோ அதையெல்லாம் பூங்கோதை நாள்தோறும் கேட்டுக் கத்துக்குவா', என்றாள் பொன்னம்மா. நான் பூங்கோதையைப் பார்த்தேன். 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்து மெல்லப் புன்னகை செய்தாள். இன்னும் சிறிது நேரம் அங்கு அவளோடு ஏதேனும் பேசவேண்டும் போல் இருந்தது.

'எங்கே, பாரதி பாட்டு ஒன்று பாடு' என்றேன்.

'நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ'

என்ற பாடலை உளமுருகப் பாடினாள். பாரதியார் இப்படித்தான் ஊனுருகப் பாடிக் கண் கசிந்திருப்பார் என்று எண்ணி அவர்களை வாயார வாழ்த்திவிட்டுப் புறப்பட்டேன்.

எத்தனையோ உயர்ந்த பாடல்கள் தமிழில் இருந் தாலும் சில பாடல்கள் இயற்றிக் குழத்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என்று அப்போது பேராசைப் பட்டேன். அப்படியே சில பாடல்கள் இயற்றி என் வகுப்புக் குழந்தைகளுக்குப் பாடிக் கற்பித்து வந்தேன். வறுமையில் வாடும் ஆரம்ப ஆசிரியர்களின் துன்ப

நெஞ்சத்தில் தோன்றும் ஒரு இன்ப மின்னல் தாங்கள் சொல்லித் தருவதைக் கற்றுக்கொண்டு திரும்பச் சொல்லும் குழந்தைகளின் குரலே ஆகும். இப்படியே நான் கற்றுக் கொடுத்த பாடல்களைக் குழந்தைகள் கூடித் திரும்பப் பாடுவதைக் கேட்கும் இன்பத்தைப் பலமுறை அனுபவித்திருக்கிறேன். இப்படி நினைத்துக் கொண்டே தென்னந்தோப்பைக் கடந்து சாலையில் ஏறிய நான் மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். எல்லோரும் குடிசை முன், முன்போல் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தனர். சாலை நோக்கித் திரும்பிய பூங்கோதை யின் முகம் என்னைப் பார்த்துத் தலை கவிழ்ந்தது. உண்மையில் தென்னந்தோப்பை அவ்வளவு விரைவாக விட்டு வர மனம் இல்லைதான்.

ஆனால் முனியனின் நினைவு என்னைத் தயங்காமல் விரைந்து புறப்படத் தூண்டியது.

காந்தி மகான் ஆதாரப் பயிற்சிப் பள்ளியை விட்டு வெளியேறும் போது, ''தம்பிகளே! வாழ்வில் பிற உயிர் களுக்குத் துன்பந்தராத தொழில்கள் ஒன்று இரண்டே இருக்கின்றன. ஒன்று, நீங்கள் ஏற்கப் போகும் ஆசிரியத் தொழில்; மற்றொன்று மருத்துவத் தொழில்.

இரண்டிலுங்கூட ஆசிரியத் தொழிலே சிறந்தது. மருத்துவத் தொழிலில் நோய், முதுமை, சீழ், உடல் உறுப்பு—இவற்றையே பார்த்துக் கொண்டு வாழ வேண் டும். ஆசிரியத் தொழிலிலோ இளமை, அழகு, மலரும் குழந்தை உள்ளம் இவையே உங்கள் முன் எப்போதும் திகழ்ந்து கொண்டிருக்கும். இந்த அருமையான பணி உங்களுக்கு வாய்த்துள்ளது. அறியாமையில் அமிழ்ந்து புழுப்போல நெளியும் ஏழை எளியவர்க்கு 'அ, ஆ' சொல்லித் தருவதோடு உங்கள் வேலை முடிந்துவிட வில்லை. கூட்டல் பெருக்கல், வகுத்தல் கழித்தம் ஆகிய கணக்குகளைக் கற்றுத் தருவதோடு உங்கள் வேலை முடிந்துவிடுவதில்லை. உங்கள் வாழ்க்கையிலிருந்து,

நீங்கள் வாழ்வதைப் பார்த்துச் சின்னஞ்சிறு குழந்தைகள் கற்பதே மிகுதி. ஒவ்வொரு குழந்தையோடும் தொடர்பு கொள்ளுங்கள். அவர்களின் இதயத்தில் இடம் பெறுங்கள். இந்த உலகில் பெறுதற்கு அரிய பெருஞ்செல்வங்களில் எல்லாம் பெரியது இதயமே ஆகும். சேரிசேரியாக, கிராமம் கிராமமாக, வீடு வீடாகச் சென்று உங்களிடம் படிக்கும் குழந்தைகளின் ஊர்ச்சூழல், மனநிலை இவற்றைப் புரிந்துகொண்டு பணியாற்றுங்கள். எந்த அளவு உங்கள் வகுப்புக் குழந்தைகளின் உள்ளங்களை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களோ அந்த அளவுக்கு உங்கள் தொண்டு சிறப்படையும்...'' என்று உளநூல் ஆசிரியர் இளங்கணத்தான் கூறிய சொற்கள் என் நெஞ்சில் இன்றும் உள்ளன.

அதனால்தான் கருங்கண்ணி ஆதார உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தொழில் ஏற்றதிலிருந்து விடுமுறை நாட்களில் இப்படிச் சேரி, குப்பம், ஊர் என்று பள்ளிப் பிள்ளைகள் வாழும் பல இடங்களையும் முறை வைத்துக் கொண்டு சுற்றி வரலானேன். பணக்காரர், ஏழை, உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பேதம் எதுவுமின்றி அந்தக் குழந்தைகள் இதயம் எல்லாம் அன்பு ஊற்றாக மலர்ந்து கமழ்வதை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கண்டு பூரித்துப் போவேன். குழந்தைகட்கு அன்பும் பண்பும் நிறைந்த ஒரு குடில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் நான் பயின்ற மகாத்மாகாந்தி குடிலில் அனாதைப் பிள்ளைகள் படும் துயரை நினைக்கும் போதெல்லாம் என் உள்ளத்தில் எழும். இப்போது அந்தக் குடில் ஓரிடத்தில் ஒடுங்கி அமைந்து விடாமல் ஊரெல்லாம் சேரியெல்லாம் தன்னுள் கொண்டு விளங்குவ தாக உணர்ந்து வரலானேன்.

அன்று சோழன்பட்டிக் கீழைச் சேரியிலிருந்து வரும் முனியனைத் தவறாமல் பார்க்க வேண்டிய நெருக்கடி ஒன்றும் ஏற்பட்டுவிட்டது.

வியாழக்கிழமை காலை வகுப்புகள் முடிந்தன். குழந்தைகள் தாங்கள் கொண்டுவந்திருந்த உணவுகளைத் தின்னத் தொடங்கினர். அன்று என் வகுப்பில் பயிலும் முனியன், ஊரிலிருந்து வந்திருந்த தன் அத்தை மகள் பச்சையம்மாவையும் பள்ளிக்கு அழைத்து வந்திருந்தான். என்றும் போல் அன்றும் தன் பண்ணையில் வேலை செய்யும் சுப்பன் மகன் முனியனைச் சேகர் கூப்பிட்டுத் தான் சாப்பிட்ட டிபனைக் கழுவி வைக்கச் சொன்னான். அவன் பண்ணைக்காரர் மகன் என்பதால் அந்த வேலையை முனியன் எப்போதும் செய்து வந்தான். ஆனால் அத்தை மகள் பச்சையம்மாளை வைத்துக் கொண்டு 'டேய் முனியா' என்று அமர்த்தலாகக் கூப்பிட்டு 'டிபனைக் கழுவி வையுடா' என்று அலட்சியமாகக் கட்டளையிட்டது அவனுக்குப் பொறுக்க முடியாத அவமானமாக இருந்தது. போதாக் குறைக்கு 'அத்தான்! இவரு யாரு? இப்படி உன்னை அதட்டுறாரு' என்று சிணுங்கிக்கொண்டே கேட்ட பச்சையம்மாவின் அன்புச் சொற்கள் வேறு சேர்ந்து கொண்டன.

'முடியாது. நீ தின்னதை நீயே போய்க் கழுவிக்கோ' என்று சொல்லி விட்டான். அருகிலிருந்த பிள்ளைகள் எல்லாம் சேகரைப் பார்த்துக் 'கொல்' என்று சிரித்து விட்டனர்.

'முடியாதுன்னா சொல்றே பறப்பயலே!' என்று முனியன்மேல் பாய்ந்து பளார் பளார் என்று நான்கைந்து முறை சேகர் அறைந்து விட்டான். இந்நாள்வரை அறைகளையும், அடிகளையும், உதைகளையும் வாங்கிச் சீரணித்துக் கொண்ட அவன் மனம் இன்று அடங்க மறுத்தது. தன்னைக் கட்டிக் கொண்டு பச்சையம்மாள் அழுததைப் பார்த்து முனியன் சீறி எழுந்தான். பதிலுக்கு நான்கைந்து அறை கொடுத்தான். அதற்குள் மாணவர்கள் இருவரையும் பிரித்து விட்டு ஓடி வந்து என்னிடம் கூறினர். நான் அங்குச் சென்ற போது,

'டேய் முனியா! எங்க சோற்றைத் தின்கிற கொழுப் பாடா உனக்கு. ஒன்னையும் ஒங்க அப்பனையும் ஆயியை யும் கூரையைப் பிரித்துத் தெருவிலே நிக்க வைக்கிறேன் பாருடா...' என்று கருவிக் கொண்டே விர்ரென்று சேகர் போவதைப் பார்த்தேன்.

'டேய் சேகர்-சேகர்...' என்று கூப்பிட்டதுகூட அவன் காதில் விழவில்லை. முனியன் சேகரின் கடைசிச் சொற் களைக் கேட்டு மிகவும் சோர்ந்து போய் விட்டான். பண்ணைக்காரர் தமக்கு அடங்காத பலரைச் சேரியை விட்டு இரவோடு இரவாக விரட்டிய காட்சியை எத்தனையோ முறை அவன் பார்த்திருக்கிறான். அப்படி ஒருநிலை தன்னால் தனக்கும் தன் தாய்க்கும் நிகழப் போவதை அவன் மனம் கண்டு கொண்டிருப்பது போல் தோன்றியது. அதற்குள் பிற்பகல் பள்ளி தொடங்குவதற்கு அடித்த மணியோசை கேட்டது. மாலையில் ஆறுதல் சொல்லலாம் என்று வகுப்பிற்குப் போய் விட்டேன்.

பிற்பகல் மணி நான்கு இருக்கும். பள்ளி முடிய இன்னும் அரைமணி நேரமே இருந்தது. திடீரென வானம் இருண்டது. கருமேகங்கள் கூட்டங்கூட்டமாகக் கீழ்த் திசையில் திரண்டன. சில்லென்று காற்று வீசியது. பறவைகள் எல்லாம் இனம் இனமாகக் கூடுகளை நோக்கிச் செல்லத் தொடங்கின. பெருமழை விரைவில் 'சோ' வெனப் பெய்ய ஆரம்பித்து விட்டது.

என்னிடம் ஒரு குடைதானிருந்தது. அதனை வைத்துக் கொண்டு அருகேயிருந்த வீடுகளுக்குக் குழந்தைகளைக் கொண்டு விட்டு வந்தேன். தூரத்திலிருந்து வந்த இரண்டு பிள்ளைகள் மிஞ்சியிருந்தனர். கடைசியாகக் குடையையே அவர்களிடம் கொடுத்து அனுப்பி விட்டேன்.

இந்த அலைமலைப்பில் முனியனை மறந்தே போனேன். பின்னர்தான் அவன் போய் விட்டது தெரிந்தது. 'ஐயோ' ஒன்றும் ஆறுதலாகச் சொல்ல வில்லையே' என்று வருந்தினேன்.

மறுநாட் காலையில் முனியன் வரவில்லை. விசாரித்தேன். சோழன் பட்டியிலிருந்து வரும் கந்தன்,

'நேத்து மழையிலே வாய்க்காங்கரை முக்கூட்டுக்கிட்டே அவன் வழுக்கிக் கருவை முள்ளு அலம்பலிலே விழுந்து விட்டான். இன்றைக்குப் போய்ப் பார்த்தேன். எழுந்திருக்க முடியாமே படுத்திருக்கான். ரொம்ப சுரம் அடிக்குதுங்க' என்றான்.

வழுக்கி விழுந்ததைவிடப் பண்ணைக்காரர் பயம் தான் அவனுக்குச் சுரத்தை உண்டாக்கியது என்பது, 'பாவம்' அவனுக்கு எங்கே தெரியப் போகிறது.

இதனால்தான் அன்று சிறிது வழக்கத்திற்கு மாறாக முன்னேரத்திலேயே பிற்பகல் மூன்றரை மணிக்கெல்லாம் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். முட்கள் குத்துண்டஇடத்தில் தடவப் பென்சிலின் நெய் எடுத்து உட்சட்டைப் பையில் வைத்துக் கொண்டேன். சொல்லி விட்டுப்போகத் திரும்பி அம்மாவை நோக்கினேன்.

'ஏன்டா! புறப்பட்டுட்டியா? எல்லா வாத்தியாரும் உன்னைப் போலத்தானே சம்பளம் வாங்கறாங்க. நீ மட்டும் வாராவாரம் ஊர்ஊராகச் சுற்றிப் பிள்ளைகளைப் பார்த்து விட்டு வரணும்னு எந்தச் சட்டத்திலேடா எழுதியிருக்கு?' என்று தொடர்ந்து பேசிக் கொண்டே தோட்டத்தில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த அம்மா வந்தார்கள்.

'இந்தச் சட்டத்தில்தானம்மா எழுதியிருக்கு' என இதயத்தைத் தொட்டுக் காட்டிவிட்டுச் சிரித்தேன். அங்கே எப்போதும் நான் வைத்திருக்கும் திருக்குறள் இருந்தது. அவர்களும் சிரித்துவிட்டுத் திரும்பினார்கள்.

அப்போது 'எங்கே செங்கண்ணா? இவ்வளவு அவசரம்?' எனக் கேட்டுக் கொண்டே ஆசிரியர் முருகேசனார் வந்தார்.

'உட்காருங்கள்' என்று சுருட்டியிருந்த பாயை விரித்துக் கொண்டே, 'அம்மா' என்று அழைத்தேன்.

''ஐயாவா! வாங்க!' என்ற அழைப்போடு அம்மா ஒரு குவளை மோர் கொண்டுவந்தார்கள்.

'வேண்டாம்மா வேண்டாம்; சும்மா செங் கண்ணனைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று தான் வந்தேன்' என்று என்னைப் பார்த்து ஏக்கத்தோடு ஒரு பெருமூச்சு விட்டார்.

'என்ன சொல்லப் போகிறாரோ?' என்று அச்சத்தோடு காத்திருந்தேன்.

'செங்கண்ணா!' என்று தொடங்கினார். 'உன் போக்கு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நாங்களும் பல நாட்களாகச் சொல்லி வருகிறோம். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகப் போகுது. இப்படிப் பள்ளி நேரத் தோடு காலையும் மாலையும் குழந்தைகளைக் கூட்டி வைத்துக் கொண்டு சுத்தினால் இன்னும் மூன்று நான்கு வருடங்கள் கூட நீ உயிரோடு வாழ மாட்டே. நான் அடிக் கடி கவனிக்கிறேன். பாடஞ் சொல்லித் தரும் போது நீ இடையிடையே இருமுகிறாய். என்னமோப்பா, சொல்லி விட்டேன். மனங்கேட்கவில்லை' என்று என்றும் போல் அன்றும் கடிந்து கொண்டார்.

அவர் கடிந்து கொண்டது சரியென்றே தோன்றிற்று. சில நாட்களாய்ப் பாடஞ் சொல்லித்தரத் தொடங்கியதும் புகைந்து புகைந்து இருமுகிறது. என்ன செய்வது, நானுந் தான் ஒவ்வொரு நாளும் உறங்கப் போகும்போது மறு நாள் பேச்சைக் குறைத்துக்கொள்ளவேண்டும், குரலைத் தாழ்த்திப் பேசவேண்டும் என்ற உறுதியோடு படுக்கிறேன். ஆனால், பொழுது விடிந்ததும் குழந்தைகளுடன் கூடி மறந்துவிடுகிறேன்.

வகுப்பில் மெதுவாகப் பேச வேண்டும் என்று எண்ணிக்கொண்டே செல்வேன். பாடந்தொடங்கும் வரை அந்த நினைவு இருக்கும். அப்புறம் இந்த உலகமே மறந்து விடும். நானும் குழந்தைகளும் ஏதோ ஓர்

அன்பு உலகத்தில் அறிவு வானத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுவோம். பழைய உயர்ந்த குரல் என்னை யறியாமல் எழுந்து முழங்கும். பெரியவர் முருகேசனார் அன்புக் கண்டிப்புத் தொடர்ந்து வந்து தடைசெய்யும். இந்த உலகத்திற்கு இழுத்து வரும்.

இளமையும் இயற்கையும் எத்தனையோ 'எண்ணங்களையும் சிந்தனைகளையும் எழுப்பி விடும். பல வினாக்கள் எழும்; சிலவற்றிற்கு விடையும் கிடைக்கும். அவை கண்ணில் விழுந்த திசுக்கள்போல் உறுத்திக்கொண்டிருக்கும். விடிந்ததும் வகுப்பில் குழந்தைகளிடம் அவற்றைக் கூறிய பின்தான் உறுத்தல் ஒழியும். அவ்வாறு சொல்லும்போது என்னை மறந்துவிடுவதுண்டு. அதைத் தான் ஆசிரியர் முருகேசனார் அடிக்கடி வற்புறுத்திக் குறையாகக் கூறுவார்.

ஆசிரியர் புறப்பட்டார். அம்மாவும், 'என்னவோ அடிக்கடி வந்து புத்தி சொல்லிவிட்டுப் போங்க. அவன் நான் சொல்வதையெல்லாம் இப்போ கேட்கிறதில்லே' என நொந்து கொண்டார்கள். அவர் சென்றபின் நானும் சிரித்துக் கொண்டே சோழன்பட்டிக் கீழைச் சேரியை நோக்கிப் புறப்பட்டேன்.

'தண்ணீர் வந்த காலம். பொழுது போனா குளிர் காற்று வீசும்!' என்று சொல்லியவாறே ஒரு துண்டு கொண்டுவந்து வாயிற்படியை விட்டு இறங்கிக் கொண்டிருந்த என் கையில் அம்மா கொடுத்தார்கள்.

இந்த எண்ணங்கள் அலையலையாய் மனத்திரையில் எழுந்து எழுந்து அடங்கின. நடந்து கொண்டேயிருந்தேன். எல்லைக்கல் தடுக்கித் தீடீரென என்னை நிறுத்தியது. 'உள்ளம் விண்ணிலே பறந்தாலும் உடல் மண்ணில்தான் இருக்கிறது' என்று எங்கேயோ படித்த நினைவு வந்தது. சோழன் பட்டிக் கீழைச்சேரியருகே வந்திருந்ததை அறிந்தேன். தடுக்கி நிறுத்தியதும் நல்லதே எனக் கால்கட்டை விரலைச் சிறிது நேரம் அழுத்திப்

பிடித்துக் கொண்டிருந்து விட்டு முனியன் வீடு நோக்கிச் சென்றேன்.

முனியனின் வீடு சேரியின் ஓரத்திலேயே அமைந் திருந்தது. எல்லா ஏழைகளின் வீடுகளைப்போலவே அது ஒரு சுவர் கரைந்தும் ஒரு பக்கக் கூரை பறந்தும் காணப் பெற்றது. எவ்வளவு கிழிந்த கந்தையையும் தைத்து மானத்தைக் காக்க முயலும் தமிழ்ப் பெண்களைப்போல் முனியனின் அப்பாவும் தன்னால் முடிந்தவரை அந்த மடிந்து உதிர்ந்த கீற்றுகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வீட்டினுள் ஒருவாறு வெயில் நுழையாது வேய்ந்திருந்தான். அவன் குடிசையும் பிற குடிசைகளும் சேர்ந்து பசுமையான வயல்களுக்கு இடையே கருநிறத் திட்டுப்போல் தோன்றின. அந்தத் திட்டு முழுதும் பெரிய பண்ணைக்காரருக்குச் சொந்தமானது, பெரிய பண்ணை என்பதை விடக் கங்காணியார் வீடு என்றால் அந்த வட்டாரத்தில் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

அந்தப் பெரிய பண்ணை மூன்று தலைமுறைக்கு முன்னே சிறிய பண்ணையாகக்கூட இருந்ததில்லையாம், அதைப்பற்றி என் தாத்தா சொல்லியவை எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன.

கணவனிடம் சண்டையிட்டுக் கொண்ட மனைவி, குடும்பத்தில் வெறுப்புற்ற கணவன், தாயிடம் கோபித்துக் கொண்ட இளைஞன், மூடப் பெற்றோருக்கும் பொய்ச் சமுதாயத்திற்கும் வஞ்சக மக்களுக்கும் இடையே எதிர்த்து உள்ளூரில் கூடிவாழ அஞ்சிய காதலர்கள்—இவ்வாறு வாழத் தெரியாத பல ஏழைகளைத் தரகுப்பணத்திற் காகக் கணக்கற்ற தீவுகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாக வெள்ளைக்கார முதலாளிகளிடம் அனுப்பி அந்த எளிய வரின் கண்ணீரைக் கண்டு கலங்காது சேர்த்த கொடிய பணம் இன்று பெரிய பண்ணையாக உருவாகியிருப்பதை

அவர் சொல்லும்போது என் கன்னத்தில் 'பொலபொல' வெனக் கண்ணீர் உருண்டு ஓடும்.

இலங்கைத் தீவில் கண்காணிப்பாளராக இருந்த கங்காணி சாம்பசிவம் பிள்ளையின் பேரப்பிள்ளை வெங்கடாசலம் பிள்ளைதான் இப்போது பெரிய பண்ணை முதலாளி. அவருக்குச் சொந்தமானதுதான் அந்தத் திட்டு. பண்ணைக்காரர் அந்தச் சேரிக்குப் போய் விட்டால் அங்கிருக்கும் ஆண் பெண் குழந்தை குட்டிகள் அனைத்தும் கை கட்டிக்கொண்டு கப்சிப் என நிற்கும்.

சோழன் பட்டி மண் சாலையிலிருந்து சேரி சிறிது வடக்கே தள்ளியிருக்கிறது. சிறிது அகண்ட வரப்பொன்று மண்சாலையோடு சேரியை இணைத்துச் செல்கிறது. அந்த வரப்பின் ஓரங்களில் சிறுசிறு கருவேல மரங்கள் நின்றிருந்தன. அதனருகே ஒரு களத்து மேடு இருந்தது. அதில் இரண்டு மூன்று சிறுவர்களும் நாலைந்து சிறுமி களும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

சிறுவர்கள் பண்ணை விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் பண்ணைக்காரர் போல மரத்தின் தடித்த வேரிலே ஒரு காலைத் தூக்கி வைத்தபடி வழவழப்பான மூங்கில் கழி ஒன்றை நீட்டிப் பிடித்துக் கொண்டு அதட்டும் தோரணையில் நின்றான். மற் றொருவன் எலும்பில்லாத புழுவினைப்போல் வளைந்து நெளிந்து கையைப் பிசைந்தவாறே "ஐயா...என் வீட்டுக் காரிக்கு இது மூன்றாவது குழந்தைங்க. நாகப்பட்டினம் ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கேங்க. ரொம்ப கஷ்டப் படுறான்னு சின்ன மச்சான் வந்து சொன்னாங்க. பெரிய மனசு பண்ணி ஒரு அஞ்சு ரூவா பணமும் இன்னைக்கும் நாளைக்கும் சோம்பும் (விடுமுறையும்) கொடுங்க. ஓடிப் போயிட்டு ஓடியாந்துடறேனுங்க. ஆம்புளே பிள்ளை பொறந்தா நம் வீட்டுக் கன்னுக்குட்டிகளையெல்லாம் மேய்ப்பானுங்களே...' எனக் கெஞ்சினான்,

பெரிய பண்ணைக்காரராக நடித்தவன் 'இந்தா இரண்டு ரூபா' என இரண்டு ஓட்டாஞ் சல்லிகளைக் கொடுத்து, 'நாளைக்குக் காலையிலே கோழி கூவுவதற் குள்ளே வந்து வயலிலே இறங்கிவிடணும் புரியுதா!' என ஒரு அதட்டு அதட்டித் தடிக்கம்பைப் பட்டென்று தரை யிலே குத்தினான். என்றோ, எந்த ஆளோ பண்ணைக் காரரிடம் மன்றாடிய நிகழ்ச்சியை இவர்கள் அப்படியே விளையாடிக் காட்டினர்.

வீட்டை நெருங்கினேன். அங்கே இரண்டு மூன்று சிறுமியர் குடும்ப விளையாட்டு ஆடினர். ஒருத்தி குப்பை மேட்டில் கிடந்த ஓட்டைப்பானை ஒன்றைத் தேடி எடுத்து வந்து மூன்று பொருக்குக் கட்டியின் மேல் வைத்துக் கஞ்சி காய்ச்சினாள். இன்னொருத்தி ஒரு மரக் கட்டையை வைத்துக் கொண்டு ''ரே! ரே!! தூங்குடாக் கண்ணு தூங்கு...அப்பா வந்துடும்...கஞ்சி காய்ச்சணும். தூங்கு தூங்கு ரோரே! உல்லுல்லாயி!...'' எனத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். மற்றொரு சிறுமி பாவாடையை வரிந்து கட்டிக்கொண்டு, ''என்னங்கடி இன்னும் போதே போக்கிறீங்க. கோழி கூவிடுச்சி. வெள்ளி முளைச்சிட்டுது. பண்ணைக்காரரு வந்திடுவாரு. வாங்கடி நாத்து நட'' எனக் கத்தினாள்.

அந்தப் பிஞ்சு நெஞ்சுகளில் அவர்களது அடிமை வாழ்வு அப்படியே படிந்து கிடந்தது. நடிப்பையும் மழலைச் சொற்களையும் கண்டு அறிவு மகிழ்ந்தாலும் அதற்குப் பின் மறைந்திருக்கும் அவர்களுடைய ஆறாத் துயரைக் கண்டு நெஞ்சம் அழுதது. அடிமை வித்து இவ்வாறு இளமையிலேயே இரத்தத்தில் ஊறிவளரும் இந்த நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது எனக் கூறிக் கூட்டம் போட்டுப் பேசுவதை எண்ணி எண்ணி வருந்தி னேன்.

நேரம் அதிகமாகிவிட்டது. சூரியன் மேற்கே மறைந்துகொண்டிருந்தான், மாலை மெதுவாகச் சூழத்

தொடங்கியது. ஒளி மங்கியது. குப்பைமேடுகளில் மேய்ந்து கொண்டிருந்த கோழிகள் 'கெக் கெக்' என மெல்லிய குரலில் கேவிக்கொண்டு தங்களுக்குரிய குடிசைகளில் நுழைந்து பதுங்கின. வயல் வெளிகளுக்கு அப்பால் திடலில் முளையடித்துக் கட்டப்பட்டிருந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு சில சிறுவர்களும் கிழவர்களும் சேரி நோக்கி வந்தனர். சேரியின் மூலையில் சில இளைஞர்கள் 'ஆண்டவர் ஆகாசமதில் தூங்குகின்றாரே' என்ற பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். அதில் அவர்களுடைய வாழ்வின் சோகக் குரலும் கலந்து ஒலித்தது. மினுக் மினுக்கென எல்லாக் குடிசைகளிலும் மண்ணெண்ணெய் விளக்குகள் ஏற்றப் பெற்றன.

முனியனின் குடிசை முன்னே போய் நின்றேன். உள்ளே ஒரு மங்கலான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. 'ஐயா, ஐயா! இனிமே இதுமாதிரி செய்யமாட்டேனுங்க. ஒரு முறை மன்னாப்பு தந்திடுங்க' என உளறிய குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். இது முனியனுடையதாகத்தான் இருக்க வேண்டுமென ஒருவாறு ஊகித்தேன். அப்போது வேலை முடிந்து குளித்து விட்டுக் குடிசைக்கு வந்த சுப்பன் இருளில் என்னைப் பார்த்து 'யாரது?' என்றான்.

'நான்தான் செங்கண்ணன்—முனியனின் வாத்தியார்' என்றேன்.

'வாங்கய்யா! கும்பிடுரேனுங்க' என இருகைகளையும் கூப்பிக்கொண்டே,

'முனியனுக்கு இரண்டு நாளா உடம்பு சரியில்லை. நெருப்புப்போலக் காயுது. அடிக்கடி உளறிக்கிட்டே இருக்கிறானுங்க. பெரிய பண்ணை சின்ன முதலாளியை இவன் அடிச்சிப்புட்டானன்னு பச்சையம்மா வந்து சொன்னா' என்று தழுதழுத்த குரலில் கூறினான்.

'பெரியபண்ணையாரிடமிருந்து இன்னும் ஆள் வர வில்லையா?' என்று பிரிக்கப்பெறாத கூரையையும் இடிக்கப்படாத மண்சுவரையும் பார்த்துக்கொண்டே கேட்டேன்.

'இல்லீங்க. அவரு ஏதோ வேலையா மன்னார்குடி போயிருக்காருங்க. போயி ரெண்டு நாளாச்சு. எப்படி யும் இன்னைக்குச் சாயங்காலம் வந்திடுவாருன்னு சொன் னாங்க' என்று சொல்லிக் கொண்டிருந்தவன் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவன் போல,

'என்ன ஐயா! வெளியிலேயே நிக்கிறீங்களே' எனக் கூறிவிட்டு, 'ஏடி அஞ்சலை! வாத்தியாரய்யா வந்திருக் காரு. என்னமோ உள்ளே செய்ஞ்சுக்கிட்டு இருக்கியே' என்று ஒரு கூப்பாடு போட்டான்.

அவள் உள்ளிருந்தபடியே...'நல்ல மனுசன் மச்சான்நீ! அய்யாவை வெளியே நிறுத்திப் பேசிக்கிட்டு இருக்கியே. அழைச்சுக்கிட்டு வா!' எனச் சொல்லிக்கொண்டே ஒரு கண்ணாடி விளக்கைக் கொண்டுவந்து சுவரில் அடித் திருந்த ஆணியில் மாட்டிவிட்டுத் திண்ணையில் ஒரு பாயை விரித்தாள். 'இங்கே இருங்க சாமி' என என்னை உட்கார வைத்து விட்டு சுப்பன் எங்கேயோ போனான்.

நெடுநெட்டிக் கோரைப்பாயில் உட்கார்ந்தபடியே ஏழைகளின் வாழ்வுபோல் துடித்துக் கொண்டிருந்த அந்த விளக்கைப் பார்த்தேன்.

கரி சிறிது சிறிதாக அந்த மங்கிய சுவரில்படிந்து கொண் டிருந்தது. சிறுது ஒளி காட்டுவது போல் பெரிய பகை யிருளை வளர்த்துத் தங்களுக்குள்ளேயே அடித்து உதைத்துக்கொண்டு மடியத் தூண்டும் பல கட்சிக்காரர் களின் செயலை அது நினைவுறுத்தியது. சிறிது நேரம் சென்றது. என்னால் உட்கார்ந்திருக்க இயலவில்லை.

உள்ளே சென்றேன். முனியனின் படுக்கையருகே உட்கார்ந்தேன். அவன் கையைப் பிடித்துப் பார்த்தேன். அதற்குள் வெளியே சென்றிருந்த சுப்பன் கையில் ஏதோ ஒரு குவளையோடு வந்தான். என் முன் நிற்காது நேரே உள்ளே போய்விட்டான். அங்கே அவனும் அவளும் ஏதோ குசுகுசு எனப் பேசிக்கொண்டனர்.

'என்னப்பா? என்ன அது? எங்கே போனாய்' என்றேன்.

'ஒன்றுமில்லேங்க' என நாணத்தோடு உரைத்துக் கொண்டே முன் வந்தான். அவனுடைய சுருங்கிய முகத்தில் ஏக்கத்தின் சாயல் படிந்திருந்தது.

கற்ற கல்வியாலும் பார்த்த படக்காட்சிகளாலும் பழகிய நட்பாலும் நெஞ்சத்துள் தோன்றும் உணர்வுகளை முசத்தில் தோன்றாதவாறு மறைத்து முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு ஆடம்பரமாக வரவேற்கும் பொய்ம்மை அவன் முகத்திலோ பேச்சிலோ சிறிதும் இல்லை. அந்த எளிய இனம் எண்ணியதை-நெஞ்சில் பட்டதை மறைத்து மாற்றும் அந்தக் கலையை இன்னும் கற்கவில்லை.

சுரம் அனல் போல் வீசியது. முள்குத்திப் பெயர்ந்த புண்களின்மேல் வேப்பிலையும் மஞ்சளும் அரைத்துப் போட்டிருந்தனர். சீழ் கோத்து இருந்தது; தேங்காய் எண்ணெயைத் தடவி அவைகளை மெல்ல அப்புறப்படுத்தினேன். கொண்டு போயிருந்த மெல்லிய துணியால் புண்களைத் துரய்மை செய்தேன். உட்சட்டையிலிருந்த பென்சிலின் நெய்யை எடுத்துப் புண்களின்மேல் தடவினேன். அவனைப் போர்த்தியிருந்த பழங்கந்தலில் கோழிப் பேன் மேய்ந்து கொண்டிருந்தது. அதனை அகற்றி அம்மாகுளிருக்காகப் புறப்படும்போது கொடுத்த அந்தத் துண்டால் போர்த்தினேன். அவனையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம்; அமைதி நிலவிற்று.

எங்கேயோ ஏதோ எச்சில் இலைக்குப் போராடும் இரு நாய்களின் குரைப்பொலி கேட்டது; அப்போது சேரிச் குட்டையருகே வாய்ச்சண்டையிட்டுக் கொண்டிருந்த இரு பெண்களின் கூக்குரல் அந்த நாய்களோடு போட்டியிட்டன.

முனியனுடைய கண்ணிமைகள் மெல்ல விரிந்தன; கண்களைச் சுழற்றிச் சுற்றியிருந்தோரைப் பார்த்தான்; மெல்ல இதழ்கள் அசைந்தன. 'அண்ணா! அண்ணா!' என்றான்.

''என்னப்பா! என்ன வேண்டும்' என்றேன்.

'சேகரை நான் அடித்தது தப்புதான்னா; தப்புதான்' என்று கதறினான்.

'முனியா, சும்மா இரு; மனதை அலட்டிக்கொள்ளாதே; நான் திரும்பும்போது பெரிய பண்ணைக் காரரைப் பார்த்துச் சமாதானம் செய்துவிட்டுப் போகிறேன்; நீ கவலையில்லாமல் தூங்குப்பா; நல்லா தூங்கு' என ஆறுதல் கூறிப் புறப்பட்டேன்.

பூவரசன் இலையில் கொஞ்சம் அவலும் குவளையில் சிறிது பாலும் வைத்துக் கொண்டு அஞ்சலை காத்திருந்தாள்.

'இவையெல்லாம் எனக்கு ஏனம்மா? முனியனை நல்லா கவனிச்சுக்குங்க' எனக் கூறி எழுந்தேன்.

'அப்படிச் சொல்லாதீங்க ஏதோ ஏழைக் கேற்ற எள்ளுருண்டை. சாப்பிடுங்க' என்றாள்.

'சரி. அப்ப, எனக்கு பால் வேண்டாம், எடுத்துக் கொண்டு போ' என்று சட்டெனக் கூறினேன். மலர்ந்து ஒளி வீசிய அந்தக் குழந்தை முகம் உடனே வாடிவிட்டது.

கைகால் கழுவி விட்டு வந்து உண்ணத் தொடங்கினேன். தேங்காயும் வெல்லமும் அவலின் இயற்கைச் சுவையை மிகுதியாக்கிற்று. மென்று தின்றவாறே ஏழைக் கேற்ற எள்ளுருண்டையைப் பற்றி எண்ணலானேன்.

அன்று ஒரே வகை உணவு. அளவில் மட்டும் மாற்ற மிருந்தது. பண்ணையார் வீட்டிலும் சோறுண்டு. ஏழை வீட்டில் பழையதுண்டு. பண்ணையார் வீட்டிலும் விழாக் கள் உண்டு; விருந்துண்டு. ஏழைகள் வீட்டிலும் அவை யாவும் உண்டு. ஆனால் பண்ணையார் வீட்டில் விழாவின் போது பெரிய பெரிய எள்ளுருண்டை செய்து தெய்வத்தை வணங்கி விருந்தினருக்கு அளித்து மக்களோடும் ஒக்க லோடும் மகிழ்ந்து உண்பர்.

ஏழைகள் சிறிய சிறிய எள்ளுருண்டை செய்து அவ் வாறே உண்பர். பழங்காலத்தில் ஏழைகள் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஏற்ற எள்ளுருண்டையை அவர் களால் செய்துகொள்ள முடிந்தது.

வளம் படைத்தவர் வீட்டு நூதன விளையாட்டுக் கருவிகளைக் கண்டு ஏங்கி வாடும் ஏழைக் குழந்தைகளின் தொகையும், பணக்காரப் பெண்மணிகள் உடுத்தும் பகட்டுடையைப் பார்த்து ஏக்கத்தோடு பெருமூச்சு விடும் எளிய பெண்களின் கூட்டமும் அன்று மிகக்குறைவு. மிக மிகக் குறைவு என்று பலவாறு எண்ணிக் கொண் டிருந்தேன்,

'பால் சாப்பிடுங்க' என்ற குரல் என் சிந்தனையைக் கலைத்தது. பாலை எடுத்துக் குடித்தேன். மணி ஏழுக்கு மேல் இருக்குமென நினைத்தேன். பண்ணையாரைக் காண வேண்டும் என்ற பரபரப்பில் விரைந்து புறப்பட்டேன்.

'கவனமாய்ப் பார்த்துக்குங்க. சூடான கஞ்சி அவன் பசி என்று கேட்டால் கொடுங்க' என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தேன். முனியன் நன்கு தூங்கிக் கொண்டிருந்தான்.

'இருட்டி விட்டதுங்களே. நானும் ஊர் எல்லை வரை உடன் வர்ரேனுங்க' என்று சுப்பன் பின் தொடர்ந்தான்.

'வேண்டாம்பா — வேண்டாம், நிலவு தோன்றி விட்டது. பழகிய பாதைதானே! போய் வருகிறேன்' என்று நடக்க ஆரம்பித்தேன்.

''அப்ப சரிங்க. மண்சாலை வரை கூட வர்ரேனுங்க' எனச் சேரி வரப்பு முடிகிறவரை உடன் வந்து 'கவன மாய்ப் போய் வாங்க. தண்ணி வந்த காலம். சாலையிலே புழு பூச்சி ஏதாவது திரியும்' எனக் கூறி ஒரு உண்மையான கும்பிடு போட்டான். நானும் கும்பிட்டுக் கொண்டே பிரிந்தேன். நான் மண்சாலையில் முன்னேறிச் சென்று கொண்டிருந்தேன். ஆனால் அவனோ, அதே பழைய வரப்பில் திரும்பிச் சென்று கொண்டிருந்தான்.

எனது அறிவு பழங்கால மனிதனின் ஒற்றையடிப் பாதையிலிருந்து மண்சாலை கண்டுபிடித்த அளவு விளக்கம் பெற்றிருந்தது. ஆனால் அவனுடைய அறிவோ அதே ஒற்றையடி வரப்பு நிலையிலேயே இருந்தது. நான் முயன்று பெற்ற கல்வியறிவை நாளெல்லாம் சேற்றிலும் சகதியிலும் உழைக்கும் அவன் பெற இயலாதவாறு அவன் வறுமையும் வாழ்க்கைச் சூழலும் அமைந்திருந்தன,

வெண்ணிலவு பொன்கதிர்களை வீசியது. ஒரு சில விண்மீன்கள் மின்னி மின்னித் தங்கள் மொழியில் என் னென்னமோ பேசிக்கொண்டன. நல்ல நிலவிலும் களங்க மிருக்கிறதே என எண்ணி நகைத்தனவோ அன்றி எல்லா இயற்கை நலமும் அறிவும் திறனும் இருந்தும் இந்த மனித இனம் ஏன் ஒன்றையொன்று ஏய்த்துத் தங்களையே அழித்துக் கொள்கின்றன, என நினைத்துச் சிரித்தனவோ எனக்குப் புரியவில்லை. தங்கள் சொற்களில் இந்த உலக மனிதனுக்குப் புரியாதவாறு ஏதோ இரகசியம் பேசிக் கொண்டன.

நிலவுப் பெண்ணாள் அவர்களின் பேச்சுகளைத் தெரிந்து கொண்டவள்போல் அமைதியாகப் புன்னகை புரிந்தாள். காட்சி ஒவ்வொன்றிற்கும் இடையே வந்து வந்து மறைக்கும் நாடகத் திரைகள் போல் மேகங்கள்

ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டி.ருந்தன. சாலையின் இருமருங்கும் இருந்த பசுமையான வயல்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தன. நிலவொளிப் பட்டு மரகதம் போல் ஒளிர்ந்த அந்தப் பசும் பயிரில் படிந்த காற்று மெல்லென வீசி உடலைச் சிலிர்க்கச் செய்தது. இளந்தாள்கள் 'உஸ்' என்ற ஒலி யெழுப்பிக் கொண்டு மெதுவாகத் தவழும் குழந்தை போல் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

மந்தை மாடுகளின் கழுத்து மணிகளின் ஒலி பண்ணையார் வீடு நெருங்குவதைத் தூரத்திலேயே அறிவித்துக் கொண்டிருந்தது. நெருங்க நெருங்கப் பல ஆள்கள் ஒருவரை ஒருவர் அதட்டிக் கொண்டு வேலைசெய்யும் அரவம் கேட்டது. அருகே சென்றவுடன் ஒரு வேலையும் இல்லாதவரும் பெரிய வேலை செய்வது போல் விரைவாக இங்கும் அங்கும் போய் வந்து கொண்டிருந்தனர்.

அவர்களின் பயனற்ற இந்த நடிப்புச் சுறுசுறுப்பைக் கண்டதும் பண்ணைக்காரர் வந்துவிட்டார் என்பதை அறிந்து கொண்டேன், மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டிற்கு முன்னர் போட்டிருந்த பந்தலுள் சென்றேன்.

அதற்குள் ஒரு ஆள், ''சின்ன ஐயா வாத்தியார் வர்ராரு' என்றான். மற்றொருவன் உள்ளே ஓடினான். சிறிது நேரங்கழித்து வெளியே வந்து, 'ஐயா குளிக்கிறாங்க. நாற்காலியிலே உட்காரச் சொன்னாங்க' என்று எதிரே கிடந்த நாற்காலிகளை இழுத்துப் போட்டான். கண்களைச் சுழற்றிச் சேகர் அகப்படுகிறானா எனப் பார்த்தவாறு அமர்ந்தேன்.

'வாங்க! அண்ணா வாங்க' எனக் கத்திக் கொண்டே சேகர் உள்ளிருந்து வெளியே ஓடி வந்தான். உடன் பிறந்த செருக்கு ஒருபால் இருப்பினும எல்லாக் குழந்தைகளுக்கும் உள்ள இயல்பான கள்ளங்கபடமற்ற அந்த நல்ல பண்பும் அவனிடமும் இருந்ததாகத் தெரிந்தது. அந்தப் பெரிய குடும்பம் அவனிடமிருந்த இயற்கை அன்பு முழுவதையும் அழித்து விடவில்லை. ஓடிச்சென்று பால் கொண்டு வந்தான்.

'குடிங்க அண்ணா' எனக் கனிவோடு கொடுத்தான். பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

'சீனி அதிகம் போடவா? சுடுகிறதா? இன்னும் ஆற்றித் தரவா?' என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான்.

மெல்லப் பேசத் தொடங்கினேன். 'அன்று முனியனுக்கும் உனக்கும் நடந்த சண்டையைப் பற்றி அப்பாவிடம் சொல்லி விட்டாயா?' என்ற அச்சத்தோடு கேட்டேன்.

'இல்லை, இப்பத்தான் மன்னார்குடியிலிருந்து வந்தாங்க' என்றான்.

'பாவம், தெரியாத்தனமா அடிச்சுட்டான், செய்தது தப்புதப்புன்னு அழுகிறான். மிகவும் சுரம் அடிக்கிறது. செத்துப்போய்விடுவான் போல இருக்கு' எனச் சொல்லிக் கொண்டே இரக்கத்தோடு சேகரைப் பார்த்தேன்.

அப்பார்வையின் தன்னலமற்ற கெஞ்சலும் தழுதழுத்த சொற்களும் அச்சிறுவனின் மென்மையான அன்பு உள்ளத்தைத் தொட்டுவிட்டன போல் தோன்றியது.

'ஐயோ! பாவம்! நானும் நாலைந்து அடி அடித்து விட்டேன், பங்களாவுக்கு வரும்போது ஒருநாள் வாய்க் காலில் விழுந்து விட்டேன். அப்போது முனியன்தான் தூக்கி விட்டான்' என்று சொன்னான்.

'ஆமா, நல்லவன். ஏதோ கோபத்திலே அதுமாதிரி செய்துவிட்டான், அப்பாவிடம் அதைப் பற்றிச் சொல்லாமே இருந்து விடுகிறாயா?' என உருக்கத்தோடு அவனைப் பார்த்துக் கேட்டேன். ''ஊஹூம்' என்று மறுப்பது போல் தலையை ஆட்டினான்.

'இல்லே, நான் சொல்லல்லே. நீங்க குடிங்க' என்று பாலை எடுத்து என் மார்பருகே கொண்டுவந்தான்.

'பொய் சொல்கிறாய். நான் குடிக்கமாட்டேன்' எனச் சிறிது பிகு செய்தேன்.

'சத்தியமாச் சொல்லல்லே, அண்ணா' என்று கண் கலங்க மொழிந்தான்.

அருகே நின்ற அவனை அப்படியே இறுகப் பிடித்து மார்போடு அணைத்துக்கொண்டேன். 'குழந்தைகளாக ஆகுங்கள்!' என்ற இயேசுவின் அருளுரையும் 'குழந்தையாக ஆகிப்பார்' என்ற திரு. வி. க. வின் அறவுரையும் ஒருகணம் நெஞ்சில் மின்னி மறைந்தன. கண்கள் பொல பொலவென இன்பக் கண்ணீர் உதிர்த்தன.

இயல்பாகவே அன்பும் இரக்கமும் உடைய இளங் குழந்தைகளைச் செருக்கும், சினமும், ஏமாற்றமும், சூழ்ச்சியும் உடைய சமுதாயக் கோளாறுகள் எவ்வளவு தீயவர்களாக ஆக்கிவிடுகின்றன என்பதை நினைந்து நைந்தேன். பாலை வாங்கிக் குடித்தேன்.

'வாங்க சார் வாங்க!' என அழைத்தவாறே மெல்லிய பச்சைக் கரை போட்ட கதர்ப் பட்டுத்துண்டை மேலே போட்டுக் கொண்டு வந்தார் பண்ணையார். அதற்குள் ஒரு ஆள் ஓடி வந்து; 'நம்ப சவாரி வண்டியிலே பூட்டுகிற 'மயிலே' நொண்டுதுங்க' என்றான்.

'எங்கடா வண்டிக்காரன்? அவனைக் கூப்பிடு' என்று ஒரு கனைப்புக் கனைத்தவாறே கையிலிருந்த கதர்ப் பட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு 'எங்க சார் இவ்வளவு தூரம்?' என்றார்.

உழைப்பின் மதிப்பை, உழைப்பாளரின் சிறப்பை உணர, தாழ்ந்த நிலையில் இருக்கும் ஏழை எளியவரை உயர்த்த, அவர்களின் வறுமைத் துன்பங்களைக் களைய, காந்தியடிகளால் ஏற்படுத்தப் பெற்ற கதரை, உழைக்காதோரும் உழைப்பின் பெருமையை உணராதாரும் ஏழைகளைச் சுரண்டுவோரும் உடுத்துக்கொண்டு ஏமாற்றும் நிலையை எண்ணிக் கொண்டே, 'சும்மா இப்படிக் குழந்தைகளைப் பார்த்துவிட்டுப் போகலாம் என வந்தேன்' என்றேன்.

'என்ன சார், உங்களுக்கும் பாடஞ் சொல்லித்தரத் தெரியலையே. ஒருபிள்ளையைக் கூட உதைக்கிறது இல்லேன்னு நம்ம கணக்குப் பிள்ளை சொன்னாரு. அடியாத மாடு படியாதுங்க. கொஞ்சமாவது கண்டிப்பு இருக்கணும்' என்று போதனை செய்ய ஆரம்பித்தார்.

'பித்தளைப் பாத்திரம் ஈயம் பூசிக் கைக்காமல் செய்வது போன்றது அடித்து அடித்துத் திருத்தும் முறை. சில நாள்கள் சென்றதும் முலாம் போய்விடும். பிறகு உள் வைக்கும் பொருள்களைப் பித்தளை கைக்கச் செய்து விடும். அப்படியே அடித்து அடித்துத் திருத்திய குழந்தைகள் சிறிது காலத்திற்குப் பிறகு தாங்கள் பெரிய வாலிபராகிய பின் அடிப்பவர் எவரும் இல்லாது போகவே முரடர்களாக மாறிவிடவும் கூடும். ஈயம் போன பாத்திரத்திற்கு மீண்டும் முலாம் பூசலாம். முரடர்களாகிய் வாலிபரைத் திருத்துவது அவ்வளவு எளிதல்ல' என்று வாதாடினேன். அதற்குள் அங்கு வந்த வண்டிக்காரனைப் பார்த்த பண்ணையார்,

'ஏய், மயிலை ஏண்டா நொண்டுது — லாடம் அடிக்கலியா?' என்று கேட்டார்.

'என்னங்க சாலைதான் குண்டுங்குழியுமா இருக்கே. வடக்குத் தெரு முனையிலே நம்ம வண்டி வரும்போது ஒரு குழியில் எக்கச்சக்கமாகக் காலை விட்டுட்டு... அதனாலே இப்படி...' என இழுத்தான்.

'சரிசரி போடா. ஏதாவது ஒத்தடம் கொடு' என அவனைப் பாராமலே சொல்லி விட்டு என் பக்கம் திரும்பி 'உம், மேலே' என்றார்.

'அல்லாமலும் பல சமயங்களில் குழந்தைகள் தப்பு செய்யும்போது யாரை அடிப்பது? எவரை உதைப்பது? எனத் தெரியலே.'

'அப்படின்னா?'

பள்ளியில் பணி செய்ய வந்த புதிதில் நம் சேரிப் பையன்கள் இருவர் சண்டை மீபாட்டுக்கொண்டனர். என்மனன்னவோ சொல்லத்தகாத இழிந்த சொற்களால் வைது கொண்டார்கள். அதைக் கேட்ட மற்ற பிள்ளை களும் கெட்டுப் போவார்களே என வருந்தினேன். அந்த வருத்தம் கோபமாக உருவெடுத்தது. அடக்க இயல வில்லை. கையை ஓங்கியவாறே அடிக்கப் போனேன். அதற்குள் அந்தஇழிந்த சொற்கள் தூய இளங்குழந்தை கட்கு எப்படித் தெரிந்தன? என்ற எண்ணம் எழுந்தது. பாவம், சிறு குழந்தைகள், சேரியில் பெரியவர்கள் பகை கொண்டு பேசிய சொற்களை அடிக்கடி கேட்டு மீகட்டுப் பழகி விட்டனர். அவைகளை அப்படியே ஒப்புவிக்கின் றனர். பாவம், அந்தக் குழந்தைகளை அடிக்கக்கூடாது என்று எண்ணினேன். ஓங்கிய கை தானே பின்னுக்கு இழுத்துக்கொண்டது.

பலநூறு ஆண்டுகளாக ஆடு மாடுகளைப் போல் ஓய்வின்றி உழைக்கும்படி நாம் அவர்களைக் கூவி— பண்ணை ஆள் என்ற பெயரால் வற்புறுத்தினோம். ஆடு மாடுகளைக் கூட வீட்டருகே கட்டிய நாம் அவர்களை ஊரை விட்டே அப்புறப்படுத்திவிட்டோம். கோயில் உள்ளே நடைபெறும் பல நல்ல கூட்டங்களைப் பல்லாண்டுகளாக அவர்கள் கேட்கும் வாய்ப்பைத் தடை செய்தோம். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் தலை தூக்க முடியாதவாறு வறியவர்களாகத் தாழ்த்தினோம். சிந்திக்க நேரந் தராது முட்டாள்களாக ஆக்கினோம். ஓயாத வேலைகள் கொடுத்துக் மிகாடுத்து முரடர்களாகச் செய்தோம். இவற்றையெல்லாம் எண்ண எண்ண, அந்தச் சேரிக் குழந்தைகள் திருந்த அச்சேரி மக்களை அடிப்ப தற்குப் பதில் நம்மை நாமே உதைத்துக் கொள்ள வேண்டு மென நினைக்கிறேன்'' என்றேன்.

அப்பொழுது எங்கேயோ சென்றிருந்த கணக்கப் பிள்ளை என்னை நோக்கியவாறே பண்ணையாரைப் பார்த்துத் 'தெரியுங்களா?' என்று ஆரம்பித்தார்.

பண்ணையார் 'என்ன?' என வியப்புடன் கேட்டார்.

'நம்ப சின்ன ஐயாவைச் சுப்பன் மகன் முனியன் அடிச்சிட்டான். எவ்வளவு திமிர். ஒரு வார்த்தை சொல்லுங்க. நம்ப ஆடு மேய்க்கிற அஞ்சானையும் நொண்டி முருகனையும் கூட்டிப் போயி கூரையைப் பிரிச்சிக்கிட்டுச் சேரியை விட்டு விரட்டி வருகிறேன்' என்று பண்ணையாரிடமிருந்து பதில் எதிர்பாராமலே பேசிக்கொண்டு சென்றார்.

என்னாகுமோ எனத் திடுக்கிட்டேன். நெஞ்சு படபடத்தது. என்ன சொல்வது என்று தெரியவில்லை, உள்ளம் முழுதும் திகில் சூழ்ந்தது.

உடனே, 'இல்லேப்பா இல்லே. அவன் சோறு உண்ணும்போது நான்தான் தண்ணியை வாரி அவன் மேலே இறைத்து அடிச்சுப் போட்டுட்டேன். அறைந்த அறையிலே அவனுக்குச் சுரங்கூட வந்துட்டது' என்று சில செய்திகளை மறைத்துச் சொன்னான்.

'அதானே பார்த்தேன். ஏ கணக்கப்பிள்ளை! நம்ம பிள்ளையை என்னான்னு நினைச்சே. விதை ஒன்னு போட்டா சொர ஒன்னு முளைக்குமா? நான்கூடச் சின்ன வனாயிருக்கும்போது பெரிய பெரிய ஆளையெல்லாம் உதைத்து நொறுக்கிடுவேனே. முனியனுடைய அப்பனே ஒரு நாள் என்னிடம் அடிவாங்கிக்கொண்டு, ஒரு வாரம் படுத்த படுக்கையாய்க் கிடந்தான்' என்று தம் வம்சத்தினுடைய வீரப் பிரதாபங்களை அடுக்கிக்கொண்டே போனார். பரம்பரையாகக் கொடிய ஆட்சிமுறை செய்து வருகின்ற பணப்புலியின் கூரிய நகங்கள் அவரது பேச்சில் தெரிந்தன.

என் மனத்திலிருந்த அச்சம் மறைந்தது. படபடப்பு நின்றது. தந்தையைவிட ஆசிரியரிடம் அதிக அன்பு

காட்டும் இளங்குழந்தைகளின் நெஞ்சத்தை நினைந்து இன்புற்றேன். வெள்ளைத் தாள்களில் கருப்பு எழுத்துகளைப் பொறிக்கும் கணக்கர் தொழிலைவிட, இரும்புக் கருவிகளோடு போராடும் ஆலைத் தொழில்களைவிட பணத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து ஐந்தோடு பத்து, பத்தோடு நூறு எனக் கொள்ளை இலாபம் பெற முயன்று பேயாய்த் திரியும் இக்கால வாணிபங்களைவிட அன்புக் குழந்தைகளுடன் பழகும் இந்த ஆசிரியத் தொண்டுக்கு ஈடு இல்லை என இறுமாந்தேன்.

'டே...உள்ளே போயி வாத்தியாருக்குப் பால் வாங்கி வந்து கொடு' என்று எதிரே அவர் என்ன சொல்லப் போகிறாரோ எனக் காத்து நின்ற ஒரு ஆளைப் பார்த்து ஏவினார்.

'வேண்டாங்க. இப்பத்தான் தம்பி தந்தான். நான் போய் வருகிறேன்' என்று புறப்பட்டேன்.

'சரிங்க' என்று விடை கொடுத்தார். மனதில் ஏதோ ஒரு பெருஞ்சுமை குறைந்தது போல் தோன்றிற்று. நெஞ்சம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'ஜெயமுண்டு பய மில்லை மனமே' என்ற பாடலை வாய் முணுமுணுத்தது. விரைந்து திரும்பினேன்.

வழியில் ங்ள—ங்ள—ங்ள—என்ற தவளைகளின் ஓலம் காதைத் துளைத்தது. ஒரு கூட்டம் இவ்வாறு கத்தி நிறுத்தியவுடன் மறு கூட்டம் ங்ளங்ங்ளங் ங்ளங்...எனத் தொடர்ந்து கத்தியது.

இப்படி எண்ணியவாறே நடந்து கொண்டிருந்தேன். இடையே மெல்லிய காற்றில் மிதந்து வந்த ஒரு இனிய பாட்டொலி என் போக்கைத் தடைசெய்தது. சற்று நின்று உற்றுக் கேட்டேன். 'மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்' என்னும் இசை ஆழ்கடலின் நடுவில் எழும் அமைதியான அலைகள் போல் மெல்ல மெல்லத்

தொடர்ந்து ஒலித்தது. 'எங்கிருந்து வருகிறது இந்த இனிய கீதம்?' என நோக்கினேன். பூங்கோதையை மாலையில் கண்ட அதே தென்னந்தோப்பிலிருந்து அப்பாட்டொலி வந்துகொண்டிருந்தது. தென்னை மரங்கள் குறுக்கும் நெடுக்கும் வளைத்து நெளிந்து வளர்ந்து மறைத்துக் கொண்டிருந்ததால் யார் பாடுகிறார்கள் என அறிய இயலவில்லை. பூங்கோதையாகத்தான் இருக்க வேண்டுமெனக் குரலைக் கேட்டுத் தோய்ந்திருந்த காதுகள் அறிவுறுத்தின. மெல்ல மதகின் மேல் ஏறி நின்று பார்த்தேன். வனதேவதைபோல் அவள் இருத்தாள். உணர்வு அங்கு அவளிடம் செல்ல உந்தித் தள்ளியது. நெஞ்சு படபடத்தது. மார்பை மெல்ல அழுத்திப் பிடித்தேன். சட்டைப்பையிலிருந்த திருக்குறள் புத்தகம் தட்டுப்பட்டது. சென்ற உணர்வை இழுத்துக்கொண்டு வேகமாகத் திரும்பினேன். விரைந்து வீட்டையடைந்தேன். கதவைத் திறந்தபடியே அன்போடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அன்னைத் தெய்வம் என்னைக் கண்டதும், 'ஏண்டா இவ்வளவு நேரம்? என்னடா வேலை, சோறு சில்லிட்டுப் போச்சு, குழம்பு ஆறிப்போச்சு' என்றார்கள்.

''ஆமாம்மா, நேரம் அதிகமாகத்தான் ஆகிவிட்டது. நீங்க சாப்பிட்டுப் படுத்துக்குங்க, எனக்குப் பசியில்லை' என்றேன்.

'ஏய்! வெறும் வயிறா படுக்காதேடா, அப்படிப் படுத்துத்தான்' என்று ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

'சரி சரி. இந்தத் தாயுள்ளங்கள் அன்பு மிகுந்தவை. அறிவை மதியாதவை. அவற்றை மாற்ற இயலாது. கடல் போல விரிந்த அறிவோடு வாதிட்டாலும் அவை ஏற்க மாட்டா. துளியளவு அன்பு காட்டினால் உடனே அடிமையாகிவிடும்' என எண்ணி 'சரி, பப்பாளிப்பழம் ஏதாவது பழுத்திருந்தால் கொடுங்க' என்றேன். துண்டு துண்டாகச் சீவிக் கொண்டு வந்தார்கள். உணர்வின்றி உண்டேன்.

பூங்கோதை

‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்’

என்று தாத்தா அடிக்கடி பாடும் அந்தப் பாட்டின் பொருள் என்ன என்று அப்போது எனக்குத் தெரிய வில்லை. பொன்னம்மாள் வந்து வந்து, அவர் பற்றி நாள் தோறும் நல்லது ஏதேனும் சொல்வாள். அவள் சொல்லச் சொல்ல அந்தப் பாட்டின் பொருள் மெல்ல விளங்கத் தொடங்கிற்று. இன்று மாலை அவரைப் பார்த்த பிறகு அந்தப் பாட்டுக்குப் பொருள் நானே ஆனேன். அந்த நிமிர்ந்த பார்வை, ஒளி திகழும் கண்கள், செவ்விய இதழ்கள், அகண்ட நெற்றி, நெடிய தோற்றம், நிலவு போல் அமைதியாகப் பொலியும் முகம் என்னைப் பிச்சி யாக்கிவிட்டன.

‘செங்கண்ணன்’—எவ்வளவு அழகான பெயர். அவர் பள்ளிக்கு வந்த முதல் நாளே பொன்னம்மாள் வந்து சொன்னாள். ‘எங்கள் வகுப்பிற்கு இந்த ஆண்டு புதிய ஆசிரியர் ஒருவர் வந்திருக்கிறார். அவர் தம்மை ‘அண்ணா’ என்றுதான் அழைக்க வேண்டும். ‘சார்’ என்று அழைக்கக் கூடாது. அது அடிமைச் சொல்! ‘அண்ணா’ என்பதில் உள்ள அன்பு அதில் கிடையாது’ என்று சொன் னார் என்றாள்.

நாகையில் 10-ம் வகுப்பில் நான் படித்தபோது எனக் குப் பாட்டுச் சொல்லி கொடுத்த சப்தகன்னி மேடத்தை நினைத்துக்கொண்டேன். ‘ரெஸ்பெக்டட் மேடம்’ என்று விடுமுறைக் கடிதம் எழுதாததற்காக அடித்து நொறுக்கியு

அந்த அம்மாவின் கோடிய பார்வையும் எப்போதும் கடு கடுப்பாக இருக்கும் முகமும் நினைவுக்கு வந்தன. அந்த அம்மாவையும் முதன் முதலில் அன்பைப் போதித்த இந்த ஆசிரியரையும் எண்ணிப் பார்த்தேன். இவர் முகம் 'குளு குளு' என்று இருக்கும் என்று நானே கற்பனை செய்து பார்த்துக்கொண்டேன்: என் கற்பனை பொய்யாகிவிட வில்லை: செங்கழுநீர் இளநீர் போல் அவ்வளவு குளிர்ந்த கண்களால் என்னைப் பார்த்தார். ஏனோ என்னால்தான் அவரை நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. 'பெண்புத்தி பின்புத்தி என்பது இதனால்தானோ என்னவோ! அவர் போன பிறகு அவரை நன்றாகப் பார்த்துப் பேசி மகிழத் தவறிவிட்டோமோ!' என்று ஏங்குகிறது நெஞ்சம். கண் முன் வந்து அவர் இன்று மாலை நின்றபோது தலை தானே கவிழ்ந்து கொண்டது; பேச்சு வரவில்லை.

அன்றொரு நாள் மாலை பொன்னம்மாள் முகம் மிகவும் சோர்ந்திருந்தது. அவரைப்பற்றி ஒன்றும் கூறாமல் கவலையோடு அமர்ந்திருந்தாள். அழுதழுது இமைகள் வீங்கியிருந்தன. 'என்னடி பொன்னம்மா! ஏன் இப்படி?' என்று அவள் முகவாயை என் முன் கையில் ஏந்தியபடிக் கேட்டேன்.

'நேற்று வீட்டிற்கு விருந்தினர் வந்திருந்தாங்கன்னு சொன்னேன் இல்லையா? வீட்டு வேலை அதிகமாய் இருந்தது. அதனாலே பன்னீர் செல்வம் சார், சிங்கார வேலு சார் சொன்ன கணக்கு ஆங்கில வீட்டுப் பாடங் களை, எல்லாம் செய்துவிட்டு எங்கள் அண்ணா நடத்திய தமிழ், அறிவியல் பாடங்களைப் படிக்காமல் போய் விட்டேன். அவர் வருத்தத்தோடு பார்த்தார். என் வீட்டுப் பாட ஏடுகளைப் புரட்டிப் பார்த்தார். மற்ற பாடங் களைச் சரியாகச் செய்துவிட்டு அவர் பாடங்களைச் செய்யவில்லை.

'அண்ணா, அண்ணா, சிங்காரவேலு சார் பிரம்பால் நொறுக்கி எடுத்துவிடுவார், பன்னீர்ச் செல்வம் சார்

காதைத் திருகி எடுத்துவிடுவார். பயந்துகொண்டு செய்து முடித்துவிட்டேன். வீட்டில் அம்மா அதிகம் வேலை கொடுத்ததால் உங்களுடைய பாடங்களைப் படிக்க இயல வில்லை. இந்த முறை மன்னித்துக்கொள்ளுங்கள், அண்ணா' என்று கெஞ்சினேன்.

இன்று என்னவோ அவருக்குக் கடுங்கோபம் வந்து விட்டது. 'அன்பாக இருந்தால் படிக்காமல் கெட்டுப் போவதா' என்று என்னைப் பார்த்துக் கேட்டபடியே ஒரு பையனைக் கூப்பிட்டுத் தலைமை ஆசிரியரிடம் போய்ப் பிரம்பு வாங்கி வரச் சொன்னார். அவர் கோபத்தோடு பார்த்த பார்வை ஒன்றே போதும், இப்படிப்பட்ட தவறு ஒன்றும் செய்யாமல் என்னைத் தடுக்க. போதாதற்குக் கோபத்தோடு வேறு கேட்டார்.

என் ஆயுளிலேயே இனி இப்படித் தவறு செய்வதில்லை என்று மனத்துக்குள் உறுதி செய்து கொண்டேன். பிரம்பு வேறு வாங்கி வரும்படி கேட்டதும், ஓகோ—இவரும் மற்ற ஆசிரியர்களைப் பார்த்து அடிக்கக் கற்றுக் கொண் டார் போலிருக்கிறது. ஐயோ! அன்பு வழியில் சென்றவர் என்னால் அடிக்கும் வழிக்கு மாறிவிட்டாரே' என்று அவருக்காக வருந்தினேன். 'வேண்டாம் அண்ணா! வேண்டாம்! இனிமே ஒழுங்கா நடந்துகொள்கிறேன். தவறாம வீட்டுப் பாடம் செய்வேன்' என்று அழுதேன். மற்ற பிள்ளைகள் எல்லாம் எதிர்பாராதது ஏதோ நடந்து விட்டது போல அஞ்சியபடி வாயைப் பொத்திக்கொண்டு கண்களால் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர்ந்திருந் தனர்.

அந்தப் பையன் பிரம்பு கொண்டுவந்தான். அதைக் கையில் வாங்கி வழவழப்பாக இருக்கும் அதன் நுனியைத் தடவிக்கொண்டே என்னைப் பார்த்தார். மற்ற மாணவர் கள் எல்லாம் அவரையும் என்னையும் மாறி மாறிப் பார்த் தனர். 'இனிமேல் அன்பு என்று ஏமாற்றமாட்டாய்

அல்லவா, ஏமாற்ற மாட்டாய் அல்லவா' என்று சொல்லிக் கொண்டே 'சுளீர் சுளீர்' என்று தம் கையில் அடித்துக் கொண்டார். நாங்கள் ஓடிப்போய்ப் பிரம்பைப் பிடித்துக் கொண்டு அழுதோம். எங்கள் கையில் அடிக்கும் படி கெஞ்சினோம். அதன் பிறகு சிரித்துக்கொண்டே. 'நீங்கள் நன்றாக வாழவேண்டும்; கெட்டிக்காரர்களாக வாழ வேண்டும்; அன்பை மதித்து வாழ வேண்டும். அது தான் என் ஆசை. அதைப் புரிந்துகொண்டு கடமை செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்த நான் இங்கு வர வில்லை' என்று சிரித்துக்கொண்டே பேசினார். அவர் சிரிக்கச் சிரிக்க எங்களுக்கு அழுகை அழுகையாய் வந்தது. பிரம்படிபட்ட அவர் உள்ளங்கையில் நீண்ட இரு சிவப்புக் கோடுகள் தெரிந்தன. அது என்னால்தானே நிகழ்ந்தது என்று நினைக்க நினைக்க வீட்டிற்கு வரும் வழியெல்லாம் எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. அதனால்தான் முகம் வீங்கிப் போய்விட்டது, என்று சொல்லி அழுதாள்.

'அழாதே! பொன்னம்மா' என்று நானும் அழுதேன்! இப்படியும் ஒரு அன்புள்ளம் இருக்கிறதே; அந்த உருவம் எப்படி இருக்கும், அதனைக் காணவேண்டும் என்று விழைந்தேன். ஆ; அது கண் முன் வந்து என் குடிசை முன்பே நின்றபோது அதனை முற்றும் கண்டு களிக்காது போனேன். குனிந்த போது அந்த அழகான கால் விரல் களைக் கண்டு மகிழ்ந்தேன். எவ்வளவு நீண்ட விரல்கள். போட்டோவில் பார்த்த தாகூரின் விரல்கள் நீளமாகத் தான் இருந்தன. என் விரல்களையும் தாத்தா விரல்களை யும் தொட்டுப் பார்த்துக்கொண்டே தாகூர் போட்டோ வில் இருந்த தாகூர் கை விரல்களைப் பார்த்தேன். அப் போது தாத்தா சொன்னார், 'கலைஞர்கள் விரல்கள் எல்லாம் மெலிந்து நீண்டிருக்கும்' என்று. அப்படியே இவருடைய விரல்களும் நீண்டிருந்தன. என் உள்ளம் கவர்ந்த கலைஞர் அல்லவா அவர்! அவர் திருவடியில் என் நெஞ்சம் அப்படியே தங்கிவிட்டது.

இன்னொரு நாள் பொன்னம்மாள் 'அக்கா! பூங்கோதை அக்கா!' என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடி வந்தாள். அவள் முகம் மலர்ந்திருந்தது. 'என்னடி இன்று இவ்வளவு மகிழ்ச்சி' என்று வியப்போடு கேட்டேன். 'இன்று ஒரு புதுமை நிகழ்ந்தது தெரியுமா? பல நாட்களாகப் பேசாத மைதிலியும் வள்ளியும் பேசிக் கொண்டார்கள். ஒருவர் உணவை ஒருவர் மாற்றி உண்டு கொண்டனர். மைதிலிக் கட்சியும் வள்ளிக் கட்சியும் மறைந்து போய் எல்லாம் ஒன்றாக இன்று மாலை விளையாடினோம்' என்று தலையை ஆட்டி ஆட்டி உணர்ச்சியோடு பேசினாள்.

'எப்படி இது ஆயிற்று? அடிக்கடி அவர்கள் பகையைச் சொல்வாயே! விளையாட்டில் இந்தக் கட்சிக் குழந்தைகள் அந்தக் கட்சிக் குழந்தைகளோடு சேரக் கூடாது, படிப்பில் இரவலாகக்கூடப் புத்தகம் கொடுக்கக்கூடாது என்றெல்லாம் பிரிந்து கட்சி கட்டிக் கொண்டிருந்த அந்தப் பெண்கள் இருவரும் எப்படிச் சேர்ந்தனர்?'

'இன்று காலையில் நான்காவது பாடம் தமிழ். மைதிலியை அழைத்துத் திருத்திய தமிழ் ஏடுகளை ஒவ்வொருவரிடமும் அண்ணா கொடுக்கச் சொன்னார். எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு வேற்றுக் கட்சி என்று வெளியே காட்டி கொள்ளாமே எல்லோருக்கும் கொடுத்துக்கொண்டு வந்தாள். இடையில் வள்ளியின் ஏடு வந்தது. அதைக் கொடுக்க மறுத்தாள். அப்போது உண்மை எல்லாம் அண்ணாவுக்கு விளங்கிவிட்டது. வகுப்பில் இப்படி இரண்டு கட்சிகள் வளர்ந்து ஒன்றை ஒன்று பகைத்துக் கொண்டிருப்பதை அறிந்தபோது அவர் கண்கள் கலங்கிவிட்டன. இதைத் தெரிந்து இருவரிடையேயும் அன்பை வளர்க்கத் தவறியது தம் குற்றமே என்று வருந்தினார். 'நீங்கள் இருவரும் மைதிலியும் வள்ளியும் அன்பாகப் பழகும் வரை நான் உணவுண்ணப் போவ

தில்லை' என்று சொல்லிவிட்டார். நான்காவது பாட நேரம் முடிந்து மணி அடித்தும் மற்ற வகுப்புப் பிள்ளைகள் சோற்று மூட்டை, டிபன் கேரியர் ஆகியவற்றை அவிழ்த்து உண்ணத் தொடங்கினர். எங்கள் வகுப்பில் யாரும் உண்ணப் போகவில்லை. எல்லோரும் அண்ணாவைப் பார்த்துக் கொண்டே இருந்தோம். அவரும் எதுவும் உண்ணாமல் காந்தி அடிகளின் சத்தியசோதனையைப் படித்துக்கொண்டே இருந்தார்.

மணி அடித்தது. மீண்டும் வகுப்புத் தொடங்கிற்று. முதல் வகுப்பு அறிவியல். எப்போதும் போல் அண்ணா அமைதியாக வகுப்பு நடத்தினார். ஆனால் எங்கள் மனம் எல்லாம் நமக்காக அண்ணா பட்டினி கிடக்கிறார் என்று ஏங்கிக்கொண்டிருந்தது. நாங்களும் சாப்பிடவில்லை. இரண்டாவது மணி கணக்கு. அதுவும்போயிற்று. மூன்றாவது மணி விளையாட்டு. எங்களுள் யாருக்கும் விளையாட விருப்பம் இல்லை. மைதிலி முகத்தையும் வள்ளி முகத்தையும் பார்த்தோம். அவர்கள் முகமும் வாடிப்போய் இருந்தது. பழைய செருக்குக்குப் பதில் அங்கே துயரம் குடி கொண்டிருந்தது. தோட்டத்திற்குப் போய் விளையாடாமல் அமைதியாக அமர்ந்தோம். அங்கே வேலி ஓரமாக இருந்த புன்னை மர நிழலில் அண்ணா புத்தரைப் போல் நிமிர்ந்து உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். 'நாங்களாவது இரவில் வீட்டில் சாப்பிட்டு விடுவோம். அண்ணா அப்படிச் சாப்பிட மாட்டாரே' என்று நினைத்து வாய்விட்டு வருந்தினோம். கட்சிகளாகப் பிரிந்த நாங்கள் எல்லாம் இதைப் பேசிப் பேசி ஒன்றாகி விட்டோம். மைதிலி 'ஓ'வென்று வாய்விட்டு அழுதாள். 'வள்ளிதானே, போடி திமிர் பிடித்தவளே! என்னோடு சேராதே, ஏய் நீங்களும் அவளோடு பேசாதீங்க என்று விரட்டினாள்; கட்சி கட்டினாள். நானா வேண்டாம் என்றேன்' என்று அழுதாள், வள்ளியும் நெருங்கிவந்து 'மைதிலிக் கணணு,

கோவிச்சுக்காதே. நான் அப்படிச் சொன்னது தப்புதான்' என்று மைதிலி கையைப் பிடித்துக்கொண்டு தேம்பினாள். நாங்களும் அழுதோம். இதைத் தூரத்திலிருந்து பார்த்த அண்ணாவும் கண்கலங்கியபடியே எழுந்து வந்தார். கண்ணீரில் நாங்கள் ஒன்றான காட்சியைக் கண்டு, தாம் உண்பதற்காகக் கொண்டுவந்த தம் தோசைப் பொட்டலத்தைப் பிரித்தார். நாங்களும் எங்கள் உணவுகளை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்கு வந்தோம். பசி தாங்க முடியவில்லை. சிரித்து மகிழ்ந்துகொண்டே கூடிக் கும்மாளம் இட்டுக் கொண்டே எங்கள் உணவுகளை மாற்றிக் கொண்டு கலந்து கலந்து உண்டு மகிழ்ந்தோம். மணி அடித்ததும் மாமியாள் மருமகள் போல் பிரிந்து செல்லும் நாங்கள் கூடிச் சிரித்துப் பேசி கொண்டே வந்தோம். அண்ணன் முகம் அன்று காந்தி முகம் போலப் பொலிந்தது' என்று பண்ணிப் பண்ணிப் பேசினாள்.

ஆ! அந்தத் தெய்வப் பொலிவோடு கூடிய முகம் என்னைக் காண வேண்டுமென்று ஏங்கிற்றே என்று இன்று மாலை நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டேன். சாலையில் ஏறித் திரும்பி என்னைப் பார்த்தது என் மனத்திற்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. ஆனால் திரும்பிப் போகும்போது எப்படியும் அவரைத்தடுத்துத் தனியே சில வார்த்தைகள் பேசவேண்டும் என்று நினைத்தது என்னவோ ஈடேறவில்லை. அம்மா அழைத்ததைக்கூடப் பொருட்படுத்தாமல் அவர் வருகிற வழியையே பார்த்துக் கொண்டிருந்தேன். எண் ணென்னவோ வந்தன. நிலவொளியில் நன்றாகத் தெரிந்தன. யார் யாரோ வந்தனர். ஆனால் அவர் உருவம் மட்டும் நீண்ட நேரமாகக் கண்ணில் படவில்லை. எங்கே என்கண்ணில் படாமல் போய்விட்டாரோ என்று என் மனம் தவித்தது. நல்ல வேளையாய் அவர் தோற்றம் சாலையில் தெரிந்தது. மங்கியதோர் நிலவினிலே...என்ற பாரதியார் பாட்டை வாய்விட்டுச் சாலையில் செல்லும்

அவர் காதிலும் கேட்கும்படி பாடினேன். அதைக் கேட்டு அவரும் நின்றார். வாய்க்கால் மதில் மேல் ஏறிப் பார்த்தார். என் உடம்பெல்லாம் உயிரெல்லாம் களித்தன. ஆனால் நின்ற அவர் ஏனோ என்னை நோக்கி வராமல் தொடர்ந்து சென்று விட்டார்.

என்னால் வாய்விட்டு அழைக்கவும் இயலவில்லை. பின்னால் தொடர்ந்து ஓடவும் தயங்கினேன். 'ஏண்டி பூங்கோதை, மழைக்காலம், வா. இருட்டிவிட்டது. பூச்சி பொட்டு வரும்' என்று அம்மா அழைத்தது கேட்டு மெல்லக் குடிசைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு படுத்தேன். தூக்கம் வரவில்லை. கூரை இடுக்குகள் வழியே நிலவொளி வந்துகொண்டிருந்தது. என் நெஞ்சம் அவர் பின்னேயே போய்க் கொண்டிருந்தது. மழை பெய்து எங்கும் ஒரே சேறாகக் கிடந்தது. பாம்புகள் இரவில் எலி பிடிக்க வருமே! நட்டுவாகளி வரப்புகளில் திரியுமே! வாய்க்கால் கரை வழுக்கி விட்டால் விழுந்து விடுவாரே! கருவேல முள் அவர் காலைக் குத்தி விடுமே! இப்படி அவர் பின்னேயே என் நினைவுகள் போய்க் கொண்டிருந்தன. அவர் அடிவைக்கும் இடமெல்லாம் சென்று சென்று மலரைத் தாங்கும் கொடிபோல அவரைத் தாங்கிக் கொள்ள மனம் ஆசைப்பட்டது. எனக்குள் நானே சிரித்துக் கொண்டே உறங்க முயன்றேன். மாதா கோயில் மணி பத்து, பதினொன்று, பன்னிரண்டு அடிக்கும் வரை உறக்கம் வரவில்லை. பிறகு எப்படித் தூங்கினேனோ?

திடீரென்று விழித்துக் கொண்டேன். நிலவு ஒளி கூரை வழியாக என் படுக்கையில் பாய்ந்து கொண்டிருந்தது. அப்போது 'டாண்' என்று ஒலித்த மாதாகோயில் மணி ஓசையை எண்ணினேன். மணி நான்கு ஆகியிருந்தது. அதனைத் தொடர்ந்து இரண்டு கரிச்சான் குருவிகள் கதிரவனின் தூதுவன் போல் வந்து காலைப் பாட்டுப் பாடின. தொடர்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம்

சேரியில் கூவும் சேவலின் கூக்குரல் கேட்டது, சாணி கரைத்துப் போடுவோம்' என எழுந்தேன். கிழக்கே முளைத்து எழுந்து கொண்டிருந்த வெள்ளி என் எதிர்கால வாழ்வைப்பற்றி என்னவோ இரகசியம் பேசிற்று. சரியாகப் பொழுது விடியவில்லை. 'கும்மென' இருட்டியிருந்தது. பல்லிகளின் கிச்கிச்சொலி அச்சத்தை விளைவித்தது. 'கும்' இருட்டில் எங்கும் போகக் கூடாது என்று அம்மா சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது. மீண்டும் தூங்க முயன்றேன்.

யாரோ 'பட்' டென்று முதுகில் தட்டியதாக உணர்ந்து திடுக்கிட்டுக் கண் விழித்தேன். 'என்னடி இன்னும் தூக்கம், பொழுது நன்றாக விடிந்துவிட்டது. வா, சீக்கிரம்' என்று தோண்டியை இடுப்பில் வைத்தபடி என் உறவுக்காரப் பெண் மல்லிகா நின்று கொண்டிருந்தாள்.

'என்னடி முழுகிப் போய்விட்டது, இதோ வந்து விட்டேன்' என்று சோம்பு முறித்தவாறே எழுந்து உட்கார்ந்தேன்.

'வாய்க்காலில் தண்ணீர் வந்து வரப்பெல்லாம் முழுகிப் போயிற்று'' எனச் சொல்லிச் சிரித்தாள்.

உள்ளத்தில் குடிகொண்டுள்ள வெள்ளம் எந்தெந்த வரப்புகளை முழ்கடிக்கப் போகிறதோ என எண்ணிக் கொணடே எழுந்து, குடம் ஒன்றை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

வாய்க்காங்கரை நோக்கிச் சென்றோம். என்றும் போல் மல்லிகா என்னென்னவோ சொல்லிக் கொண்டும் கேட்டுக் கொண்டும் வந்தாள். எல்லாவற்றிற்கும் 'உம்' 'ஆமாம்', 'இல்லை' என்று ஏதோ என் வாய் பதில் சொல்லிற்று. கால்கள் பின்தொடர்ந்தன, நெஞ்சு மட்டும் முன்நாள் நினைவுகளில் சுழன்று கொண்டிருந்தது.

இருவரும் ஓடும் வாய்க்கால் நீரில் இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு குளித்தோம். இந்த நீர் அவர் ஊர் வழியாகத்தானே போகிறது. இப்போது வந்து அவரும் குளித்தால்...என்று ஒரு கணம் என மனம் நினைத்துப் பார்த்தது. நீருக்குள்ளிருந்த பாவாடையையும்—மேலிருந்த தாவணியையும் சரி செய்து கொண்டேன். வாய் 'களுக்'கென்று சிரித்து விட்டது. 'ஏய் என்னடி சிரிப்பு ஏதாவது மறை கழண்டு விட்டதா...' என்று மல்லிகா கேலி செய்தாள். என் தவற்றை உணர்ந்து குளிக்கும்வரை விழிப்போடு குளித்துவிட்டு நீர் மொண்டு கொண்டு அவளோடு திரும்பினேன்.

வழியில் சைக்கிள் ஒன்று, மணி அடித்துக் கொண்டே எங்களை நோக்கி வந்தது. அது யாருடையது என்று எனக்குத் தெரியும். திருப்பூண்டி தபால் நிலையத்தில் வேலை செய்யும் கந்தசாமி. எங்களுக்கு ஓரளவு உறவு. இன்று திடீரென்று எங்கள் முன் குறுக்கே சைக்கிளை வைத்துக் கொண்டு நின்றான்.

ஈரப் புடவையோடு நின்று கொண்டிருந்த எங்களை முறைத்துப் பார்த்தது கண்டு 'வழிவிடு கந்தசாமி! நாங்கள் போகணும்' என்று கடுகடுப்போடு சொன்னேன்,

'பார்த்தியா மல்லிகா—பூங்கோதை பேசறதை. பேர் சொல்லி என்னைக் கூப்பிடுது. நியாயமாண்ணு நீயே கேளு...'' என்று முணுமுணுத்துக்கொண்டே போய் விட்டான்.

''ஏண்டி பூங்கோதை! உனக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது, ஒங்கம்மாவுக்குச் சக்தி குறைந்து கொண்டிருக்கு. அண்ணன் கந்தசாமி ஆபீஸ் வேலையும் பார்க்குது. ஒருகால் உன் தலைவிதி அவரோடு சேர்த்து முடிச்சுப் போட்டிருந்தா—நாளைக்குக் கஷ்டப்படுவே. இப்படியெல்லாம் பேசாதே!'' என்று எச்சரித்தாள்;

எனக்கு எரிச்சலாக இருந்தது. ஏனோ சிறு வயதி லிருந்தே எனக்குக் கந்தசாமியிடம் ஒரு வெறுப்பு. எங் கப்பாவை விட்டுப் பிரிந்து நானும் அம்மாவும் கொஞ்ச காலம் இந்தக் கிராமத்தில் இருந்தபோது நான் கருங் கண்ணி மாதா கோயில் பாடசாலையில் படித்துக் கொண் டிருந்தேன். அப்போது கந்தசாமியும் அங்குதான் படித்துக் கொண்டிருந்தான். வருகிற வழியில் இதே வாய்க்கால் குறுக்கிட்டது. பெரிய பையன்கள் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு இறங்கி வருவார்கள். பாவாடையைத் தூக்கிக்கொண்டு நாங்கள் நடக்கமாட்டோம். அதனால் குறுக்கே போட்டிருந்த ஒரு பனைமரப் பாலத்து வழியாக நாங்கள் வருவோம். அந்த ஒற்றைப் பனை மரத்தில் ஏறி வருவது என்றால் எனக்கு ஈரல்குலை நடுநடுங்கும்.

ஒரு நாள் எல்லா வகுப்புக்கும் பொதுவாக மனக் கணக்குத் தேர்வு நடந்து கொண்டிருந்தது. என் அருகில் நின்று கொண்டிருந்த கந்தசாமி என் விடையை அறிந்து கொள்ள மெல்லச் சிலேட்டைத் திருப்பிக் காட்டும்படி கெஞ்சினான். நான் முறைத்துப் பார்த்தபடியே அவ னுக்குத் தெரியாமல் விடை எழுதி சிலேட்டை 'டக் கென்று' மூடிக் கீழே வைத்து விட்டேன். அவன் விடை தப்பாக இருந்தது. ஒரு பிரம்படி கிடைத்தது. என்னைப் பார்த்துக் கறுவிக் கொண்டே இருந்த அவன் அன்று மாலை அந்த ஒற்றைப் பனைமரப் பாலத்தில் தட்டுத் தடுமாறி நான் வந்து கொண்டிருந்த பொழுது பின் னிருந்து அதை உருட்டிவிட்டு விட்டான். 'ஐயோ அம்மாடி!' என்று தலைகுப்புற வாய்க்காலில் விழுந்து விட்டேன். கையிலிருந்த சிலேட்டு, புத்தகம் எல்லாம் சிதறிப்போய் வாய்க்காலில் விழுந்தன. நல்லகாலமாகத் தண்ணீர் கொஞ்சமாகவே ஓடிக் கொண்டிருந்தது. சேறும் சகதியுமாய் வாய்க்காலில் விழுந்த சிலேட்டையும் புத்த கத்தையும் தேடி எடுத்துக்கொண்டு நான் கரையேறு வதைப் பார்த்து அவன் 'கலகல'வென்று கைகொட்டிச்

சிரித்தான். அப்படியே சுட்டெரித்து விடவேண்டும் போல் இருந்தது. அன்றிலிருந்து அவனைக் கண்டால் வேப்பெண் ணெயைக் கண்டதுபோல ஒரே வெறுப்பு. இப்படி விருப்பு வெறுப்பு நினைவுகளில் தோய்ந்தவளாய் வீட்டிற்கு வந்தேன். என் மன மாற்றத்தைப் புரிந்து கொள்ளாத மல்லிகா மனம் நொந்தவளாய் 'ஏனோ இன்று என்னிடம் கலகலப்பாகப் பேசவில்லை. போடி பூங்கோதை, இனி மேல்அண்ணன் கந்தசாமி பற்றிப் பேசமாட்டேன். கோவிச்சுக்காதே—' என்று சொல்லிக் கொண்டே பிரிந்து போனாள்.

3

செங்கண்ணன்

ஏறக்குறைய ஐந்தாறு மைல் நடந்திருந்ததால் உடல் சோர்ந்திருந்தது. படுக்கையில் படுத்தேன். ஆனால் உறக்கம் வரவில்லை. உள்ளம் விழித்துக்கொண்டு பூங்கோதையைப் பற்றிச் சிந்தித்தது. அப்படி ஒரு பெண் எனக்குக் கிடைக்க மாட்டாள் என்ற நினைப்பில் 'திருமணமே வேண்டாம்' என்று அம்மாவிடம் சொல்லி வந்தேன். என் குறிக்கோளுக்காகத் தன்னையும் இழக்க வல்ல பெண் கிடைப்பாளோ என்ற அவநம்பிக்கையில் அப்படிச் சொல்லி வந்தேன். மகாத்மா காந்திக் குடிலில் ஆதாரப் பயிற்சி பெற்றபோது அங்குத் தங்கிப் படித்து வந்த அநாதைக் குழந்தைகளை நினைத்து அப்படிச் சொன்னேன். சரியாக உண்ண உடுக்கத் தராது, மாடுகள் போல் அவர்களை வேலை வாங்கி வருத்திய காட்சி என் நெஞ்சைத் துன்புறுத்தியது. அரசியல்வாதிகளும் தன் னலக்காரர்களும் காந்தியின் கருத்துக்களைத் தங்களுக்குச் சாதனமாக்கிக்கொண்டு இந்த நாட்டில் காந்தியத்தையே அழித்து அதற்கும் சமாதி கட்டிவிட்டனர்.

ஒவ்வொருவனும் உடலால் உழைக்கவேண்டும் என்று கருதினார் காந்தி அண்ணல். மானவனும் ஓரளவு

உழைக்க வேண்டும். 'உடைப் பொருள் உணவுப் பொருள் இவற்றை உண்டாக்கும் தொழில் முதலியவற்றில் பள்ளிகளில் பாடங்கள் கற்கும் காலத்திலேயே மாணவர் வல்லமை பெற வேண்டும் என்றார் அவர். ஆனால் காந்தியின் பெயரால் கத்தூரி தேவியின் பெயரால் அனாதை இல்லம் வைத்து நடத்தும் காந்திய வாதிகளோ குழந்தைகளின் படிப்பைவிட அவர்கள் செய்யும் வயல் வேலை, தோட்ட வேலைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். குழந்தைகளின் உள்ளத்து வளர்ச்சிக்குத் தொழில் ஒரு துணையாகும் என்று காந்தி அண்ணல் கருதியதைப் புரிந்து கொண்டோ புரிந்து கொள்ளாமலோ அந்த அநாதை மாணவர்களின் உடல் சோரச் சோர வேலை வாங்கினர். உணவும் பெரும்பாலும் கஞ்சியும் கூழுமே. காந்தி அடிகள் எளிய உணவை வற்புறுத்தினார். ஆனால் அவர் தொண்டர்களோ எளிய உணவுக்குச் சத்தற்ற உணவு எனறு பொருள் கொண்டனர். அவர்கள் கொண்ட பொருளும் தங்களுக்கும் தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்கும் அல்ல. தங்கள் கீழ்ப்பயின்று வரும் அநாதைப் பிள்ளைகளுக்கே.

காந்தி அண்ணல் பசு வளர்ப்பைப் பெரிதும் போற்றினார். காந்தியவாதிகள் நடத்தும் அநாதை இல்லங்களிலும் தவறாமல் ஒரு பசுத் தொழுவம் இருக்கும். இருபது முப்பது பசுக்களுக்குக் குறைவில்லாமல், அதாவது அநாதை இல்லத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற் போலச் சிறிது கூடியோ குறைந்தோ இருக்கும். காலையில் சாணி எடுத்தல், தொழுவத்தை தூய்மை செய்தல், பசுக்களைக் குளிப்பாட்டல், அவற்றுக்குப் பொட்டு வைத்துப் பூ இட்டுப் பூசை செய்தல், பிறகு மாலையில் தொழுவத்தில் வைக்கோல் புல் வைத்தல், எதற்கேனும் நோய் நொடி வந்தால் ஏழெட்டு மைல் தூரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு ஓட்டிச் செல்லல் எல்லாம் அந்த அநாதைச் சிறுவர்கள் வேலை. வேலை என்று சொல்லுவது இல்லை. அது கோ சேவை.

சேவைக்குப் பிரதிபலன் எதிர்பார்க்கக்கூடாது அல்லவா? ஆம்! அந்தப் புனிதமான தத்துவமும் செயல் அளவில் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. பால் மட்டும் பால் பண்ணை ஆள்கள் கறந்துகொண்டு போய்விடுவார்கள். அநாதைக் குழந்தைகளுக்கு நோய்வந்தால் பால் கொடுக்க மாட்டார்கள்: அவர்களை அரசாங்க மருத்துவ மனையில் சேர்த்துவிடுவர். அங்குத் தரும் வரண்ட ரொட்டியும் நீர்த்த காபியுமே அவர்களுக்கு உணவு. ஆனால் அந்த வரண்ட ரொட்டிக்கும் நீர்த்த காபிக்கும் ஆசைப்பட்டுச் சிறுவர் பலர் அடிக்கடி நோயாய்ப் படுத்து விடுவர். ஆனால் அரசாங்க மருத்துவர் ஓரிரு கேசுகளை மட்டும், அதாவது சேர்க்காவிட்டால் அநாதை இல்லத்திற்குப் போவதற்கு முன் வழியிலுள்ள சுடுகாட்டுக்குப் போய் விடும் என்று கருதுகிற கேசுகளை மட்டும் சேர்த்துக் கொள்வார்.

அப்படியே தோட்ட வேலையும். வெள்ளரி, பரங்கி, பூசணி, கத்தரி என்று என்னென்னவோ பயிர் செய்வர், அரசு சும்மா வழங்கிய புறம்போக்கு நிலத்தில் எல்லாம் தோட்டப் பயிர் செய்வர். ஆனால் அவை எல்லாம் விலைக்குச் சந்தைக்குப் போய்விடும்.அநாதை இல்லத்தார் அவற்றை விலை கொடுத்தே வாங்கிக் கொள்வர். மாணவர் சிலர்க்கு இந்தச் செயல் வெறுப்பளித்து வந்திருக்க வேண்டும். ஒரு நாள் இரவு எல்லாப் பூசனிக் காய்களையும் கொடிகளையும் முருகவேள் என்னும் இளைஞன் கத்தியால் வெட்டித் தள்ளிவிட்டான். ஐயோ; அவனை நாயைவிடக் கேவலமாக அடித்து இளைஞர் சிறைக்கு அனுப்பிவிட்டனர் இது அநாதைச் சிறுவர்கள் நிலை.

அநாதைச் சிறுமிகள் நிலை இன்னும் மோசம். இந்தச் சத்தற்ற உணவைத் தின்றும் கூட, காலையிலிருந்து இரவு வரை கடமைகள் பல செய்தும்கூடச் சிலர் உரிய பருவத்தில் பொலிவோடு விளங்குவர். தப்பித் தவறி அவர்கள் அநாதை விடுதியை நடத்தும் அலுவலர்கள் கவனத்தைக்

கவராமல் இருந்தால் பிழைத்தார்கள். இன்றேல் அவர்கள் அந்த ஆள்களின் காமத்தீய்க்கு விறகாகி விடுவார்கள்.

ஆசிரியர் பயிற்சி பெறும் எங்கட்கு அவ்வப்போது ஊரிலிருந்து தின்பண்டங்கள் வரும். முறுக்கு, ஓமப்பொடி, அதிரசம், கடலை உருண்டை—இப்படி ஒவ்வொரு பொருளை மாலையில் தின்பர்; அவற்றை ஆசிரியப் பயிற்சி பெற வந்துள்ள சிலர் அங்கும் இங்கும் பார்த்த படியே மடியில் தெரியாமல் வைத்துத் தின்று கொண்டி ருப்பர். அங்கும் இங்கும் குறுக்கும் நெடுக்குமாய்ப் பல வேலை செய்யச் செல்லும் அந்த அநாதைக் குழந்தைகள் அவற்றைப் பார்த்து ஏங்கிக் கொண்டே போவார்கள். அவர்களுக்கு யார் இவற்றைத் தரப்போகிறார்கள்?

இப்படி இரண்டாண்டுகள் அந்தக் குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து ஏங்கிய என் உள்ளம் 'எப்படியேனும் ஓர் இல்லம் தோற்றுவித்து அதில் அன்போடும் பண் போடும் வாழ்வதற்கு அநாதைப் பிள்ளைகளுக்கு உதவ வேண்டும். உலகத்துக்கே நல்ல எடுத்துக் காட்டாக அந்த இல்லத்தை அமைத்துக் காட்ட வேண்டும். உழைப்ப வர்க்கே ஊதியத்தையும் உரிமையாக்கி அந்த அநாதைப் பிள்ளைகள் மனத்தில் தோன்றும் அடிமை உணர்வை—கொடுமை உணர்வை, நீக்கி அருளுணர்வையும் உரிமைப் பண்பையும் வளர்க்க வேண்டும்—இந்தக் குறிக்கோளுக்குத் துணை செய்யவல்ல பெண் வாய்த்தால் மணந்து கொண்டு வாழ்வது. இன்றேல் அதற்காகப் பிரமச்சாரியாகவே வாழவேண்டும்' என்றெல்லாம் உறுதி செய்து கொண்டி ருந்தேன்.

ஆனால் அப்படி உறுதி செய்து கொண்ட நாளில் இப்படி என்பால் என்னைக் காணாமலே ஒருத்தி அன்பு கொள்வாள் என்று நான் அறியவில்லை. என் மனம் அவளை எண்ணி இப்போது தவிக்கிறது. அது போல அவளும் என்னை நினைப்பாளா?

நிச்சயம் நினைப்பாள். ஓரிரு அடி எடுத்து வைத்துத் திரும்பிப் பார்த்த போது ஓடோடி என்னிடம் முதலில் வந்தவள் அவள்தானே. பொன்னம்மாகூட அப்புறம் தானே வந்தாள். அதற்கு என்ன பொருள்? தென்னந் தோப்பை விட்டுச் சாலையில் ஏறித் திரும்பிப் பார்த்த போதும் பூங்கோதைதானே என்னைப்பார்த்தாள். அதற்கு என்ன பொருள்? இரவு ஏழெட்டு மணிக்கு மேல் திரும்பி வரும்போது 'மங்கியதோர் நிலவினிலே...' என்ற அந்த அழகான அழகுப் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தவள், நான் நின்று கவனித்ததும் பாட்டை நிறுத்தி விட்டு என்னையே பார்த்தாளே அதற்கு என்ன பொருள்?

நான் நினைப்பது போல் அவளும் என்பால் உண்மையான அன்புதான் கொண்டிருக்கிறாள். அந்த அன்பு காதலாக அமையுமா? வாழ்க்கைக்குத் துணைவி நிலை பெறுமா? அப்படிப் பெற்றால் நான் பெரும்பேறு செய்தவனே. இதனை எப்படித் தெரிந்து கொள்வது?

நான் ஒரு முட்டாள், நேற்று இரவு அவள் பாட்டை நிறுத்திவிட்டு என்னை நோக்கி நின்றபோது அவளிடம் சென்று தனியே பேசியிருக்க வேண்டும். ஆசிரியர் இளங்கணத்தான் கூறிய அறிவுரை-'அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்' என்று அறிவுரை-தடுத்து நிறுத்தி விட்டது. அவர் அதற்கு அப்படி ஒரு பொருள் சொல்லியிருந்தார். எவ்வளவு நல்லவராயினும் தனிமையில் செல்லும்போது கெட்ட உணர்வுகளுக்கு ஆளாகித் தவறு செய்து விடுகின்றனர். யாரேனும் உடன் இருந்தால் மனம் தவறு செய்யத் தயங்குகிறது. எனவே ஆணும் பெண்ணும் சந்திக்க நேரும்போது இடையில் ஒருவர் இருவர் இருப்பதே நல்லது. தனித்துப் பழக வேண்டா நம் மனமே நம்மை ஏமாற்றிவிடும். என்றெல்லாம் அந்த ஆத்திசூடிப் பாடலுக்கு அவர் அன்று கூறிய அறிவுரை என்னைத்தடுத்து நிறுத்தி விட்டது.

அது மணந்துகொண்ட சபல புத்திக்காரர்களுக்குப் பொருந்தும். அன்பால் தோன்றிப் பண்பால் வளர்ந்து வரும் காதலர் இருவர் சந்திப்பதற்குக்கூடவா தணை வேண்டும்! எப்படியாவது ஒருமுறை அவளைப் பார்த்துப் பேசி உண்மை அறிய வேண்டும். அல்லது யார் மூலமாக வாவது விரைவில் அறிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டே நாட்குறிப்பை எழுதி விட்டு என்னென்னவோ எண்ணியவாறு படுத்தேன். உறங்கிப் போய்விட்டேன்.

''...ஐயாறடைகின்ற போது காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்'' என்ற திருநாவுக்கரசர் பாடல் வானொலியில் கேட்டு விழித்தேன். பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டிருந்தது. 'தட தட' என்று எழுந்து 'அம்மா! குளித்து விட்டு வருகிறேன்' என்று சொல்லிக் கொண்டே வயல்வெளி நோக்கிப் புறப்பட்டேன்.

வானத்து வெள்ளிய மேகங்களில் காலைக் கதிர் ஒளி பாய்ந்து தழுவிக் கொண்டிருந்தது. சேவல் ஒன்று கூவித் தன் பேடையை அருகில் அழைத்து மகிழ்ந்தது. மயிலைக் காளை ஒன்று இன்னொரு காளையை முட்டி விரட்டித் துரத்தி விட்டு நின்று கொண்டிருக்கும் பசு ஒன்றை நாடி வந்தது. வாழைப் பூ மடல்களில் வண்டுகள் ரீங்கார மிட்டுக் கொண்டு சூழ்ந்த ஓசை செவியில் கேட்டது. எங்கிருந்தோ குக்கூ குக்கூ என்று கூவும் பேடைக் குயில் அழைப்பும் அதற்கு ஏற்பக் 'குக்குக்கூ குக்குக்கூ' என்று கூவும் சேவல் குயில் அன்பு இசையும் மாந்தோப்பில் விட்டு விட்டு ஒலித்தன. இந்த இன்பக் காட்சிகளும் இனிய ஓசைகளும் இவ்வளவு நாள் எங்கிருந்தன? எனக்கு ஏன் புலப்பட வில்லை? எல்லாம் பூங்கோதையைப் பார்த்தபின் புதுமையாக இருந்தது. உலகமே காதல் கோலமாகத் தோன்றியது.

வயல்கரையை அடைந்தேன். வரப்பு வழியே பல்குச்சி ஒடிக்கக் கருவேலந்தோப்பு ஒன்றை நோக்கிச் சென்றேன்.

என்றும் என்னைக் கவரும் கரிசிலாங்கண்ணியும்வல்லாரை யும் அம்மா பச்சரிசியும் அன்றும் வரப்புகளில் தளிர்த்துக் கிடந்தன. அடிக்கடி வரப்புகளை நான் சித்த மருத்துவச் சாலை என்று குறிப்பிடுவதுண்டு எலும்பு உறுதிப்பட, நரம்புவலிமை பெற ஈரல் நலம்பெற எத்தனையோ எளிய மருந்துக் கொடிகள் அங்கே மதிப்பாரற்றுப் பரந்து கிடந்தன. மனிதன் மிதிக்க மிதிக்கக் கலங்காது, மடிந்து அழிந்து விடாது மேலும் மேலும் துளிர்த்தன.

மிதித்த மனிதன் கால்புண்ணுக்கும் மருந்தாயின அவை. என் பூங்கோதைகூட என்னோடு சேர்ந்து சமுதாயப் புண்ணுக்கு மருந்தாவாள் என்று நான் எண்ணிக் கொண்டே தோப்பருகே வந்து விட்டேன். நான் எப்போதும் பல்குச்சி ஒடிக்கும் இளங்கருவேலங் கன்றருகே கடா ஆடு ஒன்று இருகால்களையும் தூக்கிக் கிளை ஒன்றில் வைத்து வளைத்து மேய்ந்து கொண்டிருக் கப் பெட்டை ஆடு ஒன்று தன் முன் உதடுகளைத் தூக்கி தூக்கி விரைவாகக் கடித்து அந்தக் கிளையிலுள்ள வேலந் துளிர்களைத் தின்று கொண்டிருந்தது. ஏனோ அவற்றை விரட்டி விட்டு அங்குச் குச்சி ஒடிக்க அன்று எனக்கு மனம் வரவில்லை. வேறொரு வரப்பு வழியாகச் சுற்றிச் சென்று இன்னொரு மரத்தில் குச்சி ஒடித்துப் பல் துலக்கிக் கொண்டே வாய்க்காங் கரையை அடைந்தேன்.

அமைதியாகக் கோரைப்புற்களை அசைத்துக் கொண்டு மெல்ல நகரும் அந்த வாய்க்கால் அன்று அழகாகத் தோன்றியது. உடனே இறங்காமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே பல் துலக்கிக் கொண்டே நின்றேன் 'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப...மணிப்பூ ஆடை அது போர்த்து...' என்ற மாதவிப் பாடலும் இண்டர் மீடியட்டில் அதற்கு ஆசிரியர் கொடுத்த விளக்கமும் நினைவுக்கு வந்தன. 'என் பூங்கோதை இப்படித்தானே அசைந்து அசைந்து தாவணி பறக்க வளையல் கலகலக்க என்னை நோக்கி ஓடி வந்தாள்' என்று எண்ணி மகிழ்ந் தேன்,

பல் குச்சியைப் பிளந்து நாக்கை வழித்து விட்டு வாய்க்காலில் இறங்கினேன். 'ஆ...இது பூங்கோதை வீட்டுக்கு அருகில் ஓடும் வாய்க்கால் அல்லவா? அவள் நீராடுகின்ற நீர் அல்லவா இது...' என்று நினைத்த உடனேயே என் உடம்பெல்லாம் புல்லரித்தது. அந்த அசைந்தாடும் நீரில் என்னை மறந்து நீந்தி நீந்தி மன மாரக் குளித்தேன். எவ்வளவு நேரம் குளித்தேனோ!

'என்ன, செங்கண்ணா! மணி எட்டே முக்கால் ஆகி விட்டது' என்று முருகேசனார் குரல் கேட்டுத் திரும்பி னேன். முருகேசனார் நின்று கொண்டிருந்தார். அவர் சிவன் கோயிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்ததை அவர் நெற்றியிலிருந்த திருநீற்றுப் பட்டைகளும் குங்குமமும் காட்டின.

'வணக்கம் ஐயா! இன்று கொஞ்சம் அதிகம் தூங்கி விட்டேன்!' என்று மன்னிப்புக்கேட்பதுபோல் பார்த்தேன்.

'சரி, விரைவாகப் புறப்படு, பள்ளிக்கூடத்திற்கு நேர மாகிவிடப் போகிறது' என்று சொல்லிக்கொண்டே அவர் போனார். நானும் விரைவாகத் துண்டை முறுக்கி அழுக்குத் தேய்த்து இரண்டு முழுக்கில் குளித்துத் துவட்டிக் கொண்டு துண்டைப் பிழிந்து இடுப்பில் கட்டிக் கொண்டு வேட்டியை உதறி ஈரம் புலர இருமுனைகளையும் கைகளால் தலைக்கு மேல் அகற்றிப் பிடித்துக் கொண்டு வீட்டை அடைந்தேன். அங்கு எனக்காகக் காத்திருந்த குணாளன் என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தான்.

எதையும் குறித்த காலத்தில் செய்பவன் காலங் கடந்து இன்று குளித்து வந்ததற்காகச் சிரிக்கிறான் என்று நினைத்து 'இன்று அலாரம் வைக்கத் தவறி விட்டேன்: அதனால் விழிப்பதற்கு நேரமாகி விட்டது' என்று கூறி மழுப்பினேன்.

'ஆமாம், இனிமேல் உன் நினைவு உன்னிடம் இருக்காது. எல்லாவற்றுக்கும் அலாரந்தான் வேண்டும்:

அலாரம் வைப்பதற்குத் துணையாக உடனே ஆள் ஒன்றும் வேண்டும், அதுவும் பூங்கோதையாக இருந்தால் நன்றாக இருக்கும். என்ன செங்கண்ணன்...சரிதானே' என்று தோட்டத்துப் பக்கம் வேட்டியைக் காயவைக்கச் சென்ற என்னைப் பின் தொடர்ந்து என் காதில் மட்டும் விழும்படி சொன்னான் குணாளன்.

நான் வியப்போடு, ஆர்வத்தோடு, அவனுக்கு எப்படித் தெரிந்தது என்ற வினாக்குறியோடு பார்த்தேன்.

'மன்னித்துவிடு. எப்போதும் போல் திறந்து கிடந்த நாட்குறிப்பை ஏதாவது கவிதை எழுதியிருப்பாய் என்று புரட்டினேன். கவிதை கிடைக்கவில்லை, ஒரு காவியம் கிடைத்தது' என்று புன்னகை செய்தான்.

என் பின்னால் எதற்கோ அம்மா வந்து கொண் டிருந்ததைப் பார்த்த நான் ஒரு விரலால் வாயை மூடிக் குறிப்புச் செய்தேன்.

சிறிது நேரம் பேச்சை மாற்றிப் பிறகு, 'கவலைப் படாதே. அந்தக் குடும்பத்தை நன்றாக எனக்குத் தெரியும். கவலையை என்னிடம் விட்டுவிடு. நேரமாகிறது; சிற்றுண் டியை முடித்துக்கொண்டு பள்ளிக்குப் புறப்படு. நான் வீட்டிற்குப் போய்விட்டு அப்படியே வந்து விடுகிறேன்' என்று குணாளன் போனான்.

4

குணாளன்

பிறர் நாட்குறிப்பைப் பார்ப்பது நல்ல பண்பு இல்லை தான். ஆனால் நான் செங்கண்ணனோடு பழகத் தொடங்கிய இந்த இரண்டு ஆண்டுகளாக அவனே

அவ்வப்போது தான் எழுதிய கவிதைகளை நாட்குறிப்பி லிருந்து படித்துக் காட்டுவான். சிற்சிலபோது நானே எடுத்துப் படித்துவிட்டுப் பாராட்டியிருக்கிறேன். ஏதேனும் சிந்தனைக் குறிப்போ கவிதையோ எழுதினால் உடனே என்னிடம் படித்துக் காட்டிய பிறகுதான் அவனுக்கு மன நிறைவு ஏற்படும். அவன் எழுதுவது எல்லாமே எனக்குப் பிடித்திருக்கும். எனவே என்னிட மிருந்து வரும் பாராட்டுதல்கள் அவனை மேலும் மேலும் எழுதத் தூண்டின. எங்கள் பள்ளியில் எல்லோருமே பத்தாம் வகுப்புவரை படித்த ஆசிரியர்கள். செங்கண்ணனோ இண்டர்மீடியட் வரை படித்திருந்தான். வயதிலும் சிறிது மூத்தவன். அதனால் அவனிடம் ஒரு மதிப்பும் மரியாதையும் எனக்கு இருந்தன. இந்த மதிப்போ மரியாதையோ உள்ளம் ஒத்த பண்போ எதுவோ எப்போதும் அவன் எழுதுவதைப் படிக்கவும் கேட்கவும் பாராட்டவும் என்னைத் தூண்டி வந்தன.

அந்த ஆர்வந்தான் அன்று அவன் நாட்குறிப்பைப் படிக்கத் தூண்டியது. மேலும் நாட்குறிப்பு திறந்தபடியே வேறு இருந்தது. திறந்திருந்த பக்கத்தில்

பொன் நடந்ததோ—ஒரு
பூ நடந்ததோ
என் நடந்தது—என்
இதய வீதியில்
கண் நடந்தது—பின்
கால் தொடர்ந்தது...(பொன்)

என்ற கவிதை அவனுக்கே உரிய அழகான உருண்டை எழுத்துகளில் அமைந்திருந்தது. தவழ்ந்து தாவி வரும் குழந்தையைப் பார்த்துக் கொண்டு யாரால்தான் சும்மா இருக்க முடியும்! அதுபோல் அந்தக் கவிதையின் அழகான எழுத்துகளும் எங்கள்பால் நிலவிய ஒருமித்த அன்பும் தூண்ட அதனை எடுத்தேன். கவிதைக்குப் பின்

கவிதையிலும் எழுத முடியாமலோ என்னமோவா உரைநடையில் சில எழுதியிருந்தான். அதனையும் படித்தேன்.

'பூங்கோதை! ஆ, எவ்வளவு அழகான பெயர். எவ்வளவு மென்மையான பார்வை. 'பூ' என்றாலே அழகு, மென்மை, மணம், பொலிவு என்பர் சான்றோர் திரு.வி.க. எல்லாம் இயல்பாகவே உள்ள பெண்தான் நீ. உன் உள்ளத்தில் இடம் பெற என்ன தவம் செய்தேனோ!'

'பூங்கோதை! பூங்கோதை! ஆ நூறுமுறை இப்படி அழைக்க ஆசை; 'காணாமற் போதியோ பூம்பாவாய்' என்ற அந்தப் பக்தனைப் போல், என் இதயக் குரல் உனக்கும் கேட்காமல் போய்விடுமோ என்று இந்தப் பித்தன் தவிக்கிறான்.

என் இதயப் பூங்காவில் வாழத் தோன்றிய பூங்கொடி தான் நீ—என்றேனும் எனக்கு ஒருத்தி வாய்த்தால் அவள் இப்படித்தான் இருக்க வேண்டு மென்று நான் கற்பனைக் கனவு கண்டு கொண்டிருந்தது பிரமனுக்கு எப்படித் தெரிந்ததோ? அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இப்படிப் பட்டவளை இப்போது நான் செய்த கற்பனைக்கு ஏற்பத்தெரிந்து கொண்டு எப்படி அவனால் படைக்க முடியும். மயன் என்னும் தெய்வதச்சன் நினைத்ததை நினைத்தபோது நினைத்தபடியே படைப்பான் என்று தமிழாசிரியர் சோம சுந்தரம் கூறினார். ஆ! அப்படித்தான் என் மனம் அறிந்து மயன் படைத்தானோ?

இல்லை. இது எல்லாம் புராணக் கதைகள். அப்படி ஒன்றும் இல்லை. பொன்னம்மாள் உனக்கு என்னைப் பற்றிச் சொல்லியிருப்பாள். அவள் சொற்கள் உன் உள்ளத்தில் என்னை நாள்தோறும் வளர்த்து வந்துள்ளது. என் கவிதைகளை நீ பாடுகிறாய். என் கருத்துக்களை நீ உணர்கிறாய். என்பால் நீ கொண்ட மானதக் காதலே அன்று உன் பார்வையில் தோன்றியிருக்க வேண்டும்.

பூங்கோதை! எத்தனையோ கண்களைச் சந்தித்திருக் கிறேன். தஞ்சாவூரில் இண்டர் படிக்கும்போது இரட்டைச் சடை போட்டுக் கொண்டு இளைஞர்களை மயக்கும் மோகினி 'கனகம்' வருவாள். அவள் கண்களை எத்த னையோ முறை பேச்சு மேடைகளில் சந்தித்திருக்கிறேன். அவைகளால் என்னை ஒன்றும் செய்ய இயலவில்லை.

ஆசிரியர் கூட்டங்களில் மாதந்தோறும் சந்திக்கும் அழுதம் என்னை மணந்து கொள்ள விரும்புவதாக முருகேசனார் மூலம் சொல்லி அனுப்பினாள். என்னைச் சந்திக்கும் போதெல்லாம் தன் ஏங்கும் கண்களால், கெஞ்சும் கண்களால், கொஞ்சும் கண்களால் ஈர்க்கப் பார்ப்பாள். அவையும் என்னை ஒன்றும் செய்துவிட வில்லை. உன் கண் மட்டும் எப்படி என்னை ஒரே நோக்கில் அழைத்து அடிமையாக்கி விட்டது?

நீ என்னைப் பார்த்த பார்வை நான் என்னைப் பார்ப் பது போலவே இருந்தது. நான் உன்னைப் பார்த்தது கூட உனக்கு அப்படித்தான் தோன்றியிருக்குமோ! எனவே தான் நம்முள் வேறுபாடு ஒன்றும் தெரியவில்லை. 'பிரிந்த வர் கூடினால் பேசவும் வேண்டுமோ' என்றார் கம்பர். நாம் ஏதோ ஒரு பிறவியில் கூடிப் பிரிந்திருக்க வேண்டும் பூங்கோதை! அதனால்தான் ஒரே பார்வையில், ஒரே சொல்லில், ஒரே விநாடியில், நான் உன்னவன் ஆனேன், நீ என்னவள் ஆனாய்.

நீ மூன்று முறை புன்னகை செய்தாய்—முதலில் உன் புன்னகையில் வியப்பு இருந்தது. பின்பு வேதனை இருந்தது. இறுதியில் விழைவு இருந்தது. 'முகை' மொக் குள் உள்ளது நாற்றம் போல் நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு' என்றார் வள்ளுவர். 'நகை மொக்குள்' என்று புன்னகையை அழைத்த அந்த வள்ளுவக் காதல னுக்கும் எனக்குக் கிடைத்தது போல மனமொத்த ஒரு காதலி கிடைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் நகையை முகை என்று இவ்வளவு அழகாகக் கற்பனை செய்ய முடியுமா என்ன?

உன் புன்னகையை நினைக்கும் போதெல்லாம் கண்ணி னுள் புன்முறுவலைக் காவியம் செய்த இளங்கோவின் நினைவும் எனக்கு வருகிறது. செல்வம், செல்வாக்கு. குடிப்பெருமை, கல்வி, தொழில், கடமை-இப்படி எத்த னையோ இழந்துவிட்ட கோவலனை நினைத்துப் பார்க்கும்போது இளங்கோ அடிகள் அவற்றை எல்லாம் அவன் இழந்ததாகக் குறிக்காமல் கண்ணகியின் புன்னகை இழந்தது ஒன்றை மட்டும் குறித்ததன் காதல் நுட்பம் எனக்கு உன்னைப் பார்த்த பிறகே புலப்பட்டது. ''என் காவியமே! உன்னைக் கற்றால்தான் உலகக் காப்பியங்கள் எல்லாம் விளங்கும் போல் தோன்றுகிறது'' என்ற அந்த நாட்குறிப்பைப் பார்த்தேன். என் நினைவுகள் ஆறேழு ஆண்டுகளுக்கு முன் சென்றன.

நாகை மருத்துவ மனையில் பூங்கோதையின் தந்தை உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். இனி பிழைப் பது அருமை. இந்தக் கடைசி ஊசியைப் போட்டுப் பார்க்கலாம். பிழைத்தால் அந்த அம்மா செய்த புண்ணியம்! என்று தமக்குள் பேசியபடியே என்னைப் பார்த்துத் 'தம்பி' ரொம்ப டேஞ்சர் உடனே அந்த அம்மாவை அழைத்து வா' என்றார் டாக்டர்.

அரசினர் மருத்துவ நிலையத்திலிருந்து குறுக்கு வழி யாக மீன் மார்க்கெட்டில் நுழைந்து வண்டிக்காரத் தெரு விலிருந்த அவர்கள் வீட்டை அடைந்தேன். அப்போது தான் ஈரப் புடைவையோடு வெண்ணெய் உண்ணும் சின்னக் கண்ணன் படத்தின் முன்னே விளக்கேற்றி வைத்துத் தம் தாலியைக் கையில் ஏந்தியபடியே அந்த அம்மா கண்மூடி வழிபட்டுக் கொண்டிருந்தார். 'தடதட' என்று ஓடிவந்த சப்தம் கேட்டுக் கண் திறந்து 'என்ன தம்பி, என்ன! என்ன தம்பி! என்ன கண்ணா, என்னைக் கைவிட்டுடாதேடா! என்ன தம்பி! என்ன! டாக்டர் என்ன சொன்னார்' என்று இரண்டு கைகளையும் பிச்சை ஏற்பது போல விரித்து வைத்துக் கொண்டு என்னைக் கேட்

டார்கள். பேச்சு வரவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது. கண்ணீர் பொங்கி வழிந்தது.

'என்னடா! அய்யாவுக்கு என்னடா!' என்று ஓவென்று அழ ஆரம்பித்து விட்டார்கள்.

'ஒன்றுமில்லம்மா! ரொம்ப டேஞ்சர்னு டாக்டர் சொன்னார். உடனே அழைச்சிக்கிட்டு வரச் சொன்னார்...' என்று திணறித் திணறி விட்டுவிட்டுச் சொன்னேன்.

அவர், 'அய்யோ!' என்று அலறிக் கொண்டு மருத்துவ மனைக்கு நனைந்த கூந்தலோடு ஓடினார். அங்கே பேச முடியாது திணறிக் கொண்டிருந்த தம் கணவனைக் கண்டார்; கதறினார்.

'கடைசியாக ஒரு ஊசி போடுவோம், அம்மா. பிழைத்தா ஒங்க புண்ணியம்' என்று சொல்லிக் கொண்டே மருத்துவர் ஒரு ஊசி போட்டார். சில விநாடிகளில் அவர்களை நிரந்தர அனாதையாக விட்டு விட்டார்.

என் தந்தை முயற்சியால் அந்தத் தாய் பெயரில் அவர் கட்டியிருந்த இன்சியூரன்சு பணம் 2500 ரூபாய் வந்தது. உண்மை சிறிது சிறிதாக வெளிப்பட்டது. சுற்றியிருந்தோர், அந்த வீட்டுக்கார அம்மாவால்தான் அவர் அடிபட்டு இறந்திருக்க வேண்டும் என்று பிராது கொடுக்க அந்தத் தாயைக் கேட்டனர். அவள் 'என் கணவர் பிராது கொடுத்தால் திரும்பியா வரப் போகிறார்' என்று பதில் சொல்லி மறுத்து விட்டார்கள்.

அவர் இறந்த பின் கையிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த சோழன்பட்டிக் கிராமத்தில் பழைய தென்னந் தோப்புக்கு அந்தக் குடும்பம் நிலையாக வந்து விட்டது. பூங்கோதையின் தாத்தா இறந்தபின் அம்மாவும் பெண்ணும் தனித்து அங்கேயே வாழ்ந்து வந்தார்கள்.

வியாபாரம் மந்தமாகப் போய்விடவே என் தந்தை யும் கொஞ்சம் நிலம் வாங்கிக் கொண்டு சோழன் பட்டிக்கு அருகே கருங்கண்ணிக்கே வந்து விட்டார்கள்.

அந்தக் குடும்பத்தைப் பற்றிப் பல எனக்குத் தெரியும். சில என் அம்மா எனக்குச் சொல்லியது. இவையெல்லாம் அந்த நாட்குறிப்பைப் படித்ததும் என் மனத்திரையில் எழுந்தன. எவ்வளவு நேரம் இவ்வாறு சிந்தித்துக் கொண் டிருந்தேன் எனத் தெரியவில்லை.

நண்பன் செங்கண்ணன், 'என்ன குணாளன்! வந்து வெகுநேரம் ஆயிற்றா? என்று கேட்ட பின்னர்தான் என் நினைவு வந்தது.

'ஆம்!' என்று தலையாட்டிவிட்டு, 'மன்னித்துக் கொள்—உன் காவியத்தை-அதான் உன் நாட் குறிப்பில் உள்ள காதலை—நான் படித்து விட்டேன்' என்று தடு மாறினேன்.

'ஆ! படித்துவிட்டாயா! அதுவும் நல்லதுதான்! எப்படி உனக்குச் சொல்வது என்று தவித்தேன்: இப் போது வேலை எளிதாகி விட்டது. இனி உன் பொறுப்பு. என் வாழ்வின் வெற்றியும் தோல்வியும் இப்போது உன் கையில் இருக்கின்றன' என்று என் கைகளைப் பற்றிக் கொண்டு அவன் கலங்கினான்.

'கலங்காதே செங்கண்ணா! அந்தக் குடும்பம் எங்க ளுக்கு மிகவும் பழக்கமான குடும்பந்தான். எங்க அம்மா வுக்குப் பூங்கோதை அம்மாவை நன்றாகத் தெரியும். விரைவில் இந்தத் திருமணத்தை முடித்து வைப்பது என் கடமை என் கடமை' என்று உறுதி சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். வழியில் அவனையும் அவளை யும் பற்றிய நினைவுகள் சில என் நெஞ்சில் எழுந்தன.

செங்கண்ணன் இங்கே கருங்கண்ணிக்கு ஆசிரியனாக வந்தது தெரியும். இதுவும் அவன் ஆசிரியனாக ஆன பின் தான் தெரியும்; அவன் அன்பும் எளிமையும் என்னைக் கவர்ந்து விட்டன.

அவனுக்கு ஏற்றவள் அவள்தான் என்று என் மனமும் எண்ணியது. அம்மாவிடம் சொல்லி எப்படியேனும் செங் கண்ணனுக்குக் கொடுத்த உறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானித்தேன்.

வீட்டிற்குச் சென்றபோது சுரமாக இருந்த அம்மாவின் உடல் நிலை சிறிது நலமுற்றிருந்தது. மெல்ல மெல்ல எழுந்து எனக்கும் தோசை சுட்டுக் கொடுத்தார்கள்.

"ஏன் எழுந்தீர்கள்! இரவு முழுவதும் அனல் போல் காய்ந்தது. நான் வந்தா சுட்டுக் கொள்ள மாட்டேன்?" எனக் கடிந்து கொண்டேன்.

"இல்லேப்பா, எல்லாம் சரியாகப் போச்சு. படுத்துக் கிடக்க முடியலே... நீ பசியோடு வருவியேன்னு எழுந் தேன்" என்று அன்போடு பயந்து கொண்டே சொன் னார்கள்.

'சரி சரி!' என்று நின்று கொண்டே பேச்சை எப்படி ஆரம்பிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது அம்மா "குணம்! பூங்கோதையையும் அவள் அம்மாவையும் பார்த்து ரொம்ப நாளாச்சு. ஒரு நாளைக்குப் போயி பார்த்துட்டு வரணும்போல இருக்கு... நேற்றுப்போல முன்னே ஒரு சமயம் உடம்பு நலமா யில்லாது இருந்தப்போ—நீ பத்தாவது தேர்வு எழுத ணும்னு நம்பிப் பட்டணம் போயிருந்தே - அப்போ அந்த அம்மாதான் வந்து ரொம்ப உதவினாங்க" என்றார்கள்.

'சரி! நல்ல வாய்ப்புக் கிடைத்தது' என எண்ணிக் கொண்டு என் பேச்சைத் தொடங்கினேன்.

'அம்மா! பூங்கோதை வயதுக்கு வந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியிருக்குமே — அவளுடைய திருமணத்தைப் பற்றி அவளுடைய அம்மா ஏதாவது சொன்னாங்களோ?' என நிறுத்தி நிறுத்தித் தோசை உண்டு கொண்டே கேட்டேன்.

''ஆமாம்! ஒருநாள் பேசிக் கொண்டிருந்தப்போ சொன்னா. தன் கணவனின் உறவாம்—ஒரு பையன் இருக்கிறானாம். அவனுடைய சொந்த ஊர் கருங்கண்ணி தானாம். ஏதோ வெளியூரிலே தபால்காரன் வேலை பார்க்கிறானாம். அவனுக்குக் கொடுக்கலாமா வேண்டாமான்னு யோசிக்கிறேன்னு சொன்னாள்' என்று கூறி முடிப்பதற்குள் தோசை தொண்டையை அடைத்துக் கொண்டது. விழி பிதுங்கிக் கண்ணீர் வந்து விட்டது.

'அப்பா! தண்ணீர் வைக்க மறந்துட்டேனே' என்று சொல்லிக் கொண்டே அம்மா ஓடிப்போய் ஒரு குவளைத் தண்ணீர் கொண்டு வந்து வைத்தார்கள்.

மெதுவாகக் குடித்துச் சரி செய்தேன்.

மீண்டும் பேசத் தொடங்கினேன். 'செங்கண்ணனைத் தான் உனக்குத் தெரியுமே' என்றேன்.

'என்னடா! அப்படிச் சொல்லுறே! அந்தப் பையனைத்தான் எனக்கு நல்லாத் தெரியுமே—ஒல்லியா சிவப்பா உன்கூட வருமே அதுதானே நல்ல பிள்ளை!' என்றாள்.

'ஆமாம்' என்றேன்.

அப்புறம் எப்படிப் பேசுவது என்று புரியவில்லை. அதற்குள் தெருவில் 'மோரு மோரு!' என்று விற்றுக் கொண்டு போகும் ஓசை கேட்டது.

''மோரு வேணுமாடா. தோசைக்குத் தொட்டுக் கொள்ளலாம்...' என்று அம்மா கேட்டார்கள்.

'உம்' என்றேன்.

அவர்கள் மோரு வாங்கிக் கொண்டு வருவதற்குள் பேசத் தொடங்கும் வழியைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

''நேற்று ஏதோ வேலையாக அவன் சோழன் பட்டி போகும்போது அங்கே அவள் வீட்டுக்குப் போயிருக் கிறான்...அவளும் அவள் தாயும் அன்போடு அழைத்தார் களாம்...அவளைத் திருமணம் செய்து கொள்ளணும் என்று ஆசைப்படுகிறான்...நல்லவன்'' என்றேன்.

'ஆமாம்! அந்தப் பொண்ணும் நல்ல பொண்ணுதான். சிறுசுலேயிருந்தே எனக்குத் தெரியும். இரண்டு பேரும் கண்ணிறைந்த கணவன் மனைவியாக இருப்பாங்க...நான் அவள் அம்மாவிடம் சொல்லிப் பார்க்கிறேன்!' என்றார் கள்.

பிஞ்சு செங்காய் ஆயிற்று என எண்ணி அன்றே புறப் படச் சொன்னேன்.

அன்று மாலையே இரட்டை மாட்டு வண்டி ஒன்றைக் கட்டிக்கொண்டு புறப்பட்டோம். 'கல கல' என்ற மணி யொலியோடு வண்டி விரைந்து சென்றது அதனைவிட விரைவாக என் மனம் துள்ளிச் சென்றது. செங்கண்ணன்-பூங்கோதையின் இன்ப வாழ்வைக் காண என் நெஞ்சம் துடித்தது—புயலால் எழுந்த கடலலைபோல் எண்ணங்கள் எழுந்து எழுந்து பறந்தன. மாட்டை என் மனத்திலும் வேகமாக வெருட்டினேன். அரைமணி நேரத்திற்குள் பூங்கோதையின் வீட்டை அடைந்து விட்டோம்.

'வாங்க! வாங்க!' என இருவரும் கையேந்தி வரவேற் றனர்.

''என்னம்மா திடீர்னு இப்படி?'' என்று என் அம்மாவை அவள் அம்மா கேட்டார்கள்.

'ஒன்றுமில்லை, நேற்று ஒரே சுரம். போன முறை நீங்க உதவுனிங்க. உங்களை அதனாலே நினைத்துக் கொண்டேன். வந்துவிட்டேன்' என்று அம்மா பதில் அளித்தார்.

அதற்குள் பூங்கோதை திண்ணையில் நாங்கள் உட் காரப் பாய் விரித்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் அமர்ந்தோம்.

''என்னம்மா உடம்புக்கு' என்று அவள் அம்மா என்னம்மாவைக் கேட்டாள்.

'ஒன்றுமில்லை அம்மா! வெறுஞ்சுரந்தா!' என்று என் அன்னை சொன்னார்.

அப்புறம் தங்கள் பழைய கால வாழ்க்கைக் கதையைப் பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். இடை யிடையே பூங்கோதை திருமணத்தைப் பற்றிக் கேட்கும் படி அம்மாவைக் குறிப்பாகப் பார்த்தேன்.

''என்னம்மா, பூங்கோதைக்கு எப்போ கல்யாணம் செய்யப் போறீங்க...ஏண்டாப்பா...எப்போ எனக்கும் உன் தங்கைக்கும் வடை பாயாசச் சோறு போடப் போறே'' என்று இருவரும் ஒரே நேரத்தில் அவர்களாகவே கேட்டார்கள்.

'அவனுக்கென்னம்மா ஆம்புளைப்புள்ளே... பூங்கோதைக்கு எப்போ திருமணம்? அதைச் சொல்லுங்க' என்று சிரித்துக் கொண்டே தொடர்ந்து என்னம்மா கேட்டார். பூங்கோதை தலைநிமிர்ந்து புன்னகை செய்தாள்.

'அவளுக்கென்னம்மா...நாளைக்கு வந்தாலும் செஞ் சிடலாம்னுதான் இருக்கேன். நேரமும் காலமும் வரவேண் டாமா...அந்தத் தபால்காரப் பையன்தான் அப்பப்ப வர்ரான். அவனெகண்டா இவமுகம் உர்ருண்ணு போகுது. அவரு இருந்தா பெரிய இடத்துல இருந்தெல்லாம் பெண் பார்க்க வருவாங்க' என்று கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டே சொன்னார்.

'என்னம்மா செய்வது. நம்ம கொடுத்து வைத்தது அவ்வளவுதான்...அதை நினைச்சு என்ன செய்வது... காலா காலத்தில் நம்ம கண்ணு இருக்கிறப்பவே செய்திட வேண்டாமா' என்று என்னம்மா உருக்கத்துடன் உரைத் தார்.

''ஆமாம். நானும்தான் அங்கே இங்கே பார்க்கிறேன். பெண்ணுள்ளவங்க பிள்ளை தேடிப் போவது கேவலம்

இல்லையா... பிள்ளைவீட்டார் யாராவது வந்து கேட்பாங்களான்னு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்றாள்.

'அப்படியெல்லாம் இந்தக் காலத்தில் எதிர்பார்த்தா நடக்குங்களா... நாம்தான் வேண்டியது செய்யணும்' என்று அம்மா சொன்னார்.

'முன்னே உன்னிடம் சொன்னேனில்ல. அந்தத் தபால்காரப் பையன் வீட்டிலேயிருந்து வந்து கேட்டார்கள். கொடுக்கலாமா வேண்டாமான்னு யோசித்துக் கொண்டிருக்கிறேன். உன்னையும் கேட்டுத்தான் எதையும் செய்வேன்.'

பூங்கோதையின் முகம் வாடியது. அது அவள் உள்ளம் படும் துயரை எடுத்துக்காட்டியது. இவ்வாறு கூற முடியாது பல பெண்களைத் துயரப்பட வைக்கும் நிகழ்ச்சி அவளுள்ளத்திலும் நிகழ்வதாக எண்ணினேன். அவர்களிரு வரும் அவளைக் கவனிக்கவில்லை. நான் கவனித்தேன். குனிந்த அவளது முகத்தில் முத்து முத்தாய் இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தன.

அதற்குள் ஒரு சிறு காற்று வேகமாக வீசிச் சென்றது... பழுத்த மட்டையொன்று விழுந்தது.

பூங்கோதை திடீரென்று எழுந்து திரும்பினாள். மெல்ல மட்டையை எடுத்துவரச் செல்பவள் போல் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தாள். முகம் கழுவியதில் வழிந்த கண்ணீர் மறைந்ததே ஒழிய அவள் முகத்தில் படர்ந்திருந்த துன்பம் மறையவில்லை.

அவள் வருவதற்குள் என் அம்மா பேச்சைச் செங் கண்ணனைப் பற்றித் திருப்பி இருந்தார்கள். நான் பூங்கோதையின் செயல்களையே கவனித்துக் கொண்டிருந் ததால் எப்படி ஆரம்பித்தார்கள் என்று கவனிக்கத் தவறி விட்டேன்.

அவள் வந்து உட்கார்ந்தபோது "என்னபபா, வாத்தியார் செங்கண்ணனைப் பற்றிஏ தாவது தெரியுமா?" என்று அவள் அன்னை என்னைக் கேட்டார்கள்.

பூங்கோதையின் முகத்தில் திடீரென்று சோர்வு மறைந்ததைக் கண்டேன். அவள் பற்றற்ற துறவியைப் போல் இருந்த நிலை மாறி மிக ஊக்கத்தோடு கவனிப்ப தையும் பார்த்தேன்.

'ஓ! நல்லாத் தெரியுமே... ரொம்ப நல்லவனாயிற்றே. பூங்கோதைக்குப் பொருத்தமானவன் அவன் தான்... அவனைப் பற்றி நீங்க கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம்... அதற்கு நான் பொறுப்பு' என்றேன்.

பூங்கோதையின் முகம் மிகவும் பொலிந்தது. அவள் கண்கள் விடிவெள்ளி போல ஒளிர்ந்தன.

'சாதிகூட உங்க சாதிதான். அதனால் அதைப்பற்றிக் கவலையில்லை' என்று என் அம்மா தொடர்ந்தாள்.

'என்னமோ அம்மா, உங்களைத் தவிர எனக்கு நாதி இல்லை... நாம் பல வருடங்கள் அக்கா தங்கை மாதிரி பழகி விட்டோம்... நீங்க தப்பான காரியத்தில் தலையிட மாட்டிங்கன்னு தெரியும். இருந்தாலும் கண்ணன் கிட்டே பூவும் குங்குமமும் வைத்துப் பார்க்கிறேன். பூ எடுத்துக் குடுத்தா எனக்கு முழுச் சம்மதம்' என்று அந்த அம்மா சொன்னார்கள்.

எனக்குப் 'பகீர்' என்றது. இறைவன் நல்லது தீயது அறிய மக்களுக்கு அறிவைக் கொடுத்திருக்கிறான். அதனை விட்டுவிட்டுச் சூதாட்டம் மாதிரி பல ஆண்டுகள் நீடிக்கும் ஒரு நிகழ்ச்சிக்கு ஒத்தையா இரட்டையா பார்க்கும் அந்த வழக்கம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. மறுத்துச் சொல்லவும் தைரியம் வரவில்லை. தவறிக் குங்குமப் பொட்டலத்தை எடுத்து விட்டால் என்ன செய்வது என்று தெரியாது தவித்தேன்.

என் அம்மா, 'சரி, போட்டுத்தான் பார்த்திடலாமே' என்று சொன்னார்.

உடனே எல்லோரும் எழுந்து உள்ளே போனோம். சிறு வீடாக இருந்தாலும் அழகாக இருந்தது. தாழ்வாரத் தின் மத்தியில் சின்னக் கண்ணன் படமும் அதன் அருகே பூங்கோதையின் தந்தை படமும் சுவரில் சாத்தப்பட்டிருந் தன. இவை இரண்டின் மேலும் புதுப்பூக்கள் வைக்கப் பட்டிருந்தன. குத்து விளக்கொன்று எரிந்து கொண்டிருந் தது. அது நன்றாகத் துலக்கப்பட்டுத் தங்கம் போல் மின்னியது. அந்தப் படங்கள் எதிரே எல்லோரும் போய் உட்கார்ந்தோம்.

'இதோ பூ கொண்டுவருகிறேன்' என்று அந்த அம்மா கொல்லைப்புறம் போனார்கள்.

'என்னென்ன பூக்கள் அம்மா பயிரிட்டிருக்கிறீங்க' எனக் கேட்டுக் கொண்டே நானும் அவர்களைத் தொடர்ந்து போனேன்.

'நான் எங்கப்பா கவனிக்கறேன். அவதான் என்னென் னவோ போட்டு பயிராக்கினா' என்று சொல்லிக் கொண்டு ஒரு மல்லிகை மொட்டைக் கிள்ளிக் கொண்டு உள்ளே போனார்கள்.

அவர்களுக்குத் தெரியாமல் நானும் ஒன்றைக் கிள்ளி யெடுத்துக் கொண்டு அவர்களைத் தொடர்ந்தேன்...

தனித்தனியே குங்குமத்தையும் பூவையும் பொட்ட ணம் கட்டிக் கண்ணன் படத்தின்கீழ் வைத்து விட்டுப் 'பால் கொண்டு வருகிறேன்' என்று உள்ளே போனார்கள்.

நான் முன்னே திட்டமிட்டிருந்தபடி குங்குமப் பொட் டணத்தை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அதுபோலவே நான் கொண்டுவந்த மல்லிகை மொட்டை வைத்து வேறொரு பொட்டணம் கட்டி முன் போல அங்கேயே வைத்து விட்டேன். இதை என் தாய் கவனித்து விட்டார் கள். என்றாலும் அவர்களை நான் பார்த்த பார்வையில்

இதுபற்றி ஒன்றும் கூறாது பேசாமல் இருந்து விட்டார்கள்.

உள்ளே சென்ற அந்த அம்மா சிறிய வெள்ளிக் கிண்ணத்தில் பால் கொண்டு வந்து கண்ணன் படத்தில் வைத்துவிட்டுக் கற்பூரம் கொளுத்திக் காட்டினார்கள். அப்புறம் அந்த இரு பொட்டணங்களை மூன்று முறை குலுக்கிக் கீழே போட்டுக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு பொட்டணத்தை எடுத்தார்கள். நான் உடனே மற்றொரு பொட்டணத்தை எடுத்துக் கொண்டேன். அவர்கள் தாம் எடுத்த பொட்டணத்தைப் பூங்கோதையிடம் கொடுத்துப் பிரிக்கச் சொன்னார்கள்.

பூங்கோதையின் உள்ளம் ஊசல் போல் 'என்ன ஆகுமோ' என அலைந்தது. முதல் குழந்தைப் பேற்றுக்குத் தாய் வீட்டிற்கு அனுப்பிய மனைவி பற்றி வந்த தந்தியை வாங்கும் கணவனின் கைகள் போல், அவள் கைகள் நடுங்கின. அதனை வாங்கிப் பிரித்தாள். மலர் இருந்தது கண்டு அவள் முகம் மலர்ந்தது.

''பூங்கோதை, வாம்மா இங்கே'' என அவர்கள் அழைத்து அந்தப் பூவை அவள் தலையில் சூட்டினார்கள், கீழே பார்த்து விட்டு 'இன்னொரு பொட்டணம் எங்கே' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள்.

நான் 'இதோ' என்று முன்னே எடுத்து மறைத்து வைத்த குங்குமப் பொட்டணத்தைக் கொடுத்தேன்... அதனைப் பிரித்து அதிலுள்ள குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் ஒரு பொட்டிட்டார்கள்.

அப்புறம் எங்களைப் பார்த்து...'இனி கவலையில்லேம்மா! உங்கள் எண்ணம் போலச் செய்யுங்கள். என் கண்ணன் நல்ல உத்தரம் தந்துட்டான்' என அந்த அம்மா மகிழ்வோடு சொன்னார்கள்.

'நல்லது. எப்படியோ கண்ணன் உத்தரவு தந்தானே' என என்னுள் எண்ணிக் கொண்டு என் அம்மாவைப் பார்த்தேன். அவர்கள் 'அப்போ ஒரு நாள் பெண்பார்க்கச் செங்கண்ணன் அம்மாவை அழைத்துக் கொண்டு நாங்க வர்ரோம்' என்றார்கள்.

'வர்ரதுக்கு முன்னே சொல்லிட்டு வாங்க' என்று சிரித்துக் கொணடே அந்த அம்மா சொன்னார்கள்.

'ஏன், வடை பாயசம் செய்து வரவேற்கவா' என்று கேட்டு விட்டு 'மறந்திடாம எனக்குக் கொஞ்சம் கொத்து மல்லித்தொகையலும் அரைத்து வைத்திருங்க' எனச் சொல்லிச் சிரித்தேன்.

'கொத்துமல்லி என்ன! எழில் மிக்க பழச்சோறு செய் கிறேன்' என்று நகைத்துக் கொண்டே பூங்கோதை சொன்னாள்.

'ஆமா ஆமா—மறந்துடாதே, எழில் மிக்க பழமா! யாரு? செங்கண்ணன் எலுமிச்சம் பழத்தை அப்படிச் சொல்லணும்னு பள்ளிக்கூடத்திலே சொல்லிக் கொடுத் தானா? பொன்னம்மா சொன்னாளா' எனக்கேட்டு விட்டுச் சிரித்தேன். அவளும் களுக்கென்று சிரித்தாள்.

அதற்குள் அவள் தாய் 'என்ன' என்றார்கள். 'ஒன்று மில்லை—ஊறுகாய்' என்று சொல்லித் தப்பித்துக் கொண்டேன்.

மறுநாள் காலையில் எழுந்தவுடன் செங்கண்ணன் வீட்டுக்குப் போனேன்.

அவன் என்னை எதிர்பார்த்துக்கொண்டே உட்கார்ந் திருந்தான். 'என்ன ஆச்சு...?' என்று போனவுடன் ஆர்வத் தோடு கேட்டான்.

'எதுடா' என்று மறந்தவன் போல் பாசாங்கு செய் தேன்.

'என்னடா நேற்று சஞ்சீவி மலையைத் தூக்கின அனு மார்போல ஒன்றுக்கும் கவலைப்படாதே என்று அளந்தே! இன்னைக்கு எதுடான்னு என்னையே கேட்கிறே...' என்று கோபமாகக் கேட்டான்.

'பிரபோ, கோபித்துக் கொள்ளாதீர்கள். கண்டேன், அவளை—காயைக் கனியாக்கிக் கொண்டு வந்தேன் உடனே' என்று அனுமன் போல நடித்துக் கொண்டே பாடினேன்.

அப்புறம், நடந்த செய்திகள் எல்லாவற்றையும் சொன்னேன்.

'என்ன குணாளா! நீயே திருட்டு வேலை செய்ய ஆரம்பிச்சுட்டியே?' என்று பூப்பொட்டணம் மாற்றிய வேலையைக் கேட்டுச் சொன்னான்.

'பொய்மையும் வாய்மையிடத்த என்ற குறளை மறந் துட்டியா!' என்றேன்.

அதன் பிறகு செங்கண்ணன் அம்மாவுக்குச் செய்தியை எப்படித் தெரிவிப்பது என்று யோசித்துக் கொண்டே வயல் பக்கம் போனோம்...

அவன் 'தான் உடம்பு சரியில்லாதவன் போல் நடிப்ப தாகவும்...அப்போ அவன் அம்மா அவனைப் பற்றி என்னி டம் கேட்பார்கள் என்றும், அப்படிக் கேட்கும்போது சமய மறிந்து செய்தியைச் சொல்லி விடுமாறும்' கூறினான்.

நானும் 'சரி' என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்து விட்டேன்.

மாலையில் எங்கள் திட்டப்படி நான் செங்கண்ண னைப் பார்க்கப் போவது போல அவன் வீட்டுக்குப் போனேன். ஒரு மூலையில் சோர்வாகச் செங்கண்ணன் படுத்துக் கிடந்தான்.

நான் போன உடனேயே, 'என்னப்பா! செங்கண்ண னுக்குக் காலையிலிருந்தே உடம்பு சரியில்லே. ஒண்ணுமே

சாப்பிடாமே படுத்திருக்கிறான்...எதைக் கொண்டு போனாலும் 'வேண்டாம்', 'வேண்டாம்' என்கிறான்' என்றார், அவன் அம்மா.

'ஏண்டா?—செங்கண்ணா! என்னடா திடீர்னு உனக்குச் சுரம் வந்துட்டுது. காலையிலே என்னோடு வந்தியே உண்மைச் சுரமா? அல்லது ஏதாவது காதல் சுரமா?...'' என்று ஒன்றும் தெரியாதவன் போல் கேட்டேன்.

'அவன்தான் சாமியார் போல இருக்கானே!—தாடியும் காவித் துணியும்தான் இல்லே. அவன்தான் என்னமோ குறிக்கோள் கொண்டிருக்கிறானாம். அதை அடையும்வரை கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன்னு சொல்லிக் கொண்டிருக்கானே. சாகிறதுக்குள்ளே நானும் என் மருமகளைப் பார்த்துடனும்னுதான் ஆசைப்படறேன்...அப்படி ஏதாவது இருந்தா கேட்டுச் சொல்லுப்பா!' என்று அவன் தாய் ஆர்வதோடு சொன்னார்.

அப்புறம் மெதுவாகச் செய்தியை அவர்களிடம் சொன்னேன். அவர்களும் 'எனக்கென்னப்பா; நான் இன்னைக்கோ நாளைக்கோ சாகப் போகிறவ. நல்லது கெட்டது எல்லாம் அனுபவிக்கப் போறவன் அவன் தானே—அவனுக்குப் பிடித்தால் எனக்குப் பிடித்த மாதிரிதான். ஏதாவது ஒரு நாள் சொல்லு, போய்ப் பார்த்து விட்டு வந்துவிடலாம்' என்றார்கள்.

'என்றைக்கு வேண்டுமானாலும் நான் தயார்; அம்மாவையும் கூட்டிக் கொண்டு வருகிறேன்...' என்றேன்.

'நாள் செய்யறது நல்லவுங்க செய்யமாட்டாங்க. ஒரு நல்ல நாள் பார்த்துப் புறப்படுவோம்' என்றார்.

அப்போது 'நாளென் செய்யும் வினைதான் என் செய்யும்' என்ற பாடலைச் செங்கண்ணன் பாட ஆரம்பித்து விட்டான்,

முன்னதாகச் சொல்லி அனுப்பி விட்டு ஒரு நாள் எல்லோரும் சென்றோம். செல்வதற்குமுன் செங்கண்ணன் தாய் மஞ்சள், குங்குமம், பூ, பழம், தேங்காய்-இப்படிப் பல பொருள்களை வாங்கி வைத்துக் கொண்டார். முற்றத்தில் பெரியபெரிய மாக்கோலங்கள் போடப் பட்டிருந்தன. பூங்கோதையின் தாய் அன்பாக வரவேற்றுத் தயாராய் விரித்து வைத்திருந்த புதுக் கோரைப் பாயில் உட்காரும்படி வேண்டிக் கொண்டார்கள். எல்லோரும் போய் உட்கார்ந்தோம். நான் பூங்கோதையைப் பார்த்து 'பூங்கோதை! ஒரு பாட்டு பாடும்மா' என்றேன். மெதுவாக வந்து அடக்கமாக உட்கார்ந்தாள். 'இலட்சியம் மாய்ந்திடுமோ வாழ்வின் முக்கியம் அதுதானே' என்ற பாடலைத் தன்னுடைய இனிய குரலால் பாடினாள். செங்கண்ணனுடைய அன்னைக்குப் பெண் பிடித்து விட்டது என்று அவள் முகத்திலிருந்து தெரிந்து கொண்டேன்.

முதலில் பூங்கோதையின் தாய் யாகம் வளர்த்துப் பரம்பரை வழக்கப்படியே திருமணம் செய்ய வேண்டும் என்றார்கள்.

நான் 'சரிதான், அந்த அம்மா மனம் போலச் செய்வோம்' என்று செங்கண்ணனிடம் கூறினேன்.

அவன் 'கூடவே கூடாது. இறப்பு பிறப்பு வாழ்வில் ஒரு முறைதான். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திருமணமும் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் நிகழ்வது. பிறப்பும் இறப்பும் நம்முடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டுள்ளன. எனவே இந்த ஒரு நிகழ்ச்சிதான் நம் விருப்பம்போல் செய்யக் கூடியது. ஆனால் அது பற்றி மட்டும் கண்டிப்பாகச் சொல்லி அந்த அம்மா மனதை மாற்றிவிடு' என்று உறுதியாகக் கூறிவிட்டான்.

முதலில் என் அம்மா மனதை மாற்றிப் பிறகு அந்த அம்மா மனதை மாற்றிவிட்டேன். செங்கண்ணன் அம்மா

அவனை மறுத்து ஒன்றும் சொல்லும் வழக்கமில்லை. அதனால் அவர்களைப் பற்றிய கவலை எங்களுக்கு இல்லை. அதன் பிறகு திருமணம் பள்ளியிலேயே விமரிசை யாக நடந்தது.

செங்கண்ணன் திட்டப்படி திருமணம் என்றால் என்ன? பெண் யார்? ஆண் யார்? திருமணத்தின் நோக்கம் என்ன? என்ற கருத்துக்கள் அமைத்து அவனே எழுதிய ஆசிரியப்பாவை இனிய குரலுடைய குழந்தைகள் பாடினர்.

அதன்பின் திருக்குறளில் 'அறன் வலியுறுத்தல்', 'இல் வாழ்க்கை', 'வாழ்க்கைத் துணைநலம்' ஆகிய அதிகாரங் களை எட்டாம் வகுப்புக் குழந்தைகள் பிழைபடாது பாடினர், ஆசிரியர் சிலர் சொற்பொழிவாற்றினார்கள். இரவு 'அன்பா? அகந்தையா?' என்ற அசோகன் மனந் திருந்தும் கட்டம் அமைந்த ஒரு நாடகத்தைக் குழந்தை கள் நிகழ்த்தினர்கள். பொதுவாகக் குழந்தைகள் செய்து வைத்த திருமணம் போலவே அது இருந்தது.

இரண்டு மூன்று மாதம் அந்தப் பக்கங்களில் இந்தத் திருமணத்தைப்பற்றிய பேச்சையே எங்கும் பேசினார்கள். அதற்குக் கிராமமே திரண்டிருந்தது. குப்பன் சுப்பன் முனியன் எல்லோரும் வந்திருந்தனர். அவர்கள் முதலில் கொஞ்சம் யோசித்தாலும் செங்கண்ணன் அவர்களை இழுத்துக்கொண்டு வந்து முன்னே உட்கார வைத்தான். வந்திருந்த ஊர்ப் பெரியவர்கள் சிலர் தங்களுக்குள் முணு முணுத்துக் கொண்டனர். ஆனால் குழந்தைகளோ செங் கண்ணனோ அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. குறை யின்றித் திருமணம் முடிந்தது.

திருமணம் நடக்கும்போது ஏதோ ஒரு மூலையில் பனங்காட்டில் ஏற்படும் சலசலப்புபோல் எழுந்த சச்சரவுச் சத்தம் கேட்டது. அதைப்பற்றி யாரும் கவலைப்பட வில்லை. பிறகு அந்தத் தபால்காரப் பையன் 'எனக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லிய அந்த அம்மாவை

ஏமாற்றி இந்த வாத்தியார் கல்யாணம் செய்து கொள் கிறான்' என்று ஏதேதோ கூறியதாக என் காதுக்கு எட்டியது. 'கடிக்க முடியாத நாய் குரைக்கத்தானே செய்யும்' என்று என்னிடம் சொன்னவர்களிடம் கூறி விட்டுச் சும்மா இருந்துவிட்டேன்.

5

பூங்கோதை

'எண்ணியபடி எதுவும் நடக்காது' என்று எவனோ பாடினான். என் எண்ணப்படி எல்லாமே நிகழுகின்றன. என்றோ ஒருநாள் அவரைப் பற்றிப் பொன்னம்மாள் கூறியபோது ஏனோ அவர் என் கணவர் என்று என் மனம் சொன்னது. நாள்தோறும் அந்த எண்ணம் வளர்ந்து வந்தது. அன்று அவரைக் கண்டேன். கண்ணாரக் கண் டேன்; உள்ளத்தில் முகிழ்த்த எண்ணம் அன்று மலர்ந்தது. இன்று மணமாகக் கமழ்கிறது. ''வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து...'' என்று ஆண்டாள் கனவு கண்டாள். என் னளவில் அது நனவாயிற்று.

இன்று நினைத்தாலும் இன்பமாக இருக்கிறது. அன்று ஒருமுறை அவரைச் சந்தித்த பின் மறுமுறை சந்தித்துப் பேசவேண்டும் என்ற என் ஆர்வத்திற்கு வாய்ப்பே கிட்ட வில்லை. மணவறையில் மெல்லக் குனிந்தபடியே கண்களை ஓட்டிப் பார்த்தேன். அவரும் என்னை அன்போடு ஆதர வோடு பார்த்தார். 'மனைவியாக வாய்த்தவளே உன் னைத் தவிர வேறு பெண்களை எல்லாம் தாயாக, தங்கை யாக, தமக்கையாகக் கொள்வேன்' என்று எனக்கு ஒரு உறுதி தருவது போல் அந்தப் பார்வை இருந்தது. அதற்கு மேல் வாய்விட்டுப் பேச அன்று முழுவதும் வாய்க்க வில்லை. இரவில் அம்மாவும் அத்தையும் திண்ணையில் காற்றோட்டமாகப் படுத்துக் கொண்டனர். அப்போது தான் அவருக்கும் எனக்கும் தனிமை கிடைத்தது. ஒருமை

கிடைத்தது. என்னென்னவோ பேச வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த என்னால் எதுவும் பேச இயல வில்லை. சிறிது நேரம் அவரைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தேன். என்னையே பார்த்துக் கொண்டிருந்த அவர், ''பூங்கோதை அன்று இரவு நான் திரும்பும் போது 'மங்கியதோர் நிலவு' பாடினாயே! இன்று 'பொங்கிய தோர் நிலவு' என் கண்முன் இருக்கிறது பார்' என்று என் முகத்தைத் தம் தோள்களில் தாங்கியபடி என் முதுகை வருடினார்.

நான் கோபிப்பது போலச் சிணுங்கிக் கொண்டு, 'ஆமாம், நீங்கள் வருவீங்க என்றுதானே நான் காத்திருந் தேன்; உங்கள் காதில் விழும்படி பாடினேன். என் பாடல் கேட்டு நின்ற நீங்க ஏன் வராமல் போயிட்டிங்க. எவ்வளவு வாடினேன் தெரியுமா? தவியாய்த் தவித்துப் போனேன். இரவெல்லாம் தூக்கம் வரவே இல்லை...' என்று இன்பங் கலந்த துன்பத்தோடு தழுதழுத்தேன்.

'அடடே! என்மனம்கூட உன்னைக் காணத்தான் துடித்தது. அந்த மங்கிய இரவில், நிலா ஒளியில் தென்னந் தோப்புத் தேவதைபோல் விளங்கிய உன்னைக் காணத் தான் என் மனமும் துடித்தது. ஏனோ தனியே உன்னைக் காண அச்சமாக இருந்தது. என்னை நானே வென்றேன். ஆனால் உன்னைக் காணாது சென்ற பிறகுதான் நான் என்னையே கொன்று கொண்டது போல வருந்திக் கலங் கினேன்' என்று அவரும் தழுதழுக்கக் கூறி என்னை அணைத்துக்கொண்டு,

'பூங்கோதை! நான் பிரம்மச்சாரியாகவே வாழ உறுதி பூண்டிருந்தேன். என் மனத்திற்கு ஒத்த ஒரு பெண், என் குறிக்கோள் நிறைவேறத் துணை செய்யும் ஒரு பெண், எங்கே கிடைக்கப் போகிறாள்! தன் இன்பத்துக்கே, தனக் காகவே, பிறர் இருக்கிறார்கள்—இருக்க வேண்டும் என்று எண்ணுகிற உலகில், பிறர் இன்பத்துக்காக, தன்னை இழக்க எந்தப் பெண் முன் வருவாள் என்று உன்னைக் காண்பதற்கு முன் நினைத்திருந்தேன். ஏனோ உன்னைக்

கண்ட அந்த ஒரு விநாடியில் இறைவன் எனக்குத் துணை யாகத்தான் உன்னைப் படைத்திருப்பதாகத் தோன் றியது!' என்று கூறி என்னைக் கட்டித் தழுவிக் கொண் டார்—'கண்ணா! இந்த அன்பும் அரவணைப்பும் எனக்கு என்றும் அருள் புரிவாய்' என்று மனத்திற்குள் வேண்டிக் கொண்டே குழந்தைபோல் அந்த அரவணைப்பில் தூங்கிப் போனேன்.

காலையில் கண்விழித்தபோது ஏதோ எழுதிக் கொண் டிருந்த நாட்குறிப்பை என்னிடம் கொடுத்து ஒரு பகுதி யைக் காட்டிப் படிக்கச் சொல்லிவிட்டு எழுந்து வெளியே போனார்.

*　　*　　*

ஒரு பெரிய தோட்டம். சுற்றிலும் முள்வேலி. முள்ளும் பயன் உள்ளதே. அதையும் ஒதுக்க வேண்டா. ஆண்டவன் படைப்பில் எதையும் ஒதுக்க வேண்டா. என் அநாதை இல்லத்தில் எல்லோருக்கும் இடம் உண்டு. எல் லோரும் வாழ வழி உண்டு.

நடுவில் ஒரு நடைபாதை. நடைபாதையின் இருமருங் கும் பலவகை மலர்ச் செடிகள்; கொடிகள். சில மொட்டு களாக அரும்பியிருந்தன; சில மலர்ந்துகொண்டிருந்தன; சில மலர்ந்து முடிதாழ்த்தி மணம் வீசி வரவேற்றுக் கொண்டிருந்தன. அவை வண்ணம் பல; வடிவம் பல; மணம் பல. ஆனால் அவை எல்லாம் மலர்களே! அழகின் சின்னங்களே; தூய்மையின் பிறப்பிடங்களே!

அதற்கு அப்பால் வேலிக்கு அருகே உயர்ந்த மரங்கள்; படர்ந்த கொடிகள், அடர்ந்த செடிகள். பருவங்களுக்கு ஏற்பக் காய்ப்பன; கனிவன அவை. சில கிழங்காக மண்ணுக்குள் கண்ணுக்குத் தெரியாமல் பயன் தருவன; சில இலைமறைவில் தெரிந்தும் தெரியாமலும் காய்ப்பன. சில தாரிட்டு, வண்ணங்காட்டி, மணம் கமழ்ந்து பழுப்பன. என் இல்லத்தில் உள்ளவர்களும் அப்படிப் பட்டவர்களே; பல்வேறு வகையினரே.

அந்த நடைபாதை வழியே சென்றால் சிற்சில சின்னஞ் சிறு குடில்கள் அங்கே கட்டடம் இல்லை. ஆனால் வாழ்க்கை உறுதியாக நிலை பெற வாய்ப்பிருந்தது. தனித் தனி அறைகள் உள்ள மாளிகைகள் இல்லை; ஆனால் உரிமையோடு வாழ வழியிருந்தது. ஏழைகள், எளியவர் கள், கோழைகள், வீரர்கள் எல்லாருமே அங்கு வாழ்ந்து வளர்ந்து வாழ்வின் பயனை, தங்களை இறைவன் தனித் தனி இயல்போடு படைத்த வாழ்வின் நுட்பத்தை அறிந்து தெளிந்து முன்னேறும் வழியில் வாழ்ந்து கொண் டிருந்தனர்.

அருகே ஒரு கலைக் கூடம். அங்கே வீணை இருந்தது; குழல் இருந்தது; மத்தளம் இருந்தது. சிலவற்றை மீட்டி இசை எழுப்ப வேண்டும்; சிலவற்றை ஊதி ஒலி எழுப்ப வேண்டும்; சிலவற்றைத் தட்டித்தாளம் எழுப்ப வேண்டும். அப்படித்தான் மக்களுள் பலர். யார் யாரை எப்படி எப்படி இசைக்க வேண்டும் என அறிபவன்னே, அறிவிக்க வல்லவனே குரு, ஆசிரியன். அப்படிப்பட்ட ஆசிரியரே என் இல்லத்தின் வழிகாட்டிகள்.

அந்தக் குடிசைகளுக்கு நடுவில் கண்ணாடிக் கூட்டுக் குள் பட்டப்பகலிலும் ஒரு அகல் விளக்கு எரிந்து கொண் டிருக்கிறது. அது பகலில் பயன் அற்றது போலத் தோன்ற லாம். ஆனால் இரவில் அதன் பயன் விளங்கும். குருடர் களுக்குத்தானே வழிகாட்டி வேண்டும். என் அனாதை இல்லத்து ஆசிரியர்களும் அப்படிப்பட்டவர்களே. அவர்கள் துன்பத்தில் வருந்துபவர்களுக்குத் தொண்டாற் றும் தொண்டர்கள். தேடிச் சோறு நிதந்தின்னும் இனத் தவர் அல்லர்.

அப்பால் ஒரு அகண்ட வெளி. ஓடி ஆட, பாடி ஆட, கூடி ஆட பெரிய வெட்ட வெளி. ஆட்டத்தில் தோல்வியும் உண்டு; வெற்றியும் உண்டு. தோல்வியில் துவண்டு விடா மல், வெற்றியில் வீறார்க்காமல் வாழ, அவர்கள் அங்குக்

கற்றுக் கொள்வர், துன்பத்தைச் சிரித்துப் போக்க, இன்பத்தைப் பகிர்ந்து வழங்க அங்கு அவர்கள் கற்றுக் கொள்வர்.

ஆங்கே கேணி உண்டு; ஏற்றம் உண்டு. ஆறு உண்டு; பாய வயல்கள் உண்டு. உழைப்பவர்களும் அவர்களே. உண்பவர்களும் அவர்களே. அழகான சின்னஞ்சிறு விரல்கள் வீணையை மீட்டுவது மட்டுமன்றி விதை விதைத்தும் இங்குப் பழகும். அழகான சிறு கைகள் மத்தளம் தட்டுவது மட்டுமன்றி மண்ணை வெட்டியும் அங்குப் பழகும்.

என் அனாதை இல்லம் அறிவை வளர்க்கும்; அன்பை வளர்க்கும்; ஆற்றலை வளர்க்கும். உடல், உள்ளம், ஆன்மா... மூன்றையும் வளர்க்கும். மனிதனை முழுமையாக்கும். தலைகொழுத்த கூட்டம் ஒரு புறம், வெறி மனம் கொண்ட கூட்டம் ஒரு புறம், உடல் பருத்த கூட்டம் ஒரு புறமாகக் குறையோடு மனிதக் கூட்டத்தைப் பெருக்குவிக்கும் இந்தச் சமுதாயத்திற்கு, ஒரு சவாலாய் ஒரு வழி காட்டியாய்த் தொடங்கி மெல்ல மெல்லப் பரவி ஊரையும் உலகையும் தன்வயமாய் ஆக்கவல்லது என் இல்லம். இப்படி ஒரு கனவு கண்டேன். அது நினைவாகுமா? கனவாகவே போகுமோ என் பூங்கோதைதான் சொல்ல வேண்டும்!

* * *

படித்தேன். 'என்னிடம் என்ன எதிர்பார்க்கிறார். என்னை என்ன கேட்கிறார். நானே அவருடைமையாக ஆகிவிட்டேன். அவர் உடைமை என்பதைவிட அவராகவே அவருள் ஒன்றி நானற்றுப் போக ஆசைப்படுகிறேன். காலம் வரும். கண்டு கொள்வார்' என்று எண்ணியவாறு இருந்த என் நெஞ்சை 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம், மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா...' என்ற என் அம்மாவின் குரல் கவர்ந்தது. 'ஓ, பொழுது புலர்ந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டதோ! அம்மா குளித்துவிட்டுக் கண்ணனைக் கும்பிடுகிறார்களே!' என்று அவசர அவசரமாக வெளியே வந்தேன்.

6

தாயாரம்மாள்

மாலையில் தெருக்கோடியில் குதிரை வண்டியின் சத்தம் கேட்டாலே ஓடி வந்து வாசற்படியில் நிற்பேன். கை நிறைய மல்லிகைப்பூவும் பைநிறைய இனிப்புகளும் வாங்கி வருவார். கோட்டு, பூட்டு எல்லாவற்றையும் சுழற்றி வைத்துவிட்டு, கைகால் கழுவிக் கொள்வதற்குள் என்னிடம் ஓடி வந்து பூவைத் தாமே என் தலையில் சூட்டி இனிப்பை என் வாயில் போடுவார். புதிய சினிமா எது வந்தாலும் முதலில் நாங்கள்தான் போய்ப் பார்ப்போம். அவர் நாகூர் சுங்கச் சாவடியில் வேலை பார்த்து வந்ததால் ஊரெல்லாம் செல்வாக்கு எங்களுக்குண்டு. எந்தக் கடையில் எது வாங்கினாலும் எடுத்துக் கொண்டு போங்கம்மா! அய்யா காசு கொடுத்துடுவாங்க' என்று சொல்லிக் காகித உறையில் கட்டி மரியாதையோடு கொடுப்பார்கள்.

பிறகு நாகப்பட்டினத்துக்கு வேலை மாற்றம் வந்தது. வண்டிக்காரத் தெருவில் பெரிய வீடு பார்த்துக் கொண்டோம். அந்த வீட்டுக்கார அம்மா மட்டும்தான் அதில் இருந்தார்கள். அவள் ஒரு விதவை. கணவனை இளமையிலேயே இழந்து விட்டாளாம். அந்த வீட்டு வாடகையிலேயே ஒருவாறு வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தாள்— என்னிடம் மிகவும் அன்பாகப் பழகியனாள். 'அக்கா அக்கா' என்று தன் உயிரை என்னிடம் வைத்திருப்பதாகத் தோன்றுமாறு பழகினாள். அவள் ஊரிலிருந்து யாராவது ஏதாவது கொண்டு வந்தால் எனக்குத் தராமல் தன் அறைக்கு எடுத்துக் செல்ல மாட்டாள். பூங்கோதையைத் தன்னிடமே வைத்துக் கொண்டு கொஞ்சுவாள். அவளும் சின்னம்மா சின்னம்மா என்று அந்த அம்மாளைப் பற்றிக் கொண்டாள். 'பாவம்' என்று நானும் அவளுக்குப் பரிவு காட்டினேன். அவர் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் என்னோடு கொஞ்ச நேரம் கொஞ்சினால்தான் அவரால்

வேலைகள் செய்ய முடியும். அதனால் பூங்கோதையை அந்த நேரத்தில் அவளிடம் விட்டுவைம்பேன்.

ஒரு நாள் எங்கள் தெருவுக்குப் பக்கத்திலிருந்த பேபி டாக்கீசில் 'பாக்தாத் திருடன்' என்று சினிமா வந்திருந்தது. அன்று 'துரை வருகிறார், வர நேரமாகும்' என்று அவர் சொல்லியிருந்ததால் அவரிடம் முன் கூட்டியே சொல்லிவிட்டு நானும் அந்த அம்மாவும், பூங்கோதையும் சினிமாவுக்குப் போனோம். சிறிது நேரத்தில் 'துரை வர வில்லை, எனவே வந்து விட்டேன்' என்று அவரும் என் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டார். அன்று சினிமா பார்த்துவிட்டு வந்த உடனேயே மாத விலக்கு ஆகி விட்டேன். அவரிடம் சிரித்துக் கொண்டே போட்டுச் சாப்பிடச் சொல்லிவிட்டு நானும் பூங்கோதையும் தனியே படுத்துக் கொண்டோம்.

அன்று அவளுக்கும் என்னவருக்கும் ஏற்பட்ட தொடர்பு அவர் தலையோடுதான் போயிற்று. எவ்வளவோ எப்படி எப்படியோ நானும் முயன்று பார்த்தேன். ஒன்றும் பலிக்க வில்லை. 'அக்கா அக்கா' என்று என்னோடு பழகி என்னை ம்யக்கியது அவரைத் தன் கையில் போட்டுக் கொள்ளத் தான் என்று பிறகு தெரிந்தது.

இப்போது பூவும் பையும் நேரே அவள் அறைக்குப் போய்க் கொண்டிருந்தன. என் கும்பி கொதித்தது. அவர் நங்கூரம் இல்லாத கப்பலாய் அலைந்து ஆடிக்கொண்டிருந்தார். கலங்கரை விளக்கம் தெரியாது புயலில் தவிக்கும் படகுபோல என் மனம் தவித்துக் கலங்கியது. எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்த செல்லம்மா இவற்றையெல்லாம் பார்த்து அடிக்கடி என்னோடு கலங்குவார்கள். அவர் கணவனிடம் சொல்லி வெளிப்பாளையத்துக்கு எங்கள் வீட்டை மாற்றிக் கொண்டோம். அவர் முதலில் மறுத்தாலும் வற்புறுத்தி அழைத்து வந்து விட்டேன்.

ஆனால் அதுதான் மிகத் தவறாகப் போய் விட்டது. அந்த அம்மா வேறு குடித்தனம் வைக்காமல் என்னவ ரோடுதானே அந்த வீட்டில் தைரியமாக வாழத் தொடங்கிவிட்டாள். என்ன சொல்லியும் திருத்த முடிய வில்லை. 'அவள்தான் உண்மையான அன்பு காட்டுவ தாகவும், அவளோடு கூடிய பிறகு தான் சுகப்படுவதாக வும், அவள் எண்ணெய் தேய்த்து வாராவாரம் வெந்நீர் வைத்துக் குளிப்பாட்டுவதாகவும், இரவில் தவறாமல் பால் காய்ச்சி பாதம் பருப்பு இட்டுத் தமக்குத் தருவதாக வும் கூறிக்கூறி, என்னை ஒரு சுமையாகக் கருத ஆரம் பித்து விட்டார், ஒரு நாள், அவள் கால் தூசிக்குக்கூட என் அழகு ஈடாகாது என்று என்னைக் கேவலமாகவும் பேசினார். எல்லாவற்றையும் பூங்கோதையை நினைத்துப் பொறுத்துக் கொண்டேன்.

ஆனால் அன்றொரு நாள் அவர் சொன்ன அந்தச் சொல்லை என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. இந்தத் தமிழ்மண்ணில் பிறந்த எந்தப் பெண் தான் பொறுத்துக் கொள்வாள்! அவளும் அவரும் ஆடுகின்ற கூத்துக்களைப் பார்க்கச் சகிக்காது, நான் தனிமையே வாடும் வாட்டத்தைக்கண்டு ஏங்கியவளாய் அவ்வப்போது செல்லம்மாள் தன் மகன் குணாளனோடு வந்து ஆறுதல் கூறிச்செல்லுவாள். என் ஆகாத காலமோ என்னவோ, அந்த அம்மா குளிகுளித்திருந்தார்கள். நாகை மருத்துவ மனையில் சேர்த்துவிட்டு, குணாளனை ஊருக்கு அனுப்பி உதவிக்கு ஆள் அழைத்து வரச் சொல்லியிருந்தார், இரவு ஒன்பது பத்து மணிக்குச் செல்லம்மாள் கணவர் எங்கள் வீட்டுக்கு வந்தார். எங்களை வீடு பார்த்து வைத்தபின் 'அவர்' வருகின்றது இதுவே முதல் தடவை. அதுவும் அவள் என்னிடம் சொல்லித் துணைக்கு வரும்படி கேட்டுக் கொண்டதால்தான் வந்தாராம். மிகவும் சோர்ந்திருந் தார். நண்பகலிலிருந்து ஒன்றும் உண்ணவில்லை என்று தெரிந்து கொண்டு காபி போட்டுக் கொடுத்துவிட்டு அந்த அம்மாவைப் பார்த்து உதவி செய்ய ஆயத்த

மானேன். முகங்கழுவி பொட்டு வைத்துக் கொண்டு, புடைவை மாற்றிக்கொண்டு புறப்படும் நேரத்தில் என்று மில்லாமல் அன்று அவர், என்னவர் வந்தார். 'காபி குடித்துக் கொண்டிருக்கும் அவரையும், புடைவை மாற்றிக் கொண்டிருக்கும் என்னையும் பார்த்து என்ன நினைத்தாரோ என்னவோ! 'அடி விபசாரி! இப்படி நீ இங்குக் கும்மாளம் போட்டுக் கொண்டு இருக்கிறாயா? நாயே வீட்டை விட்டுப் போ' என்று என்னை வாய்க்கு வந்தபடி திட்டிக் கையாலும் அடித்துக் கால் சோர மட்டும் உதைத்தார். இந்த அசிங்கமான காட்சியைக் காணச் சகிக்காமல் எழுந்துகொண்ட அவர், உண்மை யைக் கூறுவதற்காக மெல்ல 'கோபால்சார்! கோபால் சார்' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்து... ''மருத்துவ மனையில்...'' என்று சொல்ல வாயெடுத்தார்.

'ஓய்! பெரிய ஒழுக்கசீலரே; நான் வைப்பாட்டி வைத் திருப்பது பற்றி எனக்குப் புத்தி சொல்லியவரே! உன் மனைவிக்கும் எனக்கும் தெரியாமல் என் மனைவியோடு இப்படி விளையாடத்தான் வீட்டை மாற்றிக் கொண் டீரோ! போய்யா!' என்று அவரிடமும் கையை ஓங்கிக் கொண்டு போனார். என்னை அடித்ததையும் உதைத்த தையும் பொறுத்துக் கொண்டிருந்த நான், அவரை அடிக்கக் கையை ஓங்கியதும் தடுத்தேன். அவர் மனைவி மருத்துவமனையில்...' என்று சொல்லி முடிப்பதற்குக்கூட எனக்கு நேரம் தராமல், 'அம்மா மருத்துவ மனையில்; அய்யா வெளிப்பாளையத்தில்' என்று சொல்லி அசிங்க மாகப் பல்லை இளித்துக் கொண்டு என்னைப் பார்த்த படியே, 'அடி! திருட்டுக் கழுதை! என்னையே தெய்வம்னு கும்பிடறதா சொல்லிக்கிட்டு என்னடான்னா நான் இருக்கும்போதே கள்ளபுருஷனோடு கூடிக் கும்மாளம் போடுறே' என்று கத்தினார்.

எனக்கு ஆவேசம் வந்துவிட்டது. அப்படிச் சொன்ன வாயில் பளார் பளார் என்று அறைந்தேன். அவர் வீட்டி

லிருந்து என்னை இழுத்து வெளியே தள்ளி விட்டுக் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு போய் விட்டார். பூங்கோதை என் காலைக் கட்டிக் கொண்டு அழுதாள். இந்த அசிங்கமான காட்சியைக் காணப் பிடிக்காதவர் போலச் செல்லம்மாள் கணவரும் போய் விட்டிருந்தார். மணியோ பத்துக்கு மேல் ஆகியிருக்கும் போல் தெரிந்தது. இந்த இருட்டில் எங்கே போவது? எப்படித் தனியாக ஒரு பெண் இன்னொரு பெண் குழந்தையோடு போவது? மருத்துவமனைக்குப் போயிருந்திருக்கலாம். அப்படிப் போயிருந்தால் செல்லம்மாள் எனக்கு ஒருகால் நல்ல வழி காட்டியிருக்க முடியும். ஆனால் அவர் கணவரையும் என்னையும் இப்படி அவர் பேசியபின் அங்குப் போக எனக்குத் தோன்றவில்லை. பேருந்து நிலையத்திற்குப் போய் வெட்டு வெட்டு என்று தனியே உட்கார்ந்து இரவைக் கழித்தேன். நல்ல காலமாக வேளாங்கண் ணிக்குப் போகும் கூட்டம் நிறைந்திருந்ததால் வேறு பயம் எதுவும் இல்லாமல் இருந்தது. காலையில் சோழன்பட் டிக்குப் புறப்படும் முதல் பேருந்தில் ஏறி வீட்டை அடைந் தேன்.

இப்படி என்னவர் என்னை ஒழுக்கங் கெட்டவள் என்று பழியைச் சுமத்தி வீட்டை விட்டு விரட்டியதை நினைத்துப் புலம்பிக்கொண்டே காலை நேரத்தில் அப்பா வின்முன் போய் நின்று 'ஓ' வென்று வாய்விட்டுக் கதறி னேன். என்னைப் பார்த்துப் பூங்கோதையும் விம்மி விம்மி வாய்விட்டு அழுதாள். அவளை அப்பா தூக்கிக்கொண்டு விவரத்தை எல்லாம் கேட்டு அறிந்து கொண்டு, 'அழா தேம்மா; அழாதே! ஏதோ கெட்ட காலம். என்னவானா லும் நீ அங்கேயே இருந்து போராடியிருக்க வேண்டும். இனி இங்கேயே இரு. கடவுள் கண்காட்டுவார்!' என்று ஆறுதலாகக் கூறி அழுதுகொண்டே என் கண்ணீரை துடைத்தார்.

'என்னப்பா! நான் என்ன பாவம் செய்தேன். என் மேல் இப்படி ஒரு பழியைச் சுமத்திட்டாங்க அப்பா!

அந்தக் கடவுளுக்குக் கண் இல்லையே!' என்று மீண்டும் மீண்டும் அந்த நிகழ்ச்சியை நினைத்து அழுதேன்.

'அழாதேம்மா! கடவுளை நொந்து கொள்ளாதே. நீ சின்னப் பெண்ணா இருக்கிறப்போ இரண்டு தென்னை மரத்திலும் கயிறு கட்டி ஊஞ்சல் ஆடுவியே...அப்போ தெற்கே போன தூரம் வடக்கேயும் ஊஞ்சல் போவதைப் பார்த்ததில்லையா? அப்படித்தான் வாழ்க்கை. எவ்வளவு இன்பம் கிடைக்குமோ அவ்வளவு துன்பமும் நமக்கு இருக் கிறது. எங்களுக்கு நீ ஒரே குழந்தை. உன்னை உன் அம்மாவும் நானும் எவ்வளவோ செல்லமாக வளர்த் தோம். அதுக்கு இந்தத் துன்பம் ஈடுன்னு நினைச்சுக்கோ. தலைக்கு மேலே துன்பம் வந்துட்டா, 'சிற்றஞ் சிறு காலேங்றே' ஆண்டாள் பாசுரத்தை உன் அம்மா பாடிக் கொண்டு கண்ணனைக் கும்பிடுவா. நீயும் செய். கண்ணன் கண்ணிரங்குவான்...' என்று கூறினார்.

அப்பாவுக்குப் பச்சை வாதமும் இரத்தக் கொதிப்பும் வந்தபோது கண்ணன் முன் நின்று கண்ணீர் விட்டபடியே அம்மா,

''சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருளகேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றவேல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைறப பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைகுகும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கேநாம ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றலோர் எம்பாவாய்''

பாடியதைப் பலமுறை கேட்டு நானும் பாடிய நினைவு வந்தது. அதனுடன்,

'குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்வீசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்றதாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.''

என்ற திருமங்கை ஆழ்வார் பாசுரத்தையும் பாடுவார்கள். அதுவும் எனக்கு மனப்பாடம் ஆகியிருந்தது.

கடவுள் வழிகள் முதலில் நமக்குத் தெரியவில்லை காலம் போகப்போகக் கொஞ்சம் கொஞ்சமாக விளங்குகிறது. இப்படி ஒரு நெருக்கடி நேர்ந்து நான் சோழன் பட்டிக்கு வாராது போயிருந்தால் தானே பொங்கி உண்டு கொண்டு தனிக்கட்டையாக யாருடைய துணையும் இல்லாமல் அப்பா விரைவில் இறந்து போயிருப்பார். நான் இங்கு வந்த பிறகு அப்பாவை என் குழந்தை போலக் கவனித்துக் கொண்டது எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. தொண்டை அடைத்துக் கொண்டு மூச்சுத் திணற அம்மா சாகும் போது என்னையும் அப்பாவையும் மாறி மாறிப் பார்த்தது இப்போது ஏன் என்று எனக்கு விளங்கியது என் குடும்பம், நானும் அவருமே உலகம் என்று நினைத்து அப்பாவை மறந்துவிட்டிருந்த தன்னலக் காரியான எனக்கு இந்தப் பிரிவு ஆண்டவன் அருளிய வரம் என்று எண்ணினேன்

இன்னொரு வகையிலும் இங்கு வந்தது நல்லதாகப் போய்விட்டது. வளர்ந்து கொண்டிருந்த பூங்கோதையின் பிஞ்சு நெஞ்சத்தில் அங்கு நான் இருந்த போதெல்லாம் தீய காட்சிகளும் சொற்களுமே பதிந்திருந்தன. அவருக்கு உடல்வெறி வரும்போது என்னிடம் வருவார். பூங்கோதை அருகில் இருப்பதையும் பொருட்படுத்தாமல் தன் காமத்

தீய்க்கு என்னை விறகாக்கிக் கொள்வார். இல்லா விட்டால் கண்டபடி வம்பு வளர்ப்பார். ஆனால் இங்கு வந்த பிறகு தனக்குத் தெரிந்த திவ்வியப் பிரபந்த, தேவாரப் பாடல்களை நாள்தோறும் அப்பா பூங்கோதைக் குச் சொல்லித் தருகிறார். இருவரும் காலையில் குளித்து விட்டுக் கண்ணனுக்குப் பூசை செய்கின்றனர். அப்பா.

'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண்தோள் மணிவண்ணா...
நின்சேவடி செவ்வித் திருக்காப்பு..."

பாடும்போது பக்கத்தில் பூங்கோதை அமர்ந்து கொண்டு உடன்தானும் சொல்லிக்கொண்டே துளசியையும் மலர் களையும் கண்ணன் திருவடியில் இட்டுத் தொழுது கொண் டிருப்பாள் இருவரையும் கண்ணன் படத்துக்கு முன்பு ஒரு சேரக் கண்டால் பெரியாழ்வாரும் ஆண்டாளும் அமர்ந்து அந்த வடபத்ராசாயிக்கு வழிபாடு செய்வதுபோல் இருக்கும்.

'ஆ' இந்த அற்புதமான வாழ்வை என் மகளுக்கு அளிக்கத்தான் கண்ணன் என்னைப் இப்படிப் பிரித் தானோ? என்று வியந்தவாறே அழுவேன். அப்போது இன்பக் கண்ணீரும் கலந்து ஒருசேரப் பெருக்கெடுத்து வரும்

அன்று தன் தாத்தாவுடன் பூங்கோதை கண்ணனுக்கு செய்த சேவைதான் இன்று 'செங்கண்ணன்' மணாள னாகக் கிடைத்திருக்கிறான். இருவரையும் ஒருசேரக் காணும்போது கண்ணனும் நப்பின்னையும் போல் எவ்வளவு அழகாகப், பொருத்தமாக இருக்கிறார்கள். அந்தக் கண்ணன் இவளுக்கு என்று அந்தப் பையனையும் அவனுக்கு என்று இவளையும் படைத்தானோ என்னவோ செல்லம்மாள் அப்படித்தான் சொல்லித் திருமணத்தின் போது பூரித்துப் போனாள். மகிழ்ச்சியாக இருவரும்

வாழ்வதாகக் கேட்கும்போது எவ்வளவு நெஞ்சம் மகிழ் கிறது.

சென்றவாரம் ஞாயிற்றுக் கிழமை. இங்கு என்னைப் பார்க்க வந்த பூங்கோதையின் தோழி பொன்னம்மாள் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டே சொன்னாள். போன வெள்ளிக் கிழமை பூங்கோதையைப் பார்க்கப் போயிருந் தாளாம். அப்போ அந்தப் பெரியம்மா கோயிலுக்குப் போயிருந்தாங்களாம். அவள் மட்டும் இருப்பாள் என்று நினைத்துக் கொண்டுவீட்டில் தேடிப்பார்த்துக்கொண்டே தோட்டத்துக்குப் போனாளாம். அங்கே செங்கண்ணன் முல்லைப்பூ ஒன்றைத் தலையில் சூட்டினானாம்! அவள் உடனே அவன் கால்களில் விழுந்து வணங்கினாளாம். பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்று வாழ்த்திய படியே அந்தப் பிள்ளையாண்டான் இரண்டு கைகளாலும் அவளை எடுத்துத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு தலையைத் தன்விரல்களால் கோதிக்கோதி விட்டானாம். தான் கண்டுங்காணாததுபோல் டக்கெனத் திரும்பிய போது எப்படியோ பார்த்து விட்ட பூங்கோதை ஏ! பொன்னம்மா! இங்கே வா! எங்கே வந்தே! சொல்லிக் காமே கொள்ளாமே எங்கே போறே! என்று அன்பாக அதட்டியபடியே செங்கண்ணன் பிடியிலிருந்து நழுவித்தன் கைகளைப் பற்றிக்கொண்டு வீட்டிற்குள் அழைத்துப் புதிதாக அன்று கட்டிக் கொண்ட தன் நீல நிறப் புதுப் புடவையைக் காட்டிக் காட்டி மகிழ்ந்தாளாம். அந்தப் பிள்ளையாண்டான் தலையைக் குனிந்து கொண்டே தொடர்ந்து வந்து அமர்ந்தானாம்.

அவளுக்கும் அவனுக்கும் கொடுத்த தேங்குழலைச் சுவைத்து 'பூங்கோதை செய்தது' இது என்று புகழ்ந் தானாம். என் மகள் நாணிக் கோணிக் கொண்டு பால் கொண்டுவரப் போவதுபோல அடுப்பாங்கரைக்குப் போனாளாம். பின் தொடர்ந்து போன பொன்னம்மா அவளைத் தழுவிக் கொண்டு மகிழ்ந்த படியே விடை பெற்று வந்தாளாம்.

'இப்படி என் மகளும் மருமகனும் வாழும் வாழ்வைக் கண்டு மகிழ அவர் கொடுத்து வைக்கவில்லையே' என்று என் கண் கலங்குகிறது. அவர்க்கு ஐயோ! இப்படி ஒரு சாவா வரவேண்டும்.

மூன்று ஆண்டுகள் இப்படி என் தந்தைக்கு நான் சேவை செய்யும் பாக்கியம் எனக்கும் கண்ணனுக்குச் சேவை செய்யும் பாக்கியம் என் மகளுக்கும் கிடைத்தது. அப்புறம் என்ன நடந்ததோ, அவர், என்னவர் வந்து எங்களை அழைத்துக் கொண்டுபோய் விட்டார். உண்மை புலப்பட்டிருக்க வேண்டும். தன் மானத்தையும் பொருட் படுத்தாமல் என்னவர் உண்மையை உணருமாறு செல்லம் மாள் கணவர் மெல்ல மெல்ல எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். அவர் உண்மையை உணர்ந்ததாலோ, பூங் கோதையை விட்டுப் பிரிய முடியாததாலோ, நிலையாக அந்த அம்மா வீட்டிலேயே தங்கியதால் ஏற்பட்ட வெறுப்பினாலோ அல்லது என் உடம்பில் இன்னும் அவர் வைத்திருந்த ஆசையாலோ என்னவோ மீண்டும் அவர் ஒருநாள் அப்பா இல்லாத நேரம் பார்த்து, சோழன் பட்டிக்கு வந்து என்னை அழைத்தார். பள்ளியிலிருந்து வந்த பூங்கோதை, 'அப்பா!, என்று அழுதுகொண்டே அவர் மடியில் போய் அமர்ந்துகொண்டு அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதாள். அவரும் அழுதார். நானும் தேம்பித் தேம்பி அழுதேன். தான் அப்பாவைக் காண விரும்பவில்லை என்றும், உடனே தன்னோடு புறப்படும் படியும் இன்றேல் வாழ்நாளில் அவரை நான் காண முடியாது என்றும் வற்புறுத்தினார்.

'ஆம் அம்மா' அவர் சொல்வது போல நீங்கள் இப் போதே கூடப்போங்க. நான் இங்குத் தங்கியிருந்து அப்பா விடம் விவரமாகச் சொல்லிவிட்டு வருகிறேன்' என்று ஒருவாறு என்னையும் அவரையும் கிளப்பி விட்டுவிட்டார்.

'சொல்லாமல் வந்தாள். கேட்காமல் போனாள்' என்று அப்பா கலங்கியதாக அவர் வந்து சொன்னதாகச் செல்லம்மாள் பின்னொரு நாள் சொன்ன போது மிகவும் வருந்தினேன்.

இப்படி அன்பான தந்தையை, தாயை, உறவை நாட்டை எல்லாம் ஒருவனுக்காகத் தனக்குத்தாலி கட்டிய ஒருவனுக்காக ஒரு பெண் இழக்கிறாள். ஆனால் அவனோ அதற்காகத் தன் தன்னலங்களைச் சிறிதும் விட்டுக் கொடுப்பதில்லை. இது இந்த நாட்டுப் பெண்களின் தலைவிதி. என் கணவரும் இந்தப் பொது விதிப்படித் தான் நடந்து கொண்டார். பழைய வீட்டில் எங்களை வைத்து விட்டுத் தான் இங்கும் அங்குமாக இருந்து வர லானார். எந்தக் கசப்பு மருந்தும், துன்ப வாழ்வும் பழக்கத்தில் சரியாகி விடுவது போல இந்த அவருடைய வைப்பாட்டி வாழ்வும் என்னைப் பொறுத்தவரை இயல் பாகப் போய்விட்டது. ஏதோ மாதமெல்லாம் என்னைப் பொறுத்த வரையில் அமாவாசையாகப் போனாலும் ஓரிரு நாள் பௌர்ணமியாக இருந்தது. அதுவே போதும் என்று அவரோடு முன்போல் மகிழ்வாகவே வாழ்ந்து வர லானேன். பூங்கோதை முன் அவரோடு வம்பு வழக்குச் செய்யத் தயங்கியதும் எங்கள் அமைதியான வாழ்வுக்கு ஒரு காரணமாயிருக்கலாம்.

இறைவன் இந்த இரண்டுங் கெட்டான் வாழ்வையும் எனக்கு விட்டு வைக்கவில்லை. அதையும் பறித்துக் கொண்டான். பொட்டையும் பூவையும் இழந்து நான் நின்ற காட்சியைப் பார்த்ததும் 'நாராயணா' என்று அன்று விழுந்ததுதான் அப்பா. அப்புறம் எழுந்திருக்கவே இல்லை. கண்ணன் திருவடிகளில் கலந்து விட்டார்.

7

செங்கண்ணன்

'மனம் ஒன்றிய ஒருத்தி கிடைத்தால் அவளோடு கூடிச் சாய்க்கடையில் வாழ்ந்தாலும் அதுவே பேரின்பம்' என்று எங்கோ இங்கர்சால் எழுதியதாக எனக்கு ஞாபகம். என் மனதுக்கு ஒத்த ஒருத்தியும் கிடைத்தாள். எங்க ளுக்குச் சண்பகத் தோட்டம் போல நல்ல வாழ்க்கைச் சூழலும் வாய்த்தது.

மணம் செய்து கொண்டு ஏதேனும் குடும்பத் தகராறால் மனம் நொந்து யாரேனும் வந்தால் 'எப்படி யாவது கட்டியவளோடு வாழ வேண்டும். அதுதான் வாழ்க்கையில் நீ பெரும் வெற்றி' என்று முருகேசனார் கூறுவது நினைவுக்கு வந்தது. அவர் அடிக்கடி தன் உடன் ஆசிரியர்களைப் பார்த்து, வள்ளுவர்க்கும் வாசுகிக்கும் இருந்த ஒத்த மனநிலை கோடியில் ஒரு குடும்பத்தில்தான் காண இயலும். அது தேர்வில் நூற்றுக்கு நூறு விழுக் காடு பெறுவது போன்றது. ஆனால் முப்பதைந்து விழுக் காடு பெற்றால்கூட வெற்றிதானே. எனவே ஒருவனுக் கும் அவன் மனைவிக்கும் இடையே முப்பத்தைந்து விழுக் காடு ஒற்றுமை இருந்தால் கூடப் போதும், வாழ்க்கை வெற்றியே' என்பார். ஆனால் பூங்கோதையும் நானும் வாழும் வாழ்வு நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கும் அவ்வளவு ஒத்த வாழ்வு ஆகும்.

'இன்று வயிறு வலிக்கிறது ஏதேனும் சவ்வரிசி கஞ்சி இருந்தால் கூடப் போதும்' என்று பள்ளியில் ஒரு நாள் நினைத்துக் கொண்டு நண்பகல் உணவுக்காக வந்திருந்த டிபன் கேரியரைத் திறந்தேன். அன்று சவ்வரிசி பாயசம் இருந்தது. எப்படித் தெரிந்து கொண்டு அனுப்பினாள்! என்று வியப்பாக இருந்தது. அந்த அன்பு வியப்பில் பாதி வலி குறைந்து போய்விட்டது. மீதிவலி சவ்வரிசி பாயசத் தால் போய்விட்டது. மாலையில் வந்து எனக்கு வயிற்று வலி வந்தால்தானே சவ்வரிசி கஞ்சி குடிப்பேன் இன்று எப்படித் தெரிந்து கொண்டு எனக்கு அனுப்பினாய்?''

என்று அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளிப் பாராட்டினேன்.

'நேற்று நீண்ட நேரம் இரவெல்லாம் கண்விழித்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தீர்கள். காலையிலும் விரைவில் எழுந்து விட்டீர்கள்; நீங்கள் கண் விழித்தபோது இரண்டு மூன்று முறை வயிற்று வலியால் வருந்தியதைப் பார்த்திருக்கிறேனே. எனக்குத் தெரியாதா என்ன? ஒருக்கால் நல்ல காலமாக வலி இல்லாவிட்டால் சுவையாக இருக்கட்டுமே என்று தான் சவ்வரிசி கஞ்சிக்குப் பதில் பாயசமாக அனுப்பினேன்' என்று என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

மற்றொரு நாள் என் நண்பன் குணாளன் அம்மா ஏதோ வெளியூர் சென்றிருந்தனர். அன்று அவனுக்கு சாப்பாடு வரவில்லை. அவன் சிற்றுண்டிச் சாலைக்குப் போகப் புறப்பட்டான். 'டேய் குணாளா'! எங்கே போகிறாய்! என்னோடு சாப்பிடலாம் வா. உன் தங்கை சமையல் ரொம்பப் பிரமாதமா இருக்கும் என்றுதான் உனக்குத் தெரியுமே!' என்று கூப்பிட்டேன். அவள் உனக்கு மட்டும் கொஞ்சம் வைத்து அனுப்பியிருப்பாள். நீயே வயிறாரச் சாப்பிடு, பிறகு உனக்கும் பற்றாமல் எனக்கும் பற்றாமல் இரண்டு பேரும் சிற்றுண்டி சாலைக்குப் போக வேண்டியிருக்கும்' என்றான். அப்போதுதான், 'அடடா காலையிலே சொல்லியிருந்தால் பூங்கோதை இருவருக்கும் அனுப்பியிருப்பாளே' என்று எண்ணினேன். கொஞ்ச நேரம் என்னோடு இரு. விரைவில் சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறேன் சேர்ந்தே போவோம்! என்று அவனை அருகில் வைத்துக் கொண்டே கேரியரைத் திறந்தேன். மேலேயிருந்த கிண்ணத்தில் அப்பளமும் சிறு துண்டுக் கடிதமும் இருந்தது. ஏதேனும் அவசரச் செய்தி இருந்தால் அதை அப்படி அவள் தெரிவிப்பது வழக்கம். கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். உணவு இரண்டு பேருக்கு வைத்திருக்கிறேன். உங்களுக்கும் அண்ணன் குணாளருக்கும். சேர்ந்து சாப்பிடுங்கள்

என்று அதில் இருந்தது. ஏதோ கணவன் மனைவி இரகசியம் என்று அதை படிக்கும்போது எங்கோ பார்த்துக் கொண்டிருந்த குணாளனிடம் அதைக் காட்டினேன். அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது. நா தழுதழுக்க, நீ கொடுத்து வைத்தவன், நம் முருகேசனார் கருத்துப்படி கோடியில் ஒரு குடும்பமடா உன் குடும்பம், என்று கூறி என்னோடு உண்டான். அன்று மாலை வந்ததும் வராததுமாக 'கண்ணே பூங்கோதை! என்னவளே! என் மனத்தில் நான் நண்பகல் ஒரு மணிக்கு நினைத்தது எப்படியடி உனக்குக் காலை பதினோரு மணிக்கே தெரிந்து போய்விட்டது என்று தழுவிக் கொண்டேன். என் பிடியிலிருந்து மெல்ல நழுவி சிரித்துக் கொண்டே 'அண்ணனுடைய அம்மா இன்று வெளியூர் போய்விட்டார்ன்னு...நீங்கதானே சொன்னீங்க, நீங்க ரெண்டு பேரும் நான் அனுப்பும் உணவையும் அவுங்க அம்மா அனுப்புவதையும் பகிர்ந்து சாப்பிடுவீங்கன்னு சொன்னது நினைவுக்கு வந்தது. அப்படின்னா இன்று அண்ணனுக்குக் கேரியர் வராது. உங்களுடையதைப் பகிர்ந்து இரண்டு பேரும் உண்பீர்கள். அதனால்தான் நிறைய வைத்து அனுப்பினேன். ஒருக்கால் உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் உங்களுக்குப் போதாது என்று எங்காவது சிற்றுண்டிச் சாலைக்குப் போய்விட்டால் என்ன செய்வது என்றுதான் சீட்டும் வைத்திருந்தேன்!' என்றாள். அப்போது என் உள்ளத்தில் எழுந்த அன்புணர்வுக்கு எல்லையேயில்லை. அவளை மீண்டும் கட்டித் தழுவி ஒரு முத்தந்தான் கொடுக்க முடிந்தது. வேறு எப்படி அந்த உணர்வை வெளியே புலப்படுத்துவது என்று எனக்குத் தெரியவில்லை. அவளோ ஒரு புன்னகையில் தன் இன்ப துன்பங்களைக் காட்டும் வாழ்க்கைக் கலையில் வல்லவளாகத் திகழ்ந்தாள்.

முன்பெல்லாம் அலாரம் கேட்டுக் காலையில் எழுந்திருப்பது வழக்கம். இப்போதோ மனம் உருகப்பாடும் அவள் வழிபாட்டுப் பாடலைக் கேட்டுக் கொண்டே கண்

விழிப்பேன். வழிபாடு முடிந்ததும் கண் விழித்துக் கொண்டே படுக்கையில் கிடக்கும் என்னை வந்து பார்ப் பாள். குளித்து, ஈரம் புலராத அந்தக் கூந்தலை வாரி முடித்துக் கொண்டு மஞ்சள் பொலியும் முகத்தில் குங்குமப் பொட்டிட்டுக் கொண்டு அவள் என்முன் வந்து நிற்பதைப் பார்த்துக் கொண்டே என் இரு கைகளையும் நீட்டுவேன். அவள் தன் இரு கைகளால் அவற்றைப் பிடித்து என்னைப் படுக்கையை விட்டுத் தூக்குவாள். சிற்சில சமயம் எழுவது போல் பாசாங்கு செய்து டக் கென்று அவளைப் படுக்கைக்கு இழுத்து விடுவேன், 'சட்' டென்று எழுந்து புன்னகையால் ஒரு பொய்க்கோபம் காட்டுவாள். அப்போது அவள் முகம் நாணத்தால் சிவந்துபோய் மஞ்சள் கலந்த மாலைச் செவ்வானம் போல் தோன்றும். அந்தத் தெய்வீக அழகில் சொக்கிய படியே எழுந்து செயலில் ஈடுபடுவேன். அந்த நிறைந்த முகத்தைப் பார்த்துவிட்டு எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அது எனக்கு வெற்றியே.

ஒரு நாள் அம்மா கிணற்றடியில் வழுக்கி விழுந்து விட்டார்கள். கால் வீங்கிக்கொண்டு எழ முடியாமல் வருந்தினார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியை எல்லாம் ஏதோ மருத்துவ நிலையப் பணிப் பெண் போல் அவள் செய்து வந்தாள். கால் நன்றான பிறகு ஒரு நாள், 'என்னவோ செல்லம்மா! பெண் ஒன்று எனக்கு இல்லையே என்று ஏங்கினேன். பூங்கோதை வந்தபின் அது போய் விட்டது. யார் செய்த புண்ணியமோ இப்படி ஒரு பெண் நமக்குக் கிடைத்தாள்' என்று செல்லம்மாவிடம் என் அம்மா சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு என் உடம்பு சிலிர்த்தது.

பூங்கோதையின் அம்மா அவ்வப்போது இங்கு வந்து போவார்கள். என் அம்மாவும் தன் அம்மாவும் ஏற்றத் தாழ்வாகக் கருதாதபடி திறமையாக நடந்து கொள்

வாள். எல்லோருக்கும் தானே முன் வந்து எல்லாம் செய்பவள் தன் அம்மாவுக்கு மட்டும் எல்லாவற்றையும் என் அம்மா மூலமே செய்யும்படி திறமையாக ஒரு சூழ் நிலையை உண்டாக்கி விடுவாள். இதைக் காணும்போது, 'யாங்கு கற்றனள்கொல் இப்பூங்கோதை?' என்ற நற்றிணைப் பாடல் தலைவி பற்றி அருளாளர் எழுதியது என் நினைவுக்கு வரும்.

ஐப்பசி மாதம் தீபாவளி வந்தது. எனக்கு என்னவோ இந்தச் சடங்குகள் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால் பூங்கோதைக்கு அதில் எல்லாம் ஒரு பற்று; ஒரு பக்தி. அவள் மனம் நோகக் கூடாதே என்று அவற்றுக்கெல்லாம் நான் ஒப்புக் கொள்வேன். அத்தை வீட்டிற்குப் போய்த் தீபாவளி கொண்டாடினோம். அம்மாவையும் அழைத்துக் கொண்டு போயிருந்தோம். குணாளன் அவன் அம்மா எல்லோரும் கூடித் தீபாவளி விழாவைத் தென்னந் தோப்பில் கொண்டாடி மகிழ்ந்தோம். அதுவே நாங்கள் எல்லோரும் கூடிக் கொண்டாடிய விழா. அதுவும் அவள் முயற்சியில் நிகழ்ந்த விழா. பிறகு குணாளன் பி.டி.. பயிற்சிக்குப் போய்விட்டான். நானும் மேலே படிக்கச் சென்னைக்கு வந்துவிட்டேன்.

தீபாவளி முடிந்த நான்கைந்து நாள்களில் அந்தப் பக்கம் எங்கும் ஒரே காலரா பரவியிருந்தது. நான் சேரிக்குச் சேரி போய் என் மாணவர்களைக் கண்காணித்து வந்தேன். 'சூடானவற்றையே உண்ண வேண்டும்' என்று வற்புறுத்தி வந்தேன். இப்படிச் சுற்றி விட்டு வருகிற போது ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் மாரியம்மன் கோயில் அருகில் ஒரு கைக் குழந்தையை வைத்துக் கொண்டு, ஊர்ப் பெரியவர்கள் சிலர் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தனர். 'என்ன என்று அறிந்து கொள்ளலாம்' என்று அந்தக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன்.

சென்ற வாரம் வந்திருந்த குறக்குடும்பம் ஒன்று அந்தக் கைக்குழந்தையை மட்டும் விட்டுவிட்டுக் காலரா

வில் கூண்டோடு கைலாசம் போய் விட்டதாகவும் அந்தக் குழந்தையை என்ன செய்வது என்பதே இப்போதைய விவாதம் என்றும் அறிந்தேன்.

ஒரு கணம் என் மனதில் என் குறிக்கோள் எழுந்து நின்றது. இறைவன் திருவுள்ளம் இப்படி வாய்த் துள்ளதோ என்னவோ. அனாதை இல்லத்துக்கு அடிக்கல் நாட்டுவது இன்று இந்தக் குழந்தையால் ஆரம்பமா கட்டும் என்ற ஆர்வத்தில் 'அய்யா! ஊர்ப் பெரியோர் களே! உங்களுக்குத் தடை இல்லையென்றால் நானே இந்தக் குழந்தையை எடுத்து வளர்க்கிறேன்!' என்றேன்.

என்றாலும் அவர்கள் அவ்வளவு எளிதில் விவாதத்தை முடித்துக் கொள்ள விரும்பவில்லை. அதிலும் 'புதுமைத் திருமணம்' செய்து கொண்ட என்னிடம் அவர்களுள் சிலருக்கு வெறுப்பு வேறு இருந்தது. இப்படி ஒரு செய லுக்கும் இடம் தந்து விட்டால் ஊர் கெட்டுவிடும் என்று சிலர் கருதினார்கள். வேறு சிலரோ எனக்குச் சாதக மாகப் பேசினர். இறுதியில், 'தம்பி! ஆவேசத்தில் பலர் பெரிய காரியங்களைச் சாதிப்பதாக நினைத்துக்கொண்டு 'அதிகம் படிச்ச மூஞ்சுறு கழனிப் பானையில் விழுவது போலத்' தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் அழித்துக் கொள்கிறார்கள் நீ ஏதோ இந்தக் குழந்தை யைத் தத்தெடுத்துக் கொள்வதாகக் கூறுகிறாய். நீயோ நல்ல இந்துக் குடும்பத்தில் பிறந்தவன். இந்தக் குழந்தையோ குறக் குடும்பத்தில் பிறந்தது. உன் அம்மா, மனைவிக்கு உன் செயல் பிடிக்குமோ என்னவோ. யோசித்துச் சொல்' என்று எனக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் மற்றவர்கள் வெறுக்காதபடியும் நயமாகப் பேசினர். நானோ,

வ. உ சிதம்பரம்பிள்ளை பறைக்குடும்பச் சிறுவனை வளர்த்ததையும், காந்தியடிகள் அரிசனங்களைப் போற்றி யதையும் கூறி அந்தக் குழந்தையை அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டேன். வீடு

நெருங்க நெருங்க என் உள்ளத்தில் தடுமாற்றம் ஏற் பட்டது. 'தெய்வச்சடங்கு, குடும்ப ஆசாரங்களில் ஊறிப் போன பூங்கோதை என்ன சொல்லுவாளோ! அவள் அம்மா என்ன நினைப்பாரோ! என் தாய் என்ன கூறுவார் களோ!' என்று என் மனம் கலங்கிற்று. 'என்ன ஆனாலும் சரி, யார் மறுத்தாலும் சரி, தனியாக ஒரு குடிசை போட்டுக் கொண்டு அதில் அதை வைத்து வளர்ப்பது' என்ற துணிவோடு மெல்ல எங்கள் வீட்டுத் தெரு முனையை அடைந்தேன். தெருவில் உள்ளவர்கள் எல்லாம் வாயிற் கதவைத் திறந்து கொண்டு ஏதோ நூதனமான விலங்கொன்றைப் பார்ப்பது போல என்னை யும் அந்தக் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தனர். அதற்குள் இந்தச் செய்தி வீட்டுக்குத் தெரிந்துவிட்டது. அங்கே என் மனைவி வாயிற்படியில் நின்றபடி என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் அம்மா வாடிய முகத்துடன் நின்று கொண் டிருந்தார். எப்படியோ குணாளன், குணாளன் அம்மா முதலியோரும் வந்து,அங்குக் கூடியிருந்தனர். இந்தக் கூட்டத்தைத் தூரத்திலிருந்து பார்த்த உடனேயே எனக்குத் 'திக்' கென்றிருந்தது. தயங்கித் தயங்கி மெல்ல வீட்டு வாயிற்படியில் அடியெடுத்து வைத்தேன்.

'வாங்க, ஏன் தயங்குறிங்க. ஆண்டாளை இப்படித் தான் அந்த விஷ்ணுசித்தர் தூக்கிக் கொண்டு வந்தார் என்று என் தாத்தா சொல்லுவாங்க' என்று சொன்ன படியே என் கையிலிருந்த குழந்தையைத் தான் வாங்கி மார்போடு அணைத்துக் கொண்டு உள்ளே போனாள். ஏதோ என் இலட்சியம் அன்றே அப்போதே ஈடேறி விட்டதாக எண்ணி மகிழ்ந்தேன் குழந்தைக்கு 'ஆண்டாள்' என்று அவள் பெயர் வைத்தாள். எங்கள் குடும்பத்தில் ஒரு உறுப்பினர் எண்ணிக்கை கூடியது இறைவனுக்குப் பொறுக்கவில்லை என்று நினைக்கிறேன். நாம் குறுக்கிடாது அவன் கையில் விட்டு விட்டால் எப்படியோ உலக மானிட எண்ணிக்கையை அளவாக

வைத்திருப்பான் என்றுதான் நினைக்க வேண்டியுள்ளது. புதிய புதிய மருத்துவ உதவிகள் இன்று மானிட வாழ்வை நீடிக்க வைப்பது என்னவோ உண்மைதான். ஆனால் கருவைச் சிதைப்பதற்கும், கருப்பையை நீக்குவதற்கும் இழிந்த ஒழுக்கக் கேட்டுக்குத் துணைபோவதற்கும் கூட அது உதவியாய் இருப்பதைப் பார்க்கும்போது கொடூர மாகத் தோன்றினாலும் கடவுள் வழி சரியானதாகத்தான் தெரிகிறது.

பெரிய கார்த்திகைக்குப் பொரித்த அவலும் தேங் காய்களும் எடுத்துக் கொண்டு அத்தை எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அன்று மாலை வெல்லப்பாகு காய்ச்சி, அவல் கிளறிக் கார்த்திகையைக் கொண்டாடினார்கள். ஆண்டாள் தன் அம்மா ஏற்றி வைக்கும் அகல்விளக்கு களைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். 'ஆ ஊ' என்று ஏதோ பேசிக் கொண்டு கையையும் காலையும் ஆட்டிக் கொண்டு அவள் இடுப்பில் இருந்து கொண்டே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அத்தைக்கு இந்தச் செய்தி முன்னேயே தெரிந்திருக்க வேண்டும். அதனால் ஆண்டாள் பற்றி ஒன்று கேட்காமல் இருந்துவிட்டார்கள்.

கார்த்திகைத் திருவிழா முடிந்த அன்று இரவே தென்னந்தோப்புக்குத் திரும்பி விட்டார்கள். எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. 'பெண்வீட்டில் இரவுதங்கக் கூடாது' என்ற சம்பிரதாயத்தைச் சொல்லிவிட்டுப் புறப் படப்போகும்போது அந்த அம்மா காலில் நானும் 'பூங்கோதையும் விழுந்து வணங்கினோம். 'கொஞ்சம் நிதானம் வேண்டும் தம்பி. எதிலும் அவசரப்படுகிறாய்!' என்று எனக்குச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு, பூங்கோதை எனக்கு வயதாகிறது, மிகவும் தளர்ச்சியாக இருக்கிறது. கையும் காலும் நன்றாக இருக்கும் போதே கண்ணன் திருவடியில் சேர்ந்து விட்டால் நல்லது. உன் புருஷன் மனம் போல நீ நடந்துக்குவே. உன்னைப் பற்றிக் கவலை இல்லை. என்னைப் போல் இல்லாமே பூவோடும்

பொட்டோடும் கண்ணன் உன்னைத் திருவடியில் சேர்த் துக்குவான்' என்று கண்கலங்கச் சொல்லி வாழ்த்தி விட்டுப் புறப்பட்டார். அவளும் அம்மாவும் கொஞ்ச தூரம் உடன் வந்து வழியனுப்பினர். நான் கூடவே சென்று தென்னந்தோப்பு வரை விட்டு விட்டுப் 'போய் வர்ரேம்மா' என்று சொல்லிய படியே திரும்பினேன். திரும்பிய என்னை, 'தம்பி' என்ற குரல் தடுத்து நிறுத்தி யது. 'தம்பி, பூங்கோதைக்கு யாரும் இல்லை. நீதான் கதி. அவளைக் கண்ணுங் கருத்துமா நீ பார்க்கிறதாலேதான் இதுவரை உயிர் வைத்திருந்தேன். இனிமேயும் அப்படியே பார்த்துக்கோ. அவள் துன்பத்தை வெளியே காட்டிக்க மாட்டா, பரங்கிப்பழம் போல உள்ளேயே நொந்து கொள்வா. அவள் நோகும்படி நடக்காதேப்பா, போய் வா பல்லாண்டு பல்லாண்டு கண்ணன் கருணை உனக்குக் கிடைக்கும். மேலே மேலே உயர்ந்து வளர்வே. போய் வாப்பா' என்று ஆர்வத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். சட்டென்று குனிந்து அவர்கள் கால்கள் இரண்டையும் தொட்டேன். அந்த அம்மாவின் கண்ணீர் என் தோளில் உதிர்ந்தன. 'கலங்க வேண்டாம்மா என் உயிரைவிட மேலாகப் பூங்கோதையைப் பார்த்துக் குவேன்' என்று ஆறுதல் சொல்லி விடை பெற்றேன்.

மறுநாள் காலையில் திடீரென்று கொடிய புயல் காற்று வீசத் தொடங்கியது. மரங்கள் எல்லாம் கடகட வென்று முறிந்தன, மட்டைகள் காற்றில் பறந்தன. ஓடுகள், கூரைகள் உருண்டோடின. கடல்நீர் ஆறுகள் வழியே புகுந்து ஊர்ப்புறங்களை நிறைத்தது. கடலில் மிதந்து கொண்டிருந்த படகுகள் எல்லாம் வயல் வழியே நகர்ந்து கொண்டிருந்தன. கடற்பாம்புகள் தெருக்களில் ஓடின. குளத்துமீன்கள் உப்புநீரில் வாழமுடியாமல்தினறித் தினறித் தெருவில்செத்துக்கொண்டிருந்தன. பூங்கோதைக் கும் எனக்கும் தென்னந்தோப்புக் குடிசையில் தங்கியிருந்த அம்மாவின் கதி என்ன ஆயிற்றோ என்று கவலையாக இருந்தது. அந்தப் புயலில் வெளியே புறப்பட முடிய

வில்லை. எதிரே இருந்த கூரை வீட்டிலிருந்து எங்க ஓட்டு வீட்டுக்கு அலுமினியப் பாத்திரங்களைக் கூடையில் பொறுக்கி வைத்துக் கொண்டு ஒரு பாட்டியம்மாள் வந்தாள். இருபது அடி இடைவெளியுள்ள அந்தச் சாலையைக்கடந்து வருவதற்குள் கூடையிலிருந்த பாத் திரங்கள் எல்லாம் நூல் அறுந்த பட்டங்கள் போல மேற்கு நோக்கி கிர்கிர்ரெனப் பறந்து போய்விட்டன. வயிற்றி லும் வாயிலும்அடித்துக் கொண்டு அழுத அந்த பாட்டியை நான் ஓடி வீட்டிற்கு இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தேன். இல்லையெனில் புயல் அந்த அம்மாவையும் உருட்டிக் கொண்டு போயிருந்திருக்கும்.

கொஞ்சம் புயல் ஓய்ந்தது. எங்கள் மனப்புயல் அப்போது வேகமாக அடிக்கத் தொடங்கியது. 'நான் போய்ப்பார்த்து வருகிறேன். பூங்கோதை' என்று கூறிப் புறப்பட்டேன். 'நானும் வருகிறேன்' என்று என் விடைக்குக் காத்திராமல் என்னைப் பின்தொடர்ந்து அவளும் புறப்பட்டு விட்டாள். 'வேண்டாம்' என்று சொல்ல நினைத்த நான் அவள் உறுதியைப் பார்த்து அவளையும் அழைத்துக் கொண்டு போனேன்.

வழியெல்லாம் அல்லோகல்லோலமாய்க் கிடந்தது. அறுவடைக்கு ஏற்றவாறு முற்றியிருந்த பயிர்கள் எல்லாம் அடியோடு அழிந்து போய்விட்டன. வரப்புகளே கண்ணுக் குத் தெரியாமல் எங்கும் ஒரே வெள்ளக்காடாக இருந்தது. 'ஓ' என்ற கடல் ஓசை' இன்னும் அடங்க வில்லை. ஒரு மேட்டில் ஏறி நின்று பார்த்தேன். பூங்கோதை கீழிருந்த படியே 'எப்படி இருக்கிறது?' என்றாள். 'கடல் கண்டேன், கடல் கண்டேன், ஐயோ! கடற்கரையின் குடிசையெல்லாம் கடலாகக் கண்டேன்' என்று வருந்தி வாய்விட்டுப் பாடிக் கலங்கினேன். வழியெல்லாம் பூசனிக்காய்கள், பரங்கிக் காய்கள், சுரைக்காய்கள், தேங்காய்கள் மிதந்து சென்று கொண்டிருந்தன. நீச்சல் தெரிந்த இளைஞர்கள் சாக்குப்பை வைத்துக் கொண்டு நீந்தி நீந்தி அவற்றை

யெல்லாம் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டிருந்தனர்; வேறு சிலர் இறந்து போன கோழி ஆடுகளை எடுத்து அறுத்துப் பங்கு போட்டுக் கொண்டிருந்தனர் இன்னும் சிலர் சாலையின் குறுக்கே முறிந்து கிடந்த மரங்களைத் துண்டு துண்டாக வெட்டித் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். மேலும் சிலர் இடிபாடுகளை யும் அழிவுகளையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். நல்ல காலமாக மனிதர்கள் யாரும் சாகவில்லை. அது எங்களுக்குத் திருப்தியாக இருந்தது சிற்சில இடங்களில் வாய்க்காலும் வயலும் சாலையும் நீரால் நிரப்பப் பெற்றி ருந்ததால் பூங்கோதையை அழைத்துச் செல்வது பயமாக இருந்தது. 'சாலை என்று எண்ணி வாய்க்காலில் பூங்கோதை கால்வைத்து விட்டால் அவளுக்கு நீந்தத் தெரியாதே' என்று எண்ணி அவள் கைகளை எடுத்து என் தோளில் வைத்துக் கொண்டு மெல்ல மெல்ல என் கால் களால் ஆழம் பார்த்துக் கொண்டே அவளை அழைத்துச் சென்றேன். அந்தத் துன்பக் காட்சிகளிலும், அம்மாவுக்கு என்ன ஆயிற்றோ என்ற ஏக்கத்தில்கூட அவளும் நானும் நெருங்கிச் செல்வதில் ஓர் இன்பம் அமைதியாக உள்ளத்தி னுள் வெப்ப நீரோட்டம் போல் ஓடிக்கொண்டிருந்தது.

தென்னந்தோப்பை அடைந்தோம். வயதானஉயர்ந்த மரங்கள் எல்லாம் வேரற்று வீழ்ந்து கிடந்தன. இளமரங் களின் மட்டையெல்லாம் பிய்ந்து போய்த்தளமில்லாக் கட் டடத்தின் வெறும் தூண்கள் போல் நின்றன. ''அய்யோ! அம்மா!'' என்று பூங்கோதை கத்தியழைக்கக் கேட்டுத் திரும்பினேன். அவள்முகம் குடிசையைப் பார்த்துக் கொண் டிருந்தது. சாலையை விட்டு இறங்கித் தோப்பில் நிறைந் துள்ள வெள்ளத்தின் இடுபாடுகளில் பூங்கோதையை எப்படி அழைத்துச் செல்வது என்று எண்ணி மெல்ல ஆழம் பார்த்துக் கொண்டு குனிந்திருந்த நான் குடிசை யைக் கவனிக்கத் தவறி விட்டேன். 'ஐயையோ அம்மா' என்று கதறிக் கொண்டு எனக்கு முன் அவள் ஓடி முறிந்து நீருள் மூழ்கிக் கிடந்த தென்னை மரத்தில் கால் தடுக்கி

விழுந்து மயக்க மடைந்து விட்டாள். மெல்ல அவளைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு தட்டுத் தடுமாறிக் கொண்டே குடிசையை அடைந்தேன். அதற்குள் அங்குச் சென்று கொண்டிருந்த எனக்கும் அந்த அம்மாவிற்கும் தெரிந்த சிலர் அங்கு வந்து சேர்ந்தனர்.

குடிசையின் மேற்குப் பக்கத்துச் சுவர் இடிந்து கிடந்தது. கூரை விழுந்து வீட்டையே மூடிக் கொண்டிருந்தது. நீர் இல்லாத நல்ல இடமாகப் பார்த்துப் பூங்கோதையைக் கிடத்திவிட்டு மெல்ல நானும் சுற்றியிருந்த சிலரும் கூரையை அகற்றினோம். அந்த அம்மா மேல் சுவர் விழுந்து கிடந்தது. அந்த அடி தாங்காமல் உயிர் போய் விட்டிருந்தது. தன் கையில் பிடித்திருந்த கண்ணன் படம் மட்டும் அப்படியே உடையாமல் இருந்தது. மற்ற பாத் திரங்கள் நசுங்கியும் நொறுங்கியும் கிடந்தன. மெல்ல ஊறிப் போயிருந்த மண் கட்டிகளை அகற்றி அந்த அம்மாவை அப்புறப்படுத்தினோம். 'பல்லாண்டு வாழ்க' என்று நேற்று இரவு வாழ்த்திய அந்த வாய் இன்று மூடிக் கொண்டிருந்தது காலைத் தொட்டுக் கும்பிட்ட போது கலங்கிய கண்கள் திறந்து என்னை இன்று பார்க்கவில்லை. 'அய்யோ! அத்தை! அத்தை! அய்யோ! பூங்கோதை! பூங் கோதை!' என்று என்னுள் அடக்கிக் கொண்டிருந்த துயரம் சொல்லாகப் பீறிட்டுக் கொண்டு வெளி வந்தன. அதைக் கேட்டுப் பூங்கோதை கண்விழித்து மிரண்டு மிரண்டு பார்த்தாள். அவளைச் சுற்றியிருந்த கூட்டம் நகர்ந்தது; அவள் எழுந்து மாண்டு கிடக்கும் தன் தாயின் மார்பின் மேல் விழுந்து அழுதாள். புரண்டாள்; உருண் டாள். நான் அவள் அருகே அமர்ந்து அவளை என் மார்பில் தாங்கிக்கொண்டு ஆறுதல் சொல்லித் தேற்றிக் கொண்டிருந்தேன்.

இந்தச் செய்தி என் அம்மாவுக்கும் குணாளன் அம்மா செல்லம்மாவுக்கும் எப்படியோ தெரிந்து அழுது புலம்பிக் கொண்டே அவர்களும் அங்கு வந்தனர். பூங்கோதையைப்

பார்த்ததும் அவர்களுக்கு அழுகை பொங்கி வந்தது. அம்மா கையிலிருந்த ஆண்டாளை நான் வாங்கிக் கொண் டேன். 'அடி பூங்கோதை! நேற்று நல்லா வந்தாங்களே! அம்மா பூங்கோதை! அய்யோ பூங்கோதை!' என்று வாயி லும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்து விட் டார்கள். அப்படி அத்தை வாழ்வு அந்தத் தென்னந் தோப்பிலேயே முடிந்தது. உடையாமல் அந்த அம்மா கைகளில் பிடித்திருந்த கண்ணன் படத்தைப் பூங்கோதை வீட்டிற்கு எடுத்து வந்தாள். அழகாக அதனைச் செப்ப னிட்டுப் பூசை அறையில் வைத்துக்கொண்டு தன் தாய் மனம் உருகிப் பாடும் பாசுரங்களைப் பாடிப்பாடி மார்கழி மாதம் எல்லாம் மெல்லத் தன் துயரங்களை ஆற்றி வரலானாள்.

8

குணாளன்

தை பிறந்தது. தமிழர் திருநாள் வந்தது. நாகை அவுரித் திடலில் அனைத்துக் கட்சிகளும் ஒரே மேடையில் விழாச் சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. சென்னையிலிருந்து பேராசிரியர் அருளாளர் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதாகத் தெரிந் ததும் நானும் செங்கண்ணனும் அவர் சொற்பொழிவைக் கேட்கச் சென்றோம். பலர் பேசினார்கள். பற்பல பேசி னார்கள். அருளாளர் 'கற்பு, கடமை என்ற இரண்டிலும் தமிழ்ப் பண்பு மிகவும் தாழ்ந்துவிட்டது' என்று நிகழ்ச்சி கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டிப் பேசினார். 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற பண்பாடு இன்று தமிழ் இளைஞர்களில் இல்லை. பெண்கள் பலர் 'மனையுறை' மகளிராக இன்று இல்லாததால் தொழிலகங்களில் பற்பல

ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பழகுவதால் பிறர் நெஞ்சு புகாக் கற்பு என்பதெல்லாம் வெறும் கற்பனையே என்றாகி விட்டது. எனவே கடமை உணர்வும் கற்பு பற்றிய காலத் தெளிவும் இன்றைய தமிழனுக்குத் தேவை' என்று பேசி முடித்தார்.

அவரைக் கண்டு கொஞ்சம் பேசவேண்டும் என்று செங்கண்ணன் விரும்பினான். எனவே கூட்டம் முடியும் வரை இருந்தோம். கூட்டம் முடிந்து அவர் மேடையி லிருந்து இறங்கும்போது பலர் சூழ்ந்து கொண்டனர். செங்கண்ணன் அவர்களுக்கு இடையே புகுந்து அவர் முன் போய் நின்றான். நான் மெல்ல அவனைப் பின்பற்றிச் சென்று சற்றுப் பின்னால் நின்றேன். அவரைப் பார்த்து 'அய்யா! நான்.....செங்கண்ணன்' என்று கூப்பிய கையோடு சொன்னான். 'ஓ! சோழன்பட்டிச் செங் கண்ணன்தானே! உன் கடிதம் கிடைத்தது. என் விடையும் கிடைத்திருக்குமே? எண்ணிச்செய். என்னால் முடிந்த வகையில் உதவுவேன்' என்று சுருக்கமாக ஆனால் உறுதி யாகச் சில சொல்லிவிட்டுக் காரில் ஏறிப் போய்விட்டார்.

நாங்கள் ஊருக்குத் திரும்பினோம். அந்த நேரத்தில் பேருந்து இல்லாததால் நடந்தே வரலானோம். 'டே செங் கண்ணா! என்ன கடிதமடா அவருக்கு எழுதினாய்? எண்ணிச் செய்! என்று எச்சரித்தாரே. என்னடா இதெல் லாம்' என்று கேட்டேன்.

'மேலே படிக்கவேண்டும் என்று என் ஆர்வத்தை அவ ருக்குத் தெரிவித்திருந்தேன். பொருளாதார நெருக்கடி களைச் சிந்தித்துச் செயல்படுக. வெறும் ஆர்வத்தில் திட்டம் இல்லாமல் சென்னை வந்து இளைஞர் பலர் இடையில் வருந்திச் சென்றனர்' என்று விடை எழுதி யிருந்தார்' என்றான்.

'ஏண்டா உனக்கு மூளை இருக்கா? அத்தை இப்போது தான் இறந்திருக்காங்க, வாழ்நாள் எல்லாம் உனக்காகத்

துன்புற்று உழைத்த அம்மா இப்போது தான் கொஞ்ச காலமாக உன் சம்பாதனையில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள். பற்றாக்குறைக்குப் பூங்கோதை வேறு. அவள் உன்னைப் பிரிந்து ஒரு விநாடிகூட உயிர் வாழ மாட்டாள். இதில் வளர்ப்புக் குழந்தை ஆண்டாள் வேறு. உன்னை ஒரு வேளை காணாவிட்டால், 'அப்பா' 'அப்பா' என்று அழத் தொடங்கி வடுகிறாள்...'

'உண்மைதான் குணாளா. இந்தத் திருமணம் இல்லை என்றால் சென்ற ஆண்டே நான் படிக்கப் போயிருப்பேன். அதனால்தான் ஒரு ஆண்டு என் திட்டத்தைத் தள்ளிப் போட்டேன். இப்போது நிகழ்ந்தது எல்லாம் நன்மை யாகவே தெரிகிறது. என்னைத் தன்னலக்காரன் என்று தவறாக எண்ணிவிடாதே. எனக்கு இப்போது வாய்த் துள்ள நல்ல சூழ்நிலைகளைக் கூறுகிறேன். அத்தை இறந்துவிட்டார்கள். எனவே தோப்பைக் குத்தகைக்கு விட்டால் புயலில் அழிந்ததுபோக மிகுந்திருக்கும் நூறு மரத்துக்கும் நாலாயிரம் ரூபாயாவது கிடைக்கும். மட்டை, செத்தை வேறு நமக்குக் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு எப்படியோ மூன்றாண்டுகள் இங்கிருப் பவர்கள் காலந்தள்ளி விடலாம். அல்லது அம்மா, ஆண்டாள், பூங்கோதைக்கு அழகான சிறிய குடிசை ஒன்று தென்னந்தோப்பில் கட்டிக் கொடுத்துவிட்டால் அதில் வரும் வருவாயை வைத்துக் கொண்டு அவர்கள் நன்றாக வாழ முடியும், அவ்வப்போது எனக்கும் உதவ முடியும்.'

'என்னவோ செங்கண்ணா! உன் திட்டம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. சிறுகக் கட்டிப் பெருக வாழணும். உன் இண்டர் படிப்புப் போதும். அதை வைத்துக் கொண்டு என்னைப் போலத் தனியே பி. ஏ. எழுதித் தேறலாம். நீ இதை வைத்துக்கொண்டு எவ் வளவோ தொண்டு செய்யலாம். அளவிற்கு மேலே நீ ஆசைப்படுகிறாய். அருளாளர் சொன்னதுபோல் எண்ணிப்

பார். நானும் இந்த ஆண்டு சூன் மாதம் பயிற்சிக்குப் போகப் போகிறேன். அப்பாவுக்கும் வயதாகிவிட்டது. ஆஸ்துமாநோய் அதிகமாகிவிட்டது. அம்மாவும் அப்பாவும் என்னோடு இந்த வருடம் சிதம்பரத்துக்கு வருவதாகத் திட்டமிட்டுள்ளனர். அங்கே அரசினர் பெரிய மருத்துவ நிலையத்தில் அப்பாவைக் காட்டிட வசதியாக இருக்கும் என்று நினைக்கின்றனர். எனவே நானும் என் குடும்பமும் வருகிற ஆண்டு ஊரில் இருக்க மாட்டோம்' என்றேன்.

'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்பது எனக்குத் தெரியும். தன்னலத்தைப் பொறுத்த வரையில் போதும் என்ற மனம் நல்லது. ஆனால் பொது நலத்தில் ஈடுபடும்போது அவனவன் தன்தன் தகுதியை வளர்த்துக் கொண்டால்தான் நினைத்ததைச் சாதிக்க முடியும். பாரேன்! என் நாட் குறிப்பில் உள்ள கவிதைகளை, கதைகளை, கருத்துக்களை நீ அறிவாய். என் உணர்ச்சியழகு, கற்பனைத்திறன், சிந்தனைத் தெளிவு மொழிநடை இவற்றை யெல்லாம் நீ பாராட்டுகிறாய். அவற்றில் எத்தனையோ கவிதைகள், கதைகள் கருத்துக்களை இன்றைய பத்திரிகை உலகம் புறக்கணித்துத் திருப்பி விட்டது என்பது உனக்குத் தெரியுமா? இதே நிலை ஆங்கில எழுத்தாளன் கோல்டு ஸ்மித்துக்கும் வாய்த்திருக்கும். அதனால் தான் அவன் இப்படி ஒரு கதை சொல்கிறான்.

எலி பிடிப்பவன் ஒருவன் தன் தொழிலில் மிகத் திறமை சாலியாம். 'எலி பிடிக்கிறேன், எலி பிடிக்கிறேன்' என்று பலநாள் தெருத்தெருவாகக் கூவிக் கூவிப் பார்த்தானாம். யாரும் அவனுக்கு வேலை கொடுக்கவில்லையாம். பசியால் வாடிச் சிலநாள் வருந்தியபின் ஒருநாள் அவன் ஒரு யுக்தி செய்தானாம். பெரிய அட்டை ஒன்றில் அழகாக வண்ணத் தாள்களை ஒட்டி, கொட்டை எழுத்தில் 'மகாராணி அரண்மனையில் எலி பிடிப்பவன்' என்று எழுதி,

அந்த அட்டையை ஒரு கொம்பில் கட்டித் தூக்கிக் கொண்டு லண்டன் மாநகரக் கடைத்தெருப் பக்கம் போனானாம். உடனே ஒவ்வொரு கடைக்காரனும் தன் தன் கடைக்கு வந்து எலி பிடிக்குமாறு வேண்டிக் கொண்டானாம். 'ராணி வீட்டில் எலி பிடிப்பவன் தன் கடையில் தொழில் செய்கிறான்' என்ற கௌரவத்தை அவர்கள் பெரிதாக மதித்தார்கள். அந்த யுக்தியால் அவன் பெருஞ் செல்வனானான்' என்று கதை சொல்கிறான். 'எதற்கும் ஒரு பட்டம் அல்லது ஒரு பதவி அல்லது கொழுத்த செல்வம் வேண்டும்' என்றான். எங்கோ புதர் ஒன்றில் நரி ஊளையிடுவதைக் கேட்டு நிறுத்தினான்.

சுற்றும் முற்றும் பார்த்தோம். எங்களுக்குப் பின்னே வெகுதூரத்தில் சிலர் வந்து கொண்டிருந்தனர் 'ஆமாம் குணாளா! நீதான் பார்க்கிறாயே. எந்தப் பத்திரிகையாவது முன்பின் தெரியாத ஒருவனுடைய கதை கட்டுரைகளை வெளியிடுகிறதா? ஒன்று, பெயருக்குப் பிறகு எம். ஏ. லிட்., பி. எச். டி., ஐ. ஏ. எஸ். என்று இப்படி ஏதாவது பட்டம் இருக்க வேண்டும். அல்லது அந்தப் பத்திரிகைக்கு உதவியாக நன்கொடை கொடுத்திருக்க வேண்டும். இல்லா விட்டால் ஏதாவது ஒரு கட்சியைப் பற்றிக்கொண்டு முன்னேறியவராக இருக்க வேண்டும். உனக்குத்தான் தெரியுமே. நான் ஒன்றும் பணக்காரனாக முடியாது. பொய் புரட்டு செய்யாமல் இன்று கட்சிப் பதவியில் உயர இயலாது என்பது குப்பன் சுப்பனுக்கும் தெரிந்த செய்தி தான். எனவேதான் நான் என் படிப்பை உயர்த்திக் கொள்ள விரும்புகிறேன். அதுவும் அருளாளர் நிழலில் இருந்து எவ்வளவோ கற்றால் உண்மைகளை உணர இயலும். எதிர் காலத்தில் நான் நினைக்கும் அனாதை இல்லத்துக்கு என் படிப்பும் பதவியும் பெருந் துணையாக அமையும்' என்றான்.

'என்னவோ செங்கண்ணா! எனக்கு மனநிறைவு ஏற்படவில்லை. நீ எப்போதுமே பிடிவாதக்காரன். ஏதோ

பூங்கோதையிடம் சொல்லிப்பார். அவள் கண்கலங்காமல் விடைகொடுத்தால் அப்புறம் யோசிக்கலாம். வீடு வந்து விட்டது. இதைப்பற்றி இப்போது போய்ப்பேச வேண்டாம். மெல்லப் பூங்கோதை மனம் நொந்து விடாதபடி பின்னொருநாள் சொல்லிப்பார்' என்று அவனை வீட்டில் விட்டுவிட்டு என் வீடடைந்தேன்.

9
செங்கண்ணன்

பூங்கோதை முகத்தைப்பார்த்தால் என் மேல் படிப்புப் பற்றிப் பேசவே தயக்கமாக இருக்கிறது. குணாளன் வேறு எச்சரித்துள்ளான். பள்ளிக்கு வரும் ஏழைக்குழந்தைகளைப் பார்த்தால் அவர்களுக்கு உதவாமல் தேடிச் சோறு நிதம் தின்னும் வேடிக்கை மனிதர் கூட்டத்துள் நானும் ஒருவனாகி மாண்டு மடிந்து விடுவேனா? என்று நெஞ்சம் கலங்குகிறது.

புல்போட்டுத் தண்ணீர் காட்டி ஆடுமாடுகளை வளர்ப்பதுபோல் குழந்தைகள் உடலை வளர்த்து விடலாம். ஆனால் அவர்கள் உள்ளத்தை வளர்க்க வேண்டாமா? அதற்குப் பண்பான சூழ்நிலை வேண்டாமா? உருக்கமும் உண்மையும் உள்ள ஆசிரியர் வேண்டாமா?

மீண்டும் மகாத்மா காந்திக்குடிலில் வாடி வருந்திய அந்த அனாதைச் சிறுவர்கள் என் கண்முன் காட்சியளித்தனர் அன்புக்குழந்தைகளே! என் அனாதைக் குழந்தைகளே! மயங்கித் தயங்கிவிடமாட்டேன். என் பூங்கோதை என் கருத்துக்கு மாறாக எதுவும் கூற மாட்டாள் என்று என்னை நானே தேற்றிக் கொண்டு வாய்ப்பு எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் அப்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அம்மா ஒரு நாள் திருச்சி மலைக்கோட்டை, திருவரங்கம் காணப்

போகும் யாத்திரைக் குழுவோடு காலையில் புறப்பட்டுப் போய்விட்டார்கள். மறுநாள்தான் வருவதாகக் கூறினார்கள். அன்று வீட்டில் நானும் பூங்கோதையுமே இருந்தோம். குழந்தை ஆண்டாளும் தூங்கிவிட்டாள்.

''வா பூங்கோதை 'தோட்டத்துக்குப் போவோம்' என்று அழைத்தேன். அவள் திதருக்கதவைத் தாழிட்டுக் கொண்டு ஆண்டாள் உறங்கிக் கொண்டிருந்த தொட்டியை ஆட்டி விட்டுவிட்டுக் கைவிளக்கை நன்கு தூண்டி விட்டபின் கோரைப்பாய் ஒன்றை எடுத்துக் கொண்டு என் பின்னே தோட்டத்திற்கு வந்தாள்.

பாயைப் போட்டுவிட்டு நான் உட்காரட்டும் என்று அவள் நின்று கொண்டிருந்தாள். 'நீ உட்கார்!' இதோ சில அரும்புகள் பறித்துக்கொண்டு வந்துவிடுகிறேன். என்று கூறிக் கரியதரையில் வெண் புள்ளி இட்டாற்போல் வெள்ளை வெளேர் என்று மலர்ந்து மணங்கமழ்ந்து கொண்டிருந்த முல்லைப்போதுகள் சிலவற்றைப் பறித்து வந்து அவள் சடையை முன்னே இழுத்து அவளுக்கு எதிரே அமர்ந்து கொண்டு மேலிருந்து கீழாக ஒன்றன்பின் ஒன்றாகச் செருகி மகிழ்ந்தேன். இமைகொட்டாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்த பூங்கோதை, சட்டென்று என்னைத் தழுவியபடி கண்கலங்கினாள். 'அடஅசடே! ஏன் இப்படிக் கண்கலங்குகிறாய்? என்று தேற்றியவாறு அவள் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டேன். ஒரு பாட்டுப் பாடும்படி கேட்டேன்.

அன்று தென்னந்தோப்பில் என்னை முதலில் கண்டதை நினைத்துக் கொண்டாளோ என்னவோ! முகம் சிவந்து மலர்ந்தது. 'என்ன பாட்டுப் பாட! முதன் முதலில் நீங்கள் இந்த ஊருக்கு ஆசிரியராக வந்தபோது பொன்னம்மாளுக்குச் சொல்லிக் கொடுத்தீங்களே 'லட்சியம் மாய்ந்திடுமோ' அந்தப் பாட்டுப் பாடவா?' என்றாள். பயிற்சிப் பள்ளியில் இளமுருகு இயற்றிய

அந்தப் பாடலைப் பழனிச்சாமி உளம் உருகப் பாடுவான். ஆசிரியர் இளங்கணத்தார் அதற்கு அழகாக விளக்கம் சொல்வார். செல்வி மரிய சூசையும் மங்கையர்க்கரசியும் அபிநயம் பிடித்து ஆடி அந்தப் பாட்டை உயிரோவியம் ஆக்கிக் காட்டுவர். கருங்கண்ணிப் பள்ளியில் சேர்ந்த ஆண்டு பள்ளி விழாவில் நான் தயாரித்த நாட்டியக் குழுவுக்கு இந்தப் பாடலைச் சொல்லிக் கொடுத்தேன். அந்தக் குழுவில் பொன்னம்மாளும் இருந்தாள். இதனை எண்ணிய வாறே சில விநாடிகள் பூங்கோதையை மறந்து போனேன்.

'என்ன? ஏன்?' தவிப்போடு பூங்கோதை என் கன்னத்தை வருடியபடியே குனிந்து என்னை நோக்கினாள்.

'என்ன? என்ன?' என்றேன்.

'என்னவா? நான் 'லட்சியம் மாய்ந்திடுமோ' பாடவா? என்று கேட்டேன். நீங்கள் எதையோ நினைத்துக்கொண்டு...' என்று இழுத்தாள்.

'ஓ! அதுவா... ஆமாம்... என் நினைவு பயிற்சிப் பள்ளிக்குப் போய்விட்டது. பாடு. அந்தப் பாடலையே பாடு...' என்று கேட்டேன்.

அவள் பாடினாள்:

'லட்சியம் மாய்ந்திடுமோ—வாழ்வின்
முக்கியம் அதுதானே
அலட்சியம் செய்வோமோ—நம்மின்
ஆவியும் அதுதானே...'

என்று தொடர்ந்து பாடினாள். அவள் மடியில் படுத்த படியே அவள் குரல்வளை ஏறி இறங்குவதையும் இதழ்கள் மூடித்திறப்பதையும் கண்டு கொண்டிருந்தேன். குனிந்து பார்த்தவள் 'என்ன? பாட்டு கேட்கிறீர்களா, பார்க்கிறீர்களா?' என்று சிணுங்கினாள்.

'பாட்டைக் காது கேட்கிறது; மனம் பார்க்கிறது. ஓ! பூங்கோதை, வள்ளுவர் ஒரு குறளில் சொன்ன உண்மை

இப்போதுதான் எனக்குச் சரியாக விளங்கியது' என்று பெருமிதத்தோடு கூறினேன்.

'என்னவாம்?'

'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள' என்று வள்ளுவர் பாடிய பாட்டுக்குப் பொருள் இப்போது எனக்குச் சரியாக விளங்குகிறது. முன்பு படித்தபோது காண்பதற்கு இனிய அழகிய முகமும், கேட்பதற்கு இனிய அழகிய சொல்லும் சுவைப்பதற்கு இனிய அழகிய மார்பும் உடையவள் பெண் என்று கருதினேன். இன்றோ என் காதல் பூங்கோதை சொல்லிலே காட்சியின்பமும், கேள்வியின்பமும் சுவையின்பமும் நுகர்ச்சி இன்பமும், ஊற்றின்பமும் அனைத்தையும் காணலாம் என்று கண்டு கொண்டேன்' என்று எழுந்து அமர்ந்து அவளைத் தழுவிக் கொண்டேன்.

'ஊம் ஊம்...அத்தை இல்லையல்லவா. உங்கள் பாடு கொண்டாட்டம்தான்!' என்று புன்னகைத்தபடியே எழுந்தாள். நானும் எழுந்து நின்றேன். ஏனோ அவள் வானத்தைப் பார்த்தாள். நானும் பார்த்தேன்.

வானத்தில் மீன்கள் எல்லாம் கண் சிமிட்டிக்கொண்டிருந்தன. அன்று அமாவாசைக்கு அடுத்த நாள். நிலவு இல்லாததால் வானத்து மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. வளமையும் வறுமையும் அற்ற ஒரு சமுதாயத்தில் ஆண்டானும் அடிமையும் அற்ற சமுதாயத்தில் மகிழ்ந்து வாழும் மக்கள் மலர்ந்த முகத்தில் ஒளிரும் கண்கள் போல அவை மின்னிக் கொண்டிருந்தன.

'என்னங்க மறுபடியும் மகாத்மா காந்திக் குடிலுக்குப் போயிட்டிங்களா?' என்று கேலி செய்தாள்.

'ஓ கண்ணே! உன் முன்னே எதுதான் என்னை என்ன செய்துவிடும். என் நினைவு அங்கே போகவில்லை. இந்த வானத்தில் இன்று எல்லா விண்மீன்களும் ஒன்றாக விளங்குகின்றன. ஒரு நிலவு இல்லையென்றால் ஓராயிரம்

விண்மீன்கள் விளக்கம் பெறுகின்றனவே! என்று எண்ணினேன். அவ்வளவுதான்' என்றேன்.

'அது சரி. நானும் தோட்டத்திற்கு வந்ததிலிருந்து பார்க்கிறேன். ஏதேதோ சொல்கிறீர்கள். ஏதேதோ செய்கிறீர்கள்! எதையோ மறைக்கிறீர்கள். என்ன அது? எனக்குத் தெரியக்கூடாது என்றால் வேண்டாம்' என்று கலங்கினாள்.

'அன்பு நிறைந்த உன்முன் என்னால் எதைப் பூங்கோதை மறைக்க முடியும்? என்னவோ பெரிய அநாதை ஆசிரமம் ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே பிறந்திருக்கிறேன் என்று மகாத்மா காந்திக் குடிலில் அடைபட்டுக் கிடந்த அநாதைக் குழந்தைகளைக் கண்ட போது கருதினேன். பாரதிதாசன் சொல்வது போல,

'தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு....
தானுண்டு...'

என்று வாழத் தொடங்கிவிட்டேன்' என்று நிறுத்தி அவளைப் பார்த்தேன்.

'விரலுக்குத் தகுந்த வீக்கங்க. நம்மால் முடிந்த வரைக்கும்தான் உதவி வருகிறோம். ஆண்டாளை நீங்க தூக்கிக்கிட்டு வருவதைப்பற்றித் தபால் கொடுக்கும் கந்தசாமிதான் ஓடிவந்து சொன்னார். 'ஊர்ப் பெரியவர் களுக்குப் பிடிக்காத செயல்களில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள்!' என்றும் சொன்னார். உங்கள்மனம் எனக்குத் தெரியும். முடிந்த காரியத்தைப்பற்றிப் பேசி என்ன பயன்? ,சிலம்புள கொண்ம்!' என்ற கண்ணகி சிறப்புக் குறித்துக் கனாத்திறம் உரைத்த காதை நடத்தும்போது நீங்கள் சொன்னதைப் பொன்னம்மாள் வந்து சொன்னாள். அப்படி''மாற்றா வாழ்க்கையள் அவள்'' என்றும் தாங்கள் கூறி விளக்கியதை என்னிடம் அப்படி அப்படியே வந்து கூறினாள். நான் கண்ணகியாகவே வாழ வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன். அவளுக்குங் கிடைக்காத ஒரு பேறு நீங்கள் கோவலனாக இல்லாமல் ஒழுக்கமும்

உயர்ந்த குறிக்கோளும் உழைப்பும் கடமை உணர்வும் கொண்ட என்காதலராக, இந்தப் பூங்கோதைக்கே உரிய கண்ணனாக வாய்த்திருக்கிறீர்கள். அதனால்தான் நானும் உங்கள் முடிவை அப்படியே ஏற்றுக் கொண்டேன். நல்ல கணவன் வாய்த்த பிறகு நமக்கெனத் தனி மனம் ஒன்று ஏன்?'

'அதற்கில்லை பூங்கோதை! உன் மனம் எனக்குத் தெரியாதா என்ன? இந்தக் குறைந்த வருவாயை வைத்துக் கொண்டு பெரிய பெரிய லட்சியங்களை எப்படி நிறை வேற்றுவது என்றுதான் குழம்புகிறேன்' என்றேன்.

'என்னால் முடியாதுன்னாங்க...அம்மாவும் இறந்து விட்டார்கள். தென்னந்தோப்பு வருமானமும் குறைந்து விட்டது. இந்த உடலாலும் உயிராலும் என்ன தொண்டு செய்ய முடியுமோ அது செய்யக் கிடக்கிறேன்' என்று தழுதழுத்த குரலோடு மொழிந்து விட்டுக் குனிந்தாள்.

என் கையில் இரண்டு மூன்று சொட்டு நீர் விழுந்தது. இருட்டில் அவள் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அது அவளது கண்ணீர்தான் என்று உணர்ந்தேன்.

'ஏதாவது விடுதிகளில் சேர்ந்து படிக்கலாம்' என நினைக்கிறேன்.

'தனியாகவா?' எனத் துயரத்துடன் கேட்டாள்.

'ஆமாம்' எனத் தட்டுத்தடுமாறிக் கூறினேன்.

'எங்களையெல்லாம் விட்டு விட்டா?' எனத் துயரத் தோடு கேட்டாள்.

'அப்படித்தான் ஆகும் போல் தெரிகிறது' என்று யாரோ அறியாத ஒருவரிடம் பேசுவது போல உணர்ச்சி இல்லாது பொதுப்படச் சொன்னேன்.

அதற்கு மேல் அவள் ஒன்றும் பேசவில்லை. நான் வானத்தைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன். விண்மீனொன்று திடீரென்று வீழ்ந்து மறைந்தது. 'தனது

இயற்கைப் போக்கில் தவறியது' என என்வாய் முணு முணுத்தது.

'உள்ளே அழுகுரல் கேட்டது. 'குழந்தைக்குப் பால் கொடுத்தாயா?' எனக் கேட்டேன்.

'இல்லை, அடுப்பிலே போட்டிருக்கிறேன்' எனக் கூறிக்கொண்டே எழுந்து உள்ளே போனாள்.

அவளது தளர்ந்த நடை, அவள் உள்ளத்தின் சோர்வைக் காட்டியது.

'ஏனடா சொன்னோம்?' என்று என்னையே நொந்து கொண்டேன்.

மறுநாட் காலை அம்மா, உறவினர் வீட்டிலிருந்து வந்தார்கள். அவர்களிடமும் மெல்ல என் கருத்தை வெளியிட்டேன். அதைப் பற்றி ஒன்றும் சொல்லாவிட்டாலும், 'பூங்கோதையிடம் சொன்னியா? அவள் என்ன சொன்னாள்?' என்று கேட்டார்கள்.

'சொன்னேன், ஒன்றும் சொல்லவில்லை' என்றேன்.

'அவள் வருத்தப்படலேன்னா உன் விருப்பம்போல் செய். நான் என்ன? சாகப்போற கட்டை' என்று சோகத் தோடு சொன்னார்கள்.

இருவரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விடை கிடைத்துவிட்டது. எப்படியும் மேல்படிப்பிற்குச் செல்வது என்றே தீர்மானித்தேன். எப்படிப் படிப்பது? அவர்களை எப்படி விட்டுச் செல்வது? என்ற இரண்டு கேள்விகள் என்னுள் எழுந்தன. பூங்கோதையையும், அன்னையையும் குணாளனிடம் சொன்னது போல் தென்னந்தோப்புக் குடிசைக்குக் குடியேற்றி விட்டால் அவர்கள் உணவு பற்றிய கவலை எனக்கு இல்லாது போகும். அவளுக்கே உரிய இரண்டு 'மா' நிலத்தில் விளையும் நெல் பாழ்பட்டுப் போனாலும், சிறிது சிறிது பயன் தந்து வரும் தென்னந்தோப்பு அவர்கள் உணவிற்

கும், மேல் செலவிற்கும் வளம் சுரந்து வரும் என்று நம்பி னேன். என்னைப் பற்றித்தான், என் படிப்பிற்கு வேண் டிய பொருள் குறித்துத்தான் சரியான முடிவிற்கு வர இயலவில்லை.

10

செங்கண்ணன்

சென்னையை இதுவரை நான் கண்டதில்லை. அங்குப் போய் வந்தவர்கள் சென்னையைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்போதெல்லாம் 'பிக்பாக்கெட்' என்ற சொல்லையே அடிக்கடி கேட்டிருக்கிறேன். தமிழ்நாட்டின் தலைநகர் பற்றி அங்குப் போய் வந்த கிராம மக்கள் கருத்து அப்படி யாக இருந்தது.

அந்த ஊரில் சென்று தமிழ் ஆனர்சு மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டுமே! யாரிடம் சென்று கலந்து பேசலாம் என்று எண்ணியபோது தொண்டர் கோபாலன் நினைவு வந்தது. அவர் அடிக்கடி பல மாணவர்கள் மேல் படிப்புக்கு உதவியவர். திருவாரூர் சென்று ஒருநாள் அவரைக்கண்டு பேசினேன். என் ஆர்வத்தைப் பார்த்து என் எதிர்காலத் திட்டங்களைக் கேட்டு அவர் என்னைப் பாராட்டினார்.

'தம்பி! இதற்குமுன் சென்னைக்குப் போயிருக்கிறீர் களா?

'இல்லை. இதுதான் முதல் தடவை'

'யாராவது சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா?' மீண்டும் கேட்டார். நான் யோசித்தேன்.

'போகட்டும். நான் ஒன்று சொல்கிறேன். எனக்கு வேண்டியவர் ஒருவர் கடை பாரிமுனையில் இருக்கிறது.

அது ஒரு பெரிய கடை. வெளியூர்களிலிருந்து பலர் வந்து அங்கேயே தங்கி வாணிகம் செய்கிறார்கள். உணவு, உறைவிடம் எல்லாம் அவர்களுக்கு அங்கேயே. உங்களுக்கு உணவு விடுதியில் இடம் கிடைக்கும்வரை ஓரிரு வாரங்கள் நீங்கள் தங்கவும் உண்ணவும் உதவுமாறு அந்தக் கடை முதலாளிக்கு ஒரு கடிதம் தருகிறேன். சென்னை பெரிய ஊர். ஊர் பிடிபடுகிறவரை அங்குத் தங்கலாம்' என்று ஆதரவோடு கூறினார்.

'போகும்போது தவறாமல் தங்களைச் சந்தித்துக் கடிதம் பெற்றுச் செல்கிறேன்' என்று சொல்லி விடை பெற்றேன்.

நான் சென்னை செல்லும் செய்தி அறிந்து ஆசிரியர் முருகேசனார் ஒருநாள் மாலை என்னிடம் பேச வீட்டிற்கு வந்தார்.

'அவர் வந்தபோது பூங்கோதை தோட்டத்துக் கிணற்றில் தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தாள். ஆண்டாளைத் தூக்கி வைத்துக்கொண்டு அம்மா கொஞ்சிக்கொண்டிருந்தார். வயல்வெளி நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்த நான் அவரைக் கண்டு வணக்கம்-வாங்க' என்று சொல்லி வரவேற்றேன். அம்மாவும் வந்து வரவேற்றார்கள்.

'என்னம்மா...செங்கண்ணன் சென்னைக்குப் படிக்கப் போகிறானாமே! உண்மையா?'...என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டார். அம்மா ஒன்றும் பதில் சொல்லாது உள்ளே முருகேசனாருக்குப் பால் கொண்டுவரப் போனார்கள்.

நான் 'ஆமாம்' என்று தலையை அசைத்தேன்.

'தாயை இழந்து இன்னும் சில மாதங்கள்கூட ஆகவில்லை. பத்தாக்குறைக்கு அனாதைக் குழந்தை ஒன்னு' எல்லாம் இடையிலே தவிக்க விட்டுட்டு அப்படி என்னப்பா மேல் படிப்பு...நாங்கள் எல்லாம் பள்ளியிறுதி

வகுப்பு மட்டுமே படித்தோம். வாழவில்லையா - நீ இண்டர் மீடியட் வரைக்கும் படிச்சிருக்கே, போதாதா இந்தப் பட்டிக் காட்டுக்கு!' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

'மன்னிக்கணும். நான் அநாதைப் பள்ளியில் படித்தது உங்களுக்குத் தெரியும். இங்கும் எத்தனையோ ஏழைப் பிள்ளைங்க அநாதைகளைவிடக் கொடிய துன்பப்படு வதும் உங்களுக்குத் தெரியும். இந்தக் குழந்தைகள் துயரத் தைப் போக்கணும்.'

'அப்படி அன்பு மனைவியையும் அருமைத் தாயையும் கைக்குழந்தையையும் விட்டுட்டு, படிக்கிற படிப்பாலேயே நாட்டு வறுமையை நீக்கிவிட முடியும்னு நினைக்கிறியா?

'நாட்டையெல்லாம் திருத்திவிட முடியும்னு நினைக் கலே' ஆனால் எந்த நல்ல காரியத்தையும் செய்வதற்குப் பணமோ, பதவியோ, பட்டமோ வேண்டியிருக்கிறது. என்னால் திடீர் பணக்காரன் ஆக முடியாது. அரசியல் வாதியும் ஆக முடியாதுங்கிறது உங்களுக்கே தெரியும். அதனால்தான் படித்துப் பெரிய பட்டம் பெறும் இந்த வழியில் செல்லும்படி ஆகிவிட்டது.'

'பட்டம் பெற்றவன் எல்லாம் என்னப்பா சாதிச்சுட் டாங்க!'

'அப்படிச் சொல்லாதீங்க அய்யா! சாதித்தவங்கள்ளெ பலபேர் பட்டம் பெற்றவங்கதான். காமராஜர் போல் பெரியார் போல் ஒருத்தர் இரண்டு பேர் பட்டம் பெறாம லேயே பெருஞ்செயல் செய்திருக்கலாம். ஆனால் அவர் களும் அரசியல் பதவியால்தான் இதையெல்லாம் செய் தார்கள் அல்லவா?'

'என்னமோ அப்பா சொன்னேன். மனங்கேட்கலே அப்புறம் உன் விருப்பம்' என்று நொந்துகொண்டே எழுந்தார்.

'என்னவோ அய்யா! எனக்கும் பிடிக்கலை - அவன் பிடிவாதமா இருக்கான். அவளும் ஒத்துக்கிட்டா. கடவுள்

தான் காப்பாத்தணும்' என்று சொல்லிக்கொண்டே, கொண்டு வந்த பாலை அவருக்குக் கொடுத்தார்.

'எதுக்கும்மா இதெல்லாம்'... என்று சொல்லிக் கொண்டே வாங்கிக் குடித்துவிட்டுக் 'கடவுள்தான் காப்பாத்தணும். பெரிய ஊர் - எப்படிக் காசு பணம் இல்லாமே காலங்கடத்தப் போறியோ. எனக்குத் தெரிந்த தமிழ் ஆசிரியர் ஒருவர் அங்குக் கல்லூரியில் வேலை செய்கிறார். அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். போகும்போது வாங்கிக் கொண்டு போ, உதவியாக இருக்கும்' என்று ஆதரவோடு சில சொன்னார்.

'என்னவோ, குணாளனும் பி. டி. படிக்கச் சிதம்பரம் போறானாம். அவன் விடுதியில் தங்கிப் படிக்க ஆகும் செலவுக்குச் சிதம்பரத்திலேயே குடும்பத்தை வைத்திட லாம்னா, அதனால் நான் புறப்படுவதற்கு முன்னயே அவன் குடும்பம் ஊரைவிட்டுப் போயிடும் போல இருக்கு. நீங்கதான் பூங்கோதையையும் அம்மாவையும் பார்த்துக் கணும்.'

'என்னமோ அப்பா, அடிக்கடி நெஞ்சுவலி வருது. நாகை வைத்திலிங்கம் டாக்டர் ஓய்வாக இருக்கணும், இல்லாட்டி எந்த நிமிடமும் ஆபத்துன்னு சொல்றாரு. இந்த உயிர் இருக்கிறவரை பார்த்துக்கும். நீ இதுக்குச் சொல்லணுமா?' என்று சொல்லிப் புறப்பட்டார். அதற் குள் அங்கு வந்த பூங்கோதையைப் பார்த்து 'பாப்பா-தைரியமாயிரு-நான் இருக்கேன்'-என்று ஆறுதல் சொல்லி விட்டுப் போனார்.

மாதங்கள் நாட்களாகக் குறைந்து கொண்டு வந்தன. ஒரு நாள் தொண்டர் கோபாலன் என்னைத் தேடி வந்து ஒரு விண்ணப்பம் தந்தார். 'தம்பி' தூங்குவதற்கு இடமும் உண்பதற்கு உணவும் தந்து போற்றும் கிண்டியிலுள்ள விடுதி விண்ணப்பம் இது. இதில் உனக்குக் கிடைத்து விட்டால் அப்புறம் கவலையே இல்லை. அதில் இடம் கிடைக்க அங்கு எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர்க்குக்

கடிதம் எழுதுகிறேன். நீயும் நேரில் சென்று பார்'' என்று என்னை ஊக்கிவிட்டுச் சென்றார்.

கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறந்தது. புதிய பிள்ளைகள் பலர் வந்து சேர்ந்தனர். நான் சென்னை போவதை எப்படியோ தெரிந்து கொண்ட பழைய மாணவர் சிலர் பள்ளி திறந்ததும் என்னைச் சூழ்ந்து கொண்டு என்னென்னவோ கேட்டனர். 'போக வேண்டாம்' என்று வேண்டினர்.

'கவலை வேண்டாம். அவ்வப்போது வருவேன். மேலே நீங்களும் படிக்கவேண்டும் அல்லவா? அப்போது மேல் வகுப்பில் உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பேனே!' என்று ஆறுதல் சொன்னேன். பொன்னம்மாள், வள்ளி, மைதிலி. சேகர், குப்பன் எல்லோரும் கண் கலங்கினர். நான் மனதை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு ஆறுதல் சொன்னேன்.

கல்லூரி திறப்பதற்கு விண்ணப்பத்தில் கண்டபடி இன்னும் சில நாள்களே இருந்தன. தென்னந்தோப்புக் குடிசையைச் சீர் செய்தேன். பூங்கோதையையும் அம்மாவையும் ஆண்டாளையும் அங்குக் குடியேற்றினேன். தொண்டர் கோபாலன் வந்து ஒரு வாரத்திற்கு முன்பே என்னைப் புறப்படுமாறும், அப்போதுதான் விடுதியில் இடங் கிடைக்க நேரில் சென்று அங்கு முயலக்கூடும்' என்றும் வற்புறுத்தினார். நானும் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலானேன்.

பூங்கோதையும் அம்மாவும் எனக்கு வேண்டிய ஒவ்வொரு சிறு பொருளையும் நன்றாகத் துடைத்து, துணிகளைத் துவைத்துப் பெட்டியில் எடுத்து வைத்தார்கள். ஒவ்வொரு நாளும் எனக்குப் பிடித்த ஒவ்வொரு பலகாரம் செய்தார்கள். வீட்டிற்குள் நுழைந்து வெளியே போகும் வரை நகமும் சதையும் போல் பூங்கோதை என்னைப் பிரியாமல் நான் இருக்கும் இடத்திலேயே வந்து வந்து

நின்றாள். அவள் அப்படி என் அருகிலேயே இருக்க விரும்புவதைப் பார்த்து அம்மா ஒதுங்கிக் கொண்டார்கள். புறப்படவேண்டிய முதல் நாள் இரவு எனக்குப் பிடித்த இடியாப்பமும் அவல் பாயாசமும் அம்மாவும் பூங்கோதையும் செய்திருந்தார்கள். 'எல்லோரும் சேர்ந்து உண்போம்' என்றேன். தென்னைமரச் சோலையில் நிலவொளியில் அமர்ந்தோம். வாழை இலையில் பூங்கோதை பரிமாறினாள். பாட்டி மடியில் ஆண்டாள் அமர்ந்து கொண்டு இலையில் கைவைத்து இடியாப்பத்தை எடுத்து எனக்கும் பூங்கோதைக்கும் ஊட்டினாள். பீறிட்டுக் கொண்டு வரும் கண்ணீரைப் பூங்கோதை மெல்லத் திரும்பி முந்தானையால் துடைத்துக் கொண்டாள். அதைக் கண்டு என் கண்களும் கலங்கின. இதைக் காண முடியாமல் மெல்ல ஆண்டாளைத் தூக்கிக் கொண்டு அம்மா அப்பால் போனார்கள். உடனே பூங்கோதை தேம்பித் தேம்பி அழுது கொண்டே என் மடியில் சாய்ந்தாள். அவள் முகத்தை வருடிவிட்டுக்கொண்டே,

'பூங்கோதை! சென்னைப்பட்டினம் இங்கிருந்து ஒரு இரவுப் பயணம், அவ்வளவுதான். நீ ஒரு தந்தி கொடுத்தால் அடுத்த மணி எனக்கு அங்குக் கிடைத்துவிடும். உடனே புறப்பட்டு வந்து விடுவேன்!' என்று ஆறுதல் சொல்லித் தேற்றினேன். மெல்ல மெல்ல இடியாப்பத்தைப் பிய்த்துத் தேங்காய்ப்பால் தொட்டு அவள் வாயில் ஊட்டினேன். அவளும் அதைப்போல் செய்தாள். இப்படி அழுகையிலும் அன்பிலும் சிறிது உண்டோம். உண்டபின் அப்படியே தன் தலையைன் மடியில் வைத்துக் கொண்டு படுத்து விட்டாள் மெல்ல அவள் முதுகைத் தட்டிக் கொடுத்துச் சிறுகுழந்தையை உறங்க வைப்பது போல் உறங்க வைத்தேன் 'தபால் தந்தி, பேருந்து இல்லாத அந்தக் காலத்தில் பிரிவைத் தாங்க இயலாமல் பெண்கள் கலங்கினர்' என்று தமிழாசிரியர் சொல்லுவார். எல்லாம் உள்ள இந்தக் காலத்திலும் கலங்கத்தான் செய்கின்றனர். பெண்கள் உள்ளம் மென்மையான கொடி போன்று உள்

ளது. சிறு காற்றிலும் அது ஆடி அசைந்து அல்லல் படுகிறது' என்று எண்ணியவாறு அங்கேயே படுத்து அவளோடு நானும் உறங்கிவிட்டேன்.

எல்லோருக்கும் முன்னதாக நானே எழுந்தேன். பூங்கோதை இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். அம்மா குடிசை முற்றத்தில் சாணம் தெளித்துக் கூட்டிக்கொண் டிருந்தார்கள். நான் வாய்க்கால் கரைக்குப் போனேன். அப்படியே குணாளன் வீட்டுக்குப் போய் அவனையும் எழுப்பிக் கொண்டு போனேன்.

'ஒரு வருடம் நீயோ நானோ நம் படிப்பைத் தள்ளிப் போட்டால் எவ்வளவோ நன்மை. பி. டி.க்கு இடம் கிடைப்பது அருமை. யார் யார் தயவாலோ கிடைத்திருக் கிறது செங்கண்ணா! நீதான் தள்ளிப் போடேன்!'

'இந்தக் காலத்தில் நீயும் பூங்கோதை போலத் தடு மாறுகிறாயே. நினைத்தால் மூன்று நான்கு மணி நேரத்தில் நீ இங்கு வர முடியும். ஏழெட்டு மணி நேரத்தில் நான் மீள முடியும். நீயும் படிக்கப் போ. நானும் போகிறேன். அடுத்த மாதம் இங்கேயே குடிவந்துவிடு. முன்போல் வாழ்வோம்' என்றேன்.

என்றாலும் அன்றாடம் நடந்து மகிழும் வயல் வெளி களையும், அமர்ந்து படிக்கும் தென்னந்தோப்பையும், நீந் திக் குளிக்கும் திருக்குளத்தையும் நினைந்து என் நெஞ்சும் கலங்கத்தான் செய்தது. ஒருவாறு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குணாளனோடு வீட்டுக்குப்போனேன். இரவு போல் இல்லாமல் எல்லோரும் கலகலப்பாக இருந்தனர். பூங்கோதை மஞ்சள் பூசிக் குளித்து விட்டு ஈரக் கூந்தலை எடுத்துச் செருகிக் கொண்டு தெய்வமகள் போல என் முன் வந்து நின்றாள். அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும் ஆர்வத்தில் விழித்துப் பார்த்தேன். பக்கத்தில் குணாளன் இருப்பதை அவள் குறிப்பால் உணர்த்தினாள். அன்று உணவு உண்பதற்கு முன்

கண்ணன் படத்தின் முன் நின்று மனம் உருகப் பல்லாண்டு பாடினாள். என்றும் இல்லாமல் அன்று துளசித் தீர்த்தத்தை என் கையில் கொடுத்துவிட்டுக் காலில் விழுந்து சேவித்தாள். 'பூங்கோதை! பூங்கோதை எழுந்திரு...' என்று...ஒரு கையில் துளசித் தீர்த்தத்தை ஏந்தியபடி மறுகையால் அவளை எழுப்பினேன். எழுந்தவள் முந்தானையை எடுத்துச் சோற்றுக்கையின் கீழும் இடக்கையின் மேலும் வைத்துக் கொண்டு உருக்கத்துடன் என்னிடம் துளசித் தீர்த்தம் கேட்டாள். மூன்று முறை வாங்கிக் குடித்துத் தலையில் தெளித்துக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டு அதன் பிறகு எங்கள் அனைவருக்கும் தீர்த்தம் வழங்கினாள்.

குணாளனும் உடன் இருந்ததால் காலைச் சிற்றுண்டி எந்தக் கலவரமும் இன்றி நிகழ்ந்தது. ஏதோ யந்திரம் போல் ஒவ்வொருவரும் அவரவர் வேலையில் ஈடுபட்டோம்.

பள்ளியிலிருந்து விலக்குப் பெற்றுக் கொண்டு இறுதி நேர வகுப்பையும் முடித்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன். புகை வண்டிக்கு நேரமாகி விட்டது என்று குணாளன் விரைவுபடுத்தினான். வீட்டைச் சுற்றிக் குழந்தைகள் கூடி விட்டனர்; என்னோடு அந்தக் கூட்டமும் சேர்ந்து புறப்பட்டது. பண்ணைக்கார சேகர் இரட்டை மாட்டுச் சவாரி கொண்டு வந்து தயாராக வீட்டு வாசற் படியில் நிறுத்தி வைத்திருந்தான்.

'சேகர்! நான் நடந்தே போகிறேன் நீயும் வா' என்று எல்லாக் குழந்தைகளோடும் நடந்தே புறப்பட்டேன். பூங்கோதை என் பெட்டியையும், அம்மா ஆண்டாளையும் தூக்கிக் கொண்டு என்னைப் பின் தொடர்ந்தனர். பெட்டியை என்னிடம் தந்துவிட்டு சும்மா நடந்து வரும் படி பூங்கோதையிடம் கேட்டேன். கண்கலங்கியபடி மறுத்து விட்டுத் தானே தூக்கிக் கொண்டு வந்தாள்.

துன்பம் துணையாகக் கேட்டுப் பெறும் அந்தப் பெண்மை அன்பை என்னால் மாற்ற இயலவில்லை.

அன்று மாலை புகைவண்டி நிலையம் விழாக்களம் போல ஒரே கூட்டமாய் இருந்தது. 'இத்தனை அன்புள்ளங்களைப் பிரிந்து போய்ச் சென்னையில் என்ன சாதித்து விடப் போகிறாய்' என்று என் உள் மனம் என்னைக் கேட்டது. நேரம் நெருங்க நெருங்கக் குழந்தைகளின் கலக்கம் அதிகமாகிக் கொண்டு வந்தது. வண்டியும் வந்தது. பூங்கோதை, அம்மா, ஆண்டாள் ஆகியோரை அருகில் அழைத்து குணாளா! போய்வருகிறேன். நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும்!' என்று சொல்லி வண்டியில் கால் எடுத்து வைத்தேன். சட்டென்று என் இருபாதங்களிலும் தன் முகத்தை ஒற்றிப் பூங்கோதை எழுந்தாள். அவள்கையில் குங்குமமும் பூவும் இருந்தன. அவை ஏன் என்று எனக்குத் தெரியும். பொட்டிட்டு அந்த மல்லிகைப் பூவில் இரண்டெடுத்து அவள் கூந்தலில் வைத்தேன். அவள் சிரித்தாள். நான் சிந்தித்தேன். அப்போது பொன்னம்மாள் ஓடிவந்து இரண்டு பொட்டலங்களைக் கொடுத்தாள். எல்லோரிடமும் யாரோ ஒரு சிறுமி கவர் ஒன்று கொடுத்தாள். விடைபெற்றுக் கொண்டேன். வண்டி எங்களைப் பிரித்தது. கண்விட்டு மறையும் வரை அவள் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். மெல்ல மெல்லக் கரைந்து கரைந்து ஒரு புள்ளிபோல் அவள் தோன்றி இறுதியில் கண்விட்டே மறைந்து விட்டாள். ஆம், என்கண் விட்டே மறைந்து விட்டாள்.

கண்விட்டு எல்லாம் மறைந்த பின்பு கருத்துலகில் மன நினைவில் எல்லோரும் கூடிக் கோவென்று அழுவது போல் இருந்தது. குப்புறச் சாய்ந்து கொண்டு நானும் தேம்பித் தேம்பி அழுதேன். பிறர்க்கு ஆறுதல் சொன்ன அறிவு என்னைக் கைவிட்டு விட்டது. பூங்கோதையை நினைத்தேன்.

அழுகின்றேன் அழுகின்றேன் அடக்க முடியவில்லை
அன்புயிரே உனைவிட்டு ஏன்வந்தோமென்று
அழுகின்றேன் அழுகின்றேன் அடக்க முடியவில்லை

(அழுகின்...)

வான்புகழ்க்கும் வண்பொருட்கும் வாய்க்காத அன்பு
ஈவயத்தில் சிலருக்கே வாய்க்கும் நல்லன்பை
ஏன்விடுத்தேன் ஏன்விடுத் தேன் ஏன்விடுத்தேனென்று

(அழுகின்...)

பட்டினியாய்க் கிடந்ததுண்டு பரிதவித்ததில்லை...
பாழ்பட்ட வறுமையிலும் நான் அஞ்சவில்லை
வாழ்வான ஊனுயிரே உன்பிரிவாலின்று

(அழுகின்றேன்...)

என்று அழுகை பாட்டாகிக் கண்ணீரோடு இப்படி அழுது கொண்டே தூங்கிப்போனேன். உலகத் துன்பத்திலிருந்தும் துயரிலிருந்தும், பொய் பொறாமையிலிருந்தும், ஆசை அச்சத்திலிருந்தும் விடுதலை தரும் அந்தத் தூக்கத்தாய் என்னையும் சிறிது நேரம் அரவணைத்து ஆட்கொண்டு விட்டாள்.

யாரோ கூட்டமாக வந்து நான் இருந்த பெட்டியில் முட்டி மோதிக்கொண்டு ஏறியபோது ஏற்பட்ட கூக் குரலில் திடுக்கென்று கண்விழித்தேன். நான் உறங்கும் இடம் தென்னந் தோப்பு அன்று, புகைவண்டி என்று உணர்ந்தேன். பெட்டியையும் பையையும் நினைத்தவுடன் தூக்கம் பறந்தோடிப் போய்விட்டது. 'இரவில், யாரேனும் எடுத்துக்கொண்டு இறங்கிவிடுவார்கள் செங் கண்ணா! விழிப்பாக இரு' என்று அம்மா சொன்னதுநினை வுக்கு வரவே, தாகூரின் கீதாஞ்சலியை எடுத்துப்படித்துக் கொண்டே கண்விழிக்கலானேன். வாழ்வில் ஏதோ அழியாத பொருள் ஒன்று உடல்கள் சிதையச் சிதைய

அவற்றை மாற்றிக் கொண்டு தான் மட்டும்தொடர்ந்து வாழ்வதுபோலப் புகைவண்டியும் ஒவ்வொரு நிலையத்தை விட்டுவிட்டுப் புறப்பட்டுப் போய்க்கொண்டே இருந்தது. தொண்டர் கோபாலன் அறிவுறுத்தியபடி தாம்பரத்தில் இறங்கி மின்வண்டியில் மாறிச் செல்ல எண்ணினேன். மின் வண்டி தயாராகக் காத்திருந்தது. ஆனால் என்னோடு இறங்கிய காய்கறிக் கூடைக்காரர் சிலர் பேட்டி போட்டுக்கொண்டு முன்னேறினர்.பெட்டியையும் பையையும் தூக்கிக் கொண்டு என்னால் ஓடி ஏற இயலவில்லை. 'அடிக்கடி மின் வண்டி வரும், மெல்ல ஏறிப்போ. படப் படப்பாக ஏறாதே' என்று அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. அப்படியே காத்திருந்து அடுத்த வண்டியில் ஏறிக் கடற்கரை நிலையத்தை அடைந்தேன்.

எல்லோரும் பரபரப்புடன் இறங்கிக் கொண்டிருந் தனர். அவர்கள் பரபரப்பு தொத்து நோய்போல் என்னை யும் பற்றிக் கொண்டது. ஊரையும் உறவையும் மறந்து விட்டேன். இடம் கண்டுபிடிக்க வேண்டுமே என்ற எண்ணம் என்னை முழுவதும் ஆட்கொண்டது. பின்னி ருந்து தள்ளுகின்ற கூட்டத்தின் இடையில் அகப்பட்ட என்னை அந்தக் கூட்டம் மின்வண்டி நிலையத்திற்கு வெளியே கொண்டு வந்து சேர்த்தது. எங்கள் ஊர் வெள்ளத்தில் அடித்துக்கொண்டுவரும் மரம் மட்டைகளை நீந்திச் சென்று தாவிப் பற்றி இழுக்கும் இளைஞர்களைப் போல இரண்டு மூன்று ரிக்ஷாக்காரர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு பெட்டியையும் பையையும் இழுத்தனர். சுற்றும் முற்றும் பார்த்தேன். ஏன் என்று கேட்பார் யாரும் இல்லை. சிலர் டாக்சியில் ஏறி விரைந்து கொண்டி ருந்தனர். பலர் ரிக்ஷாவில் உட்கார்ந்து போயினர். ஒருத்தனை நான்கு பேர் தூக்கும் பல்லக்கு நாகரிகத்தை விட நான்கு பேரை ஒருத்தன் இழுக்கும் ரிக்ஷா நாகரிகம் மிகமிகக் கொடுமையானது என்று எண்ணியபடியே பெட்டியையும் பையையும் பிடித்துக் கொண்டிருந்த

ரிக்ஷாக்காரர்களைப் பார்த்து 'நான் நடந்தே போய்விடுகிறேன்பா' என்று முன்னேறினேன். உடனே அந்த இருவருள் ஒருத்தன் முன்னே ஓடிவந்து,

'ரூம் வேணுமாங்க. மலேசியா, கேரளா சரக்குங்க'... என்றான்.

எங்களூர்ப் பக்கம் வெளிநாடுகளிலிருந்து பேனா, லுங்கி, ரேடியோ, டேப்ரிக்கார்டு, கைக்கடிகாரம் எல்லாம் மலேசியா சிங்கப்பூரிலிருந்து வந்து விற்பனையாகும். அதை நினைத்துக்கொண்டு ஒரு நல்ல பேனா வாங்கிக் கொள்ளலாம் எனறு நினைத்து, 'எங்கப்பா இருக்கு. காட்டு பார்க்கலாம்' என்றேன்.

'அதெப்படீங்க இங்கே காட்றது. ரூமுக்கு வாங்க. சும்மா ஆப்பிள் பழம் மாதிரி தளதளன்னு இருக்கும்' என்று கண்ணடித்தான். அவன் என்ன குறிப்பிடுகிறான் என்று தெரிந்து கொண்டு 'அப்பா...அதெல்லாம் வேணாம்'...என்று பதிலுக்கு எதிர்பாராமல் விடுவிடு என்று குறுக்காக நடந்து சாலையைக் கடந்தேன்.

'டேய்! சோதாப் பசங்ககிட்டே ஏண்டாபேசி, போது போக்றே...அதோ பார் சரிகை வேட்டி ஆசாமி ஊருக்குப் புதுசு போல இருக்கு...அங்கே...போ...' என்று எவனோ கூவியது காதில் விழுந்தது.

அங்கே இருந்த ஒரு வெற்றிலை பாக்குக் கடைக் காரரிடம் தொண்டர் கோபாலன் கூறிய முகவரி கூறி அந்தக் கடை எங்கே இருக்கிறது என்று கேட்டேன். நேரே ஒரு பர்லாங்கு மேற்கே போய்விசாரிக்கச் சொன்னார். அப்படியே அங்கே நின்று கொண்டிருந்த பெரும் பெரும் கூட்டங்களைப் பார்த்துக்கொண்டே கொஞ்ச தூரம் போய் விசாரித்தேன். 'அதோ அந்தப் பச்சைப் பெயிண்ட் அடித்திருக்கே அதுதாம்பா' என்று

ஒருவர் காட்டினார். அந்தக் கடைமுன் போய் நின்றேன் வயதான வேலைக்காரி ஒருத்தி தெருக் கூட்டிக் கொண்டிருந்தாள். கடைமூடியிருந்தது. 'கடையில் யாரும் இல்லிங்களா...?' என்று கேட்டேன்.

கூட்டிக் கொண்டிருந்த அந்த அம்மா குனிந்தபடியே தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தார்கள். கையில் பெட்டியும் பையுமாக நிற்பதைப் பார்த்து 'எல்லோரும் உள்ளே தூங்குறாங்க, தட்டுங்க' என்றார்.

சற்றே திறந்திருந்த அந்தக் கம்பிக் கதவுகளுக்கு இடையே மெல்ல நுழைந்து போய் 'அய்யா அய்யா!' என்று மெல்லக் கடைக்கதவைத் தட்டினேன்.

ஒருவர் கடையில் ஒரு பலகையை எடுத்துக் கொண்டு அரைகுறைத் தூக்கத்தோடு தலையை நீட்டி யாரப்பா நீ காலையிலே தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார். அவரிடம் தொண்டர் கொடுத்த கடிதத்தைக் கொடுத்தேன்.

'கோபால் கொடுத்தாரா...!''

'முதலாளியைப் பார்க்கணும்' என்று முணுமுணுத் துக்கொண்டே கடிதத்தோடு உள்ளே போனவர் சற்று நேரம் கழித்து 'முதலாளி எங்கோ வெளியே போயிருக் காரு. நீ வா' என்று அழைத்துக் கொண்டு மேல் மாடிக்குச் சென்றார். 'இதில் தங்கியிரு' என்று சொல்லிவிட்டுக் கீழே போய்விட்டார்.

நான் மேலே இருந்தபடியே பையிலும் பெட்டியிலும் இருந்தவற்றை ஆராய்ந்தேன். மேலேயே இரண்டு பொட்டலங்கள் பையில் அப்படியே இருந்தன. பிரித்துப் பார்த்தேன். ஒன்றில் மணிலாப்பயறு வறுத்து, தோல் நீக்கி, பழுப்பு கலந்த மஞ்சளாக இருந்தது. இன்னொரு பொட்டலத்தைப் பிரித்தேன். அதில் பேரீச்சம்பழம் இருந்தது. என்னைப் பற்றிப் பொன்னம்மாள் எவ்வளவு

தெரிந்து வைத்திருக்கிறாள் என்று அவள் அன்பை வியந்தேன்.

அவற்றுக்குக் கீழே ஒரு சின்னப்பை இருந்தது. மெல்ல அமுக்கிப் பார்த்தேன். அதில் அவல் இருந்தது. அருளாளருக்காகப் பூங்கோதை வைத்தது அது அந்தப் பை ஓரத்தில் கவர் ஒன்று செருகியிருந்தது. யாரோ ஒரு பெண் ஓடிவந்து கொடுத்தது நினைவுக்கு வந்தது. உள்ளே என்ன இருக்கும் என்று ஆர்வத்தோடு அதைப் பிரித்துப் பார்த்தேன். அதில் இயேசு நாதர் சிலுவை யைச் சுமந்து கொண்டு மலைமேல் ஏறும் ஒரு படம் இருந் தது. அதன் கீழே, 'இருதயத்தில் இரக்கமுடையோர் பாக்கியவான்கள்; ஏனெனில் பரலோக ராஜ்யம் அவர் களுடையது' என்று எழுதியிருந்தது. வேறு ஒன்றும் இல்லை. யார் அந்தப் பெண் என்று நினைவுகூட்டிப் பார்த்தேன். நினைவில் வரவில்லை. புரட்டிப் புரட்டிக் கையெழுந்து ஏதாவது இருக்குமோ என்று கீழும் மேலும் பார்த்தேன். ஒன்றும் இல்லை. 'இருதயத்தில் இரக்க முடையோர் பாக்கியவான்கள். அவர்கள் தங்களைக் காட்டிக் கொள்ள மாட்டார்கள்' என்று எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன். பொல பொல என்று உதிர்ந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். பூங்கோதை கண்முன் நிற்பது போல் தோன்றியது. இந்நேரம் சாணந்தெளித்து, கோலம் போட்டு குளித்து, விளக் கேற்றிப் பொட்டுப் பூவும் வைத்துக்கொண்டு சின்னக் கண்ணன் படத்தின் முன் 'பல்லாண்டு பாடுவாளே' என்று நினைத்தேன். 'ஓ' என்று வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது. இனித் தனிமை தாங்காது என்று அறையிலிருந்து உள்பக்கப் படிவழியே கீழே இறங் கினேன். பலர் கிணற்றில் தண்ணீர் இழுத்துக் குளித்துக் கொண்டிருந்தனர். நானும் காலைக்கடன்களை முடித்து விட்டு அழுக்கேறிய என் ஆடைகளைத் துவைத்துக் காய வைத்துவிட்டுக் குளிக்கத் தொடங்கினேன். அப்போது

யாரோ ஒருவர் 'கோபால்பிள்ளை அனுப்பிய ஆள் நீ தானே' என்று கேட்டுக் கொண்டே என்னிடம் நெருங்கினார். மற்றவர்கள் ஒதுங்கி வழி விட்டனர். அவர் தான் தொண்டர் கோபால் சொன்ன முதலாளியாக இருக்க வேண்டும் என்று எண்ணி 'ஆமாங்க! வணக்கங்க' என்றேன்.

'சரி' விடுதியில் இடம் கிடைக்கும் வரை ஒருவாரம் இங்கே தங்கியிருக்கலாம். உணவு நேரங்களை அறிந்து கொண்டு நேரந்தவறாது வந்து சாப்பிட்டு விடுங்கள். வெளியே எங்காவது போய்வர வேண்டும் என்றால் நேரமாகும் என்றால் சமையற்காரரிடம் சொல்லி விட்டுப் போங்க' என்றார்.

'சரிங்க' என்று தண்ணீர் மொண்டு தலையில் ஊற்றிக் கொண்டே தலையை ஆட்டினேன்.

காலையில் சிற்றுண்டி முடிந்ததும் பூங்கோதை, தொண்டர் கோபாலன், ஆசிரியர் முருகேசனார் ஆகியோருக்குக் கடிதம் எழுதினேன். பள்ளிக் குழந்தைகளுக்கும் என் உள்ளம் படுந்துயரை அப்படியே எழுதி அனுப்பினேன்.

கடிதங்கள் எழுதி முடிந்ததும் இலவச உணவு விடுதியில் சேருவதற்கான முயற்சியில் ஈடுபட்டேன். தொண்டர் கோபாலன் குறிப்பிட்ட நண்பர் வீடு அதே தெருவில் இருந்ததால் எளிதாகக் கண்டு பிடித்துவிட்டேன். என் நல்ல காலம். அவரும் அதுவரை எங்கும் போகாமல் வீட்டிலேயே இருந்தார். தொண்டர் கோபாலன் கொடுத்த கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அதனைப் பிரித்துப் பாராமலே 'கோபால் பிள்ளையா அனுப்பினார்? சொ. ந. கடையில் தானே தங்கியிருக்கிறாய்' என்று ஆதரவோடு கேட்டார்.

'ஆமாம்' என்று தலை அசைத்தேன்.

'எனக்கும் கோபால் பிள்ளை ஒரு கடிதம் எழுதி உள்ளார். அந்த விடுதியில் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்

மூவரும் எனக்குத் தெரிந்தவுங்கதான். என்னமோ என்னால் முடிந்தவரை எடுத்துச் சொல்றேன். அதற்கப் புறம் உன் அதிர்ஷ்டம்' என்று சொல்லி பள்ளியிறுதி. இண்டர்மீடியட் மதிப்பெண்களை வாங்கி உன்னிப்பாகப் பார்த்தார்.

'தரக்கேடில்லை. மார்க்கு எல்லாம் நன்றாகவே வாங்கியிருக்கிறாய். நாளைக்கு வா. போய்ப் பார்க்கலாம். அதற்குள் அவர்கள் எல்லாம் ஊரில் இருக்கிறார்களா என்று தெரிந்து வைத்துக் கொள்கிறேன்' என்று என்னை அன்போடு அனுப்பி வைத்தார்.

எனக்குக் கடிதம் கொடுத்ததோடு தாமும் அவருக்கு நேரில் கடிதம் எழுதித் தொண்டர் கோபாலன் பரிந்துரைத்திருப்பது கேட்டு நெகிழ்ந்து போனேன். 'உண்டால் அம்ம இவ்வுலகம்' அந்த இளம் பெருவழுதியின் அழியாத் தொடர் நெஞ்சில் அலை மோதியது. அங்கும் இங்கும் சிறிது சுற்றிப் பார்த்துவிட்டு நண்பகலில் கடையை அடைந்தேன். எல்லோரும் உணவு உண்டு கொண்டிருந்தனர். உட்கார இடம் இல்லாததால் மேலே என் அறைக்குச் சென்று சட்டையைக் கழற்றி வைத்து விட்டு யாரேனும் அழைப்பார்கள் என்று சிறிது நேரம் காத்திருந்தேன். யாரும் கூப்பிட வராது போகவே நானே கீழே இறங்கிப் போனேன். எல்லோரும் சாப்பிட்டு முடித்து விட்டுத் துண்டை விரித்து அங்கும் இங்கும் நடையில் படுக்கத் தொடங்கினர். என்னைப் பார்த்ததும் ஒரு மூலையில் சமையற்காரர் இலை போட்டார். நான் யந்திரம் போல் அமர்ந்தேன். அவரும் யந்திரம் போலப் பரிமாறினார். பூங்கோதையையும், அம்மாவையும் நினைத்துக்கொண்டேன். அழுகையும் ஆத்திரமும் வந்தன. தொண்டை அடைத்தது. மெல்லச் சமாளித்துக் கொண்டு ஒருவாறு உண்டு முடித்தேன். உண்டதும் முதல் நாள் இரவு சரியாகத் தூக்கம் இல்லாததால் படுத்துத் தூங்கி விட்டேன். பிற்பகல் தூக்கம் கலைந்து எழுந்

தேன். கீழே இறங்கி முகம் கழுவினேன். எல்லோருக்கும் போல் எனக்கும் சமையற்காரர் காப்பி கொண்டு வந்தார்.

'இல்லே வேண்டாங்க' என்றேன்.

'ஏன்...' என்று வியப்போடு கேட்டார்.

'குடிக்கும் வழக்கம் இல்லை'

'அப்பொ என்னதான் குடிக்கும் வழக்கம்'

'மோர், பால் குடிப்பேன்.

'சரி-மோர் தருகிறேன்...'

என்று உள்ளே போய் நண்பகல் சாப்பாட்டிற்குப் போக மிகுந்திருந்த மோரில் கொஞ்சம் கொண்டுவந்து கொடுத்தார். குடித்துவிட்டு அருளாளரைப் பார்க்கப் புறப்பட்டேன். புறப்பட்டுச் சிறிது தூரம் போவதற்குள் மழை 'சோ' என்று பிடித்துக்கொண்டது. அருகிலிருந்த ஒரு கடை முனையில் ஒதுங்கினேன். வெகு நேரம்வரை மழை விட்டபாடில்லை. மணி ஐந்துக்குமேல் ஆகிவிட்டது. என்னைப்போல் ஒண்டிக் கொண்டிருந்தவர்கள் சிலரிடம் அருளாளர் பற்றிக் கேட்டேன். யாரோ மாணவர் ஒருவர் அவர் வீட்டுக்குச் சரியான வழி சொன்னார்.

மழையும் குறையத் தொடங்கிற்று. 'சர்'ரென்று வேகமாக தொடங்கிய மழை மெல்லத் தூறத் தொடங்கியிருந்தது. அந்த மாணவர் சொன்னபடி கோட்டை மின் வண்டி நிலையத்தை அடைந்து வண்டி ஏறி மாம்பலத்தில் இறங்கினேன். விசாரித்துக் கொண்டே நீண்ட தூரம் நடந்தேன். பனகல் பூங்காவை அடைந்து அவர் பற்றிக் கேட்டேன். உடனே ஒருவர் 'அதோ குழாய் விளக்கு எரிகிறதே! அங்கே போய்க் கேளுங்கள்' என்றார். குண்டும் குழியுமாக இருந்த பகுதியைக் கடந்து அந்த விளக்கு மரத்தடியில் நின்று கொண்டு அருகில் சென்று கொண்டிருந்த இளைஞனைப் பார்த்து அருளாளர் வீடு பற்றிக் கேட்டேன். அவன் மகிழ்ச்சியோடு என்னை

அழைத்துக் கொண்டு போய் அருளாளர் வீட்டுமுன் நிறுத்தி 'அய்யா! அய்யா! யாரோ தங்களைத் தேடிக் கொண்டு வந்திருக்காங்க' என்றான்.

''வாப்பா—இளங்கோ—யாரது...?'என்று எழுந்து தெருவிளக்கைப் போட்டபடி என்னை நோக்கி வந்தார். 'ஓ...செங்கண்ணனா! எப்போ சென்னைக்கு வந்தே. வா! கொஞ்சம் இருங்க. பிறகு ஓய்வாகப் பேசுவோம். வந்து விடுகிறேன். தம்பி,நாவுக்கரசு மூன்று நாற்காலி கொண்டு வா!'...என்று உள்ளே போனார். வந்த அந்த இளைஞர் எங்கோ விரைவாகப் போகவேண்டும் என்று விடை பெற்றுச் செல்லவே, நான் மட்டும் வீட்டின் முன் அமர்ந் தேன். சுற்றும்முற்றும் பார்த்தேன். குடிசைகளுக்கு இடையே அதுவும் ஒரு குடிசையாக இருந்தது. ஆனால் அழகாக இருந்தது. சுற்றிலும் தூய்மையாக இருந்தது. முற்றத்தில் வேப்பமரமும் புங்கமரமும் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தன. தோட்டத்துத் தென்னை மரங்கள் தெருவிளக்கில் நன்கு தெரிந்தன. மெல்ல வீட்டின் முகப் பைப் பார்த்தேன். 'மு. அருளாளன்—தமிழாசிரியன்' என்று மட்டும் இருந்தது. இவ்வளவு அடக்கமான, ஒடுக்க மான குடிசையில் வாழ்கிறாரே என்று வியந்தேன். காந்தி யடிகளின் 'வார்தா' குடிசையை நினைத்துக்கொண்டேன். பட்டம் பெற்றுப் பலம் பெற விரும்பி வந்த என் நிலை யையும் நினைத்துக் கொண்டேன். 'எப்போது வந்தாய்?' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். 'எங்கே தங்கியிருக் கிறாய்? உணவு வசதி எப்படி?'என்றெல்லாம் ஒன்றுவிடா மல் உருக்கத்தோடு கேட்டுத் கொண்டே அருளாளர் வந்தார். எல்லாம் சொன்னேன்.

'இலவச உணவு விடுதியில் இடங்கிடைத்தால் இங்குச் சென்னையில் தங்கிப் படிக்கலாம் — இல்லாவிட்டால் ஊருக்குப் போவதுதான் நல்லது?' என்று அன்று ஊரில் சொன்னதையே மீண்டும் வலியுறுத்தினார்.

'எப்படியும் கிடைத்துவிடுங்க' என்று சொல்லி 'கல் லூரியில் எப்போது சேரணும்' என்று கேட்டேன்.

'விண்ணப்பம் அனுப்பி விட்டாய் அல்லவா?'

'அனுப்பி விட்டேன். ஆனால் அழைப்பு ஒன்றும இல்லை.'

'அனுப்பியிருப்பார்களே! அதற்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டா. செல்லான் கட்டிய சீட்டு இருக்கிறது அல்லவா? அது போதும்...'என்றார்.

'இருக்கிறதுங்க'...என்று எடுத்துக்காட்டப் போனேன். 'வேண்டாம்' என்று கைகாட்டி மறுத்துவிட்டு 'நாளைக்குக் கல்லூரி திறந்துவிடுவாங்க. ஓரிரு நாட்களில் சேர்ந்துவிட வேண்டும், அப்புறம் இடம் கிடைக்காது!' என்றார்.

'சரி நாளைக்கே சேர முயல்கிறேன்' என்று புறப்பட்டேன்.

'எழில்! எழில்!' என்று கூப்பிட்டார்.

'இதோ இலை போட்டிருக்கேன்' என்று உள்ளேயிருந்து பதில் வந்தது.

'வாப்பா, வா சாப்பிடுவோம்' என்று அழைத்தார்.

''இல்லைங்க. நான் தங்கியிருக்கிற கடையில் எனக்குச் சோறு எடுத்து வைத்திருப்பாங்க. வீணாய்ப் போய்விடும்' என்று சொல்லித் தயங்கியபடியே நின்றேன்.

'என்னப்பா! என்ன வேண்டும்' என்று கேட்டார். 'ஒன்றுமில்லைங்க' என்று அருளாளருக்குக் கொடுக்கும்படி என் மனைவி கொடுத்தனுப்பிய அவல் பொட்டலத்தைத் தந்தேன். பிரித்துப் பார்த்த அவர் 'எனக்கு இது நிரம்பப் பிடிக்குமே' என்று சொல்லியபடி வாய் நிறைய அள்ளிப் போட்டுக் கொண்டு எனக்கு விடை தந்தார். அவர் அன்பையும் பண்பையும் வியந்தவாறு அரண்மனைக்காரத் தெருவை அடைந்து நான் தங்கியிருந்த கடைக்குவந்தேன்.

'ஏன் இவ்வளவு நேரம்? எல்லோரும் உண்டு விட்டார்கள்...' என்று சமையற்காரர் கேட்டார்.

'இங்கு மாம்பலத்தில் அருளாளர் என்று ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். அவரைப் பார்க்கப் போனேன். மழை பிடித்துக் கொண்டதால் நேரமாகி விட்டது' என்றேன்.

'அருளாளரா? கதை கட்டுரைகள் எல்லாம் எழுது வாரே அவரா!...' என்று ஆர்வத்தோடு கேட்டார்.

'ஆமாம். உங்களுக்கு அவரைத் தெரியுமா!' தெரியும் என்பது போல் புருவத்தை மேலே உயர்த்தித் தலையை மெல்ல அசைத்து 'அவர் கதைகளையெல்லாம் தவறாமல் படிப்பேன். என் வாழ்க்கை இப்படி அமைதியாகப் போவதற்கு அவர் கதைகளே காரணம்' என்று கூறிச் சாப்பாடு போட்டார்.

இப்படி எல்லாரையும் கவர்ந்த அந்தப் பெரியவர் அன்பு எனக்கும் கிடைத்துள்ளதே என்ற மகிழ்வோடு சாப்பிட்டுவிட்டுப் படுக்க வந்தேன். என் அறை உள் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது; அருகில் படுத்திருந்த ஒருவரைக் கேட்டேன். முதலாளிக்கு யாரோ வேண்டிய வங்க அந்த அறையில் தூங்குவதாகச் சொன்னார். நான் எங்கு வேண்டுமானாலும் மொட்டை மாடியில் படுத்துத் தூங்கலாம் என்றார்

மாடிக்குப் போனேன். மழை பெய்திருந்ததால் தரை சில்லென்று இருந்தது. ஆனால் தண்ணீர் ஒன்றும் தேங்கி யிருக்கவில்லை. கலங்கரை விளக்கம் ஒளி வெள்ளத்தைச் சுழன்று வாரி வீசிக் கொண்டிருந்தது. வானம் தெளிவாக இருந்தது. மீன்கள் இனிமையாக மென்மையாக மின்னிக் கொண்டிருந்தன. மல்லாந்தபடியே படுத்தேன். பகலில் தூங்கிவிட்டதால் உடனே தூக்கம் வரவில்லை. ஆனால் துக்கம் நெஞ்சை அடைத்தது. அம்மா, ஆண்டாள், பூங்கோதை, குணாளன் நினைவுகள் வந்தன. மறந்து தூங்க முயன்றேன். பூங்கோதையை மறக்க இயலவில்லை. அவளை மணந்தது, அதன் பின் அவள் என் மனமறிந்து என்னோடு வாழ்ந்தது, அநாதைக் குழந்தையை அன்போடு

ஏற்று ஆண்டாள் என்று பெயரிட்டுப் பாராட்டியது, என்னைத் தன்கூந்தலில் பூ வைக்கச் சொல்லி மகிழ்வது... இவை எல்லாம் முட்டி முரண்டு கொண்டு திரை ஓவியம் போல் என் மனத்தில் வந்து வந்து நின்றன. குப்புறப் படுத்துத் தேம்பித் தேம்பி அழுது கொண்டே உறங்கிப் போனேன்.

மறுநாட் காலையில் எதற்கோ மாடிக்கு வந்த சமையற்காரர் 'தம்பி! தம்பீ!' என்று தட்டி எழுப்பினார். படபடப்போடு எழுந்தேன். இலவச உணவு விடுதி முயற் சியில் ஈடுபட வேண்டிய நினைவு வந்தது. விரைவாக எல்லாவேலைகளையும் முடித்துக் கொண்டு அவரிடம் போனேன். அவரும் எனக்காகக் காத்துக் கொண்டிருந் தார் இருவரும் மண்ணடியில் குடியிருக்கும் வழக்குரைஞர் ஒருவர் வீட்டுக்குப் போனோம். உறுப்பினர் மூவருள் அவரும் ஒருவராம். அவர்தான் அந்த விடுதிக்குச் செய லாளராம். பெரும் நம்பிக்கையோடு அவரிடம்சென்றோம். ஆனால் அவரோ ஏதோ வாயளவில் வரவேற்றார். 'நீதி மன்றம் போகணும் இப்போ வந்தீங்களே—உட்காருங்க' என்று கூறி, உள்ளே சென்று, டைப் செய்திருந்த ஒரு தாளைக் கொண்டு வந்து அவர் முன் நீட்டி,

'இதோ பாருங்க முதலியார்! இந்தத் தம்பி பெயர் அறுபதாவதாக இருக்கிறது. இவருக்கு முன்னே ஐம்பத் தொன்பது பேர் இருக்கிறாங்க'. என்று ஒரு கருத்தையே தம் திறமையால் இரண்டு பாயிண்ட்டாக்கிக் காட்டினார். அறுபதுக்கு முன் ஐம்பத்தொன்பது என்பது பெரிய உண் மையா என்ன? அதைக் கேட்ட உடனேயே அந்த உறுப் பினர் எனக்கு ஒன்றும் உதவமாட்டார் என்று முடிவுக்கு வந்துவிட்டேன். என்றாலும் என்னை அழைத்துச் சென்ற முதலியார் விடாமல்...,

'முதலில் அப்படித்தாங்க இருக்கும். அப்புறம் போகப் போகப் பார்த்தா— அந்த அறுபதிலே முப்பது பேர்கூடக்

கல்லூரியில் சேர மாட்டாங்க. சேர்ந்தவங்களிலேயும் முதல் மதிப்பெண் வாங்கியிருக்கும் சிலர்க்கு அரசாங்க உதவித்தொகை கிடைத்துக் கல்லூரி விடுதியிலேயே சேர்ந்துடுவாங்க—கொஞ்சம் மனசு வெச்சி நீங்கதான் உதவணும்—நல்ல புள்ளையாண்டான்னு கோபால் பிள்ளை சிபாரிசு' என்றார்.

'ஆமாம் முதலியார்! உமக்குத்தான் எல்லாம் தெரிந் திருக்கு கோபால் பிள்ளை எனக்கும் கடிதாசு போட்டிருக் கார். பார்க்கலாம். இன்னும் ரெண்டு பேர் இருக்காங்களே. அவுங்க என்ன சொல்வாங்களோ? அவுங்களைத்தான் ஒங்களுக்குத் தெரியுமே. அவுங்க கிட்டேயும் சொல்லி வையுங்க' என்றார்.

போன உயிர் வந்தது போல் இருந்தது எனக்கு பட படப்பு இல்லாமல் அறிவோடு நடந்து கொண்டால் சென்னையில பல செய்திகளைச் சாதிக்கலாம் என்று அவர்கள் உரையாடல்களிலிருந்து புரிந்து கொண்டேன். முதலியாரின் அன்பும் சொல் திறனும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

அதன்பின் அடுத்த உறுப்பினரான செட்டியார் ஒருவரிடம் போனோம். முன்னவர் போல்இல்லாமல், இவர் அன்போடு எழுந்து முதலியாரை வரவேற்றார். குளிர் மோர் வரவழைத்துக் கொடுத்து விட்டு, வந்தது பற்றிக் கேட்டார். முதலியார் என்னைப் பற்றிக் கூறி வேண்டிக் கொண்டார்.

'பயப்படாதீங்க. எனக்குன்னு இரண்டு பேரைத் தனி யாகச் சேர்க்க உரிமை இருக்கு, எங்கக் கடையில் வேலை செய்யும் குப்புசாமி தங்கச்சிப்புள்ளே ஒருத்தனைச் சேர்க் கணும். அடுத்தது ஒங்க பையனைக் குறிச்சுக்கிறேன். பொது வரிசையிலே கிடைக்கலேன்னாகூட பயம் வேண்டாம். என் கோட்டாவிலேயே சேர்த்துடறேன்' என்று சொல்லி விட்டு ஒரு மாதிரியாக முதலியாரைப் பார்த்தார்.

முதலியார் என்னைக் கொஞ்சம் வெளியே போகச் சொல்லி விட்டுச் செட்டியாரிடம் சிறிது நேரம் பேசி விட்டு வெளியே வந்தார்.

'வாப்பா—மூன்றாம் உறுப்பினரையும் பார்த்து விடு வோம்' என்று விருப்பம் இல்லாமல் சொன்னார். யாரை யும் பார்க்க வேண்டியதில்லை, இவரே எல்லாம் செய்து விடுவார் என்று நம்பிக் கொண்டிருந்த எனக்கு முதலியார் கூறியது வியப்பாக இருந்தது.

'ஏங்க? செட்டியார்தான் உறுதியாகச் சொன்னாரே' என்றேன்.

'அப்படித்தான் சொல்வார்—அவர்க்கு என்னால், உடனே ஓர் உதவி தேவையாக இருக்கிறது. அது முடிந் தால் தான் இது முடியும். அதெல்லாம் உனக்கு எதுக்கு, வா. அவரையும் பார்த்து விடுவோம்!' என்றார்.

அமைந்தகரைக்குப் போனோம். கல்லூரி விட்டுவரக் கொஞ்சம் நேரம் ஆகும் என்றார்கள். வாயிற்படியிலேயே காத்திருந்தோம். சிறிது நேரத்தில் வந்தார். வந்தவர் முதலியாரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்.

'என்னங்க எப்படியாவது உதவுணுங்க' என்று முதலி யார் மன்றாடினார்.

'நான் என்ன செய்வது? சட்டம் அப்படி இருக்கு. இருபது வயதுக்கு மேற்பட்டவர்களைச் சேர்க்கக் கூடா துன்னு இருக்கு. தம்பிக்கு இருபத்து மூன்று வயது இரண்டு மாதம் ஆகியிருக்கு. நேத்து நீங்க தொலைபேசியில் சொன்ன உடனேயே விண்ணப்பத்தை எடுத்துப் பார்த் தேன். ஒண்ணும் புண்ணியம் இல்லே' என்றார்.

'தம்பி ஆசிரியர் பயிற்சிக்குப் படித்திருக்கு. இரண்டு ஆண்டு ஆசிரியராய் வேலைபார்த்திருக்கு அதையெல்லாம் கழிச்சுட்டுப் பாருங்க. சரியாப் போயிடும்' என்று திறமை யாக முதலியார் வாதிட்டார்.

'முதலியார்! சட்டத்தில் அப்படியெல்லாம் கழிச் சிட்டுப் பார்க்கச் சொல்லல்லே. நீங்கள் சொல்வதிலே நியாயம் இருக்கலாம். நான் இல்லேன்னு சொல்லல்லே. அப்படிப் பார்த்தா விண்ணப்பம் செய்திருக்கிறவங்க அத்தனை பேரையும் சேர்த்துக்க வேண்டிவரும். ஏன்னா ஒவ்வொருத்தரும் அவுங்க அவுங்க முயற்சிக்கு ஏதாவது நியாயம் சொல்லத் தெரியாமலா இருப்பாங்க. முடிவா சொல்றேன். என்னால் இந்த விஷயத்தில் இந்தத் தம்பிக்கு உதவ முடியாது. எனக்கு நேரம் இல்லை. சாப்பிட்டுட்டு வகுப்புக்குப் போகணும்' என்று சொல்லிவிட்டு எங்கள் விடையை எதிர்பார்க்காமலேயே உள்ளே போய்விட்டார். நான் கவலையோடு அவர் முகத்தைப் பார்த்தேன்.

'கவலைப்படாதே. அருளாளரும் இந்தக் கல்லூரியில் தான் வேலை செய்கிறார். அவரை வைத்து முயன்று பார்க்கலாம்' என்று எதற்கும் மனந்தளராமல் நாள் தோறும் இந்த மூன்று பேரையும் ஒரு முறை பார்த்து வணக்கம் போட்டுவிடு. தேர்ந்தெடுக்க இன்னும் மூன்று நான்கு நாட்களே இருக்கின்றன'...என்று அவர் எனக்கு அறிவுரை கூறினார்.

'நாளைக்குக் கட்டணம் கட்டிக் கல்லூரியில் சேர்ந்து விடவேண்டும்' என்று அருளாளர் கூறியதை அவர்க்குச் சொன்னேன்.

'அதுக்கென்ன கட்டணத்தைக் கட்டிட்டு காலை யிலோ மாலையிலோ இரவிலோ எப்படியோ தவறாமே சேர்ந்துடு. நானும் தொலைபேசி மூலம் அப்பப்ப சொல் றேன்'...என்று என்னை ஊக்கப்படுத்திவிட்டு அப்படியே சேத்துப்பட்டில் ஒருவரைப் பார்க்கப் போகவேண்டும்' என்று சொல்லிப் போய்விட்டார்.

ஏக்கத்தோடு சிறிது நேரம் அங்கும் இங்கும் அலைந் தேன். பிறகு நேரே கடைக்கு வந்து கீதாஞ்சலியை எடுத்துப் படித்தேன். மனப் புண்ணுக்கு ஆறுதலாக இருந்தது.

மறுநாள் காலையில் முதலியார் சொன்னது போல வழக்குரைஞரைப் பார்த்து வணக்கம் போட்டுவிட்டு அப் படியே செட்டியார் கடைக்குப் போனேன். அவர் சேலம் போய்விட்டதால், நேரே சேத்துப்பட்டுக்குப் போய்ப் பச்சையப்பன் கல்லூரியை அடைந்தேன். ஒரு பெரிய வரிசை கல்லூரித் தலைவர் அறைக்கு முன் காத்திருந்தது. அதில் நானும் சென்று நின்றுகொண்டேன். ஒரு மணி அளவில் உள்ளே போகும் வாய்ப்புக் கிடைத்தது, தலைவர் முன் செல்வதற்குள் மூன்று நான்கு ஆசிரியர் என்னைப் பற்றிக் கேட்டனர். முதலில் இருந்தவர் எதற்கு நான் விண்ணப்பித்துள்ளேன் என்று கேட்டு என் தமிழ் ஆனர்சு விண்ணப்பத்தாளை எடுத்து அடுத்து இருந்தவரிடம் கொடுத்தார்.

அவர் என் கையில் இருந்த மூலச் சான்றிதழ்களை வாங்கி நகலோடு ஒப்பிட்டுப் பார்த்துச் 'சரி என்று கை யொப்பமிட்டு அடுத்தவரிடம் அனுப்பினார். மூன்றாமவர் நான் மூன்று ரூபாய் பணம் கட்டிய சீட்டு முதலிய வற்றைப் பார்த்துவிட்டு நான்காமவரிடம் அனுப்பினார்.

அவர் என் விண்ணப்பத்தில் 'அட்மிட்' என்று ஆங்கிலத்தில் எழுதி தம் கையொப்பமிட்டுக் கல்லூரித் தலைவரிடம் அனுப்பினார். அவர் அதன் கீழ்த் தம் கையொப்பமிட்டு உடனே கட்டணம் கட்டிவிடும்படி சொன்னார். அதற்குள் எழுத்தர்கள் எல்லாம் உண வுண்ணப் போய் விட்டனர். அங்கிருந்த காண்டினில் நானும் ஒரு தோசை வாங்கித் தின்றுவிட்டுக் கட்டணம் கட்டுவதற்கு நின்ற வரிசையில் வந்து சேர்ந்து கொண் டேன். திருமண வீட்டில் அங்கும் இங்கும் உலவும் முக்கிய மானவர்கள் போல பியூன்கள் திரிந்து கொண்டிருந்தனர். தெரிந்த சிலர் கட்டணத்தோடு ஓரிரு ரூபாய் சேர்த்து அவர்களிடம் கொடுததுக் கட்டச் சொல்லிவிட்டு ஓய் வெடுத்துக் கொண்டனர். இறுதியில் நான்கு மணி அளவில் நான் சம்பளம் கட்டிவிட்டு வெளியே வந்து 15ஆம் என்

பேருந்து ஏறி விடுதியை அடைந்தேன். சோர்வாக இருந்தது, குழந்தைகள் கொடுத்த பேரீச்சம் பழங்களை உண்டேன்.

மறுநாள் என்றும்போல் அந்த உறுப்பினர்களைக் கண்டு வணக்கம் செய்தேன். முதலியாரைப் பார்க்க இரண்டு முறை போனேன். இருமுறையும் வீட்டில் இல்லாததால் ஏமாந்து சோர்வோடு வந்தேன். வந்ததும் அங்கிருந்த சிலர் என் முயற்சி என்ன ஆயிற்று என்று கேட்டனர்.

'இன்னும் இரண்டு நாளில் முடிவு தெரியும்' என்று சொல்லி என்றும்போல் 'ஏதேனும் கடிதம் வந்ததா' என்று கேட்டேன்.

'ஆமா வந்திருக்கு...' என்று ஒருவர் உள்ளே போய் ஐந்தாறு கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்தார். அவற்றை ஆவலோடு வாங்கி யார் யாரிடமிருந்து வந்துள்ளன என்று பரபரப்போடு பார்த்தேன். என் ஆவல் வீண் போகவில்லை. பூங்கோதையும் ஒரு கடிதம் எழுதியிருந்தாள். மூன்று நான்கு நாட்களாக எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிய மனம் அந்தக் கடிதத்தைக் கையில் ஏந்தியதும் துள்ளிக் குதித்தது. ஏதோ நேரிலேயே பூங்கோதையைக் கண்டது போல் இருந்தது. எல்லாக் கடிதங்களையும் எடுத்துக் கொண்டு மாடிக்குப் போனேன். பூங்கோதை கடிதத்தைப் பிரிக்காமல் அப்படியே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு மெல்ல உறையைக் கிழித்தேன் உள்ளே சின்ன கடிதம் ஒன்றே இருந்தது.

''என்னவருக்கு! வணக்கம். அம்மா, ஆண்டாள் நலம். இலவச உணவு விடுதியில் இடம் கிடைத்து விட்டதா? கல்லூரியில் சேர்ந்து விட்டீர்களா? அம்மா வருத்தமாக இருக்கிறார். ஆண்டாள் பா...பா...என்கிறாள். நான்.....'

ஒன்றும் எழுதாமல் விடப்பட்டிருந்த இடம் கண்ணீரால் நனைந்திருந்தது. அதன்கீழ் இறுதியில் 'எற்றைக்கும்

ஏழெழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோளே ஆவேன் உனக்கேயான் ஆட்செய்வேன்' என்ற ஆண்டாள் பாவை அடியைச் சிறிது மாற்றி எழுதியிருந்தாள். கையில் பிடித்தபடியே கண்ணீர் விட்டேன்.

அடுத்து ஆசிரியர் முருகேசனார் எழுதிய உறையைக் கிழித்தேன். அவர் கடிதத்தோடு முன்பு சொன்னது போல் சென்னையில் பிரபலமான இன்னொரு தமிழ்ப் பேராசிரியர்க்கும் ஒரு கடிதம் எழுதி இணைத்து அனுப்பி யிருந்தார்.

'தம்பி! எதற்கும் கவலைப்படாதே முன் வைத்த காலை பின் வைக்காதே. முயன்று படி. இத்துடன் இணைந்துள்ள கடிதத்தை அவரிடம் கொடு. என்னிடம் பல உதவி பெற்றவர். அவர் உனக்கு உதவுவார் என்று நம்புகிறேன். வாழ்க!'

என்று அவர் எழுதியிருந்தார். சிதம்பரத்திலிருந்து குணாளன் கடிதம் ஒன்றும் பள்ளிக் குழந்தைகளிடமிருந்து ஒரு கடிதமும் வந்திருந்தன. அவற்றையெல்லாம் படித் தேன். என் ஊரார் அனைவரையும் கண்டு பழகியது போல ஒரு புதுத்தெம்பு உண்டாயிற்று. நண்பகல் உணவை முடித்துக் கொண்டு பிற்பகல் மூன்று மணி அளவில் தேனாம்பேட்டைக்கு அந்த ஆசிரியரைப் பார்க்க முருகேசனார் கடிதத்தோடு போனேன். நல்ல வெயில். செருப்பில்லாததால் கால் சுட்டுப் பொசுக்கிற்று. கேட்டு மெல்லத் தெரிந்து கொண்டு அந்த ஆசிரியர் வீட்டை அடைந்தேன், அவரும் வீட்டில் இருந்தார். 'அய்யா! அய்யா!' என்று அழைத்தேன்.

'யாரது!' என்று ஒரு குரல் வந்தது.

'நான் ஒரு மாணவன், ஆசிரியரைப் பார்க்கணும்' என்று சொன்னேன்.

சிறிது நேரம் பேச்சொன்றும் இல்லை. பிறகு ஒரு சிறுவன் வெளியே வந்து 'ஆசிரியர்க்கு நிறைய வேலை

இருக்கிறது. இங்குப் பார்க்க முடியாது. நாளைக்குக் கல்லூரியில் வந்து பார்க்கச் சொல்றாங்க' என்றான்.

அவன் உள்ளே போவதற்குள் 'தம்பி! தம்பி! இந்தக் கடிதத்தை அய்யாவிடம் கொடுப்பா' என்று முருகேசனார் அனுப்பிய கடிதத்தைக் கொடுத்தேன். 'கடிதத்தைப் பார்த்தவுடன் கட்டாயம் வெளிவந்து என்னை அன்போடு வரவேற்பார். இயன்ற உதவிகள் செய்வார். நமக்கு இலவச உணவு விடுதியில் இடம் பெற்றுக் கொடுத்தால் அதுவே போதும். வேறு உதவி ஒன்றும் வேண்டாம்' என்று இப்படி எண்ணிக்கொண்டே இருக்கும்போது திடீரென்று அவர் வெளியே வந்து, 'என்னப்பா? உங்களுக்கு வேலை ஒன்றும் கிடையாதா. யார் யாருக்கு யார் யாரைத் தெரியும் என்று அறிந்து வைத்துக் கொண்டு இப்படிவந்து உயிரை வாங்குகிறீர்களே! உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? ஏதாவது தேர்வு கீர்வு எழுதியிருக்கிறாயா? மதிப்பெண் போட வேண்டுமா? தேர்வுத்தாள் எல்லாம் அனுப்பி முடிவுகூட வெளிவந்து விட்டதே' என்று இரைந்தார்.

'பணத்திற்காகவோ, மதிப்பெண்ணுக்காகவோ வர வில்லை அய்யா நான்...' என்று சொல்லி முடிப்பதற்குள்,

'பின் எதற்கு வந்து தொல்லை கொடுக்கிறாய்? நாளைக்குக் கல்லூரியில் பார்' என்று கூறி டக்கென்று கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டார்.

அருளாளரை எண்ணிப் பார்த்தேன்; நான் எங்கள் ஊரில் ஆசிரியனாகப் பணி செய்த நிலையை நினைத்துப் பார்த்தேன். ஆசிரியர் முருகேசனாருடைய ஆர்வத்தையும் அறியாமையையும் கருதிக் கலங்கினேன். வருகிற வழியில் வகுப்புக்கு வேண்டிய ஓரிரு குறிப்பேடுகளை வாங்கிக் கொண்டேன். சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் போய் பரிமேலழகர் உரை, திருக்குறள் நூல் ஒன்றும் பாரி

நிலையத்தில் அருளாளர் 'குறள் விளக்கம்' ஒன்றும் வாங்கிக் கொண்டு மீண்டேன்.

மறுநாள் எப்போதும் போல ஆள் பார்த்து வணக்கம் போடும் பணியைத் தொடங்கினேன். முதலில் வழக்குரை ஞரைப் பார்க்கப் போனேன். உள்ளே இருந்தும் நான் அவரைப் பார்ப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. எப்படியும் பாராமல் போகக் கூடாது என்று வாயிற்படி யிலேயே காத்திருந்தேன். நீதிமன்றத்துக்குப் புறப்படும் போது என்னைப் பார்த்து 'உனக்குக் கெடக்கலேப்பா— சாரி' என்று ஒரு விநாடியில் கூறி காரில் ஏறிப் போய்விட் டார். என் ஒரு நூறு ஆண்டு வாழ்வு பாழாய்ப் போனது போல் உணர்ந்தேன்.

தலையில் இடி விழுந்ததுபோல் இருந்தது. முதலியாரி டம் ஓடினேன். 'என்ன தம்பி செயவது? நீதான் பார்த் தாயே, என்னால் முடிந்தவரை செய்துவிட்டேன். நீ கொடுத்து வைக்கலே. இனிமே எப்படி இந்தச் சென்னை யில் காலந் தள்ளறது—ஊருக்கே திரும்பிப் போய்ப் பழைய வேலை பாரு. அந்த ஆசிரியர் வேலை பாரு. அந்த ஆசிரியர் வேலை திரும்ப உனக்குக் கிடைக்குமா?' என்று ஏக்கத்தோடு என்னைப் பார்த்தார்:

'கல்லூரியில் கட்டணம் கட்டி விட்டேன். நாளைக்கு வகுப்பில் பாடம் கேட்கப் போகிறேன். இனி ஊர் திரும்பப் போவதில்லை' என்று உறுதியாகக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கடையை அடைந்தேன். சாப்பிட்டுவிட்டு அமர்ந்திருந்த எல்லோரும் என் வரவை எதிர்நோக்கியிருப் பது போலத் தோன்றியது. நான் போனதும் 'என்னப்பா விடுதியில் இடங் கிடைத்து விட்டதா?' என்று கேட்டார் ஒருவர். மற்றவர், 'ஏழெட்டு நாட்களாயிடுச்சே! இன்னுமா எடங்கெடக்கலே' என்றனர். இன்னொருவர் 'இன்னும் எத்தனை நாளைக்குப்'பா இங்கே இருக்கப் போறே, ஏழு நாள்னுதானே முதலாளி சொன்னாங்க...' என்று நான் புறப்படவேண்டிய நாளை எனக்கு நினைவு படுத்தினார்.

அவர்களைத் தாண்டி உள்ளே போவது ஏதோ நான் கைந்து பாறைகளைக் கடந்து போவதுபோல் மனத்திற் குப் பாரமாக இருந்தது. உள்ளே போனேன். சமையற் காரர் சோறுபோட்டார். கைகால் கழுவி விட்டு, பீறிட்டு வரும் கண்ணீரையும் துடைத்துக்கொண்டு போய் இலையில் அமர்ந்தேன். சோறு பரிமாறினார். கை வைத்துப் பிசைந்தேன். தெருவில் அவர்கள் பேசிய பேச்சு ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தது. உணவு உண்ண இயலவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது. தண்ணீரை எடுத்துக் குடித்தேன்.

'கவலைப்படாதே தம்பி! ஏழைங்க இதுக்கெல்லாம் கவலைப்படக் கூடாது' என்று அந்தச் சமையற்காரர் சொன்னார். அரைகுறையாக ஏதோ விழுங்கிவிட்டு மேலே போனேன். ஒரு விநாடிகூட அங்குத் தங்க எனக்குப் பிடிக்க வில்லை. ஆனால் வேறு எங்குப் போவது? உடனே நண்பன் இளமுருகு சென்னை நுங்கம்பாக்கத்தில் இருக் கும் நினைவு வந்தது. ஆசிரியப் பயிற்சி சாலையில் என்னோடு அவன் பயின்றான். நன்றாகப் பாடுவான். என் கவிதை அவனால் அங்குச் சிறப்புப் பெற்றதெல்லாம் நினைவுக்கு வந்தது.

உடனே புறப்பட்டேன். நுங்கம்பாக்கம் மின் வண்டி நிலையத்தில் இறங்கினேன். சுற்று முற்றும் பார்த்தேன். விசாரித்தேன். முகவரி தெரியாமல் இவ்வளவு பெரிய ஊரில் இவ்வளவு நெருக்கமான ஊரில், பக்கத்து வீட்டுக் காரர் யார் என்றுகூடத் தெரிந்துகொள்ளாமல், தான் உண்டு தன் தொழில் உண்டு என்று வாழ்கின்ற இந்த ஊரில் இளமுருகை எப்படிக் கண்டு பிடிப்பது என்று தடு மாறினேன். ஒரு எண்ணம் வந்தது. அருகிலிருந்த டீக் கடை ஒன்றுக்குப் போய் 'இங்கே ஏதாவது பள்ளிக்கூடம் இருக்கிறதா' என்றேன்.

அவர் ஏற இறங்க என்னைப் பார்த்துவிட்டு 'எந்தப் பள்ளிக்கூடம்? நகராண்மைக் கழகப் பள்ளிக் கூடமா? அல்லது தனியார் பள்ளியா' என்று கேட்டார்.

'ஏதாவது பக்கத்தில் உள்ள பள்ளிக்கூடத்துக்கு வழி காட்டுங்க. போதும்' என்றேன்.

'சரி, நேரே போய் அந்தச் சந்திப்பில் வலது பக்கம் திரும்புங்க. ஒரு நகராண்மைக் கழகப் பள்ளிக்கூடம் இருக்கு' என்று வழி காட்டினார்.

திரும்பிய உடனேயே பள்ளிக்கூட ஓசை கேட்டது. நுழைந்தேன். முதலில் இருந்த கொட்டகையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரிடம் சென்று 'வணக்கம்' என்றேன். அவர் தலை நிமிர்ந்து 'யார்' என்பது போல் என்னைப் பார்த்தார்.

'நானும் ஒரு ஆசிரியன். என் நண்பன் இளமுருகு இங்கே நுங்கம்பாக்கத்தில் தான் எங்கோ ஆசிரியராக வேலை செய்கிறார். அவர் வீட்டு முகவரி தெரியாது. அவரைப் பார்க்கணும். தங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டேன்.

சிறிது எண்ணிப் பார்த்துவிட்டு, 'அந்தப் பெயரை நான் கேட்டதாக நினைவு இல்லை. இங்கேயே பத்துப் பதினைந்து வருடங்களாகப் பணி செய்யும் ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கேளுங்கள். அவர் ஒருகால் அந்த ஆசிரியரை அறிந்திருக்கக்கூடும்' என்று சொல்லி, 'டேய்! ஏழுமலை...குமாரசாமி சாரிடம் இவரைக் கூட்டிக்கிட்டுப் போ' என்று அனுப்பி வைத்தார். அந்த மாணவனைத் தொடர்ந்து போனேன். அவன் அந்த ஆசிரியரிடம் என்னை விட்டு விட்டு, 'அவர் தானுங்க' என்று சொல்லிப்போனான்.

என்னை அந்த மாணவன் அங்குக் கூட்டிவந்து விட்டு விட்டுப் போனதைப் பார்த்த அந்தப் பெரியவர், 'என்ன தம்பி! என்ன வேணும்?' என்று அன்போடு கேட்டார்.

'ஒண்ணுமில்லிங்க. இங்கே நுங்கம்பாக்கத்தில் இளமுருகுன்னு என் நன்பன் ஒருத்தன் ஆசிரியனாக வேலை செய்கிறான். அவனைப் பார்க்கணும். வீடு தெரியாது. அதான் தங்களைக் கேட்டா தெரியு முன்னாங்க...' என்று இழுத்தேன்.

'ஓ! பாட்டுப் பாடுவாரே' அந்த ஆசிரியர்தானே! பாகவதர் கிராப்புகூட வைத்திருப்பாரே!' என்று கூறினார்.

அவர் சொன்னது நீண்ட பாலைவனம் ஒன்றில் சோலையைக் கண்டது போல் இருந்தது. 'ஆமாங்க! அவரே தான்! வீட்டுக்கு எப்படிங்க போறது?' என்றேன்.

'இரு தம்பி. அவர் மூன்று மாதத்துக்கு முன்தான் அமைந்தகரைக்கு மாற்றலாகிப் போயிட்டார். வீடு இன்னும் மாறி இருக்காதுன்னுதான் நெனக்கிறேன். இந்த வகுப்பு முடிந்ததும் ஓய்வுதான். நானும் கூட வருகிறேன்...' என்று சொல்லி என்னைப் பக்கத்தில் இருக்கச் சொன்னார்.

மணி அடிக்கிறவரை பள்ளியைச் சுற்றிப் பார்ப்போமே என்று ஒரு சுற்றுச் சுற்றி வந்தேன். ஒரு பக்கம் கசாப்புக் கடை. இன்னொரு பக்கம் மீன் மார்க்கெட். பின் பக்கம் பெரிய திறந்த சாக்கடை. இதற்கு நடுவில் பள்ளிக்கூடம். நான் வேலை செய்த பள்ளிக்கூடத்தை நினைத்துக் கொண்டேன். கிராமப்புறத்துப் பள்ளிகள் இந்த நகரத்துப் பள்ளிக்கு எவ்வளவோ சிறந்தன என்று தோன்றியது. அதற்குள் வகுப்பு முடியும் மணி ஓசை கேட்டது. விரைவாகச் சென்று அவர்முன் நின்றேன்.

'வாங்க போவோம்' என்று பழைய குடை ஒன்றை எடுத்து முன் கையில் மாட்டிக் கொண்டு என்னோடு புறப்பட்டார். ஐந்து நிமிடத்தில் எங்கெங்கோ சந்து பொந்து வழியே அழைத்து வந்து 'இதுதாம்பா இளமுருகு வீடு' என்று என்னை அவன் வீட்டின் முன் நிறுத்திவிட்டு அவர் போய் விட்டார்.

'இளமுருகு! இளமுருகு!' என்று கூப்பிட்டேன். கைக் குழந்தையோடு ஒரு பெண் வெளியே வந்து என்னைப் பாராமலேயே 'அவுங்க இன்னும் பள்ளிக் கூடத்திலிருந்து வரலெ. இப்போ வருவாங்க. இப்படி உட்காருங்க' என்று வெளியில் கிடந்த நாற்காலி ஒன்றைக் காட்டி உட்காரச் சொல்லி விட்டு உள்ளே போனாள். என் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி நினைவுகளில் நான் ஈடுபட்டுப் புறச்சூழ்நிலையைச் சிறிது மறந்திருந்தேன்.

'டேய்! செங்கண்ணா! எப்படா வந்தே!' என்று என் தோளைப் பிடித்துக் கொண்டு இளமுருகு கேட்டதும் 'ஆ' வந்துட்டியா என்று மகிழ்ந்தேன்.

'தன் மனைவி எழிலரசிக்கு என்னை அறிமுகம் செய் தான். 'ஓ அவுங்களா! பாட்டு எழுதுவாங்கான்னு சொல்லுவீங்களே! வருவதாக எனக்குச் சொல்லலியே. சொல்லியிருந்தா வெளியேயா உட்கார வைத்திருப்பேன்' என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

என் நிலை பற்றிச் சுருக்கமாகக் கூறிவிட்டு ஓரிரு நாட்கள் அங்குத் தங்க நினைத்திருப்பதைச் சொல்லிப் புறப்பட்டேன். அவனும் எழிலரசியும் மகிழ்ச்சியோடு என் விருப்பத்தை ஏற்றுக்கொண்டனர். உடனே பெட்டி படுக்கை எடுத்துக் கொண்டு வரும்படி வற்புறுத்தினர். இரவுச் சாப்பாட்டுக்கு நேரே வருமாறு வேண்டிக் கொண்டனர். அவர்கள் விருப்பப்படியே பாரிமுனைக் கடைக்கு வந்து முதலாளியிடம் நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். சமையற்காரர் 'எங்கே?' என்று கவலையோடு கேட்டார்.

'என் நண்பர் இளமுருகு என்று ஒருவர் நுங்கம்பாக்கத் தில் இருக்கார், அவரிடம் போகிறேன்' என்று கூறி விடை பெற்றேன்.

இளமுருகும் எழிலரசியும் என் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அவள் அன்போடு பரிமாற, அவன்

ஆதரவோடு பரிந்து பரிந்து உபசரிக்க கைக் குழந்தை பொக்கை வாயைத் திறந்து திறந்து சிரிக்க அன்று உண்ட உணவு தேவாமிர்தமாகத் தெம்பு தந்தது. தயிர், நெய், பருப்போடு உண்ட அந்த அடிமை உணவைவிடச் சுவை ஒன்றும் இல்லாத இந்த மோர்ச் சோறு மிக இன்பமாக இருந்தது.

உண்டுவிட்டுப் பழைய கதைகளை எல்லாம் இளமுருகும் நானும் பேசித் தீர்த்தோம். நீண்ட நேரம் ஆகிவிடவே எனக்கு ஒரு கயிற்றுக் கட்டில் எடுத்து வெளியே போட்டுப் படுக்கச் சொன்னான். வெளியில் படுத்துக்கொண்டே ஒரே அறையில் அங்கு அவன் நடத்தும் குடித்தனம் கண்டு வருந்தினேன். அந்த மூன்று உயிர்களோடு நானும் சேர்ந்து கொண்டது பெருங்கவலையாக இருந்தது. எப்படியும் இதனைவிட்டு விரைவில் புறப்பட்டு விட வேண்டும் என்று நினைத்தேன். அதற்குள் முதுகில், இடுப்பில், காலில், கையில் எல்லாம் ஏதோ கடிப்பதுபோல இருந்தது. எழுந்து தடவினேன், மூட்டைப் பூச்சிகள். கட்டிலை விட்டுக் கீழே இறங்கித் துண்டை உதறிக் கீழே போட்டுவிட்டுப் படுத்தேன். தூக்கம் வரவில்லை.

நீரையும் காற்றையும் ஈர்த்து வளரும் பயிரினம். புல் தழைகளை மேய்ந்து வாழும் பசுவினம். இரத்தம், தசை தின்று வாழும் விலங்கினம். இவற்றை எல்லாம் படைத்த இறைவன் நேரே இரத்தத்தையே குடித்து வாழும் மூட்டைப் பூச்சிகளையும் படைத்துள்ள கொடுமையை எண்ணினேன். புறத்தூய்மை இல்லாத மனிதனுக்குக் கடவுள் தரும் தண்டனைதான் இந்தப் புழு பூச்சிகளோ என்று கருதினேன்.

உடனே மனிதன் இழைக்கும் கொடுமை நினைவுக்கு வந்தது. மூட்டைப் பூச்சியாவது இரத்தத்தைக் குடிக்கிறது, ஆனால் மனிதனோ எளிய மனித இரத்தத்தின் சாரமான மானிட சத்தியைப் பிழிந்து பயன்படுத்திப் பணத்தால்,

பலத்தால் கொழுக்கின்றானே என்று எண்ணி எண்ணி வருந்தினேன். 'இடர் செய்து செத்திடும் கலக மானிடப் பூச்சிகள்' என்ற பாரதி கவிதைத் தொடர் நினைவுக்கு வந்தது. ஆம். மானிடப் பூச்சிகளைவிட இந்த மூட்டைப் பூச்சிகள் எவ்வளவோ மேல் என்று எண்ணியபடியே உறங்கிப் போனேன்.

மறு நாள் காலையிலேயே இளமுருகு என்னை எழுப்பிச் சற்று தூரத்திலிருந்த பொதுக் கிணற்றுக்கு அழைத்துப் போய்க் குளிக்கச் செய்தான். 'அப்புறம் கூட்டம் வந்து விடும்' என்று விரைவு படுத்தினான். விரைவாக அதிகாலையிலேயே எல்லாக் கடமைகளையும் செய்து முடித்து விட்டோம். எழிலரசியும் ரவா உப்புமா தயாராக செய்து வைத்திருந்தாள். எங்களுக்கு முன் எப்படியோ எழுந்து குளித்து, அந்த ஒற்றை அறை வீட்டை அவள் அழகு செய்து வைத்திருந்தது எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. இளமுருகுக்கு ஏற்ற எழிலரசிதான் இவள் என்று மனத்திற்குள் பாராட்டியபடியே சிற்றுண்டியை உண்டு விட்டுப் புறப்பட்டேன். 27 எண் பேருந்தில் அவன் என்னை அழைத்துச் சென்று பச்சையப்பன் கல்லூரிக்கு அருகே இறக்கி விட்டுவிட்டுத் தான் மட்டும் தொடர்ந்து போனான். அதற்குள் மணி ஒன்பதாகி இருந்தது. கல்லூரிக்குள் சென்று வகுப்பறை எது எனக் கண்டு பிடித்து முதல் பெஞ்சில் இடம் பிடித்து அமர்ந்து கொண்டு, கையில் அன்றைய வகுப்புக்கு எடுத்துச் சென்றிருந்த திருக்குறளைப் படித்துக் கொண்டிருந்தேன்.

மாணவர் ஒவ்வொருவராக வந்தனர். மாணவியர் மூவர் வந்து தனியாக ஒரு பெஞ்சில் அமர்ந்தனர். முதல் மணி அடித்ததும் ஆசிரியர் அருளாளர் வகுப்பினுள் நுழைந்தார். மேசை அருகில் கண்மூடி, மௌனமாகச் சிறிது நேரம் நின்றார். வழிபாடு செய்கிறார் என உணர்ந்து நாங்களும் எழுந்து நின்றோம். 'அமருங்கள்'

என்ற ஓசை கேட்டு அமர்ந்தோம். இடது கையால் ஒரு கைத்துண்டு எடுத்து நாற்காலியைத் துடைத்தார். துடைத்த பகுதி அழுக்கால் கருத்துப் போய்விட்டது. பின் அமர்நதார். எங்களையெல்லாம் ஏறெடுத்துப் பார்த்தார். என்னைப் பார்த்தார். இன்னும் சில மாணவர்களையும் பார்த்துப் புன்னகை செய்தார். புத்தகம் ஒன்றும் கொண்டுவராத சிலரைப் பார்த்து, 'தவறாமல் பரிமேலழகர் உரை—திருக்குறள் கொண்டுவர வேண்டும்' என்று கூறிவிட்டு வகுப்புத் தொடங்கினார்.

'திருவள்ளுவரை நம் எல்லாரையும்விட நன்றாக உணர்ந்த தமிழர் பரிமேலழகர். பரிமேலழகரையும் அவர் திருக்குறள் உரையையும் பழித்து உரைப்போர் அறிவு வளத்தை ஆய்ந்தால் அதற்குப் பரிமேலழகர் ஒரு பெருங் காரணம் ஆவார் என அறியலாம். 'சான்றோன் எனக் கேட்ட தாய்', 'புகல்வரைப் பெறுதல்' முதலானவற் றுக்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் வள்ளுவர் கருத்துக்கு மாறுபட்டனவே ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த இலக்கியச் சான்றோர் ஒருவர் கருத்துக்களைப் பல நூற்றாண்டுகட்குப் பின்வந்த மற்றொருவர் நூற் றுக்கு நூறு சரியாகப் புரிந்து கொள்வது அவ்வளவு எளிது அல்ல. என்றாலும் பிற்காலச் சான்றோர் பலரைவிடப் பரிமேலழகர் திருவள்ளுவரை நன்கு புரிந்து கொண்டிருப்ப தாகவே கருதுகின்றேன். இவ்வளவு நீண்ட முன்னுரைக்குக் காரணம் உங்களுள் பலர் பரிமேலழகர் பற்றிய வெறுப் பான கருத்துக்களை இதற்குமுன் கேட்டிருக்கக் கூடும். அந்த வெறுப்பு அவர் அருமையான உரையிடத்தும் சென்று அதனைக் கற்காது போய்விடுவீர்களோ என்ற ஏக்கத்தால்தான்' என்று கூறித் தம் கையிலிருந்த நூலை எடுத்து விவரித்தார்.

அவர் திருக்குறள் பற்றி இரண்டு மூன்று நூல்கள் எழுதியிருந்தார். அவற்றுள் ஒன்று அரசின் பரிசும் பெற் றிருந்தது. ஆனால் அவைபற்றி அவர் வகுப்பில் ஒன்றும்

சொல்லாதது எனக்கு வியப்பாக இருந்தது. 'நிறைகுடம்' என்று நினைத்துக் கொண்டேன்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'.

என்ற குறளைக் கணீரென்று படித்தார். 'எழுத்தெல்லாம்' என்ற இடத்தில் சிறிது நிறுத்திப் பின் படித்தார். தலை நிமிர்ந்து எங்களையெல்லாம் ஒருமுறை நோட்டமிட்டார். புத்தகம் கொண்டுவராதவர்கள், கொண்டுவந்தவர் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தனர். 'செங்கண்ணா! எங்கே நீ உரையைப் படி பார்க்கலாம்' என்று என்னை நோக்கிக் கூறினார். நான் படித்தேன்.

'எழுத்து எல்லாம் அகர...முதல...' என்ற தொடரைப் படித்தேன்.

'நிறுத்து தம்பி' என்று கூறிக் 'குறளில் இந்தத் தொடர் எப்படி அமைந்துள்ளது' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். அருகிலிருந்த ஒருவர் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று கூறினார், 'ஏன் பரிமேலழகர் இப்படி மாற்றி உரைத்தார்?' என்று பொதுவாக வினவினார். பெண்களுள் ஒருவர் தயங்கி எழுந்தார்.

'தயங்காமல் சொல்லம்மா...' என்று ஊக்கினார்

'திருவள்ளுவர் செய்யுளில் எழுதியதால் யாப்பு, தொடைநயம் கருதி 'எழுத்தெல்லாம்' என்னும் எழுவாயைத் தொடரின் இறுதியில் அமைத்துள்ளார். உரைநடையில் தமிழ்மரபு எழுவாயைத் தொடரின் முன் அமைத்துச் செல்லும். அதனால் உரை எழுதப் புகுந்த பரிமேலழகர் அந்த மரபைப் பின்பற்றியுள்ளார்' என்று கூறினார். புன்னகையோடு தலையசைத்து அதனை ஏற்று மேலே தொடருமாறு குறிப்பித்தார். நான தொடர்ந்தேன்.

'அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலை உடைத்து'

'வழுதி!' இந்தக் குறளில் 'அதுபோல்' என்ற தொடர் எங்கே வந்துள்ளது? என்று கேட்டார். கடைசிப் பலகையில் அமர்ந்திருந்த ஒருவர் எழுந்தார், 'ஓ' இவர்தான் வழுதியா' என்று திரும்பிப் பார்த்து நாங்கள் அறிந்து கொண்டோம். அவர் சொன்னார்:

'அந்தத் தொடர் திருக்குறளில் இல்லை. பரிமேலழகரே எடுத்துரைக்கிறார்' என்றார்.

அப்படியானால் 'எடுத்துக்காட்டு உவமை' அல்லவா? என்றார்.

'ஆம் அய்யா!' என்று அவர் விடையளித்தார்.

பின் உரை விளக்கத்தை அவரே படித்துத் தெளிவாக விளக்கிக் கொண்டு சென்றார். இடை இடையே வினாக்கள் கேட்டு எங்களை விழிப்படையச் செய்தார். சின்ன வகுப்பில் அடிக்கடி அமைதியை நிலைநாட்ட, சோர்ந்து போகாமல் இருக்க 'எழு, அமர்' என்று வகுப்பில் அடிக்கடி ஆசிரியர் சிலர் சொல்வது நினைவுக்கு வந்தது.

'ஆதி பகவன் முதற்றே உலகு' என உலகின்மேல் வைத்து கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க' எனறு படித்து நிறுத்தினார். ஒரு விநாடி எங்களை எல்லாம் பார்த்துக் கொண்டே வந்து என் பக்கத்திலிருந்த இளைஞரைக் கேட்பது போல் பார்த்துத தம் பார்வையை நிறுத்தினார். அவர் எழுந்தார்.

'வள்ளுவர் சொல்போக்கு உலகுக்கு முதன்மை தருவது போல் அமைந்துள்ளது. ஆனால் அது வள்ளுவர் உட்கிடக்கை அன்று. இறைவன்தான் உலகுக்கு முதல்வன்' என்றார்.

ஆத்திக நாத்திக, இறைமுதல் உலகுமுதல், எனச் சமயக் கொள்கைகள் இருவேறு பிரிவுகளாக அன்று தொட்டு இன்றுவரை வேறுபட்டு விளங்குகின்றன. உலகை முதன்மையாகக் கொண்டோரே சாங்கியர் என்று

இந்திய மெய்யுணர்வு நூல்கள் கூறும்.வள்ளுவர் சாங்கியர் அல்லர் என்று உணர்த்துவதே இங்குப் பரிமேலழகர் உள்ளக்கிடக்கை' என்று கூறினார். அதற்குள் முதல் மணி முடிந்துவிட்டது. இரண்டாவது மணி ஆங்கிலம். பெரிய வகுப்பு. நிறைய கூட்டம். அதிலும் முதலில் இடம் பிடித்துக்கொண்டு அமர்ந்தேன்.

ஆங்கில ஆசிரியர் கையில் அழகான சிறு புத்தகம் ஒன்றுடன் நுழைந்தார். நாங்கள் எழுந்து நின்றோம். கை அமர்த்திவிட்டு அரும்பும் புன்னகையை அடக்கிக் கொண்டு எங்களை ஒரு நோட்டமிட்டார். அருளாளர்க்குப் பூசி மெழுகினாற் போன்ற மேனி. அவ்வளவு மெலிவும் இல்லை; அவ்வளவு பருமனும் இல்லை. ஆனால் ஆங்கில ஆசிரியரோ எலும்பும் தோலுமாய் இருந்தார். 'பூ' என்று ஊதினால் பறந்து விடுவார்போல் இருந்தது, மேலும் என்னைப் போல் இளைஞராகவும் காணப்பட்டார். ஆனால் அவர் ஆங்கிலத்தில் அழகாக, அடுக்கடுக்காகப் பேசத் தொடங்கியதும் வகுப்பு அமைதியாகக் கேட்கத் தொடங்கிற்று.

கடவுளுக்கு அடுத்தபடியாக ஒருவர் உலகில் வணங்கத் தக்கவர் உண்டு என்றால் அவர் சேக்சுபியர்தான். கடவுள் எத்தனையோ பேரைப் படைத்தான். ஆனால் ஒருவர் போல் ஒருவரைப் படைக்கவில்லை. குணம் வேறு கொள்கை வேறு. நிறம் வேறு நிலை வேறு. இதில்தான் கடவுள் படைப்பின் தனித்தன்மை இருக்கிறது. உலக மகா கவிகளுள் எண்ணற்ற கதைமாந்தர்களைப் படைத்த பெருமை சேக்சுபியருக்கு உண்டு. அவர் படைப்பிலும் ஆண்டவன் படைப்புபோல், ஒருவர் போல் ஒருவர் இல்லை. நீங்கள் படிக்கப்போகும் சூலியசீசர் ஒரு துன்பியல் தலைவன். இப்படி எத்தனையோ துன்பியல் தலைவர்களை அவர் படைத்துள்ளார். மேக்பெத், கேம்லட், ஒதெல்லோ—இப்படிப் பலரைப் படைத்துள்ளார், ஆனால் ஒருவர்போல் ஒருவர் இல்லை.

இப்படியே பெண்டிர் பலர். சிறுவர் பலர், நகை வேழம்பர் பலர்...ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் வேறுபட்டவர்'...என்ற முன்னுரையோடு சூலிய சீசர் நாடகத்தில் ஓரிரு வரிகளைப் படித்துக் காட்டினார். 'வகுப்புகள் இல்லை; நீக்கப்பட்டன' எனச் சுற்றறிக்கை வந்தது. அப்போது மணி பன்னிரண்டு. அப்போது இளமுருகும் வீட்டிற்கு வந்திருக்கமாட்டான். அவன் பள்ளிக் கூடத்தையும் தெரிந்து வைத்திருக்கவில்லை, கல்லூரியைவிட்டு வெளியேறி விளையாடும் திடல் நோக்கிப் போய் மரத்து அடியில் அமர்ந்தேன்.

'இனி என்ன செய்வது? எப்படியும் இளமுருகு வீட்டில் ஓரிரு நாள்களுக்குமேல் தங்க இயலாது; தங்கக் கூடாது. இலவச உணவு விடுதிபற்றி இனி நம்பிப் பயன் இல்லை. அரசினர் உதவிக்கு முயன்றால் அது கைக்குவந்து சேரப் பல மாதங்கள் ஆகும். எனவே எப்படியாவது உழைத்துப் பெற்றதை வைத்துக்கொண்டு பொங்கி உண்பது என்ற முடிவுக்கு வந்தேன். காந்திக் குடிலில் பெற்ற மன உரமும் சமையல் அனுபவமும் கைகொடுக்கும் என நம்பினேன். கையிலிருந்த காசை எண்ணிப் பார்த்தேன். இருபத்து நான்கு ரூபாய் இருந்தது. சிறிய அறை ஒன்று பார்த்துத் தனிக் குடித்தனம் தொடங்க எண்ணினேன். அந்தச் சமயம் அங்கே ஆசிரியர், மாணவர் உண்பதற்காக கேரியர் எடுத்துக் கொண்டு பலர் கல்லூரிப் பக்கம் என்னைக் கடந்து போயினர். அவருள் ஒரு பாட்டியம்மா என்னை ஏனோ இரக்கத்தோடு பார்த்துக்கொண்டே போனார். அந்த அம்மாவைக் கேட்கலாம். ஏதாவது சின்ன அறை கிடைக்குமா என்று கேட்டுப் பார்க்கலாம் என்று எண்ணிப் பின்தொடர்ந்தேன். கல்லூரி முற்றத்தில் கேரியர் கூடையை இறக்கி வைக்கத் துணை செய்தேன். நன்றியோடு என்னைப் பார்த்துவிட்டு உள்ளே போய்க் குழாய் நீரில் முகம் கை கால் கழுவிக்கொண்டு 'அப்பாடா' என்று வந்து வெளியே உட்கார்ந்தார் அந்தப் பாட்டி. நான் போய் முன் நின்றேன்.

'என்ன தம்பி! என்ன வேணும்! சாப்பாடு எடுக்கணுமா?'

'இல்லேம்மா, எனக்கு ஒரு சின்ன அறை வேணும்'

'அறையா! பொங்கிப் போட கூட யாராவது இருக்காங்களா?...'

'இல்லேம்மா. நானேதான் பொங்கிச் சாப்பிட்டுக் கொள்ளப் போகிறேன். எப்படியாவது எனக்கு ஒரு சின்ன அறை—எவ்வளவு சின்ன அறையாக இருந்தாலும் போதும் பார்த்துக் குடும்மா—' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டேன்.

என் துன்பத்தை என் பேச்சிலிருந்து ஒருவாறு அந்தப் பாட்டி ஊகித்திருக்க வேண்டும். 'ஏம்பா, பொங்கித் திங்கப் போறேங்கிற. அப்படிக் கஷ்டப்படுற நீ வாடகை கொடுக்க முடியுமா. இருபது இருபத்தைந்து கேப்பாங்கெளே!'' என்றார்.

'அவ்வளவு முடியாதும்மா. ஒரு அஞ்சாறு ரூபாய் தான் கொடுக்க முடியும்' என்றேன். பாட்டி தனக்குள்ளே சிரித்துக் கொண்டு,

'எந்த ஊரு தம்பி நீ!...இந்தப் பட்டணத்திலே ஐந்தாறு ரூபாய்க்கு அறை கிடைக்குமா'ன்னு இழுத்தார் அந்தப் பாட்டி.

அப்போது அருகிலிருந்து இன்னொரு அம்மா, 'ஏன் கண்ணம்மா—நம்ப காளியப்பன் குடிசை சும்மாதானே இருக்கு. ஆளில்லாமே அது பாழாய்க்கிட்டு இருக்கு. ஏதோ அஞ்சு ஆறு வாங்கிக்கிட்டு இந்தப் புள்ளைக்குக் குடுத்தா என்ன?' என்று எனக்குச் சாதகமாகப் பேசினார்.

'சரிடி. அதும் சரிதான். பாழாப்போனவ மறந்தே போயிட்டேனே. என் தலையிலே கல்லெத்தாம் போடணும்' என்று தன்னை நொந்து கொண்டே 'சரி தம்பி. கொஞ்சம் இரு. சாப்பாடு முடிந்ததும் வீட்டுக்குப் போறப்போ அழச்சிகிட்டுப்போறேன். அதோ அந்தப்

புளியமரத்துக்கிட்டே இரு' என்று ஒரு புளியமரத்தைச் சுட்டிக் காட்டினார்.

'சரி' என்று நான் கேண்டீனுக்குப் போய் நிறைய எண்ணெய் ஊற்றிச் சுடும் ரவா தோசை ஒன்று வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மூன்று குவளைத் தண்ணீர் குடித்தேன். மற்ற சிற்றுண்டி சாப்பிட்டால் விரைவில் பசி வந்துவிடுவ தால் சென்னைக்கு வந்ததிலிருந்து நான் ரவா தோசையே சாப்பிடும் பழக்கம் ஏற்படுத்திக்கொண்டேன். சாப்பிட்டு விட்டு அங்கும் இங்கும் வேடிக்கை பார்த்துவிட்டுப் பாட்டி சொன்ன புளிய மரத்து அடியில் திருக்குறளைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

சொன்னபடி பாட்டியம்மா வந்தார். என்னை அழைத்துக் கொண்டு கூவநதிக்கரைப் பக்கம் போனார். அங்கே இருமருங்கும் ஒரே குடிசைகள். ஒரே குப்பை, ஒரே நாற்றம். பகலிலேயே பலர்க்குக் கழிவிட மாக இருந்தது. பன்றிகள் அங்கிருந்த கூவஞ்சேற்றில் குழிபறித்துக் கொண்டு குடியும் குடித்தனமுமாக இருந்தன. அதற்குப் பக்கத்தில் காலியாக இருந்த ஒரு குடிசையைக் காட்டினார்.

அதற்குப் பூட்டும் இல்லை திறப்பும் இல்லை. மெல்லக் கதவை அசைத்தேன். ஒரே அசிங்கமாக இருந்தது. என்னவோபோல் அந்தப் பாட்டியைப் பார்த்தேன்.

'என்ன தம்பி அப்படிப் பார்க்கிறே. சாயுங்காலம் வந்து பாரு. மணியாக பண்ணி வைக்கிறேன் கூட்டி மெழுகினா கோயில் மாதிரி ஆயிடும். அப்புறம் நீ வந்து பாரு! புடிச்சா இரு. புடிக்காட்டி எத்தினியோ பேரு. ஏதோ ஒன்னெ பாத்தா அய்யோன்னு இருக்கு, அதனா லெதான்' என்றார் அந்தப் பாட்டி அம்மா.

'சரிம்மா சாயுங்காலம், வர்றேன்!' என்று சொல்லி அஞ்சலகம் போய் மூன்று அஞ்சல் அட்டை வாங்கி என் இந்தத் திட்டத்தை அம்மாவுக்கும், குணாளனுக்கும், தொண்டர் கோபாலருக்கும் எழுதினேன். மீண்டும்

கல்லூரி நூல் நிலையத்துக்கு வந்து சில நூல்களைப் புரட்டிக்கொண்டே காலங்கழித்தேன். மாலை ஐந்து மணி அளவில் மீண்டும் குடிசைக்குப் போனேன்.

கிழவி கின்னாரக் கிழவிதான். தான் சொன்னபடி கோயிலாகத்தான் அந்தக் குடிசையை மாற்றி இருந்தார். சுற்றுப்புறம் எல்லாம் தூய்மையாகக் கூட்டி முற்றத்தில் கோலம் இட்டு, உள்ளே நன்றாக ஒட்டடை அடித்துத் தரையை மெழுகி, அகல்விளக்கு ஒன்று உள்ளே ஏற்றி இவ் வளவும் செய்துவிட்டு எனக்காகக் காத்துக் கொண்டிருந் தார் அந்த அம்மா.

மனத்திற்குப் பிடித்துவிட்டது. கல்லூரியும் அருகில் இருந்தது. 'சரிம்மா இங்கேயே இருக்கிறேன். மாதம் ஐந்து ரூபாய் தந்து விடுகிறேன்' என்றேன்.

'அட்வான்சா மொதல்ல அஞ்சு ரூபா கொடுப்பா. அப்பொதான் காளியப்பன் ஒப்புக்குவான்' என்றார்.

'சரிம்மா! என்று என்னிடமிருந்த இருபத்துநான்கு ரூபாயில் ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தேன்.

'அது சரி தம்பி! பொங்கித் திங்கப்போறேன்னியே! பாத்திரம் எல்லாம் வச்சிருக்கியா?'

அப்போதுதான் பொங்கித் தின்பதற்கும் முதலீடு வேண்டியதன் உண்மை எனக்குப் புலப்பட்டது. பத்து ரூபாயை எடுத்துப் பாட்டியிடம் கொடுத்து இரண்டு சட்டி, இரண்டு கலயம், நான்கு மடக்கு, ஒரு அடுப்பு வாங்கிக் கொண்டு வரச் சொல்லிவிட்டு இளமுருகு வீட்டுக்குப் புறப்பட்டேன்.

நான் போய்ச் சேருவதற்கும் இளமுருகு அங்கு வருவ தற்கும் சரியாக இருந்தது. அவன் மனைவி எழிலரசி பூரி சுட்டுக் கிழங்கு செய்திருந்தாள். வயிறும் தயாராக இருந் தது. அவனும் பசியோடு வந்திருந்தான். இருவரும் உண் டோம். அவன் காப்பி குடித்தான். நான் மோரு குடித் தேன். அவன் சிரித்துக் கொண்டே 'செங்கண்ணா,

இன்னும் காந்திக் குடில் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வில்லையா? என்னால் அங்கிருந்தது போல வாழ இயல வில்லை. ஏதோ கால் ரூபாய்க்கு ஒரு காப்பி குடிச்சா ஒருவேளை சாப்பாடு இல்லாம ஓட்டிட முடியுது. என்ன செய்வது' என்று குறைபட்டுக் கொண்டான்.

மெல்லப் பேச்சு வாக்கில் 'நன்றி இளமுருகு. நான் புறப்படுகிறேன்...' என்றேன்.

'எங்கப்பா, அதுக்குள்ளே. நேற்று என்னென்னவோ சொன்னே! இப்பவா எங்கே போகப் போறேன்னு' ஆதர வோடு கேட்டான்.

'ஏன்? இடம் போதாது கஷ்டப்படுகிறோம்னு போறிங் களா? எங்களுக்கு இது பழக்கமாயிடுச்சு. கவலைப்படாம இருங்க' என்று அவன் மனைவியும் அன்போடு வற்புறுத் தினாள்.

''இல்லே இளமுருகு, இல்லேம்மா! எனக்கு விடுதியில் இடம் கிடைச்சிடுச்சி. இப்பவே போகணும்னு'' விடாப் பிடியாகச் சொன்னேன். 'சரி' என்று வழி யனுப்பினர்.

வருகிற வழியில் கொஞ்சம் அரிசி, நாலணாவுக்கு மிளகாய், ஒருபடி உப்பு, ஐந்து பலம் புளி, கொஞ்சம் பச்சை மணிலாப்பயறு வாங்கிக் கொண்டு என் குடிசையை அடைந்தேன். நான் சொன்னபடி பாட்டி எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருந்தார்.

என்னைக் கண்டதும் எழுந்து நின்று 'ஏம்பா! எல்லாம் சொன்னே-கட்டை பத்தி ஒண்ணும் சொல்லலியே, எப்படி அடுப்பு எரிப்பே! சரின்னு நானே ஒரு ரூவாவுக்குச் சவுக்குக் குச்சி ஒரு கட்டு வாங்கியாந்துட்டேன். வேண் டாட்டி. வீட்டுக்கு எடுத்துகிட்டுப் போறேன்' என்றார் அவர்.

'அய்யய்யோ! எடுத்துக்கிட்டுப் போக வேண்டாம். எனக்கு வேணும்மா. சொல்ல மறந்துட்டேன்' என்று படபடத்தேன்.

'சரிப்பா, அப்படின்னா இந்தா மீதிப்பணம்' என்று ஆறரை ரூபாயைத் தந்தாங்க. 'ஆகா' நம் தனிக் குடித்தனம் ஏறக்குறைய பதினைந்து ரூபாயில் தொடங்கி விட்டதே' என்று மகிழ்ச்சியோடு உள்ளே போய் என் பெட்டி, பை ஆகியவற்றை வைத்தேன்.

பாட்டி இரண்டு கலத்திலும் தண்ணீர் நிரப்பி வைத் திருந்தார். ஒரு சின்னச் சட்டியை எடுத்து அதில் ஒரு கை மணிலாப்பயறு எடுத்துப் போட்டு ஊறுவதற்காகச் சிறிது தண்ணீர் ஊற்றி மடக்கால் மூடினேன். அகல் விளக்கில் மெல்லச் சிறிது நேரம் படித்தேன். நாட்குறிப்பு எழுதி விட்டுப் படுத்தேன்.

காலையில் எழுந்ததும் அடுப்பில் உலை வைத்துச் சோறு சமைத்துவிட்டு, அந்த நெருப்பிலேயே ஊறிய நிலக் கடலைப் பயற்றை வேகுவதற்காகப் போட்டு விட்டு வெந்த சோற்றில் கஞ்சி ஊற்றி உப்புப் போட்டுக் குடித் தேன். மீதியைத் தண்ணீர் ஊற்றி இரவு உணவுக்காகப் பத்திரப் படுத்தி வைத்தேன். அதற்குள் என் குடித்தனத் தைப் பார்க்கப் பாட்டி வந்து விட்டார்.

'ஏண்டா தம்பி! தொட்டுக்க ஒண்ணுமில்லாமலா சாப்பிட்டெ. எங்கிட்ட சொன்னா எலுமிச்சை ஊறுகாய் ஒரு துண்டு தரமாட்டேனா! ஒரு துண்டு குடுத்தா எங்குடியா முழுகிப் போயிடும். நான் மொதல்லியே குடுக்க மறந்து தொலைச்சிட்டேன். என் தலையிலே கலலெத்தான் போடணும்' என்று ஏதேதோ பேச ஆரம்பித்து விட்டார்.

'அம்மா! அதெல்லாம் ஒண்ணும் இல்லே. மத்தியானம் மோரு வேணும். வந்தா வாங்கி வையுங்க. இந்தாங்க' என்று பத்துக் காசு எடுத்துக் கொடுக்கப் போனேன்.

'அட நீ ஒண்ணு. வாடிக்கையா குடுடி அம்மான்னா அவ கொடுக்கிறா. மாசக் கடைசியிலே கொடுத்திட்டாப் போவுது. நீ என்ன கூரையைப் பிச்சிக்கிட்டு ஓடிடவா போறே' என்றார் அவர்.

கையில் காசு இல்லாத நேரத்தில் அதுவும் சரியாகத் தான் எனக்குப் பட்டது. 'ஒருவீடு என்று ஏற்பட்டு விட்டால் சமுதாயம் எவ்வளவு உதவ முன் வருகிறது' என்று நினைத்து வியந்தேன்.

'சரி பாட்டி! ஒரு பூட்டு கொடுங்களேன்' எனறு கேட் டேன். ஒரு சின்னப் பூட்டுக் கொண்டு வந்து கொடுத்தார். பூட்டிக்கொண்டு 'நான் வர்ரேம்மா' என்று சொல்லி விட்டுக் கல்லூரிக்குப் புறப்பட்டேன். கல்லூரி தொடங்க நிரம்ப நேரம் இருந்ததால் நேரே நூல் நிலையம் போய்ப் படித்தேன்.

நண்பகலில், அடுப்பில் நன்றாக வெந்திருந்த மணி லாப் பயற்றில் உப்புக் கலந்து குலுக்கித் தின்று பசி தீர்த்துக் கொண்டேன். பாட்டி வாங்கி வைத்திருந்த மோரில் கொஞ்சம் குடித்துவிட்டு மிகுந்ததை இரவு உணவுக்கு வைத்துக் கொண்டேன்.

மாலையில் திருக்குறளை எடுத்துக் கொண்டு குடிசை களுக்கு அப்பால், கூவம் வளைந்து திரும்பும் முனையில் அமைந்திருந்த மண்மேட்டில் போய் அமர்ந்தேன். எதிரே தென்னந்தோப்பு ஒன்று தெரிந்தது. அதற்கு அப்பால் கதிரவன் மறையும் காட்சி அழகாக இருந்தது. சிறிது நேரத்தில் பொழுது போய்விடுமே என்ற அச்சத்தில் அவசர அவசரமாகப் படிக்கத் தொடங்கினேன். கதிரவன் மறைந்தான். இருள் சூழ்ந்தது. புத்தகத்தை மூடி வைத்து விட்டு மேல் திசையை நோக்கினேன்.

'லட்சியம் மாய்ந்திடுமோ-வாழ்வின்
முக்கியம் அதுதானே'

என்ற இளமுருகு பாடல் நினைவுக்கு வந்தது. வாய்விட்டு மெல்லப் பாடிக் கொண்டிருந்தேன். இரண்டு மூன்று சிறுவர்கள் என்னையறியாமல் என் பின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டு என் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தனர். நான் திரும்பிய போது அவர்கள் சிரித்துக் கொண்டே அந்தப் பாட்டின் முதல் இரண்டு அடிகளைத் திரும்பப் பாடினர்.

பள்ளிக் குழந்தைகளைக் கண்டு நாள் பல ஆகிவிட்டதால் அந்தக் குழந்தைதைதகளிடம் ஏதேனும் பேச வேண்டும் போல் இருந்தது. அவர்களிடம் பேச்சுக் கொடுத்தேன். அங்கே நகூராண்மைப் பள்ளியில் மூன்றாம் வகுப்புப் படிப்பதாகக் கூறிப் போய் விட்டனர்.

மறுநாள் கல்லூரியில் பேச்சுப் போட்டி ஒன்று நிகழ்ந்தது. 'நாட்டுப்பற்றே போருக்குக் காரணம்' என்ற தலைப்பில் ஐந்தைந்து நிமிடம் ஒவ்வொருவரும் சொற்பொழிவாற்ற வேண்டும். 'முதலாக வரும் இருவர் கல்லூரிப் பேச்சாளராகத் தேர்ந்தெடுக்கப் பெறுவர்' என்ற அறிக்கை கேட்டு நானும் கலந்து கொண்டேன். 'நாட்டுப் பற்று இன்மையே, தன்னலமே போருக்கெல்லாம் காரணம்' என்று தலைப்பையே மாற்றிப் பேசினேன். சூலியசீசர் அந்தோணி அகச்டசு சீசர் ஆகியோர் காலத்தில் நிகழ்ந்த போர்களையும், தமிழகத்துச் சேரர், சோழர், பாண்டியர் தங்கள் தங்கள் ஆற்றலைக் காட்ட வாகைப் போர் செய்து மக்கள் பலரை அழித்து ஊரைக் கொளுத்திப் பாழாக்கியதையும் எடுத்துரைத்தேன். அன்று முதலில் கண்ட ஆங்கில ஆசிரியரும் ஒரு நடுவராக இருந்தார். அவர் எனக்கு நிறைய மதிப்பெண் தந்திருக்க வேண்டும். நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். மகிழ்ச்சியோடு குடிசைக்குத் திரும்பினேன். நேற்றுக் கண்ட இரண்டு சிறுவர்களோடு இன்னும் நான்கைந்து பேர் புத்தகங்களோடும் ஒரு அரிக்கேன் விளக்கோடும் குடிசை முன் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தனர்.

'என்னடா தம்பிகளா' என்று கேட்டேன். 'சாயுங் காலமே வந்துட்டோம் உங்கக் கிட்டே படிச்சிக்க வந் தோம். உங்களைக் காணோம். இருட்டிப் போச்சு. நாகலிங்கம் ஊட்லெயிருந்து அரிக்கேன் கொண்டாந்தான் படிச்சிக்கிட்டு இருக்கோம்' என்றார்கள்.

'சரிங்கடா! சாப்பிட்டுட்டு வந்துடறேன்' என்று உள்ளே போய் அகல் விளக்கை ஏற்றி வைத்து விட்டு எப் போதும் போல் நீர் இட்ட சோற்றில் சிறிது மோர் இட்டுக் கரைத்துக் குடித்துவிட்டு வெளியே வந்தேன் எனக்காகக் காத்திருந்த பிள்ளைகளுக்குச் சிறிதுநேரம் பாடம் சொல்லிக் கொடுத்து அனுப்பி விட்டு உள்ளே வந்து படித்துவிட்டு நாட் குறிப்பு எழுதி விட்டுப் படுத் தேன்.

இரண்டு மூன்று நாள்களில் பல குழந்தைகள் என்னிடம் பாடங் கேட்கக் கூடி விட்டனர். ஊரும் உறவும் அற்றுத் தனிமையில் வாடும் எனக்கும் அப்படிக் குழந்தைகளோடு சிறிது நேரம் போக்குவது மகிழ்ச்சி யாகவே இருந்தது.

கவலை இன்றி வாழும் என் மண்மேட்டு வாழ்வு குறித் தும், பேச்சாளராகத் தேர்ந்தெடுத்தது குறித்தும் பூங்கோதைக்கு எழுதினேன். மகிழ்ச்சியோடு உடனே பதில் எழுதுவாள் என்று எதிர்பார்த்தேன். நான்கைந்து நாள்களுக்குப் பிறகு 'நலம்! நன்றாகப் படியுங்கள். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம்' என்று சப்பென்று எழுதி இருந்தாள். 'ஏதாவது எழுதினால் நான் வருந்து வேன் என்று அப்படி எழுதினாளோ, என்னவோ?' என்று எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன்.

ஒரு வாரம் ஆகி விட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை வாங்கி வந்த அரிசியும், மணிலாப் பயறும் தீர்ந்து போய் விட்டன. கையில் ஆறேழு ரூபாய்களே இருந்தன. எப்படிச் சமாளிப்பது என்ற கவலையில் படுக்கையை விட்டு எழ மனமின்றிச் சோர்வோடு படுத்திருந்த என்னை

அய்யா! அய்யா!' என்று நாகலிங்கம் அழைத்த குரல் எழுப்பியது.

எழுந்து வெளியே வந்தேன். நாகலிங்கத்தோடு மூன்று நான்கு பெரியவர்கள் வந்திருந்தனர். என்னைக் கண்டதும் வணக்கம் செய்தனர். நானும் பதிலுக்கு வணக்கம் செய்துவிட்டு நின்றேன். வந்தவர்கள் ஒன்றும் சொல்லாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

நாகலிங்கத்தின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த பெரியவர், 'இவன் என் புள்ளெ. ஒங்களெபத்தி சொன்னான். நினம் இங்கே இருக்கிற ஏழெ புள்ளைங்களுக்கெல்லாம் பாடஞ் சொல்லித் தர்ரதா சொன்னான். துணி வெளுத்துப் பொளைக்கிற எங்க புள்ளைங்களுக்கு நீங்க செய்யுற உதவியைப் பார்த்து ரொம்ப சந்தோசம். அதொட நீங்களே பொங்கிச் சாப்பிடறதாகவும் இந்தக் குடிசையில் இருக்கிறதாகவும் சொன்னான். இவரு பொன்னம்பலம். எங்க சங்கச் செயலாளர். இவரு பெரியசாமி பொருளாளர். நான்தான் தலைவன். எங்கச் சங்கக் கொட்டகை சும்மாதான் இருக்கு. எப்பவோ மாதம் ஒருமுறைதான் கூடிப் பேசுவோம். மின்விளக்கு இருக்கு. மேஜை நாற்காலி எல்லாம் இருக்கு. நீங்க அங்கேயே தங்கிக்கலான்னு கேட்கத்தான் வந்தோம்' என்று தயங்கித் தயங்கிச் சொன்னார்.

'வேண்டாமுங்க. இதுவே வசதியாகத்தான் இருக்கு' என்று மறுத்தேன்.

'அடடே அப்படிச் சொல்லப்படாது. ஏம் பெரிய பையன் நடராசன் இங்கேதான் கல்லூரியில் படிக்கிறான். அன்னெக்கு நீங்க நல்லாப் பேசினிங்களாம். வந்து சொன்னான். கல்லூரியிலே படிக்கிற நீங்க எவ்வளவோ படிக்கணும். எழுதணும். இந்தக் குடிசையிலே அந்த வசதியெல்லாம் ஏதுங்க, தப்பா நெனக்காம வந்துடுங்க' என்றார்.

தப்ப வழியில்லை. 'சரி' என்றேன். மீண்டும் அந்த மூன்று பேரும் அங்கேயே நின்று கொண்டிருந்தனர். 'என்னங்க, ஏதாவது வேண்டுமா' என்றேன். ஒன்னுமில்லீங்க. சாயுங்காலம் எப்போதும்போல எல்லாப் புள்ளங்களுக்கும் பாடஞ் சொல்லிக் கொடுங்க, காலையிலே ஒரு மணி நேரம் எங்க புள்ளெங்களுக்குத் தனியா பாடம் சொல்லிக் குடுங்க, அதுக்கு...அதுக்குப் பதிலா...''என்று இழுத்தார்...

'என்னங்க'...என்றேன்.

அவர் பொன்னம்பலத்தைப் பார்த்தார்.

'அதுக்குப் பதிலா, எங்க வீட்லேயே நீங்க சாப்பிடணும். நாங்க வண்ணாரச் சாதி. நீங்க என்னமோ. சாப்பிடக் கூடாதுன்னா பணமா தர்ரோம்' என்றார்.

'சாதி பற்றி எனக்கு ஒன்றும் இல்லெ. பாடம் வேண்டுமானா சொல்லித் தர்ரேன். வீண் சிரமம் உங்களுக்கு வேண்டாம்' என்று அவர்கள் வீட்டில் உண்ண மறுத்தேன்.

உடனே பெரியசாமி, 'அப்படி சொல்லப்படாதுங்க. நீங்க நெறைய படிக்கணுமுங்க. எழுதணுமுங்க. புள்ளெங்களுக்கும் பாடஞ் சொல்லித் தரணுமுங்க. இதுக்கு இடையிலெ சமைச்சுக்கிறது எவ்வளவு கஷ்டமுங்க. எங்க வீட்டுலெ சாப்பிட மனமில்லேன்னா சொல்லுங்க. சங்கத்துக்கே சாப்பாடு அனுப்பி வைச்சிடுறோமுங்க' என்றார்.

'சரி. ஏதோ திட்டமிட்டுக்கொண்டே இவர்கள் வந்திருக்கிறார்கள். தப்ப முடியாது. நம் நிலையும் அதற்கு ஏற்றாற்போல்தான் இருக்கிறது' என்று எண்ணியவனாய் 'உங்கள் விருப்பம்' என்றேன்.

சொன்னதுதான் தாமதம். உடனே நாகலிங்கம் ஓடினான். தன் நண்பர்களை அழைத்து வந்தான். குடிசையிலிருந்த சாமான்களை எல்லாம் சங்கத்துக்கு எடுத்துக் கொண்டு போகத் தொடங்கிவிட்டனர், நான் பாட்டியை அழைத்து, விவரமாக எல்லாம் சொல்லி, ஒரு கலயம்

மடக்கு தவிர மற்றதை எல்லாம் எடுத்துக்கொள்ளச் சொல்லி விட்டுச் சங்கக் கொட்டகைக்குக் குடியேறினேன்.

வாழ்க்கை ஒழுங்காக நிகழ்ந்து கொண்டிருந்தது. காலாண்டுத் தேர்வும் வந்து போயிற்று. விடுமுறை ஒரு வாரமே இருந்ததால் அரையாண்டு விடுமுறையில் சோழன் பட்டிக்குப் போய்க் கொள்ளலாம் என்று தங்கி விட்டேன். ஊரிலிருந்து வரும் கடிதம் எல்லாம் சப்பென்று எந்த உணர்ச்சியும் இல்லாமல் இருந்தன. என் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வனபோல் அவை இல்லை. என்னை மறந்து விட்டார்களோ என்றுகூட அடிக்கடி கோபம் வரும். சிற்சில போது இளமுருகு வீட்டிற்குச் சென்று ஓரிரு நாள் தங்கிவரலாமா என்று தோன்றும். யாராவது நெருங்கிய, அன்புக்கு உரிய, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு நட்பு, ஒரு உறவு கிடைக்காதா என்று மனம் அடிக்கடி ஏங்கியது. அப்போதுதான் எதிர்பாராமல் அவள் தொடர்பு, செல்வியின் நட்பு எனக்குக் கிடைத்தது.

என்றும் போல் மாலையில் மண்மேட்டில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு வேன் வந்து அங்கு நின்றது. அதிலிருந்து வண்ண வண்ணப் பறவைகள் போல் பெண்கள் பலர் இறங்கினர். அலுவலர் சிலர் மண்வெட்டி., கூடை, விளக்குமாறு இவற்றை எடுத்துக் கொண்டு அவர்கள் பின்னால் வந்தனர். அவர்களைப் பார்த்துக்கொண்டே நான் என்னிடம் பாடம் கற்க வந்த சிறுவர்களோடு அமர்ந்திருந்தேன். 'ஹலோ!' என்ற ஒலி அந்தக் கூட்டத்திலிருந்து துள்ளிவருவதைக் கேட்டு அந்தத் திசையில் உற்று நோக்கினேன். ஒருநாள், இராஜாஜி மண்டபத்தில் பாரதி விழாப் பேச்சுப் போட்டியில் என்னோடு போட்டியிட்ட அந்தப்பெண்தான் அப்படி அழைத்தது என்று அறிந்து எழுந்து நின்றேன். தன் தோழிகளை அப்படியே மறந்த வளாக என்னை நோக்கி வந்தாள்.

'எங்கே! இந்த மண் மேட்டிற்கு' என்றேன்.

சமூகத் தொண்டு. ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை ஏதேனும் ஒரு இடம் தேர்ந்தெடுத்துப் பணிபுரிவோம் இந்த மாதம் நான் செய்த புண்ணியம் இதைத் தேர்ந்தெடுத்தனர்...' என்று கூறித் தன்னோடு வந்த தோழியர் சிலரை 'அவளே, இவளே!' என்று அழைத்து என்னை அறிமுகப்படுத்தி வைத்தாள். அவர் களும் மகிழ்ச்சியோடு தங்களை அறிமுகம் செய்துவிட்டு, பணிசெய்ய அப்பால் போய்விட்டனர். அவள் மட்டும் என்னோடு நீண்டநேரம் அவர்கள் புறப்படுகிறவரை பேசிக்கொண்டே இருந்தாள். அவள் அன்பும், ஆர்வமும் எனக்கு ஒருவகை அச்சத்தை அளித்தது. அவள் என்பால் தவறான அன்பு கொள்வதற்கு இடந்தரக்கூடாது என்று எண்ணினேன். மெல்லப் பூங்கோதைப் பற்றிப் பேச்செடுத் தேன். உடனே அவள் முகம் வாடிப்போய்விட்டது. கவனியாதவன் போல் அவள் பண்பு முதலியவற்றைச் சுருக்கமாகச் சொல்லி,

'செல்வி! நான் அநாதை. என்னோடு பிறந்தார் யாரும் இல்லை. உன்னைப்போல ஒரு தங்கைக்கு நான் ஏங்கிய நாள்கள் பல உண்டு. இறைவன் இன்று உன்னை எனக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறான். ஏனோ இப்போ தெல்லாம் பூங்கோதையிடமிருந்துகூட இதயத்துக்கு இதமாகக் கடிதம் வருவதில்லை. உண்மையான என் இதயத்துக்கு ஏற்ப அன்பு செய்ய ஒருவர் எனக்கு வேண்டும். நீ அப்படி எனக்கு உகந்தவள். என்னை உன் அண்ணனாக ஏற்றுக் கொள்கிறாயா?' என்று உருகிக் கேட்டேன்.

கலங்கிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'உம்' என்பதுபோல் தலையை அசைத்தாள். குடகுக் காவிரி போல் குதித்தோடி வந்தவள், திருச்சிக் காவிரிபோல் மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்துச் சென்று தன் தோழிகளோடு சேர்ந்து மறைந்து போனாள்.

மற்றொரு நாள் மாலை என்னைத் தேடிக்கொண்டு அவள் தனியே வந்தாள். முன்போல் அவள் கண்களில் அந்த மயக்கம் இல்லை. 'வா செல்வி! வா. உன்னை அடிக்கடி நினைத்துக் கொண்டேன். எங்கே இந்த அண்ணனை மறந்துவிட்டாயோ? என்று கலங்கினேன். வா! அப்பா நலமா? அம்மா நலமா?' என்று கேட்டேன்.

சிரித்துக் கொண்டே, 'நாளைக்கு விடுமுறைதானே? ஏதாவது பேச்சுப் போட்டி இருக்கிறதா? எங்காவது போக வேண்டுமா என்று கேட்டாள்.

'நூல் நிலையம் போக வேண்டும். வேறு ஒன்றும் இல்லை ஒரு திட்டமும் இல்லை. எல்லா ஞாயிறும் போல் நாளையும் இந்த மண்மேட்டிலும் அந்தச் சங்கக் கொட்டகையிலும் நூல் நிலையத்திலும்தான் என் வாழ்வு' என்று விரக்தியோடு சொன்னேன்.

'அப்படியானால் நல்லது. நாளைக்கு எங்கள் வீட்டுக்கு வாருங்கள். தவறாது வாருங்கள். எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பேன்' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டாள், இன்னும் சிறிது நேரம் அவளோடு பேசிக் கொண்டிருக்கலாம் போல் தோன்றியது. மாலை மயங்கிக் கொண்டிருந்ததால் 'சரி செல்வி! போய் வா' என்று சிறிது தூரம் கூவம் பாலத்தைக் கடந்து, தார்ச்சாலைவரை சென்று வழியனுப்பி விட்டுவிட்டு வந்தேன். இப்படிக் கிடைத்த அவள் உறவு, அன்பு செய்ய யாரும் இல்லாத எனக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

11
செல்வி

'பாரதி காந்தியக் கவிஞர்' என்பது அவ்வளவு பொருந்தாது. காந்தியத்தைத் தன்னுள் விழுங்கிக் கொண்டு அதற்கு மேலும் மேலும் உயர்ந்து சென்ற கவிஞர் அவர்.

தமிழ் நெஞ்சங்களைக் காந்தியத்தை விடப் பாரதியமே ஆட்கொண்டிருந்தது என்பதே உண்மை அதற்காகக் காந்தியைப் பாரதி மதிக்கவில்லை என்றோ, காந்தி அண்ணல் இந்திய மக்கள் உள்ளங்களில் தோற்றுவித்த அஞ்சாமை, சத்தியமாகிய சீரிய உணர்வுகளைப் பாரதியார் அரைகுறையாக எடைபோட்டு விட்டார் என்றோ இங்கு நான் கூறவில்லை. காந்தி அண்ணல் தோன்றிய குஜராத்திநாட்டுக் கவிஞர்களைவிட, நோபெல் பரிசு பெற்ற இரவீந்திரரைவிட அழுத்தந்திருத்தமாக. முதன் முதலில் காந்தியைச் சரியாக இனங்கண்டு தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தவரே பாரதியார் தான் என்பதை,

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
இழிபடு போர்கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்'

என்ற பாடலே காட்டும். ஆயினும் அவர் காந்தீய நெறியைக் கடந்தும் சென்றவர் என்பது அவர் இயற்றிய புதிய ஆத்திசூடி 'முனைமுகத்து எதிர்த்து நில்' முதலான கருத்துக்கள் தெள்ளத் தெளிவாக்கும் என்பது திண்ணம்.'

என்றிவ்வாறு 'பாரதி காந்தீயக் கவிஞர்' என்ற எங்கள் தலைப்பையே மாற்றி, அது நாமக்கல் கவிஞர்க்கே மிகப் பொருத்தம் என்று நிலைநாட்டி,

"குத்தீட்டி ஒருபுறத்தைக் குத்த வேண்டும்
கோடாரி ஒருபுறத்தைப் பிளக்க வேண்டும்
ரத்தம்வரத் தடியதனால் ரணம்உண் டாக்கி
நாற்புறமும் பலர்நின்று நலியத் திட்ட

அத்தனையும் நான்பொறுத்து அஹிம்சை காத்து
அனைவரையும் அதைப்போல நடக்கச் சொல்லி
ஒத்துமுகம் மலர்ந்துஉதட்டில் சிரிப்பினோடும்
உயிர்துறந்தால் அதுவேயென் உயர்ந்த ஆசை''

எனும் கவிஞர் பாடலைக் கூறி முடித்த அந்த இளைஞர் முகம் 'கண்வழியே புகும் கள்வனே கொலோ' என்னும் கம்பன் பாடல் போல் செவிவழியே புகுந்து, மனத்துள் நுழைந்து, என் உயிரெல்லாம் நிறைந்து ததும்பி நின்றது. இராஜாஜி மண்டபத்தில் நிறைந்திருந்த அனைவர் மனமும் என்னைப் போலவே எண்ணியிருக்கும். பேச்சுப் போட்டியில் ஏனோ, முதல் பரிசு அவருக்கு இல்லை. ஆனால் என்னை மறந்து அவர் முன் சென்று நின்றேன்.

கூட்டம் முடிந்ததும் நானே சென்று 'கன்கிராஜு லேஷன் மிஸ்டர் செங்கண்ணன்' என்று பாராட்டினேன். 'கவிஞர் போப் போன்று சிறுசிறு தொடரில் பெரும் பெரும் கருத்துக்களைச் சொல்கிறீர்களே!' என்றேன்.

''வாழ்த்துக்கள். உங்களுக்குத்தானே முதல் பரிசு. என்னால் கருத்துக்களைக் கொட்டத்தான் முடிகிறது. ஆனால் உங்களைப் போல் அதனை அழகாக, பூச்செண்டு போலத் தொடுத்து இனிமையாக எடுத்துரைக்கத் தெரிய வில்லை!' என்றார் அவர்.

'ஓ! அப்படி ஒன்றும் இல்லை. நாங்கள் கருத்துலக வணிகர்கள். அங்கு இங்கு ஏதோ கிடைக்கும் கருத்தை, யாரோ எங்கோ சொன்ன கருத்தை எடுத்து, தொகுத்து அழகு செய்து, சூழ்நிலைக்கு ஏற்ப எடுத்துரைத்து நடுவர் களை மயக்கும் கலையில் வல்லவர்களாக இங்குச் சென்னை யில் வளர்ந்து வருகிறோம். நீங்களோ கருத்து உழவர். நீங்களே பயிரிட்டு வளர்த்த பயிர்களின் பயனை வாரி இறைக்கிறீர்கள். அதன் முன் நாங்கள் திக்குமுக்காடித் திணறிப் போய்விடுகிறோம்.'

'அப்படிப் பொய்யாகப் பாராட்டாதீர்கள்' நீங்களும் தான் எனக்குத் தெரியாத எத்தனையோ அரிய கருத்துக்

களைச் சொல்லி எனக்குத் தெளிவு தந்தீர்கள்...' என்று பேசிக்கொண்டே பேருந்து நிலையத்திற்கு அருகே வந்து விட்டோம். 27-பேருந்து உடனே வந்தது. அது அவருடையதென்று என்னிடம் விரைவாக விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார். இன்னும் என்னென்னவோ பேச வேண்டும் என்று எண்ணிய எனக்கு அன்று வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனால் இந்தச் சென்னை நாகரிகத்தில் அமைதியும் ஆழமும், அழகும் பொலிவும் கொண்டு விளங்கும் செங்கண்ணர் எனக்கு மணாளனாகக் கிடைத்தால் எவ்வளவோ பேறு பெற்றவள் ஆவேன்' என்று நினைத்தபடியே வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன். என் கனவு கானல் நீராகப் போகக்கூடாதே என்ற கவலையோடு படுத்து உறங்கினேன்.

பொழுது புலர்ந்ததிலிருந்து எந்த வேலையும் ஓடவில்லை. அவர் நினைவாகவே இருந்தது. பாடப் புத்தகங்களை அன்று மாற்றி எடுத்துக்கொண்டு போய் அந்தச் சிடுமூஞ்சி லெக்சரரிடம் படாத பாடு பட்டேன். 'அவரை மீண்டும் எப்படிச் சந்திப்பது...' என்று மனம் கேட்டுக் கொண்டே இருந்தது.

பச்சையப்பன் கல்லூரி என்று தலைவர் அன்று கூறியது நினைவுக்கு வந்தது. அவரை அங்கேயே சென்று சந்திக்க ஆசைப்பட்டேன். ஆனால் அங்கே எந்த வகுப்பில் தேடிக் காண்பது? இரண்டாயிரம் பேர் படிக்கின்ற இடத்தில் எப்படி அவரைக் கண்டு பிடிப்பேன். கடிதம் எழுதலாம். செங்கண்ணர், பச்சையப்பன் கல்லூரி என்று. கல்லூரிச் சொற்பொழிவாளர் ஆனதனால் பலருக்கு அவரைத் தெரிந்திருக்கும். ஆனால் அந்தக் கடிதம் தவறிப்போய் வேறு யார் கையிலேனும் கிடைத்து, அந்தக் கயவன் நாளைக்கு என்னிடம் வந்து கற்பைத் தருகிறாயா? காசு தருகிறாயா? என்று மிரட்டினால்! சீச்சீ! இது முட்டாள்தனம். என்னதான் செய்வது என்று குழம்பிப் போனேன். இப்படிக் குழம்பி வருந்திக் கொண்டிருந்த போதுதான் அன்று சமூகத் தொண்டிற்காகச் சேத்துப்

பட்டுக் கூவம்கரைக் குடிசைகளுக்குச் சென்ற போது அங்கே அவரைக் கண்டேன். கடவுளுக்கு நன்றி செலுத் தினேன். ஆனால் அன்பராக என்னை ஆட்கொள்வார் என்று என் நெஞ்சில் காதல் நினைவால் வளர்த்த அவர் தன்னை 'அண்ணன்' என்று அறிமுகப்படுத்திக் கொண் டார். தன் மனைவி பூங்கோதை குணநலன்களை எல்லாம் எடுத்துச் சொல்லி என்னைப் புனிதவதி ஆக்கினார். நானும் என்னைத் தேற்றிக் கொண்டேன். என் மனத்துக் கொத்த ஒருவர் கணவனாகத்தான் இருக்க வேண்டுமா? அண்ணனில் தம்பியில் அப்படி ஒருவர் இருக் கக்கூடாதா? என்ன பேதை மனம் என் மனம்... என்று என்னையே நான் தேற்றிக் கொண்டேன். அதன்பின் அவரைப் பற்றியும் பூங்கோதை பற்றியும் அப்பா அம்மா விடம் சொன்னபோது அவரை அவர்களும் பார்க்க விரும்பினர். அவர் எங்கள் குடும்பத்தில் ஒருவராகி விட்டார். என்றாலும் அவர் அவராகவே தனியொருவ ராகவே தன் போக்கிலேயே வாழ்ந்து வரலானார்.

12

செங்கண்ணன்

செல்வி.....

சென்னையில் அலைந்து அலைந்து கலங்கித் தவித்த என் உள்ளம் ஆடாது அசையாது அமைதி பெறக் கிடைத்த பாதுகாப்பான துறைமுகம் அது. ஒரு பெண் ணின் அன்பையும், ஆதரவையும் பெற்றால்தான் ஆண் வாழ்வு நிறைவுறுகிறது. அவள் முதலில் தாயாகத் தோன்றுகிறாள். தங்கையாக உதவுகிறாள். தாரமாக உடன் வாழ்கிறாள். இறுதியில் பேத்தியாகக் கூடி விளை யாடுகிறாள். அவர்களுள் செல்வியை நான் தங்கையாகக் கருதினேன். அவள் அறிவும் அடக்கமும் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டன. 'உழைப்பாளர்கள் எல்லாம்

பசுமையான இலைகள்; சமுதாயத்தை அவர்கள் வளர்க்கிறார்கள்; வளமாக்குகிறார்கள். கலைஞர்களோ மலர்கள். அவர்கள் புத்தம் புதிய உயிர்களைப் படைக்கிறார்கள். இலைக்குப் பச்சை நிறம் ஒன்றே போதும். ஆனால் மலர்களோ எத்தனை எத்தனை வண்ணங்களில் ஒளிர்கின்றன. கடவுள் படைத்த வண்ணவண்ண மலர்களைப் போல் கலைஞர்களும் பல்வேறு பாங்குடையவர்களாக விளங்குகின்றார்கள்! என்று அவள் தன் பேச்சில் குறிப்பிட்டது என்னை மிகவும் கவர்ந்து விட்டது.

அவளோ முதலில் என்னைக் காதலனாகக் கருதியிருக்க வேண்டும் பின்புதான் என் வாழ்வு பூங்கோதைக்கு உரியது என்பதைப் புரிந்து கொண்ட பின் தன்னைத் தங்கையாக மாற்றிக் கொண்டாள். அதிலிருந்து அவளிடம் தடுமாற்றம் மறைந்து தெளிந்த அன்பு மலர்ந்தது. ஓரியாகப் பிறந்த என் வாழ்வை நிறைவு செய்ய அப்படி ஒரு தங்கையும் வேண்டியிருந்தாள். குணாளனைக் காணும் போதெல்லாம் 'நமக்கு ஒரு தங்கை இல்லையே! இருந்தால் இப்படிப்பட்ட நல்லவனுக்குக் கொடுத்து மகிழலாமே' என்று நினைப்பதுண்டு, தாய், தந்தை, மனைவி, மக்கள், அக்காள், தங்கை, அண்ணன், தம்பி இப்படி உறவுகள் எல்லாமே ஒருவனைப் பக்குவப்படுத்தி உயர்த்தத் தோன்றிய ஒரு இயற்கைச் சூழல் என்பது மெல்ல மெல்ல, அவளோடு பழகப் பழக எனக்கு விளங்கலாயிற்று.

அவளோடு அண்ணன் போல் பழகினதால் அவள் குடும்பத்தோடு உறவு கோள்ள விரும்பினேன். அவளும் அழைத்தாள். ஒரு நாள் மாலை அவள் வீட்டிற்குச் சென்றேன். முன்கூட்டியே அவள் என்னைப் பற்றிச் சொல்லியிருந்திருக்க வேண்டும்.

'வா தம்பி வா! வணக்கம்' என்று சிரித்துக் கொண்டே என்னை வரவேற்றார் ஒரு பெரியவர். அவருடைய கரிய திருமேனி அந்தப் புன்சிரிப்பாலும் நெற்றியில் இருந்த வெண்ணீற்றுக் கீற்றுகளாலும் பொலிந்து விளங்கியது.

'தெய்வயானை—அடி தெய்வயானை இங்கே வந்து பாரு! தம்பி செங்கண்ணன் வந்திருக்கு' என்று பல ஆண்டுகள் பழகியவரைப் போல என்னைத் தன் மனைவிக்கு அறிமுகப் படுத்தினார். நான், 'இவ்வளவும் உன் வேலையா?' என்று மெல்லச் செல்வியைப் பார்த்தேன். அவள் மெல்லப் புன்னகை செய்து தலையை அசைத்தாள். செல்வியும் அப்பாவும் அன்போடு என்னை வரவேற்று என்னைப் பற்றி, பூங்கோதை பற்றி எல்லாம் விசாரித்தார்கள்.

அவள் தந்தை மெய்யப்பச் செட்டியார் தம் சொந்த ஊரில் வாணிகம் சரியாக நடைபெறாததால் இருந்த கடையை விற்றுவிட்டுக் கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு தம் நண்பர் ஒருவரோடு வெங்காய ஏற்றுமதியில் கூட்டு வியாபாரம் செய்யச் சென்னைக்கு வந்து விட்டதாகவும், அப்படியே தம் ஒரே மகளுக்குத் தக்க மணாளன் கிடைக்கிறவரை படிக்கட்டுமே என்று கல்லூரியில் சேர்த்ததாகவும் அறிந்து கொண்டேன்.

பேசிக்கொண்டே அவர் குடியிருந்த சின்ன வீட்டில் அங்கும் இங்கும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை எடுத்து ஒவ்வொன்றாகப் புரட்டினேன். சங்க இலக்கியங்கள், தேவாரத் திருமுறைகள், சிவஞானபோதம், சிவஞான பாடியம், குமரகுருபரர் பாடல்கள், கந்த புராணம், ஞான வாசிட்டம், மகாராஜா துறவு, கைவல்ய நவநீதம், தாயுமானவர் பாடல், திருவருட்பா ஆறாந்திருமுறை... இப்படிச் சைவ சமயத் தொடர்பாகத் தோன்றிய சிறந்த தமிழ் நூல்கள் எல்லாம் அந்த அறையில் இருக்கக் கண்டேன். அவற்றையெல்லாம் கண்ட எனக்கு அவரிடம் ஒரு மரியாதையும் அச்சமும் தோன்றின. அதைக் கண்டும் காணாதவர் போல் 'அது எல்லாம் எப்பவோ வாங்கிச் சேர்த்தது. இப்போ ஒன்றும் படிக்கிறது இல்லை' என்று அடக்கமாகப் பதில் சொன்னாலும், அந்த நூல்களுக்கு,

இடை இடையே அவர் எழுதி இருந்த குறிப்புக்களும் அடிக் கோடிட்ட பகுதிகளும், வினாக்குறியிட்ட செய்திகளும் அவர் அந்த நூல்களைப் பன்முறை கற்றதையும் அவர் ஆழ்ந்த புலமையையும் எனக்குச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

இப்படி நான் என்னுள் எண்ணிக் கொண்டிருக்கும் போதே செல்வி என்னையும் அவரையும் உண்ண அழைத் தாள். நான் கை கழுவத் தோட்டத்துப் பக்கம் போனேன். எனக்கு மிகவும் பிடித்த மல்லிகைப் பூச்செடி அங்குப் படர்ந்திருந்தது. பூங்கோதையை நினைத்துக் கொண் டேன். என்னை மறந்து சில நிமிடங்கள் நின்றுவிட்டேன்.

மல்லிகைப்பூ என்றால் செல்விக்கு உயிர். அதனால் தான் இந்தக் கையளவு சின்ன இடத்தில் கொடி வைத்து அதற்கு என்னென்னவோ எருப் போட்டு வளர்க்கிறாள்...' என்ற பெரியவர் ஒலி கேட்டுக் கலங்கிய கண்ணீரை முகம் கழுவுவது போல் அவருக்குத் தெரியாமல் மறைத்து அழித்தேன். முகம் கழுவிக் கொண்டு திரும்பியபோது துண்டு கொடுத்து முகம் துடைத்துக்கொள்ளச் செய்தார். முகத்தைத் துடைத்துக் கொண்டு தலைநிமிர்ந்தபோது தன் மடியில் இருந்த திருநீற்றுப் பையை விரித்து எடுத்துக் கொள்ளச் சொன்னார். நான் தயங்கினேன். 'வழக்க மில்லை. மன்னிக்கவும்' என்று சொல்ல வாயெடுத்த நான் பெரியவர் மனம் புண்பட வேண்டாம் எனக் கருதி 'நானாகப் பூசிக்கொள்வதில்லை, தாங்களே பூசிவிட்டு விடுங்கள்' என்று நெற்றியை அவர்முன் காட்டினேன். 'முருகா முருகா!' என்று பிரார்த்தித்தபடியே என் நெற்றி யில் திருநீறிட்டார். அங்கு அப்போது வந்து இந்தக் காட்சி யைக் கண்ட செல்வி களுக்கென்று சிரித்து விட்டாள் அவர் புன்னகை செய்தபடியே அவளைப் பார்த்து, 'அண்ணனுக்குச் சோறு பரிமாறி விட்டாயா?' என்று கேட்டுக்கொண்டே அடுப்பங்கரைக்கு என்னை அழைத்துச் சென்றார்.

அங்கே இரண்டு நுனி இலைகளில் ஏழெட்டுக் கறிகள் பரிமாறப் பெற்றிருந்தன. ஆவி பறக்கும் சோற்றைக் கையில் ஏந்தியபடி அந்த அம்மாவும் பெருங்காயம் கமழும் சாம்பாரோடு செல்வியும் புன்னகை செய்தபடியே நின்று கொண்டிருந்தனர். மீண்டும் பூங்கோதை நினைவு வந்தது. அம்மா நினைவு வந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு உண்ணத் தொடங்கினேன்.

பாயாசம் ஊற்றினார்கள். அவள் வைத்ததுபோலவே இருந்தது. எந்தக் கல்லூரியிலும் எந்தப் பொதுப் பாடத் திட்ட அடிப்படை இன்றியும் கொஞ்சங்கூட மாறுதல் இல்லாமல் இந்தக் குடும்பக் கலை காலாகாலமாகத் தமிழகம் முழுவதும் பாரம்பரியமாக வளர்ந்து வருவதை எண்ணி வியந்தபடியே பாயாசத்தைச்சுவைத்தேன். உண்டு முடிந்தவுடன் கைகழுவ எழுந்தோம்.

தோட்டத்துப் பக்கம் செம்பில் தண்ணீர் ஏந்தியபடி எங்களுக்காகச் செல்வி காத்திருந்தாள். அவள் அப்படிக் காத்திருந்த காட்சி மீண்டும் இங்கே சென்னையில் பூங்கோ தையையே காண்பது போல இருந்தது.

'தம்பி சரியாகச் சாப்பிடவில்லை. வீட்டு நினைவு போல இருக்கு' என்று அந்த அம்மா வருந்தியது கேட்டு என் தவற்றை உணர்ந்து நானும் வருந்தினேன்.

'அதெற்கென்னப்பா... அதுதான் அன்பான வாழ்க் கைக்கு அடையாளம்' என்று என்னைப் பாராட்டிவிட்டு ஒரு தட்டில் நான்கைந்து மலைப்பழங்கள் கொண்டு வந்து வைத்து 'இதையாவது சுவைத்துச் சாப்பிடு' என்று எச்ச ரித்து விட்டு உள்ளே சென்றார் அந்தப் பெரியவர்.

இப்படித் தங்கையாக வந்து வாய்த்த செல்வி சென்னையில் எனக்கு ஒரு தந்தையையும் தாயையும் காட்டிக் கொடுத்தாள். அத்துடன் அவள் நிற்கவில்லை. குமரப்பன் கோகிலம், நந்தன் கோமளம் ஆகிய இரு

குடும்பத் தொடர்பையும் வேறு எனக்கு ஏற்படுத்தித் தந்தாள்.

கோகிலமும் கோமளமும் அவளோடு சொந்த ஊரில் படித்தவர்களாம். இருவரும் திருமணமாகி இங்கேயே இருக்கிறார்கள் என்று ஒரு ஞாயிற்றுக்கிழமை குமரப்பன் வீட்டில் எனக்கு விருந்தொன்றை அவள் ஏற்பாடு செய்து விட்டாள். அந்த விருந்தில் நந்தனும் கோமளமும் கலந்து கொண்டனர்.

நந்தனை நான் அடிக்கடி இதற்கு முன் கண்டிருக் கிறேன். கல்லூரியில் ஏதோ கணக்கராக வேலை செய் கிறான். குமரப்பனை அன்றுதான் நான் பார்த்தேன். அவன் போக்கு என்னவோ எனக்குக் குமட்டியது.

கோகிலத்திற்கு முற்றும் மாறாகக் கோமளம் இருந் தாள். அப்படியே நந்தனுக்கு மாறாகக் குமரப்பன் தோன்றினான்.

கோகிலம் கலகல என்று எல்லோரிடமும் பழகினாள். நேருக்கு நேர் பார்த்துப் பேசினாள். எந்தச்செயல்களிலும் வஞ்சம் இல்லை. அவள் பார்வையில் கரவு இல்லை. ஆனால் குமரப்பனோ தன் கண்களைக் கோமளத்தின் மேலே திருட்டுத்தனமாக ஓட்டிக்கொண்டிருந்தான். அவன் மேல் குற்றமே ஆயினும் கோமளத்தின் ஆடையலங் காரமும் அதற்கு ஒரு காரணம் எனலாம். போதாக் குறைக்கு அவன் அவளை அப்படித் திருட்டுத்தனமாக நோக்குவதை விரும்புபவள் போல இயல்பாக அடிவ யிற்றை மறைத்துக் கொண்டிருந்த மேலாடையைச் சரிசெய்பவள் போல அவள் ரவிக்கையை மேலுக்கு இழுத்துத் தன்னை அசிங்கப்படுத்திக்கொண்டாள். நந்தனுக்கும் கோகிலத்துக்கும் பண்புப் பொருத்தம் இருந்தது. இருவரும் எளிமையை, அன்பை, தூய்மையை விரும்பினர். ஆனால் இறைவனோ இணைகளை மாற்றி யமைத்து விட்டான். இதுதான் அவன் திருவிளையாடல்

போலும். ஏதோ உண்டு முடித்து மாறுபட்ட குடும்பங்களை விட்டுவிட்டுப் புறப்பட்டோம். நந்தன் குடும்பமும் குமரப்பன் குடும்பமும் சினிமாவுக்குப் புறப்பட்டன.

நானும் செல்வியும் அவள் வீட்டுக்கு நடந்தே போனோம். 'என்ன மௌன சுவாமிகளே!' என்று செல்வி அழைப்பதைக் கேட்டுத் தலை நிமிர்ந்தேன். நீண்ட நேரம் அவளோடு பேசாமல் கோமளத்தையும் குமரப்பனையும் நினைந்து என் மனம் வருந்தியதால் நான் பக்கத்தில் வரும் செல்வியை மறந்தே போனேன்.

'ஓ மனம் வருந்துகிறது செல்வி. கோமளம் எப்போதும் அப்படித்தானா? குமரப்பன் போக்கும் பிடிக்க வில்லை' என்றேன்.

அவள் முகம் சிறிது வாடியது. சமாளித்துக் கொண்டு, 'இல்லைங்க. இப்பொழுதுதான் இப்படி நடந்து கொண்டா. ஆடையைப் பொறுத்தவரை எப்போதும் இப்படித்தான் உடுத்திக் கொள்வா. ஏழெட்டு ஆண்டுகள் சிறுவயதிலிருந்தே கான்வெண்டில் அவள் படித்ததால் அப்படி அணிந்து கொள்வது ஒரு குறையாக அவளுக்குப் புலப்படவில்லை. அதன் பிறகு எங்களோடு பள்ளிக்கு வரும்போது ஆண்பிள்ளைகள் பார்க்கும் காமப்பார்வையை அலட்சியமாகப் பொருட்படுத்தாமல் வருவாள். அந்தப் பழக்கம் இப்போது சிறிது தவறாகப் போய் விட்டது போலத் தெரிகிறது. விரைந்து இரண்டு குடும்பங்களையும் காப்பாற்ற வேண்டும்...'

'எனக்கென்னவோ செல்வி! அந்த அரையாடைப் பழக்கம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நான் ஒரு கிராமத்தான். கிராமத்தில்கூட ஏழை எளியவர்கள் பற்றாக் குறையால் அரைகுறையாக ஆடை அணிந்து வருந்தி வறுமையில் வாழ்வதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அந்த ஏழைப் பெண்கள் அந்த அரைகுறை ஆடையால் கிழிந்த துண்டுத் துணிகளால் மானத்தைக் காத்துக் கொள்கின்றனர்; மறைக்க வேண்டிய உறுப்புக்களை மறைத்து வாழ்கின்ற

னர். ஆனால் இந்த நவநாகரிக யுவதிகளோ மறைக்க வேண்டிய உறுப்புகளை விளக்கமாக வெளிக்காட்டு வதற்குப் பெரிதும் முயற்சி செய்து அதற்கு ஏற்றாற்போல ஆடைகள் தைக்கின்றனர்; அணிந்தும் கொள்கின்றனர்.

'இந்த இரு குடும்பங்களும் என் நெஞ்சில் என்னென் னவோ எண்ணங்களை எழுப்பி விட்டுவிட்டனவே செல்வி' என்று தலை குனிந்துகொண்டே அவளோடு பேசி வந்த நான் திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.

'என்ன?' என்று கேட்பது போல் வியப்போடு அவள் என்னை நோக்கினாள். என் உள்ளத் துடிப்பை அவளும் உணர்கிறாள் என்று கருதி, 'செல்வி! இக்காலத்துப் பெண்கள் இப்படி எல்லாம் உடுத்துகிறார்களே!' என்று ஏக்கத்தோடு கேட்டேன். அவள் என்னை இரக்கத்தோடு பார்த்தாள்.

'யுகங்கள் மாறுகின்றன. நம் முன்னேயே வெகு வேக மாக மாறி வருகின்றன. அப்போதெல்லாம் ஆயிரக்கணக் கான ஆண்டுகளுக்குப் பிறகே வேறு யுகம் வரும். அதற்கு ஏற்றாற்போல் மெல்ல மெல்லச் சமுதாயம் தன்னைச் சரி செய்து கொள்ளும். ஆனால் விரைந்து மாறும் இந்தக்கால யுக வேறுபாடுகளைச்சீரணித்துக்கொள்வது கஷ்டம்தான். ஆனால் வேறு வழியில்லை. சீரணித்துக் கொள்ளத்தான் வேண்டும். 'அன்பு, அடக்கம்' என்பவை அந்தக் காலக் கருத்துக்கள்; நடைமுறைகள். இந்த யுகம் கவர்ச்சியுகம்; வெறும் காமயுகம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்; சொரித்துக் கொள்ள வேண்டும். இயலாவிட்டால் பேசாமல் நாம் இன்னொரு நாட்டில் வாழ்வதாகக் கருதிக் கொண்டு மனங்கலங்காமல் வேடிக்கை பார்க்க வேண்டும். அப்போதுதான் இந்த யுகத்தைச் சமாளிக்க இயலும்' என்றாள்.

'திருமணத்திற்கு முன்பு எப்படியோ இருந்து போகட்டும். மணமானபின், கணவன் தன் இயல்பான அழகிலேயே நிறைகாணும் போது மனைவி செயற்கைக்

கவர்ச்சி செய்து கொள்வது சரியெனப் படவில்லை' என்று கோமளத்தை மனதில் வைத்துக் கொண்டு சொன்னேன்.

அவள் ஒன்றும் பேசாமல் 'உம்' கொட்டிக் கொண்டே நடந்து வந்தாள்.

'சரியில்லை என்பது மட்டும் அல்ல. அப்படிக் கவர்ச்சி செய்து கொள்வது அவள் உண்மை அன்பில் கொண்டுள்ள அவநம்பிக்கையும் ஆகும். மேலும் தான் அறிந்தோ அறியாமலோ வெறும் புறக்கவர்ச்சியால் பிறர் கண்ணைக் சுவர் பவளும் ஆகிறாள். அந்த நிலையில் பரத்தைக்கும் அவளுக்கும் என்ன வேறுபாடு?'

சட்டென நின்றாள். 'தவறாகப் பேசிவிட்டோமோ?' என்று நானும் தயங்கினேன்.

'என்ன செய்வது? மேனாட்டு நாகரிகம். ஒருவர் மனைவி அழகை இன்னொருத்தியின் கணவன் புகழ்வது அவள் அணியையும் ஆடையையும் அப்படியே பாராட்டுவது நம்மை ஆண்ட ஆங்கிலேய நாகரிகம். இந்த நாட்டு மண்ணில் அது வாழப்பார்க்கிறது. மொத்தத்தில் இந்த மண்ணில் இயல்பாக முளைக்கும் பயிரும் கெட்டொழிய, வந்ததும் சரியாக வளர இயலாமல் சமுதாயம் தடுமாறுகிறது. என்ன செய்வது? நல்லனவற்றோடு தீமையும் கலந்துதானே கிடைக்கிறது. ஆங்கிலேயரால் பெற்ற பல நன்மைகளை ஏற்றுக் கொண்ட நாம் இப்படிச் சில குறைகளையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் பெண்களைப்பற்றியே பேசுகிறீர்கள். இன்று எத்தனை ஆண்கள் தங்கள் மனைவி சினிமாக்காரிபோல அலங்கரித்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள் தெரியுமா? அவர்களை ஒரு பெண் எப்படித் திருப்திப் படுத்துவாள்?'

'ஓ! கோவலர்களுக்காக கண்ணகிகள் எல்லாம் மாதவிகளாக ஆகவேண்டும் என்கிறாயா?' என்று கோபமாகக் கேட்டேன்.

'மாதவிகளாக மாறிவிட வேண்டியதில்லை, மனந் திருந்தும் வரை அவன் மனத்திற்கேற்பத் தற்காலிகமாகத் தன்னைக் கொஞ்சம் சரி செய்து கொண்டாலே போதும்.'

'அது சரியே! புறக் கவர்ச்சியில் மயங்கும் கணவனுக் காகத் தன்னை ஒரு மனைவி புனைந்து கொள்வது தவறில்லைதான்; என்றாலும் இந்தக் கவர்ச்சிகளை எல்லாம்விட அன்பே நிலையானது என்பதை அவள் அவனுக்கு எப்படியேனும் உணர்த்திட வேண்டும். இல்லா விட்டால் இளமைக் குறும்புகளையே என்றும் கற்பனை செய்துகொண்டு இன்புறும் அந்த மனத்திற்கு நிறைவே ஏற்படாது. வாழ்வு தோல்வியாகும். அவன் புறத்தே திரிவான்; அவள் அகத்தே அழிவாள்.'

'யுகங்கள் மாறும் போது இப்படிச் சில குடும்பங்கள் பலியாகத்தான் வேண்டுமோ என்னவோ!'

'அப்படி அல்ல செல்வி! இதனை ஏதோ தனிமனிதக் குறை, ஒரு தனிக் குடும்பக் குறை என்று விடுவதற்கு இல்லை. இதுவே சமுதாயக் குற்றமாகவும் அமைந்து விடு கிறது. இப்படிக் கவர்ச்சி செய்து கொள்ளும் குடும்பப் பெண்கள் சஞ்சல புத்தியுடைய சில குடும்ப ஆண்கள் கண் களை, கருத்துக்களைத் தங்கள்பால் இழுக்கிறார்கள். குமரப்பனை எடுத்துக் கொள்ளேன். அதனால் அமைதி யான குடும்பமும் ஊடி, வாடி வருந்தும். மேலும் ஒன்று எண்ணிப்பார். இயல்பாகவே வாழும் பெண்ணொருத்தி யோடு குடும்பம் நடத்தும் ஆண் ஒருவன் இயல்பான அன் போடும், தெளிவான அறிவோடும் உறவிடமும், நட் பிடமும் பழகிப் பேரும் புகழும் பெறுகிறான். மனைவியின் கவர்ச்சி போதைக்கு ஆளான இளைஞனே அலுவலகத் திலும் குடும்பத்திலும் தவறாக நடந்து கொண்டு பழிக்கும் பாவத்துக்கும் உரியவனாகிறான்.'

'ஆம், உண்மைதான், குடும்பப் பெண்ணின் அழகுக்கும், சினிமாக்காரியின் அழகுக்கும், வேறுபாடு உண்டுதான். கண்ணகி புனைந்து கொள்வதற்கும், மாதவி

அலங்கரித்துக் கொள்வதற்கும் வேறுபாடு இருந்தது. ஒருத்தி உரியவனுக்காக வாழ்கிறாள்; வாழ்ந்தாள். மற்றொருத்தியோ உலகுக்காகவும் வாழ்கிறாள்; வாழ்ந்தாள்.'

''ஆமாம், நீ உண்மையை உணர்கிறாய். நன்றி செல்வி குடும்பப் பெண்ணின் அழகு அன்றாடம் அம்மா கையில் உண்ணும் சோறு போன்றது; அவ்வப்போது ஓரிரு சுவைக்கறிகள் கூடலாம் குறையலாம்; தவறில்லை. குடும்பத் தலைவன் உடல் நலத்திற்கு ஏற்ப உப்பு, புளி, உறைப்பு நீக்கலாம்; சேர்க்கலாம். ஆனால் அன்புக்கு முதலிடம் தராது, உடல் கவர்ச்சியால் கணவனுக்குப் போதையூட்டித் தன்வயப்படுத்துவது பாலுக்குப் பதில் வீட்டில் கள் குடிப்பது போன்றது. அவளே தன் கவர்ச்சி யால் பிறரையும் கவர முயல்வது, அனைவரும் தன் அங்க அழகைப் பார்த்துச் சுவைக்க வேண்டும் என்று நினைப்பது வீட்டிலேயே கள்ளுக்கடை வைத்து விடுவது போன்றது ஆகும். குமரப்பனையும் கோமளத்தையும் நினைத்தால் என் நெஞ்சம் கொதிக்கிறது' என்றேன்.

''மெல்லச் சரி செய்வோம். உணர்ச்சிவயப்படாதீங்க. நீங்கள் பிரியவேண்டிய இடம் வந்துவிட்டது'' என்று நினைவூட்டினாள்.

நின்று சுற்றும் முற்றும் பார்த்தேன். கூவம் பாலம் தெரிந்தது. அங்கும் இங்கும் பரபரப்பாகக் குறுக்கும் நெடுக்குமாகக் கார்களும், ஆட்டோக்களும் சைக்கிள்களும் சென்று கொண்டிருந்தன.

'அடுத்த வாரம்?' என்றாள்.

'மன்னித்துக்கொள் செல்வி. இப்படிப்பட்ட விருந்து களில் கலந்துகொள்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை' என்றேன்.

'சரி. விருந்து வேண்டாம். இப்படிப்பட்ட மனிதர் களும் வேண்டாம். விலங்குக் காட்சிச்சாலைக்குப் போவோமா?'

'ஆ! நல்லது. நான் பார்த்ததே இல்லை கட்டாயம் பார்க்க வேண்டும். ஆனால்...'

'ஆனால் என்ன?'

'அந்தக் குமரப்பன் கோமளம் குடும்பங்கள் வந்தால் நான் வர மாட்டேன்.'

'அப்படியே சுவாமிகளே! அடுத்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூணு மணிக்கெல்லாம் நான் பூங்கா நிலையத்தில் காத்திருப்பேன். ஓகே.'

'ஊம்...'

அவளைப் பேருந்தில் ஏற்றிவிட்டு அன்றைய நிகழ்ச்சிகளை அசைபோட்ட வண்ணம் நான் சேத்துப்பட்டு நோக்கி நடக்கலானேன்.

'ஊம்'...என்று ஏதோ ஒப்புக்கொண்டு விட்டேன். 'ஏன் அப்படி ஒப்புக்கொண்டோம் என வருந்தினேன். கணக்கில் மிகக் கீழ்த்தரத்தில் இருந்த மண் மேட்டு மாணவர் சிலர்க்குச் சிறப்பு வகுப்பு வைக்க எண்ணியிருந்தேன். சென்ற வாரம் படித்துப் பாதியில் விட்ட 'இனி நாம் செய்ய வேண்டுவது யாது?' என்ற தால்ஸ்தாய் நூலைக் கன்னிமேரா நூல் நிலையம் சென்று முடிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். இந்த என் இரு திட்டங்களை மறந்து செல்வி விலங்குக் காட்சிச்சாலைக்கு அழைத்த வுடன் 'ஊம்' என்று சொல்லி விட்டேன்.

அருளாளர் அன்றொருநாள் சொன்னது அனுபவ உண்மையே என்று இப்போது நன்றாக விளங்குகிறது. பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்று, தேர்வு பெற்ற அன்று அருளாளரைக் கண்டு பெரும் மகிழ்ச்சியோடு என் முதல் வெற்றியை எடுத்துக் கூறினேன். அவரும் மகிழ்வார் என்றுதான் கூறினேன். அவர் முகம் வாடியது. 'தம்பி! செங்கண்ணா! உன் குறிக்கோளுக்கு இது தடையாகும். ஒழுங்காக வகுப்பிற்கு வர இயலாது. சொற்பொழிவுக்குச் செல்கின்ற இடங்களிலெல்லாம் நீ வெற்றி பெற்றால் பலர்

கூடிக் கூடிப் புகழ்வர். அந்த மகிழ்ச்சியில் நீ உன் கடமையை மறப்பாய்; தோற்றால் உன் மனம் வருந்தும். கடமையில் ஈடுபட இயலாது. முன்னேயே தெரிந்திருந்தால் 'போட்டியில் பங்கு பெற வேண்டா' என்று தடுத்திருப்பேன். போகட்டும். வெளியூர் போட்டிகளில் கலந்துகொள்ளாதே.'

'இன்னொன்று செங்கண்ணா! இங்கு நல்ல இளைஞர் பலர் வந்து கெட்டுப் பாழ்பட்டுப் போனதைப் பார்த்து வருந்தியிருக்கிறேன். அப்படிக் கெட்டுப் பாழ்பட்டுப் போனதற்குரிய பல காரணங்களில் ஒன்று நட்பு. வள்ளுவர் போற்றிக் கூறுவதுபோல ஒருவர் இருவர் நண்பர் கிடைத்தால் நல்லதே. ஆனால், இப்படிப்பட்ட நகர நாகரிகத்தில் அப்படிப்பட்டவரை ஆய்ந்து பார்த்து அமைத்துக் கொள்வது அருமையினும் அருமை. கூடியவரை நண்பர்கள் வேண்டா. கடமைக்கு ஓரளவு, சிற்சிலபோது பேரளவு அவர்களும் தடையாக இருக்கிறார்கள்.'

இப்படி அருளாளர் அன்று சொன்னது உண்மையே என்று உணர்ந்து கொண்டேன். இனி செல்வியிடமும் எடுத்துக் கூறி ஞாயிற்றுக்கிழமைகளில் எங்கும் போவதில்லை என்று உறுதி செய்து கொண்டேன். ஆனாலும் ஒப்புக்கொண்டபடி அந்த ஞாயிற்றுக்கிழமை விலங்குக் காட்சிச்சாலைக்குச் சென்றேன்.

13

ஆசிரியர்

அவள் சொன்ன ஞாயிற்றுக்கிழமை வந்தது. குறித்த நேரத்தில் புறப்பட்டுப் பூங்காவை அடைந்தான். ஆனால்

அவனுக்குமுன் வந்து அவள் காத்திருந்தாள். கையில் ஏதோ கனமான ஒரு பை இருந்தது. கேள்விக் குறியோடு பார்த்தான். வயிற்றைத் தடவிக் காட்டினாள். 'ஓகோ டிபனா' என்றான். 'ஆம்' என்பது போல் தலையை அசைத்தாள்.

'இது என்ன ஊமை நாடகம். விலங்குக் காட்சிச் சாலைக்குள் நுழைவதற்குள்ளேயே காட்சி தொடங்கி விட்டதே' என்று சிரித்தான். அவளும் 'களுக்' என்று அவனைத் தொடர்ந்தாள். வழியில் நிலக்கடலை பயறு விற்றது. அதைப் பார்த்தான். அவளையும் பார்த்தான். முகம் சுளித்தாள்.

'எனக்கு ரொம்ப ஆசை. சாப்பிட்டு எவ்வளவோ நாளாச்சு' என்றான்.

அனுமதிப்பது போல் அவள் தலையசைத்தாள். பத்துக் காசுக்கு வாங்கிக் கொண்டே அவளோடு சென்றான். மாநகராட்சி விளையாட்டரங்கில் என்னவோ ஆட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. சுற்றிலும் நின்று இளைஞர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே காட்சிச்சாலைக்குள் வந்துவிட்டனர். ஒரு ரூபாய் கொடுத்து இரண்டு அனுமதிச் சீட்டுகள் வாங்கினாள். உள்ளே நுழைந்தனர்.

நுழைந்ததும் ஆஸ்திரேலியாக் 'காதல் பறவை' காட்சியளித்தன. கழுத்தில் நீலம், அதனை ஒட்டி வெள்ளை மஞ்சள் கொண்டை, உலக வண்ணங்களை எல்லாம் அழகோடும் அளவோடும் தோய்த்து இறைவன் படைத்திருந்தான், அந்தக் காதல் பறவைகளை. கொட்டைப் பாக்கு ஒன்றுக்கு மூக்கும் விழியும் வைத்ததுபோல, குண்டு மல்லிகைப் பூவொன்று குதித்துப் பறந்ததுபோல் அவை அழகழகாக அமர்ந்துகொண்டும் தாவித் தாவிப் பறந்து கொண்டும் இருந்தன. கூண்டுக்குள் இருந்த குச்சி ஊஞ்சல் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு பறவைகள் அமர்ந்திருந்தன. அவை ஒவ்வொரு இணையும் கழுத்தோடு கழுத்து இணையத் தழுவிக்கொண்டு இரண்டு

தலை உள்ள ஒரு குருவிபோல நெருங்கி இணைந்து இருந்தன. அவற்றையே உற்று நோக்கிய அவன் வாய் 'இரு தலைப் புள்ளின் ஒருயிர் அம்மே!' என்ற சங்கப் பாட்டுத் தொடர் ஒன்றை முணுமுணுத்தது.

'என்ன என்னை மறந்துட்டிங்களா! காதல் பறவைகளைப் பார்த்ததும் ஊர் நினைவு வந்துட்டுதா! கூட்டம் சேர்ந்துவிட்டது. வாங்க அங்கே போவோம்' என்று கர்ச்சிக்கின்ற ஓசை வந்த வழியே அவனைக் கூட்டிக் கொண்டு போனாள். அங்கே அடைக்கப்பட்டிருந்த கூண்டுக்குள் சிங்கம் புலிகள் இருந்தன.

முதல் கூண்டில் சிங்கம் ஒன்று படுத்துக் கொண்டிருந்தது. வாயைத் திறந்து பெரிய கொட்டாவி விட்டபடியே அங்குத் திரண்டிருந்தவர்களைப் பார்த்துப் புரண்டு படுத்துக் கொண்டது. அதை எழுப்புவதற்குச் சிறு சிறு கற்களையும் குச்சிகளையும் சிறுவர் சிலர் வீசிக் கொண்டிருந்தனர். அதையெல்லாம் அது பொருட்படுத்தாது உறங்கத் தொடங்கிவிட்டது. பக்கத்துக் கூண்டிலிருந்த புலி மட்டும் ஏதோ தீவிர சிந்தனைவாதியைப் போல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே ஓரக் கண்ணால் பார்த்தது. அதன் பக்கப் பார்வை பயத்தை உண்டாக்கியது. ஒரே நாற்றம் வேறு வீசியது.

அங்கிருந்து புறப்பட்டு முதலைக் கிணறுகள் வழியே போனவர்களைத் துள்ளி விளையாடும் மான் கூட்டங்கள் கவர்ந்தன. நேரே அங்குப் போனார்கள். சிறுவர் சிலர் புல் பறித்துக் கொடுத்துக் கொண்டிருந்தனர். மேல் உதடுகளைத் தூக்கித் தூக்கி அந்தச் சிறுவர் கையிலிருந்த புல்லை இழுத்து அவை தின்றன. சிறுவர் சிரித்து மகிழ்ந்தார்கள்.

'செல்வி! இந்த மான்களைப் பார்த்தாயா! எவ்வளவு மகிழ்ச்சியாகத் துள்ளி ஆடுகின்றன. குழந்தைகள் அச்சமில்லாமல் அன்பாகப் பழகுகின்றனர்,''

'ஓ! ஒன்றை மறந்துட்டிங்களே! அங்கே சிங்கமும் புலியும் பலத்த கூண்டுக்குள் அடைபட்டிருக்கு தெரியுமா? இல்லாட்டி இந்த மான் எல்லாம் இந்தக் குழந்தைகள் எல்லாம் ஏன் நீங்க நானுங்கூட இங்கே இப்படிக் கவலை இல்லாம திரிய முடியுமா?'

'ஆமாமாம்' என்று பெருமூச்சு விட்டபடி அவன் தலையை அசைத்தான். கொடியவர்கள் கூண்டுக்குள் கட்டுப்பாட்டுக்குள் ஒடுக்கப் பெறாதவரை நல்லவர்கள், மெலிந்தவர்கள், பொது மக்கள் அஞ்சாது வாழ, மகிழ்வோடு வாழ வழி இல்லை' என்று வாய்விட்டுத் தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல அவளுக்குச் சொன்னான்.

அருகில் பெரிய யானை ஒன்று கம்பீரமாக அசைந்து அசைந்து ஆடியபடி நின்று கொண்டிருந்தது. 'இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' என்றுசொல்லிக்கொண்டே அவன் அவளை அங்கு அழைத்துப் போனான், 'ஆனை இளமையிலும் அழகு முதுமையிலும் அழகு' என்று அந்தக் கிழ யானையின் அழகைப் போற்றிப் புதுமொழி ஒன்று கூறினாள் அவள்.

'ஆம். உண்மைதான் செல்வி! இந்த யானைக்கு வயது ஆகிவிட்டது போல்தான் தெரிகிறது. என்றாலும் அதன் பெருமிதத் தோற்றத்தில் ஓர் அழகு இருக்கத்தான் செய்கிறது.'

'அதுமட்டுமா!' அவள் பேசினாள். 'எல்லா விலங்குகளையும்விட இதுதான் ஆற்றல் மிக்கது; அறிவு மிக்கதும் கூட.'

'தழையையும் புல்லையும் தின்னும் இது சிங்கம் புலிகளைவிடப் பலமிக்கது என்கிறாயா செல்வி?

'ஏன்! சந்தேகமா? உண்மை அதுதான். மரக்கறிஉணவுதான் தூய்மையான அறிவையும் திண்மையான ஆற்றலையும் வளர்ப்பது, அதுமட்டும் அல்ல, நீண்டகாலம்

இயற்கை அழகைக் காப்பது அதுதான் பசுமாட்டைப் பாருங்கள். எப்போதும் அழகாக இருக்கிறது. குதிரையைப் பாருங்கள் முதுமையிலும் அழகு குறையவில்லை; ஆனால் பூனையையும் நாயையும் பாருங்கள். விரைவில் முதுமை அடைந்து விடுகின்றன.

அவள் சொல்வது உண்மைபோல் அவனுக்குத் தோன்றியிருக்கவேண்டும். அது பற்றி ஒன்றும் கூறாமல் நாரை, வாத்து, மயில், புறா முதலிய பறவைக் கூட்டங்கள் கீச்சிட்டுக் கொண்டிருந்த எதிர்ப்பக்கம் இருவரும் வந்தனர். அன்னங்கள் சில நடந்துகொண்டிருந்தன. சில நீந்திக்கொண்டிருந்தன.

'அன்ன நடை' என்று அழகிய பெண்ணின் நடையைப் பழங்காலப் புலவர்கள் புனைந்து உரைத்திருக்கிறார்கள். அது பொருத்தமாகத் தெரியவில்லை. அப்படியானால் அவர்கள் பாடிய பெண்கள் எல்லாம் தங்கள் உடலைத் தூக்கமுடியாமல் தூக்கிச் செல்லும் சோம்பேறிப் பணக்காரக் குடும்பப் பெண்களாக இருக்கவேண்டும். அங்கே எங்கே அழகு உள்ளது சதைப் பிண்டத்தைத் தவிர.'

'இதோ பாருங்கள். நீந்துகின்ற அன்னத்தைப் பாருங்கள். கற்பனைத் தேரில் பறந்து திரியும் மனம் போல ஓசை இல்லாமல், அசைவு ஒன்றும் இல்லாமல் போய்க் கொண்டேயிருக்கும் அந்த அழகைப் பாருங்கள்' என்று அவள் அவன் பார்வையை ஈர்த்தாள். அங்கே வெள்ளை அன்னம் ஒன்று அழகாக, தலை நிமிர்ந்து நீந்திக்கொண்டிருந்தது.

தன் இருப்பை எல்லோருக்கும் காட்டிக்கொள்ள விரும்பும் சிறு குழந்தையைப்போல மயில் ஒன்று மெல்லச் சிறகு விரித்து இவர்களைக் கவர்ந்தது. வேறு சில மயில்கள் அங்கும் இங்கும் மெல்ல நடந்து சிதறிக் கிடந்த கம்பு, வரகு முதலிய தானியங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தன.

ஆடிக்கொண்டிருந்த மயிலைப் பார்த்து அவள், 'அது ஆண்மயில். ஏனோ இறைவன் ஆண்களுக்கு மட்டும்தனி அழகைத் தந்திருக்கிறான். பெண் சிங்கத்தை விட ஆண் சிங்கமே அழகாக இருக்கிறது. சேவலின் அழகு பெட்டைக் கோழிக்கு இல்லை அல்லவா?'

'ஏன் அப்படி நினைக்கிறாய் செல்வி! புற அழகு ஆண் அழகு. அக அழகு பெண் அழகு. அது அன்பழகு; அமைதி அழகு; பண்பழகு. இந்த ஆட்டமும் பாட்டமும் ஒரு பெண்ணின் அன்பைப் பெறுவதற்குத்தானே!'

முகம் சிவக்கத் தலைகுனிந்து கொண்டே 'தமிழ்த் துறை அல்லவா! பேச்சுக்கு என்ன குறை!' என்று சொல்லித் தலை நிமிர்ந்து புன்னகை பூத்தாள். தொடர்ந்து 'அது ஏன் அந்த நாரை தன் தலையை வயிற்றுக்குள் செருகிக் கொண்டு நிற்கிறது. தெரியுமா?'

'ஓ! அதுவா! தெரியுமே. அதுதான் பொறாமை, மயில் ஆடுகிறது, தன்னால் அதைப் போல் அழகாக ஆட இயல வில்லை. அன்னம் நீந்துகிறது. தன்னால் அதுபோல் அமைதியாக நீந்த இயலவில்லை. கிளி பேசுகிறது; தன்னால் அது போல் இனிமையாகப் பேச இயலவில்லை; இது என்ன உலகம்! இதைப் பார்க்கவும் வேண்டாம். கேட்கவும் வேண்டாம் என்று தன் கண்ணையும் காதை யும் அப்படிப் புதைத்து மறைத்துக் கொள்கிறது.'

கலகல என்று சிரித்தாள். அவன் வியப்போடு அவளைப் பார்த்தான்.

அழகாக இருக்கிறது உங்கள் விளக்கம். ஆனால் உண்மை தான் இல்லை. நம்மிடத்தில்தான் இந்தப் பொறாமை எல்லாம். அவை அப்படி நினைப்பது இல்லை. பிறவற்றுக்கு இருக்கிற தனித்தனிச் சிறப்பைக் கவனிக் காமல் தன் தனக்கு இறைவன் தந்திருக்கும் தனித்தன் மையை முற்ற முழுதும் பயன்படுத்தி வாழும் உயிர் இனம் அவை. தன் தனித்தன்மையையும் அறிந்து வளர்க்காது பிறர் சிறப்பைப் பார்த்துப் பொறாமை கொண்டு அதை

அழிக்க முயலும் மானிடத்தின் அற்ப புத்தி அவற்றுக்கு இல்லை...'

'அப்படியானால் எதற்கு அப்படி ஒற்றைக்காலில் தலையை வயிற்றுக்குள் செருகிக்கொண்டு அது நிற்கிறது?

'அதுவா? அது ஒரு பெரிய லாபத்தை எதிர் பார்த்துத் தான்; மீன் பிடித்துத் தன் வயிற்றுப்பசியைத் தீர்த்துக் கொள்ளத்தான். மூக்கை நீட்டிக் கொண்டிருந்தால் எந்த மீனும் அருகில் வராது; இரண்டு கால்களையும் ஊன்றிக் கொண்டிருந்தால் அருகில் வரும் மீனைத் தாவிப் பிடிக்க ஒரு காலைத் தண்ணீரிலிருந்து எடுத்து வைக்க வேண்டியிருக்கும். நீரின் அசைவைத் தெரிந்து கொண்டு அஞ்சி மீன் ஓடிப்போய் விடும். அதனால்தான் ஒற்றைக் காலில் நிற்கிறது. மடித்த காலை டக்கென்று நீட்டிப் பாய்ந்து அருகில் வரும் மீனைப் பிடித்துக் கொள்ளலாம் அல்லவா!'

'கொடுமை! கொடுமை!'

'என்ன கொடுமையாம்!'

'கடவுள் படைப்பு இரக்கமற்றது. கொடியது'

'இல்லை, ஞானத்தோடு கூடியது கடவுள் படைப்பு. முட்டாள் தனத்துக்கு இரக்கம், கருணை என்று ஏதேதோ கூறி மனிதன் தன்னையும் ஏமாற்றிக் கொள்கிறான்; பிறரையும் ஏமாற்றுகிறான்' என்று அவனைப்பார்த்தாள். அவன் அமைதியாகவே அவளையே பார்த்துக் கொண்டிருக்கவே தொடர்ந்தாள்.

'எலி, பூனை பார்த்திருக்கிறீர்களா?' என்று சிறு பிள்ளைகளைக் கேட்பதுபோல் கேட்டாள்.

'எலியா! பூனையா! எப்படி இருக்கும்?' என்றான் சிரித்துக் கொண்டே குறும்பாக.

'கேலியாகப் பேச வேண்டாம். நாம் எல்லோரும் எலியையும், பூனையையும் நாள்தோறும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். எலியின் காது மிக நுட்ப

மானது. எந்தச் சிறிய ஓசையையும் அது கேட்டுவிடும்; பூனையின் கால்களோ மிகமிருதுவானவை. கொஞ்சங்கூட ஓசை இல்லாமல் நடக்க அதனால் முடியும். ஒட்டுக் கேட் பவனை 'எலிக்காதான்' என்றும், தெரியாமல் வருபவனை 'பூனைக்காலன்' என்றும் சொல்லிக் கேட்டதில்லையா? கடவுள் ஏன் எலிக்கு அவ்வளவு நுட்பமான காதும், பூனைக்கு அவ்வளவு மென்மையான காலும் தந்துள்ளார்?'

'உம். ஏன்...?'

'மென்மையாக நடந்து வரும் அந்தப் பூனையின் வருகையையும் விழிப்பாகக் கேட்டுத் தப்புவதற்காகத் தான் எலிக்கு நுட்பமான காதுகளை இறைவன் தந்தான். அப்படிப்பட்ட எலியும் கேட்க முடியாதபடி நடக்கத்தான் பூனைக்கு அந்த மிருதுவான பஞ்சுப்படி பாதங்களை அவன் பூனைக்கு வழங்கினான்.'

'நல்லா இருக்குது செல்வி உன் நியாயம்? அப்படி யானால் இறைவனின் நோக்கந்தான் என்ன? இரண் டையும் ஏமாற்றுவதா? எலியைப் பார்த்து,'பயப்படாதே, உன் பகையாகிய பூனையால் உன்னை ஒன்றும் செய்து விடமுடியாது. அதன் வருகையை உன் நுண்காதால் கண்டு கொண்டு நீ தப்பி விடலாம்' என்று எலிக்கும், 'ஏ பூனையே! கவலைப்படாதே! நீ ஒன்றும் பட்டினி கிடந்து சாகவேண்டியதில்லை. உனக்கு மென்மையான பஞ்சு போன்ற, பட்டுப் போன்ற பாதம் தருகிறேன். எலியின் செவிக்குக் கேட்காமல் நடந்துபோக உன்னால் முடியும்' என்று இரு கட்சிக்கும் பிழைக்கும் வழி காட்டு பவன்போல் தன் வயிறு பிழைக்கும் தற்கால அரசியல் வாதியா கடவுள்?' என்று சிறிது குரலை உயர்த்தி வெறுப்புத் தோன்றக் கேட்டான்.

அவள் சிரித்துக் கொண்டே. 'எப்பொழுதும் உங்க ளுக்கு வேகந்தான். நான் பேசியதைச் சரியாக நீங்கள்

வாங்கிக் கொள்ளவில்லை. பணியாரச் சுவையில் பெரிதும் ஈடுபட்டுத் தன் நிலை மறந்து போகாமல்—தன் பகையை மறந்து போகாமல், எலி விழிப்பாக இருக்க வேண்டும் என்பதே இறைவனின் நோக்கம். அப்படியே கண்களை அங்கும் இங்கும் அலையவிட்டுக் குறிக்கோள் கெட்டுத் 'தாம் தாம்' என்று நடக்காமல் மெல்ல, ஆனால் விழிப் பாகப் பூனை முன்னேற வேண்டும் என்பதே அவன் கருத்து. 'விழித்திரு—விழித்திரு' என்பதுதான் இறைவன் எல்லா உயிர்களுக்கும் வழங்கும் போதனை. இதை உணர்ந்து கொள்ளாத போதுதான் நாம் வாழ்வில் தோற்கிறோம்; துன்பப்படுகிறோம், இறைவன் படைப் பைப் பழிக்கிறோம்-கொடுமை என்கிறோம்.

அவள் முகம் புதுப் பொலிவோடு விளங்கியது.யாரோ புதியவள் ஒருத்தியைப் பார்ப்பதுபோல் அவன் உற்றுப் பார்த்தான்.

தலை கவிழ்ந்துகொண்டு 'என்ன அப்படிப் பார்க்கி றீர்கள்' என்றாள்.

'ஒன்றும் இல்லை—ஏதோ என்றும் காணாத ஒரு பேரழகு இப்போது உன்னிடம் விளங்குகிறது. ஒருமுறை இப்படிப்பட்ட அழகைப் பூங்கோதையிடம் பார்த்தேன். அப்பழுக்கற்ற அன்பிலே அந்த அழகு ஒளிர்ந்தது. அப் பழுக்கற்ற அறிவிலே இந்த அழகு மிளிர்கிறது' என்று வாய் விட்டுப் பாராட்டிவிட்டு 'அதனால்தானோ என்னவோ செல்வி...படிப்படியாகப் படைத்து மானிடம் கண்ட இறைவன் தன் படிநிலைகளையெல்லாம் புல் பூண்டு மரம் செடி தவளை எலி-பருந்து-கழுகு-யானை-கரடி-புலி குரங்கு இப்படிப்பட்ட படிமுறைகளையெல் லாம் இன்னும் அழிக்காமல் வைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது!'

'ஆ!' அவள் வாய்விட்டுக் கூவினாள்.

'என்ன செல்வி' என்று பதறினான்,

'டார்வின் சித்தாந்தத்தில் இதற்குத்தான் விடை யில்லை. குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றால் இன் னும் ஏன் குரங்கு இனம் உள்ளது. அல்லது ஏன் இன்றுங் கூடக் குரங்கிலிருந்து மனிதன் வந்து கொண்டிருக்கவில்லை என்பதே டார்வினை உலகம் கேட்கும் பெரிய கேள்வி. அதை என் மனத்திற்குள் எத்தனையோ நாட்களாகக் கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்தேன். இன்று, தங்கள் பேச்சில் ஒரு துப்பு துலங்கிற்று; ஒரு தெளிவு கிடைத்தது. அதனால்தான் என்னை மறந்து கூவி விட்டேன்...' என்றாள்.

'இதனை உணர்ந்துதானோ என்னவோ இன்று அறிவியலார் உயிரினம் எதுவும் அழிந்து போகாமல் பாது காக்கத் தொடங்கியுள்ளனர்' என்று கூறிக்கொண்டே பலர் அமர்ந்து சிற்றுண்டி உண்டு கொண்டிருந்த புல் வெளியை அடைந்தார்கள்.

அவள் கையிலிருந்த டிபன் கேரியரை எடுத்தாள். தேங்காய்ச் சோறு, மாங்காய்த் தொக்கு, தயிர்ச் சோறு, கொத்துமல்லித் துவையல், புளியஞ்சோறு, உருளை வறுவல் அவற்றில் இருந்தன. மூன்று கிண்ணங்களையும் தனித்தனியே எடுத்து வைத்துத் தனக்கும் அவனுக்கும் பையிலிருந்த இலையில் பாகம் பிரித்துக் கொண்டிருந் தாள். சுற்றிலும் பிச்சைக்காரச் சிறுவர் கூட்டம் சேர்ந்து விட்டது.

அருகிலிருந்த நொண்டிப் பிச்சைக்காரனைப் பார்த்து, 'அப்பா, இவர்களை எல்லாம் விரட்டு. கடைசியில் உனக்கு மிகுந்த சோற்றைத் தருகிறோம்' என்றான் அந்த நொண்டி ஒற்றைக் காலில் நின்றுகொண்டு, தன் கைத் தடியை வீசினான். எல்லாச் சிறுவர்களும் பயந்து ஓடிப் போய் விட்டனர்.

'முரடனும் பயன்படுகிறான்; முள்ளும் பயன்படு கிறது, முள்வேலி இல்லாவிட்டால் வாழைத் தோப்பு வாழுமா' என்று சொல்லிக்கொண்டே அவனும் அவளும்

அந்தச் சோற்றைச் சுவைத்துச் சுவைத்து உண்டனர். நொண்டிப் பிச்சைக்காரன் அவர்கள் உண்கிறவரை காவலாக நின்றான். பின் இருவரும் பிரிந்தனர்.

'என் வாழ்நாளில் இன்றுபோல் இவ்வளவு மகிழ்வாக என்றும் இருந்தது இல்லை' என்று பிரியும் போது அவள் கூறினாள்.

'தேர்வு வரை இனி எந்த நிகழ்ச்சியும் வேண்டாம், என்று என்னென்னவோ கூறிக் கண்டித்தபடியே அவனும் பிரிந்தான்.

14

செல்வி

'அய்யோ! அம்மா! என் மேல் எவ்வளவு ஆசை வச்சி ருந்தே! இப்படியா நீ இறந்து போகணும். எனக்குத் திருமணம் செய்து பார்க்கணும்னு எவ்வளவு ஆசைப் பட்டே. சின்னப் பிள்ளையா நான் இருந்த நாள்ளெ யிருந்து எனக்குச் சீர்வரிசை கொடுக்க ஒவ்வொரு சாமானா வாங்கிச் சேர்த்தியே! 'வர்ரவுங்க எப்படி இருப் பாங்களோ! என்னென்ன நகை கேட்பாங்களோ'ன்னு உன் நகை ஒவ்வொன்னையும் அழிச்சி எனக்குத் தங்கக் காப்பிலேயிருந்து எல்லாம் செய்துவச்சியே அம்மா!

'அம்மா! நான் சின்னவளா இருக்கிறப்போ திருச்சித் தெப்பக்குளத்தில் முழுகிட்டேனே. துணி துவைச்சிக்கிட் டிருந்த நீ, 'அடி மவளே'ன்னு பாய்ந்து என்னோடு முழு கிட்டியே. அப்புறம் யாரோ நீந்தத் தெரிந்தவங்க நம்ப இரண்டு பேரையும் காப்பாத்துனாங்களே! நீ எனக்காக உன் உயிரை மறந்து தண்ணியிலே அப்பொ பாஞ்சே. நான் உன்னை அனுப்பிட்டு இன்னும் உயிரோடு இருக் கேனே!

'ஒரு அன்பான உறவு கிடைச்சா கடவுளுக்குப் பொறுக்காதா! உடனே இன்னொரு அன்பான உறவை அழைத்துக் கொண்டு போயிடணுமா? செங்கண்ணன் அன்பான அண்ணனாக் கெடச்சாரேன்னு பூரித்துப் போனேன். கடவுளுக்குப் பொறுக்கெல போல இருக்கு. உன்னையும் அழைச்சிக்கிட்டாரு.

இதோ இங்கேதான் நீ உட்காருவே. அங்கேதான் காய் கறி அரிவே. நீ தேய்ச்சி வைச்ச குத்துவிளக்கு இன்னும் பளபளன்னு இருக்கு. நீ மண்ணோட மக்கிட்டியே அம்மா! போன வாரம் நீ வாசற்படிக்கு வச்ச மஞ்சள் குங்குமம் இன்னும் கலையிலே, அதுக்குள்ளே கண்ணுக்குக் காணாமே போயிட்டியே அம்மா.

அப்பா இருக்காங்க. இருந்து என்ன? அன்பு உண்டு. என்றாலும் ஒனக்கு ஈடாகுமாம்மா. என் துன்பம் தொல்லைகளை அப்பாவிடம் சொல்லி ஆறுதல் பெற முடியுமா? அப்பா நீ இல்லாமல் மனம் ஒடைஞ்சு பொயிட்டாங்க. அவுங்க எங்கே என்னைத் தேத்துறது.

செங்கண்ணன் வந்தார். என்னைப் பார்த்ததும் 'கோ' வென்று வாய்விட்டு அழுது விட்டார். நான் கதறினேன். அப்பா அவரைத் தழுவிக் கொண்டு சிறு பிள்ளை போல் தேம்பித் தேம்பி அழுதார். அழுதால் அம்மா வருவாரா! போய்ச் சேர்ந்து விட்டார்.

இனி இங்கே இருக்கக் கொஞ்சமும் பிடிக்கலெ. கடை காணி எல்லாம் வித்துட்டு அப்பா நல்லா பொழைக்க லாம்னு இங்கே வந்தாங்க. கடையும் போச்சு காணியும் போச்சு. வீட்டு விளக்கும் அணைஞ்சிடுச்சு. ஒரே இருள். வீட்டுக் குள்ளே அடி எடுத்து வைக்கவே அச்சமா இருக்கு. இனிமே இங்கே இருக்க முடியாது. உயிரைப் பழிவாங்கும் இந்தப் பாழாப்போன ஊர்லே வாழ முடியாது. எங்காவது போவணும்—விரைவாகப் போய்ச் சேரணும்,

இறுதித் தேர்வாம். இன்னும் இரண்டு மூன்று மாதந் தானாம். என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு. அம்மா எல்லாம் படித்திட்டா இவ்வளவு நல்லா வாழ்ந்தாங்க. நான் முடிச்சிடனுமாம். எனக்கென்னவோ படிப்பும் வேண்டாம், பட்டமும் வேண்டாம், இப்பவே எங்காவது போனாத் தேவலை போல் இருக்கு.

ஆனா செங்கண்ணர் கண்ணீர் விட்டுக் கலங்குகிறார். 'செல்வி! நீயும் போயிட்டா என்னால் கொஞ்சங்கூடப் படிக்க முடியாது. அரையாண்டிலும் முதல் மதிப்பெண் பெற்றுவிட்டேன். விடுமுறையில் வர முடியாது என்று ஊருக்கு எழுதிவிட்டு நன்றாகத் தயார் செய்திருக்கிறேன். நீ போயிட்டா அப்புறம் எனக்குப் படிப்பில் ஊக்கம் இருக்காது. எனக்காகவாவது படி. நானும் படிக்கிறேன். விடுமுறையில் எல்லோரும் ஊருக்குப் போவோம். அங்கே பூங்கோதையோடு நீயும் ஒங்க அப்பாவும் நிலையாகத் தங்கலாம். எங்க அம்மாவுக்குப் பெண் குழந்தை இல்லை. உன்னை பொன்போலப் பாத்துக்குவாங்க— இன்னும் இரண்டு மூணுமாதந்தானே! எனக்காகத் துயரைத் தாங்கிக்கம்மா!' என்று வேண்டிக் கொண்டது ஒருவாறு என்னை இந்தச் சென்னையில் நிறுத்தி வைத்தது

வாழ்க்கை ஏதோ ஒரு ரிலே ஓட்டப்பந்தயம் போல் தோன்றுகிறது. கையில் ஏந்திய பொருளை ஒவ்வொரு வனும் ஓடிக்கொண்டே மற்றவனிடம் ஒப்படைத்து விடுவது போல வாழ்க்கை ஓட்டத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சி மனிதனை ஒவ்வொருவரிடம் ஒப்படைத்து விட்டு நின்று விடுகிறது. ஒரு நிகழ்ச்சி நின்றால் மறுநிகழ்ச்சி; ஒரு பற்றுவிட்டால் வேறு பற்று வந்து தொடர்வதால் மானிட வாழ்வு எப்போதும் தேங்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறது. அப்படித் தானோ என்னவோ? அம்மா என் வாழ்வின் இயக்கமாக இருந்தார்கள். செங்கண்ணர் இல்லாவிட்டால் என் வாழ்வு அம்மாவுக்குப் பின் தேம்பித் திகைத்துப் போயிருக்

கும். இப்போது என் வாழ்வு செங்கண்ணர் சொற்களில் இயங்கத் தொடங்கியிருப்பதை நான் மெல்ல உணர்கிறேன். அவர் கைப்பாவை போல மாறிவருகிறேன். பெண்ணாய்ப் பிறந்ததாலோ என்னவோ யாரோ ஒருவர் வழிகாட்ட வேண்டும் போல் என் மனம் எதிர்பார்க்கிறது. உரிமை உரிமை என்று வாய்விட்டு மேடைகளில் எவ்வளவு முழங்கினாலும் அந்தரங்கத்தில் அன்பான ஆணைக்கு உள்ளம் ஏனோ ஏங்குகிறது. அந்த அன்புக்கு உரியவராக அம்மா அமையலாம்; அக்காள் அமையலாம்; அப்பா அமையலாம். அண்ணன்—நண்பன் தோழி இப்படி யாரோ ஒருவர் வேண்டும். இப்போது எனக்குச் செங்கண்ணர் அப்படிக் கிடைத்துள்ளார்.

அவர் என்னவோ திடீரென்று சிடுமூஞ்சிபோல் கோபங் கொள்கிறார். ஆனால் ஆழ்ந்து பார்த்தால் வெண்ணெய்போல் மிக மென்மையான உள்ளம் அப்படித் தான் அன்று விலங்குக் காட்சிச் சாலை பார்த்து முடிந்ததும் 'செல்வி, இனி என்னை இப்படி எங்கும் அழைக்காதே! உன் நட்பும் உறவும் சிலநாள் ஒதுங்கியே இருக்கட்டும். இதுவே நம் இறுதிச் சந்திப்பு. இனித் தேர்வுகள் முடிந்த பின்பு சந்திப்போம்' என்று முகத்தைக் கடுகடுப்பாய் வைத்துக்கொண்டு பேசினார்.

எதிர்பாராத இந்தச் சொற்களைக் கேட்டு என் உடல் நடுங்கியது; மனம் கலங்கிப் போய்விட்டேன். 'என்னை ஏன் இப்படி வெறுக்கிறீர்கள்' என்று கண்ணீர் பீறிட்டுக் கொண்டுவரக் கேட்டேன்.

உடனே நாத் தழுதழுக்க, 'செல்வி! என் அம்மா! அழாதே. நம் நன்மைக்காக நமக்குள் இப்படி ஒரு கட்டுப்பாடு வைத்துக் கொள்வோமா என்றுதான் என்னையே நான் கடுமையாக்கிக்கொண்டு அப்படிச் சொன்னேன். கலங்காதே உன்னை நான் வெறுக்க இயலுமா! உன்னிடம் என்ன குறை உள்ளது? இந்த உலகில் பூங்கோதைக்கு

அடுக்தபடியாக நான் மதிக்கும் ஒரு பெண் நீதானே!' என்று அன்போடு கூறினார்.

'என்னைக் கவர்ந்த உன் முதல் சொற்பொழிவில் தொழிலாளர்களையும் கலைஞர்களையும் இலைகளுக்கும் மலர்களுக்கும் ஒப்பிட்டுப் பேசினாயே செல்வி! உனக்கு நினைவிருக்கிறதா, இப்போது? உன்னைப் பார்த்தால் அந்த உன் உவமையைக் கொஞ்சம் மாற்றி உரைக்கத் தோன்றுகிறது. ஆண்களை இலைகளுக்கும் பெண்களை மலர்களுக்கும் ஒப்பிடத் தோன்றுகிறது. பெண் உள்ளம் மலர் போல் எவ்வளவு மென்மையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் மோப்பக் குழையும் அனிச்சம் போன்றது விருந்து என்றார் வள்ளுவர். ஆனால் எந்தக் காலத்திலும் அனிச்சம் மலர்போல் அவ்வளவு மென்மையானது பெண் உள்ளம்.' ஒரு விநாடியில் உன் முகம் வாடிவிட்டதே! வருந்தாதே செல்வி!' என்று ஆதரவோடு மீண்டும் சொன்னார்.

ஆனால் அவர் திட்டம் நிறைவேறவில்லை அம்மா வின் சாவு மீண்டும் எங்களைச் சந்திக்க வைத்துவிட்டது. என்றாலும் முன்போல் எங்கும் போக எனக்கும் அவ்வளவு ஆர்வம் இல்லை. மெல்ல மெல்ல அவர் குணங்கள் என்னையும் ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டன படிப்பில் மூழ்கினேன். நிறைய படிக்க வேண்டியிருந்தது. அவ்வப் போது அம்மா நினைவு வரும்; அவர் நினைவு வரும். ஆனால் தேர்வு வேகம் என்னை ஈர்த்துப் பலவற்றை மறக்கச் செய்து விட்டது.

15

செங்கண்ணன்

பூங்கோதையை விட்டுப் பிரிந்து எத்தனை நாள்கள் ஆகிவிட்டன ஏறக்குறைய எட்டு மாதங்கள் ஆகிவிட்ட னவே. அவளிடமிருந்து என்னவோ அச்சடித்த குறிப்புகள் போல்—நாங்கள் நலம்—நீங்கள் நன்றாகப்படிங்க எங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்' என்று ஒன்று போல மாதம் ஒரு கடிதம் வந்து விடுகிறது. நான் என்னென்னவோ எழுதுகிறேன். அவள் அன்பாக ஒரு வார்த்தை எழுதக் காணேன். ஆண்டாள் பற்றிய குறிப்பும் இல்லை. அம்மா பற்றி எப்போதோ ஒவ்வொரு சமயம் 'நலம்' என்று மட்டும் இருக்கும் நான் என்ன பாவம் செய்தேன். ஏன் பூங்கோதை இப்படிக் கல்நெஞ்சக்காரி யாகிவிட்டாள். அவள் அப்படிப்பட்டவள் அல்ல. 'அன்பாக ஓரிருவார்த்தை எழுதினால் நான் மனம் உருகி ஊருக்கு வந்துவிடுவேன், கடமை தவறி விடுவேன் என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அப்படி எழுதியிருக்க வேண்டும் எப்படியும் அரையாண்டு விடுமுறையில் போய்விடவேண்டும் என்று எண்ணியிருந்தேன். எதிர் பாராமல் விடுமுறைக்கு ஓரிரு நாள்களுக்கு முன் அருளாளர் என்னை அழைத்தார்.

'செங்கண்ணா! பதினைந்து நாள் விடுமுறை வரு கிறது. இதுபோல் அப்புறம் ஓய்வு கிடைக்காது. பாடங் களை எல்லாம் நன்றாகக் கற்றுவிடவேண்டும். தமிழ் ஆனர்சு பயிலும் மாணவர் பலர் ஆங்கிலப் பாடத்தில் தவறி விடுகின்றனர். அதனால் வாழ்வில் அவர்கள் முன்னேற இயலாமல் போய்விடுகிறது, முதல் ஆண்டி லேயே, முதல் முயற்சியிலேயே ஆங்கிலப்பாடத்தில் வெற்றி பெற்றுவிட வேண்டும். உனக்குத் தடையில்லை

என்றால் நான் பங்களூர் செல்கிறேன். ஆங்கிலப் பாடப் புத்தகங்களை எடுத்து கொண்டு என்னுடன் வா. எனக்கும் உதவியாக இருக்கும். முன்போல் என்னால் விரைந்து எழுத இயலவில்லை. மன வேகத்துக்குக் கை உதவ இயலவில்லை. காலையில் எனக்காக இரண்டு மூன்று மணி நேரம் உதவி செய்.மற்ற நேரங்களில் அமைதி யாகப் படி!' என்றார். அருளாளரோடு சில நாள் வாழும் பேற்றை நினைத்ததும், அவருக்கும் சில நாள் உதவும் வாய்ப்புப் பெற்றதை நினைத்ததும் நான் ஊருக்கும் போகும் எண்ணத்தைக் கைவிட்டேன். பூங்கோதைக்கும் விவரமாக எழுதினேன். ஆனால் எப்போதும் போல் அதே கடிதமே வந்தது. சரி என்ன ஆனாலும் சரி. எப்படி யாவது இடையில் ஓரிரு நாளாவது சென்று பூங்கோதையை, அம்மாவை, ஆண்டாளைக் கண்டு வர வேண்டும் என்று எண்ணினேன். அப்போதுதான் கந்தசாமி வந்தார். எங்கள் ஊர்க்காரராகிய அவரைப் பார்த்தவுடன் ஊரையே பார்ப்பது போல உணர்ந்து மகிழ்ந்தேன்.

அவர் 'ஏன் செங்கண்ணா! இவ்வளவு தவிக்கிறாய். எல்லோரும் ஊரில் நலமாக இருக்கிறார்கள். தேர்வு முடிந்தபின்தான் வருவாய் என்று எண்ணிக்கொண்டு அமைதியாக வாழ்கிறார்கள். அப்படி ஏதும் இருந்தால் உடனே கடிதம் எழுத மாட்டார்களா! ஊரை மறந்து நீ ஒழுங்காகப் படி' என்று கந்தசாமி சொன்னது ஊருக்குப் போகும் என் ஆர்வத்தைப் பாதி குறைத்துவிட்டது. மீதிப் பாதியைப் பணம் குறைத்து விட்டது. ஒரு முறை ஊருக்குப் போய்வர பத்து ரூபாயாவது வேண்டுமே. யாரிடமாவது கேட்டுப் பெற வேண்டுமே. உண்ணும் உணவு உடுக்கும் உடையை வெளுத்தல், இருக்கும் இடம் இவையெல்லாம்—சலவைத் தொழிலாளர் உதவியால் கிடைத்து வருகின்றன. அவர்களிடம் பணமும் கேட்டுப் பெற்றுக் கொண்டு ஊருக்குப் போய்வர என் மனம் ஏனோ தயங்கியது. இப்படிப் பல காரணங்களால் என்

பூங்கோதையைக் காணாமலே பல மாதங்கள் போய் விட்டன ஆண்டுத் தேர்வு நெருங்க நெருங்க எண்ணம் எதிலும் செல்லவில்லை. நன்கு படித்தேன். தேர்வு நன்றாக எழுதி முடித்தேன். உடனே ஊருக்குப் புறப் பட்டேன். செல்வியிடம் சொல்லிவிட்டுப் புறப்படலாம் என்று அங்குப் போனேன். அவளும் என்னோடு ஊருக்கு வருவதாகப் பிடிவாதம் பிடித்தாள். அவளுக்குச் செயல் முறைத் தேர்வு ஒன்று மீதி இருந்தது இன்னும் நான்கு நாளில் அது முடிந்துவிடும் உடனே என்னோடு புறப் பட்டு விடுவதாகச் சொன்னாள். அவள் தந்தையும் என்னைப் பெரிதும் வேண்டிக் கொண்டார். 'சரி, இன்னும் நான்கு நாள்கள்தானே,' என்று சங்கக் கொட்டகைக்குத் திரும்பினேன். அங்கே சங்கச் செயலாளர் பொன்னம்பலம் ஒரு தந்தியோடு எனக்காகக் காத்திருந்தார். படபடப் போடு பிரித்தேன்.

'பூங்கோதை ஆபத்து—உடனே வா' —குணாளன்' என்றிருந்தது.

சங்கச் செயலாளரிடம் கூறி எல்லாவற்றையும் அங் கேயே போட்டு விட்டுப் புறப்பட்டேன். புறப்பட்ட நான் தயங்கி நின்றேன். அறிந்து கொண்டவர் போல் நான் கேட்காமலேயே ஒரு கவரில் நான்கு ஐந்து ரூபாய் நோட் டுக்களை இட்டுத் தந்தார். பெற்றுக் கொண்டு நேரே எழும்பூர் நிலையம் வந்தேன். எனக்காகக் காத்திருந்தது போல் ரயில் இருந்தது. நான் ஏறிய உடனே வண்டி புறப் பட்டது. 'என்னவோ! என்னவோ!' என்று மனந்துடித்தது வேகமாக வண்டி போகாதா என்று தவித்தேன். ஒவ் வொரு முறையும் வண்டி நிற்கும் போதெல்லாம் ஏதோ இடிக்கிக்குள் அகப்பட்டுக் கொண்டது போல் வருந்தி னேன். 'எப்படி இப்படித் திடீரென்று' என்று கலங்கி னேன். சென்றவாரம் கூட என் கடிதத்திற்கு 'நலம்' என்று பதில் வந்ததே என்று குழம்பினேன். மயக்கமாக இருந்தது.

16

கந்தசாமி

அப்போது நான் நான்காம் வகுப்பு படித்துக் கொண் டிருந்தேன். அம்மாவுக்கு வயிற்றுவலி என்று நாகை மருத் துவ நிலையத்திலே சேர்ந்திருந்தார்கள். நானும் கூடப் போய் அம்மாவுக்குத் துணையாக இருந்தேன். ஒரு நாள் தாயாரம்மா என் அம்மாவைப் பார்க்க வந்தார்கள். அவர் கையைப் பிடித்துக் கொண்டு ஒரு அழகான சிறுமி யும் வந்தாள். செக்கச் செவேல் என்று பட்டுப் பாவா டையும் சட்டையும் அணிந்திருந்தாள். இன்னொரு கையில் தன்னைப் போல் தங்க நிறத்தில் ஒரு சப்பான் பொம்மை வைத்திருந்தாள். பேச்சு வாக்கில் 'ஏண்டி தாயாரு! இவளே என் புள்ளைக்குக் கொடுக்கிறியா?' என்று என் அம்மா கேட்டார்.

'பார்க்கலாமுடி. அதற்கு என்ன இப்பொ. யார் தலை யிலே என்ன எழுதியிருக்கோ. அன்னைக்கு எழுதினதை அழிச்செழுத முடியுமா?' என்று தாயாரம்மா பதில் சொன்னார்கள்.

அன்றிலிருந்து அவள் மேல் - பூங்கோதை மேல் - எனக்குக் கொள்ளை ஆசை; அவளையே திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டுமென்று மனக்கோட்டை கட்டி வரலானேன். ஆனால் அவளோ என்னை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஏனோ எப்போதும் சிடுசிடுன்னு என்னைக் கண்டால் சீறி விழுவாள். 'சரி, நம் தோட்டத்துப் பயிர். விளையும்போது அறுத்துக் கொள்ளலாம்' என்று காத்துக் கிடந்தேன். காத்துக் கிடந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போனானா'ங்கிற மாதிரி இந்த வாத்திப்பய செங் கண்ணன் குறுக்கிட்டு என் வாழ்வையே பாழாக்கிட்டான். அவனை மட்டும் வாழ விடுவேனா என்று வயிற்றெரிச்

சலோடு கறுவிக் கொண்டிருந்தேன், காலம் வந்தது. இந்தத் தபால் கராப்பயல் என்ன செய்வான்னு நினைச்ச அந்தச் செங்கண்ணனைப் பழிவாங்கக் காலம் வந்தது.

முதன் முதல்லே கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது. அப்புறம் பழக்கமாகிப் போய்ச்சு. செங்கண்ணன் கடிதாசிக்காகப் பூங்கோதை தெருவில் வந்து காத்திருப்பாள். வந்த கடிதத்தைத்தான் நான் படிச்சி, கிழிச்சிப் போட்டுட்டேனே. எப்படி அவளுக்குக் கடிதம் வரும். 'இல்லியா கந்தசாமி' என்று ஏங்குவாள்.

மெல்ல மெல்ல அவள் மனதைக் கலைக்க முயன்றேன். 'பெரிய பட்டணம். பெரிய படிப்பு. நேரம் எங்கேஇருக்கப் போவுது பூங்கோதை' என்பேன் ஒரு நாள்.

'அங்கெல்லாம் ஆடம்பரமான பெண்கள் படிப்பார்கள். அழகழகான பெண்கள் படிப்பார்கள்' என்பேன் ஒரு நாள்.

'பூங்கோதை, இந்தா இன்றைய தினத்தந்தியைப் பார். யாரோ ஒரு காலெஜ் பெண் அப்பா பேச்சைக் கேட்காமல் காதலனை மணந்து கொண்டாளாம். இப்படி எத்தனை பெண்களோ'.

'ஆண்கள் நல்லவர்களாக இருந்தாலும் பெண்கள் ஆளை மயக்கி விடுவார்களாம். பொல்லாத ஊராம். அங்கே கடற்கரையில் எங்குப் பார்த்தாலும் காதலர்கள் தானாம்.'

இப்படி நான் பலநாள், நேரம் பார்த்து அவள் மனநிலை பார்த்துப் பேசிக் கலைத்தேன். அவள் அவனுக்குஎழுதுகிற அன்புக் கடிதங்களை, கவலை நிறைந்த கடிதங்களை, உடனே வருமாறு எழுதிய கடிதங்களை, தான் நொந்து உருகி அழிவதாக அவள் எழுதிய கடிதங்களை அழித்து விட்டு அவன் கடிதங்களுக்கு ஏற்ப அவள் எழுதியது போல நானே அவள் கையெழுத்தில் எழுதி வரலானேன்

ஒரு நாள் அலுவலக வேலையாக பட்டணம் போக நேர்ந்தது. பூங்கோதையிடம் சொன்னேன். அவளும் உடன் வருவதாகச் சொன்னாள். எனக்கும் அவளோடு சென்னைவரை போவது இன்பமாகத்தான் இருக்கும். ஆனால் அங்குச் செங்கண்ணனைக் கண்டு உண்மை வெளியாகிவிட்டால் நம் திட்டம் எல்லாம் வீணாகி விடுமே என்று நினைத்து. 'வேண்டாம் பூங்கோதை. நான் போகிறேன். போய் எல்லாம் தெரிந்துகொண்டு வருகிறேன். அவனை உடனே வரச்சொல்கிறேன். வராவிட்டால் தேவையானால் அப்புறம் நீ போகலாம்' என்று சொல்லி மெல்ல அவள் பயணத்தைத் தடுத்து நிறுத்தினேன். அவள் அவன் முகவரி தந்தாள். தெரியாதவன் போல வாங்கி அவள் முன் மிக்க பொறுப்புள்ளவன் போலப் பத்திரப் படுத்தினேன். எல்லாம் எனக்குத் துணையாக அமைந்தது. அங்குச் சென்று செங்கண்ணனைப் பார்த்தபோது அந்தப் போட்டோ கிடைத்தது. அதில் அவனும் யாரோ ஒரு அழகான பெண்ணும் தனியே இருந்தார்கள், முதலில் செங்கண்ணன் உண்மையிலேயே கெட்டுப் போய் விட்டான்—பூங்கோதையைக் கைவிட்டு விட்டான்—என்றுதான் நினைத்தேன். அதன் கீழ் ஏதோ சின்ன எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. கையில் எடுத்துப் படித்தேன். 'அண்ணன் செங்கண்ணன்; தங்கை செல்வி அம்மா இறந்த நினைவில்' என்று எழுதியிருந்தது. 'அடடே! தவறாக நினைத்துவிட்டோமே' என்று ஒரு விநாடி வருந்தினேன். என் பகை மனம் உடனே கொடியவனாக என்னை மாற்றிவிட்டது.

'செங்கண்ணா! கொஞ்சம் தண்ணி கொடு' என்று கேட்டேன். அவன் உள்ளே தண்ணீர் கொண்டு வரப் போன சமயம் பார்த்து அந்தப் புகைப்படத்தை எடுத்துப் பையினுள் வைத்துக்கொண்டேன். ஊருக்கு வந்ததும் அந்த எழுத்துக்களை மெல்ல அழித்துவிட்டு அந்தப் போட்டோவை அவளிடம் காட்டி 'ஏ! பூங்கோதை! இருந்தும் இருந்தும் இவனை நம்பினாயே! எவ்வளவு

கெஞ்சினேன்! கேட்டேன்! என்னை வெறுத்து வெறுத்து ஒதுக்கினாயே, உனக்காக நான் இன்னும் காத்திருக் கிறேன்—இனியும் காத்திருப்பேன்' என்றேன்.

'சீ' என்று சீறினாள். நான் அவசரப்பட்டுவிட்டோமே என்று நினைத்து மெல்ல நழுவி விட்டேன்.

அதன்பின் சிலநாள் அந்தப் பக்கமே போகவில்லை. என் மனத்தில் திகிலும் பயமும் போட்டியிட்டுக் கொண் டிருந்தன. எந்த நிமிடத்திலும் செங்கண்ணன் வந்துவிட லாம். உண்மை தெரிந்தால் என்பாடு அதோகதிதான் என்று பயந்தேன்.

ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. மாறாக ஒரு நாள் அந்தத் தெருப் பக்கம் தபால் கொடுக்கப் போன போது வீட்டின உள்ளிருந்தபடியே பூங்கோதை கூப்பிட் டாள். சுற்றும் முற்றும் பார்த்தேன். யாரும் என்னைப் பார்க்கவில்லை. வீட்டில் மெல்ல அடியெடுத்து வைத்து அங்கும் இங்கும் கண்களைச் சுழற்றித் துழாவிப் பார்த் தேன். செங்கண்ணன் அம்மாவும் இல்லை. தைரியமாக உள்ளே நுழைந்தேன்.

உடம்பு சிவ்வென்றிருந்தது. இன்று அவள் மனதைக் கெடுத்து நம் வயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மனம் தவித்தது. ஆனால் அங்கு அவள் கிடந்த காட்சி என் அற்ப ஆசையை அழித்து விட்டது. வயிறு மட்டும் பெருத்திருந்தது. ஆனால் நாரும் தோலுமாக ஏதோ எலும்புக் கூடுபோல் அங்கே கிடந்தாள். பக்கத்தில் அந்த அனாதைக் குழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு அருகே மெல்ல மெல்ல விட்டு விட்டுப் பேசினாள். மூச்சுத் திணறியது. ஏக்கத்தோடு என்னைப் பார்த்து மறுபடியும் செங்கண் ணனைப் பற்றிக் கேட்டாள். 'அவன் மிகக் கெட்டுவிட்டான் என்று' முன்பு சொன்னதுபோல் விரிவாக, விளக்கமாகச் சொல்ல மனம் இடந்தரவில்லை. சுருக்கமாக, 'நான்

அன்று சொன்னதெல்லாம் உண்மை' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்குள் அவள் நினை விழந்து விட்டாள். 'சரி இனி இங்கு இருக்கக்கூடாது' என்று விறுவிறு என்று வீட்டை விட்டு வெளியே வந்து வீதிவழியே நடந்தேன். என்னடா 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது போல்' அவனை அழிக்க நினைத்தால் இவள் அழிந்து விடுவாள் போல் இருக்கிறதே. இனி என்ன செய்வது. செங்கண்ணனிடம் நாம் செய்த பாவத்தைச் சொல்லி உடனே அழைத்து வந்து விடலாமா? அய்யய்யோ—இந்த ஊரில் அதற்குப் பிறகு எப்படி வாழ்வது...என்று இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்துத் தடுமாறினேன்.

17

செங்கண்ணன்

'டக் டக்' கென்று வண்டி முட்டி அசைந்ததில் விழித் தேன். பளபள என்று பொழுது விடிந்திருந்தது. வண்டி நாகைக்கு வந்து சேர்ந்திருந்தது. பரபரப்போடு பார்த் தேன். குணாளன் எனக்காக நிலையத்திற்கு வந்து காத் திருந்தான். என்னைக் கண்டதும் ஓடோடி வந்து தழுவிக் கொண்டான்.

'என்னடா குணாளா, என்னடா என் பூங்கோதைக்கு' என்றேன்.

'ஒன்றுமில்லை பயப்படாதே. நேரே வா மருத்துவ மனைக்கு' என்று முதலிலேயே பேசி வைத்திருந்த குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு பொறுமையாக வந்தான். என்னால் சும்மா இருக்க முடியவில்லை. 'என்னடா! என்னடா என் பூங்கோதைக்கு' என்று அவன் தோள் களைப் பிடித்து அழுதுகொண்டே உலுக்கினேன்.

'ஒண்ணுமில்லேடா, திடீரென்று தாங்க முடியாத நெஞ்சுவலி வந்துவிட்டது, அதோடு பிரசவம் வேறு—' என்றான்.

'ஆ! பிரசவமா? யாருக்கு...' என்றேன்.

'என்னை ஒரு தரம் முறைத்துப் பார்த்தான்... யாருக்கா — பூங்கோதைக்குத்தான் — ஒனக்குத் தெரியாதா...!'

'தெரியாதே! ஒரு கடிதத்தில்கூட எழுதவில்லையே...'' என்றேன்.

அவன் குழம்பிப் போனான். அதற்குள் மருத்துவமனை வந்து விட்டது. நான் வண்டியின் முன்பகுதி வழியாகக் குதித்தேன். அவன் பின்புறமாக இறங்கினான். என்னை அழைத்துக் கொண்டு பிரசவ வார்டு நோக்கிப் போனான். அங்கே யாரும் இல்லை. எனக்குப் பகீர் என்றது. பணிப் பெண் ஒருத்தி அறுவை மருத்துவ அறைக்கு எடுத்துப் போயிருப்பதாகச் சொன்னாள். காலை 5 மணிக்கே எடுத்துப் போய்விட்டதாகவும் இப்போது வந்துவிடும்' என்றும் சொன்னாள்.

நாங்கள் அங்கே போனோம். ஆண்டாளைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த என் அம்மா என்னைக் கண்டதும் 'கோ'வென்று அழத்தொடங்கி விட்டார்கள். அருகில் பணிப்பெண் கொடுமையாகப் பேசி அடக்கினாள். நாங்கள் அரை மணி நேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு காத்துக் கிடந்தோம். இறுதியில் கைப்பலகையில் படுக்க வைத்தபடியே வெள்ளைத் துணி ஒன்று போர்த்தி பூங்கோதையை வெளியே எடுத்து வந்தனர் பணிப்பெண் ஒருத்தி கத்துகிற குழந்தை ஒன்றைக் கையில் ஏந்தி வந்தாள்...

நான் படுக்கை அருகிலே அமர்ந்திருந்தேன். சிறிது நேரத்தில் கண் விழித்தாள். நான் தலையை வருடிவிட்டேன். மெல்ல கண்ணைச் சுழற்றி என்னைப் பார்த்

தாள். கண்களில் நீர் பீறிட்டுக் கொண்டு வந்தது; உதடுகள் துடித்தன. கையை அசைத்து அருகில் அழைத் தாள். மடியைச் சுட்டிக் காட்டினாள். தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டேன்...அவ்வளவுதான். போய் விட்டாள். கோது என் மடியில் கிடந்தது. அந்தப்பூ போய்விட்டது. என்னைத் தனியாய் நிறுத்திவிட்டுப் பூங்கோதை போய்விட்டாள்.

வீட்டிற்குச் சென்றேன். அவள் வணங்கும் கண்ணன் படம் முன் நின்றேன். 'கண்ணா! கண்ணா!' என்று கதறினேன். கண்ணன் படத்தின் கீழ் மடித்து வைத் திருந்த தாள்கள் சில இருந்தன. அவற்றை எடுத்துப் பிரித்துப் பார்த்தேன். பூங்கோதை எழுதியிருந்தாள். என்னை நினைத்துச் சின்னக் கண்ணனிடம் என்னென் னவோ சொல்லி எழுதியிருந்தாள்.

* * *

'சின்னக் கண்ணா! என்னைக் கைவிட்டு விடாதேடா' என்று அடிக்கடி கண்ணன் படத்தின் முன் நின்று அழு தேன். மாமி என்னைப் பார்த்துத் தானும் கண் கலங் கினார்கள். ஆண்டாளும் ஓரளவு நான் படும் துயரைப் புரிந்து கொண்டாளோ என்னவோ, துயரம் தாங்காது நான் கண்ணன் படத்தின் முன் நிற்கும் போதெல்லாம் பேசாமல் தானும் தையா தக்கா என்று நடந்துகொண்டு வந்து என் பக்கம் நின்று கொண்டு வருத்தத்தோடு என்னைப் பார்ப்பாள். பொன்னம்மாளும் திருமணமாகித் திருவாரூர் போய் விட்டாள்.

அவர் போய் எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. எத்தனை கடிதங்கள் எழுதி விட்டேன். என் இதயத்தைப் பிழிந்தெடுத்து எழுதிய கடிதங்களுக்கு எல்லாம் அவரி டமிருந்து ஒரு பதிலும் இல்லையே! என்ன செய்வேன். முருகேசனாரும் இறந்து போய் விட்டார். குணாளன் அண்ணனும் சிதம்பரம் போய் விட்டார்.

'அவர் தந்த செல்வம் என் வயிற்றில் வளர்ந்து வருகிறது' என்றுகூட எழுதினேன். அதற்கும் பதில் இல்லையே. முதலில் ஏதோ நிரம்பப் படிக்க வேண்டியிருக்கும் என்று நினைத்தேன். எவ்வளவு படிப்பு இருந்தாலும் எனக்கு ஒரு வரி எழுதக்கூடாதா?

அவர் பேசிய ஒவ்வொரு சொல்லாலும் முன்பு வாழ்ந்து கொண்டிருந்தேன். பின்பு அவர் பிரிந்து சென்னை செல்லும்போது அவர் எழுதும் எழுத்தால் வாழலாம் என்று நம்பினேன். போனதும் அன்போடு ஒரு கடிதம் எழுதினார். ஆ! அதை அப்படியே அழியாமல் என் நெஞ்சில் எழுதி வைத்துக் கொண்டேன்.

அழுகின்றேன் அழுகின்றேன்

அடக்க முடியவில்லை

அன்புயிரே உனைவிட்டு ஏன் வந்தோமென்று'

அவர் அந்தக் கடிதத்தில் எழுதிய பாடல் இன்றும் என் இதயத்தை உருக்குகிறது அப்படி அன்பு காட்டியவர் எப்படி என்னை மறந்தார். இந்த நிலையில், அவர் அன்புக்காக ஏங்கும் இந்தக் கருத்தரித்த நிலையில் எனக்கு ஏன் ஒரு கடிதம்கூட எழுதவில்லை.

கந்தசாமி சொல்வது உண்மையாக இருக்குமோ? அங்கே யாராவது கல்லூரிப் பெண்ணின் வலையில் வீழ்ந்திருப்பாரோ! சீ பேய் நெஞ்சே! அப்படி எல்லாம் நினைக்காதே, என்னவரை எனக்குத் தெரியாதா! அவர் அப்படித் தவறுவார் என்றால் இந்நேரம் இடி விழுந்து இந்த ஊர் அழிந்து போயிருக்குமே! அப்படி இருக்காது.

பின் ஏன் கடிதம் எழுதவில்லை? அவர் உடம்புக்கு ஏதாவது? ஐயோ! என் நெஞ்சு வலிக்கிறதே. அப்படி இருக்காது. அல்லது ஏதாவது கார் கீர் மோதி மண்டையில் அடிபட்டு என்னை மறந்து விட்டாரா? அப்படி அடிக்கடி நடப்பதாகச் சினிமாக் கதை வருகிறதே.

கண்ணா! சின்னக் கண்ணா! என்னை மறக்கும்படி அப்படி ஒன்றும் செய்துவிடாதேடா. இதோ என் தாலியின்மேல் ஆணையிட்டு வேண்டிக் கொள்கிறேன். 'கண்ணா! என்னை வேண்டுமானால் கொண்டு போ! ஆனால் என்னவர் என்னை மறக்கும்படி மட்டும் செய்து விடாதே'!

இனிப் பொறுத்துப் பொறுத்துப் பயன் இல்லை. பயித்தியம் பிடித்து விடும்போல் இருக்கிறது. இரவிலும் உறக்கம் இல்லை. தென்னை மரத்தில் மரநாய் தேங்காய் சுரண்டும் குரலை உறங்காமல் எத்தனை நாட்கள் தான் அச்சத்தோடு கேட்டுக் கொண்டிருப்பது. எப்படியும் நேரில் போக வேண்டியதுதான். என்ன பயம். இங்கு ஏறினால் அங்கு இறங்கலாம் என்கிறார்கள். மாமியைத் துணைக்குக் கூட்டிக் கொண்டால் போகிறது. எப்படியும் உடனே சென்னைக்குப் போக வேண்டும். அவரைப் பார்க்க வேண்டும். கட்டிப் பிடித்துக் கொண்டு, 'என்னை ஏன் மறந்தீங்க, ஏன் மறந்தீங்க' என்று மனசார அழ வேண்டும். அம்மா, அம்மா, அம்மா...என் நெஞ்சு வலிக் கிறதே, கண் சுத்துதே, மயக்கமாயிருக்கே. அவர்...அவர் மடியில்.

* * *

தேம்பித் தேம்பி அழுதேன். 'அய்யோ பூங்கோதை எத்தனை கடிதங்கள் எழுதினேன். ஒன்றுகூடக் கிடைக்க வில்லையா? அய்யோ...பூங்கோதை...நீ எப்படித் தவித் திருப்பாய்...' என்று வாய் விட்டு அழுது கொண்டேயிருந்த போது வேறொரு விம்மும் அழுகுரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். கந்தசாமி நின்று கொண்டிருந்தான். திரும் பிய என்னைப் பார்த்து என் காலில் விழுந்தான். என் கால்கள் இரண்டையும் தன் கைகளில் பற்றிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான்.

'செங்கண்ணா! செங்கண்ணா! என்னை மன்னித்து விடுடா. துரோகம் செய்துட்டேண்டா. உன்னிடம்

பூங்கோதை காட்டும் அன்பைப் பார்த்து, பொறாமைப் பட்டுச் செய்யக்கூடாத தப்புச் செய்துட்டேன். உன் கடிதத்தை எல்லாம் காட்டாமெ மறைச்சிட்டேன். அங்கு வந்தபோது மேஜையில் நீயும் செல்வியும் சேர்ந்து எடுத் திருந்த புகைப்படத்தைக் காட்டிப் பூங்கோதை மனசை நொறுக்கிட்டேன். அவ என்னால்தான் செத்துட்டாப்பா, நான் போறேன். இனிமெ என்னாலும் வாழ முடியாது. நானும் ஒழிந்து போறேன். என்னெ மன்னிச்சிடுப்பா... மன்னிச்சிடு!' என்று என் கண்முன்னேயே தோப்பைக் கடந்து போய் மறைந்தான். பிரம்ம ஹத்தி பிடித்தவன் போல், மரம் போல் நின்றேன்.

விளக்கில் மட்டித்த திரியிலிருந்து ஒரு நெருப்புப் பொறி தெறித்து என் காலில் விழுந்து சுரீர் என்று சுட்ட பிறகுதான் இந்த உலக நினைவு வந்தது. கனவு போல் கந்தசாமி வந்துபோன நினைவு வந்தது. அவன் சொன்ன சொற்கள் மெல்ல மெல்ல நினைவுக்கு வந்தன. 'அடப் பாவி' மெல்ல மெல்ல என் பூங்கோதையைக் கொண் ணுட்டேயடா' என்று வாய் மூடித் திறப்பதற்குள் 'செங் கண்ணா. செங்கண்ணா', இங்கே கந்தசாமி வந்தானே... எப்போ போனான். அய்யோ! பஸ்ஸிலெ அடிபட்டுச் சவமா சாலையிலெ கிடக்கிறான்' என்று குணாளன் கத்தி னான். 'கண்ணா!' என்று மயக்க முற்றேன்.

*　　*　　*

அன்று கண்ட அதே தென்னந் தோப்பில் அதே முழு நிலா நாளில் அவள் நினைவாக எல்லோரும் கூடினோம் செல்வியும் செட்டியாரும் வந்திருந்தனர். குணாளனும் குடும்பத்தோடு ஊருக்கே வந்து விட்டான். ஆண்டாள், அம்மா எல்லோரும் இருந்தனர். நான் என்னவள் எனக்கு விட்டுப்போன சின்னக் கண்ணனை எடுத்துச் செல்வி கையில் கொடுத்தேன். தேம்பித் தேம்பி அழுதேன். அந்தத் தென்னந் தோப்புக் குடிசையை அவளுக்கும் குணாள னுக்கும் சுட்டிக்காட்டி அங்கு அவர்களை அழைத்துப்

போனேன். 'இதுதான் இனி நம் இல்லம். பூங்கோதை நமக்கு அளித்துப் போன 'அனாதை இல்லம்' என்றேன். ஆண்டாள் 'அம்மா! அம்மா!' என்று அழுதுகொண்டு குடிசையை நோக்கிச் சென்றாள்.

'ஆமாம் ஆண்டாள் கண்ணு! உன் அம்மா அங்கே தான் இருக்கா! எப்போதும் அங்கேயே இருப்பா! என்னை வளர்த்தா, உன்னை வளர்த்தா. இனிமே உலகத்தை எல்லாம் வளர்ப்பா!' என்றேன்.

அருகிலிருந்த செல்வி 'ஆம்! இது அனாதை இல்லம் இல்லை, அன்பு இல்லம், அம்மா இல்லம்—'தாயகம்' என்றாள்.

'ஆம்! என் வாழ்வின் குறிக்கோளுக்குப் பூங்கோதை அடிக் கல்லாக இந்தத் தாயகக் குடிசையில் மறைந்து கிடக் கிறாள். இனி என் வாழ்வு இங்கேயே அமைந்து, அடங் கும், என்றேன்.

'இல்லை தம்பி! அப்படி அடங்கிப் போவதற்கா சென்ற ஆண்டெல்லாம் அவ்வளவு கஷ்டப்பட்டு படிச்செ. நாங்கள் இருக்கிறோம். ஆண்டாளையும் உன் குழந்தை யையும் காப்பாற்றுகிறோம். இந்தத் தாயகத்தில் சேர்ந்த முதல் குழந்தைகள் அவர்களே. உன் குறிக்கோளை ஈடேற்ற அடிக்கல்லாகப் பூங்கோதை அமைந்தால் மேற் கூரையாக வெயிலையும் மழையையும் தாங்கி வாழ்விப் பாள் என் மகள் செல்வி. நீ சென்னைக்குப் போ. மேலே படி. உன் திட்டம் நிறைவேறியபின் வா. கலங்காதே! எனக்கு மகன் ஒருவன் இல்லையே என்று ஏங்கினேன். இன்று உன்னை என் மகனாகக் கொள்கிறேன். உன் இரண் டாண்டு படிப்புக்கு உரியவற்றை நான் தருகிறேன்' என்று வற்புறுத்தினார் மெய்யப்பச் செட்டியார்.

ஆமாம் செங்கண்ணா! முன் வைத்த காலை பின் வைக்காதே. நானும் பி. டி. பயிற்சி முடித்துவிட்டேன். உன் குழந்தைகளையும் தாயகத்தையும், அம்மாவையும்

தூணாக இருந்து நானும் கவனித்துக் கொள்கிறேன். நீ கட்டாயம் சென்னைக்குச் செல்ல வேண்டும். அருளாள ரிடம் இன்னும் கற்க வேண்டும்' என்றான் குணாளன். இறுதியில் நானும் சென்னை வந்து பச்சையப்பனில் இரண்டாம் ஆண்டு ஆனர்சு வகுப்பில் சேர்ந்தேன்.